# கங்கா

 லா.ச.ராமாமிருதம்

ஐந்திணைப் பதிப்பகம்

# கங்கா

(சிறுகதைகள்)

லா. ச. ராமாமிருதம்

ஐந்திணைப் பதிப்பகம்
தொலைபேசி : 849410
279, பாரதிசாலை, திருவல்லிக்கேணி,
சென்னை- 600 005

முதற்பதிப்பு : நவம்பர், 1962
இரண்டாம் பதிப்பு : ஜூலை, 1990
உரிமைப்பதிவு
ஐந்திணை—70
விலை ரூ. 20.00

GANGA
Tamil - Short Stories
by L. S. Ramamirutham
First Edition : July 1990
Pages : 200+12=212
Box Board Binding

Published by : KUZHA. KATHIRESAN

AINTHINAI PATHIPPAGAM
Phone : 84 94 10
279, Pycrofts Road,
Triplicane, Madras-5

அச்சிட்டோர்: கோகிலாஸ்ரீ அச்சகம்
8, துக்காராம் 3வது தெரு, தி. நகர், சென்னை-17

# சொல்

என் சிறுவயதில், என் தகப்பனார், காஞ்சிபுரத்துக் கருகே ஒரு கிராமப் பள்ளிக்கூடத்தின் ஹெட்மாஸ்டர். நாங்கள் குடியிருந்த வீட்டின் சொந்தக்காரர் எதிர் வீட்டிலேயே இருந்தார். நந்திக்கு எண்ணெய்க் காப்பிட் டாற்போல் பெரிய சரீரம், பளபளக்கும் கறுப்பு. சுபாவ மான வழக்கத்துக்கு மாறாக தான் அனுட்டித்த சைவத்தில் செருக்கு. அறப்பளீசுர சதகம், தேவாரம், பட்டினத்தார் பாடல், திருவாசகம், திருவண்ணாமலைப் பதிகம், அருணகிரி அந்தாதி, அருட்பா, குறள், நாலடியார் வாயி லிருந்து அப்படி அப்படியே கொட்டும். எங்கிருந்துதான் அந்த ஞாபகசக்தியோ? பேசாத சமயங்களில் ரேழித் திண்ணையில், சுவரில் சாய்ந்தபடி, சுட்டு விரலால் காற்றில் ஏதோ வரைந்து கொண்டிருப்பார்.

முதலியார் சுபாவம் நேரிடையாக, வெளிச்சமாகப் பேசமாட்டார். எதையுமே சொல்லில் ஒளித்துப் பேசுவார்.

“ராமாபரம் (வேணுமென்றுதான் அப்படி அழைக் கிறாரோ?) நீ பிராம்மணப் பிள்ளையாயிருக்கிறாயே, நீ உயர்ந்த குலமாச்சே! நாம் இங்கே வந்திருக்கிறோமே இந்த உலகத்தில், எதற்காக என்று சொல்வாயா?”

எனக்கு அப்போ வயது பத்து, பன்னிரண்டிருக்குமா? ஆனால் என்னைப் பெரிய மனிதனாகப் பாவித்து, இதே கேள்வியைப் பலமுறை, பலவிதங்களில், மாதக்கணக்கில் கேட்டுவிட்டுப் பிறகு தானே ஒருநாள்; “என் கேள்விக்கு என்ன பதில் தெரியுமா? ‘உருவேறத் திருவேறும்’ இதற் குத்தான் வந்திருக்கிறோம், இதுதான் பதில், இதுதான் பாடம், இதுதான் விஷயம், என்ன நான் சொல்வது புரியுதா?” இல்லை.

ஆனால் விடமாட்டார். "திருப்பிச் சொல்லு, எங்கே திருப்பிச் சொல்லு!"

அப்படியே ஒப்பிப்பேன்.

பிறகு கொஞ்ச நாள் கழித்து, திடீரென, "என்ன, ராமாபரம் நினைவிருக்குதா?" என்று அதட்டுவார். நான் பயந்து, தலையை ஆட்டுவேன்.

ஆனால் விளக்கமாட்டார்.

அவர் பக்திமானும் இல்லை.

ஒழிந்த வேளைக்கு கோர்ட்டில் சாக்ஷி சொல்வது தான் அவர் பிழைப்பு.

ஆனால் அவர் சொன்ன சூத்ரம் இன்னும் என்னைச் சீண்டிக் கொண்டிருக்கிறது. புரியப் புரிய அதன் சீண்டல் அதிகரிக்கின்றது.

★

என் மதிப்பிற்குரிய ஒரு எழுத்தாள நண்பர் எனக்குக் "கோவில் மாடு" என்று பெயர் வைத்திருக்கிறார்.

"ஓ ராமாமிருதமா, சரிதான், எழுதிக்கொண்டேயிருப் பார், சிந்தனையோ சொல்லோ, இஷ்டமோ தடைப் பட்டால் அந்த இடத்திலேயே பேனாவை வைத்துவிட்டு அவர்பாட்டுக்குப் போய்க் கொண்டேயிருப்பார். இஷ்டத் துக்கு எங்கேயோ One Way Traffic. அவர் விலகமாட்டார். எதிராளிதான் ஒதுங்கவேண்டும். பிறகு நாளோ, மாதமோ, வருடமோ, தடைப்பட்ட சொல் தட்டிய பின்தான் விட்ட இடத்திலிருந்து தொட்டுத் தொடர்வார். யார் கவலையும் கிடையாது. கோவில் மாடு! கோவில் மாடு! இப்படியே இவர் காலத்தைத் தள்ளிக் கொண்டிருக்கிறார்!!

எனக்கு உவகை பொங்குகிறது.

இன்னொரு எழுத்தாள நண்பருக்கு என்மேல் ஒரு குறை:

"என்ன அவர் வெளியுலகத்துக்கே வரமாட்டேன் என்கிறாரே!" எங்களுக்கிடையே இன்னொரு சர்ச்சை: "எழுத்தாளன் யாருக்காக எழுதுகிறான்?"

நான் 'தனக்காக' என்கிறேன்.

அவர், "பிறருக்காக" என்கிறார். "தனக்காக அவன் எழுதிக் கொள்வதாயிருந்தால் அவன் எழுதவேண்டிய அவசியமே என்ன இருக்கிறது? அப்படியே எழுதினாலும் அவன் தன் பெட்டிக்குள்ளேயே வைத்துக்கொண்டு, அழகு பார்த்து மகிழ்ந்து கொண்டிருக்கலாமே!"

அவர் பின் கூறியது வாஸ்தவந்தானோ என்றுஎனக்கு தோன்றுகிறது. ஒரோரு கதை, எழுதி முடித்தபிறகு அதை விட்டுப் பிரிய மனம் வருவதில்லை. நான் அறியாமலே அதைக் கருவுற்ற நாள் முதலாய் அது அதன் தன்மையில் என்னில் இழைந்திருந்தது. சூல் கண்ட நேரம் ஒருவரி லிருந்து ஒருவர் விடுபட ஒருவரோடொருவர் போராடுகை யிலேயே ஒருவரையொருவர் புரிந்துகொண்டோம். புரிந்து கொண்ட பின் சேர்ந்திருக்க இயற்கையில்லை. பிரிந்து தான் போவோம்: கருவுற்றதைப் பெற்றுத்தான் ஆக வேண்டும் பெற்றது பிரிந்துதான் போகும்.

யாருக்காக எழுதுகிறேன்?

யாருக்காகக் கருவுற்றேன்?

இரண்டும் ஒரே கேள்விதான். அந்தக் கேள்விக்கு ஒரே பதில்தான். ஆனால் இந்தக் கேள்வி நேர்வதுண்டு:

"நானா இதை எழுதினேன்? என்னிடமிருந்தா இது வெளிப்பட்டது? இந்த பூதம் என்னுள் எப்படி இத்தனை நாள் ஒளிந்து கொண்டிருந்தது?" வாசகனின் வியப்பு இன்னொரு வகையில்:

"எப்படி எனக்கு நேர்ந்ததெல்லாம் இந்தக் கதையில் நேர்ந்திருக்கிறது? எனக்குக்கூட தெரியாதபடி என்னுள் பூட்டி வைத்திருந்த என் அந்தரங்கங்கள் எப்படி இங்கு அம்பலமாயின? எனக்கு எழுத வராததனால் நான் எழுதாத குறை. ஆனால் இவை என் எண்ணங்கள், என் வேதனைகள், என் வேட்கைகள், நான் என் ஆபாசங்கள் என்று அஞ்சி என் நெஞ்சுக்குள் மறைத்ததெல்லாம் இங்கு எழுத்தில் கண்ட பின். உண்மையில் அவை என் ஆத்ம தாபம் என்று இப்போதுதான் தெரிகிறது" என்று கன்னத்தில் கண்ணீர் குளிரத் தலை நிமிர்கையில், எழுத்து,இருவருக்குமிடையில் ஊமைச் சிரிப்பு சிரிக்கின்றது.

அதற்குத் தெரியும், இருவர் கதையும் ஒரு கதைதான், உலகக் குடும்பத்தின் ஒரே கதை என்று.

அதற்குத் தெரியும் தான் சுண்டியது ஒரு தந்திதான், சொல்வதெல்லாம் ஒரு சொல்தான் என்று; உருவேற்றி ஏற்றி, திருவேறி, ஆகாயத்தையும் தன் சிமிழில் அடக்கிக் கொண்டு, இன்னும் இடம் கிடைக்கும் சொல். முதலியார் சொன்னது இப்போது புரிகிறது.

எத்தனை விதங்களில் எழுதினாலும், நான் எழுதுவது நான் என் பிறவியுடன் கொண்டு வந்திருக்கும் என கதைதான்; உலகில்—அது உள் உலகமோ வெளியுலகமோ, அதில் நடக்கும் அத்தனையிலும், அத்தனையாவும் எனக்குக் கிட்டுவது என் நோக்குத்தான். ஆகையால் நான் எனக்காகவே வாழ்ந்தாலும் சரி, யாருக்காக அழுதாலும் சரி, அப்படி என் நோக்கில் நான்தான் இயங்குகிறேன், என் நோக்கில் நான் காண்பவர், காணாதவர் எல்லோரும் என் உலகில் என் கதையுடன் பிணைக்கப்பட்டவரே, என் கதையின் பாத்திரங்களால், அவர்கள் ப்ரவேசங்களில் அவர்களை அடையாளம் கண்டு கொள்ளும் வேளைகளில் தான், நெடு நாளைய பிரிவின் பின் சந்திக்கும் பரபரப்பு, பரிமளம், ஜபமாலையின் நெருடலில் ஒவ்வொரு மணியும்

தன் முறை வந்ததும், தான் தனி மணி என அதன் மேல் உருவேறிய நாமத்தில் தன் பிரக்ஞையை அடையும் புது விழிப்பு.

★

சொல் என்று ஒரு வார்த்தை இப்போது இங்கு அடிபட்டுக் கொண்டிருக்கிறது. நான் சொல் என் கையில். வெறும் அவ்வார்த்தையைக் குறிக்கவில்லை. ஒவ்வொரு வார்த்தையின் பீட்டலிலிருந்து எழும் மனிதத்தன்மையின் கீதம், பிந்துவின் சீறல், வீசியெறிந்த பிடிநெல்லினின்று வயல் நிறைந்த விளைச்சலைச் சொல்கிறேன்.

வாயில் வந்ததெல்லாம் பேச்சு, எழுதியதெல்லாம் எழுத்து என்று சமயத்தைப் பணம் பண்ணும் மேடை எழுத்தாளர்களுக்கு என் பாஷை பிடிக்காது. அதனாலேயே அவர்கள் புரிந்து கொள்ள முயற்சி செய்யவும் மாட்டார்கள். நான் சொல்வது அவர்களுக்குத் தேவையுமில்லை; அவர்களை விட என் அனுபவத்தில், வாசகர்களே என்னை நன்கு புரிந்து கொண்டிருக்கிறார்கள்.

நான் என்னைப் பாடிக் கொள்கையில் உண்மையில் மரபைத்தான் பாடிக் கொண்டிருக்கிறேன். என் பிறவியுடன் கொண்டு வந்த என் கதையைச் சொல்கையில், உயிரின் சாசனத்தை என் சகோதரர்களின் நெஞ்சில் நித்தியமாய் செதுக்கிக் கொண்டிருக்கிறேன். இதுவே என் விதி, என் விதியே என் பெருமிதம். இதுதான் நான் தேடும் என் சொல். என் சொல்தான் என் உள்.

நான் தேடும் பொருளோ, நயமோ தரும் சொல் கிட்ட, ஒரொரு பக்கத்தை, பதினெட்டு, இருபத்திதேழு தடவைகள் எழுத நான் அலுத்ததில்லை.

தேடியலைந்த போதெல்லாம் கண்ணாமூச்சியாடி விட்டு, சொல் என்னை நள்ளிரவில் தானே தட்டி யெழுப்பி

யிருக்கிறது. ஒரு சமயம் கனவில், பாழும் சுவரில் ஒரு கரிக் கட்டி தானாகவே ஒரு வாக்கியத் தொடரை எழுதி அடியெடுத்துக் கொடுத்தது. சம்பந்தா சம்பந்தமற்றவை போன்று வார்த்தைகள் மூளையுள் வேளையில்லா வேளை களில் மீன் குட்டிகள் போல், பல வர்ணங்களில் நீந்திக் காண்பிக்கும். சில சமயங்களில் நான் தேடிய சொல், அதே சொல், நான் தேடிய அதே உருவில், காத்திருந்தாற் போல், நடுத் தெருவில் நான் போய்க் கொண்டிருக்கையில் யார் வாயிலிருந்தேனும் உதிரும்.

"நீ ஒன்றும் கழற்றிவிடவில்லை. என் கட்டியக்காரன். தான் சொன்னதை நீ சொல்" என்று அது எனக்கு உணர்த்துகிறது.

இன்னமும் என் கதைகளின் சில முதல் நகல்களைப் பத்திரமாய் வைத்திருக்கிறேன்; நவராத்திரிக்கு சுண்டல் கட்ட; எனக்கு ஆபீஸுக்கு டிபன் மடிக்க, அரைத்துக் காகிதக் கூடை செய்ய, வென்னீரடுப்பு எரிக்க என் மனைவி அவைகளின் மேல் கண்ணாயிருக்கிறாள். நிறுத்துப் போட்டால் பொய்த் தராசிலும் பணமாகும். ஆனால் எனக்கு அவைகளை விட்டுப் பிரிய மனமில்லை. அடிபட்ட மிருகம் மறைவிடமாய், சாகவோ தேறவோ படுத்துத் தன் காயங்களை நக்கிக் கொள்வது போல், தேடிச் சலித்து மனம் சோர்ந்த சமயங்களில், என் முதல் நகல்களைப் புரட்டிப் பார்ப்பது உண்டு. ஒவ்வொன்றும் ஒரு ரணகளம், இக் குப்பைகள் என் இதயத்தில் வெடித்த பாளங்கள். அத்தனையும் என் ரத்தம்: நான் சொல்லைத் தேடும் சான்று. இவைகளில் என் மூலமாய் வெளிப் பட்டிருக்கும் சொற்கள், பொருள்கள், செயல்கள் எல்லாம், அப்பக்கங்களுள் கடைசியாகப் பேனா முனையில் கிடைத்த கதையில் சேராவிட்டாலும், ஒன்று கூட வீணில்லை: அவை, அவைகளின் தனித்தனிக் கதையில், தம் தம் இடங்களில் பதியத் தம் தம் வேளை களுக்குக் காத்திருக்கின்றன. இது என் அனுபவம்.

நெஞ்சில் திடம் ஊறுவது உணருகிறேன். மறுபடியும் என் தேடலில் முனைகிறேன்.

கிரேக்க இதிகாசத்தில், கடவுளரின் கோபத்துக்கிலக்காகி விட்ட ஒரு வீரனின் கதை வருகின்றது. பாலையில், அவனை சங்கிலியால் ஒரு பாறையுடன் பிணைத்துப் போட்டிருக்கிறது. பகல் எல்லாம் ஒரு கழுகு அவன் தோள்மேல் அமர்ந்து அவன் உடலைக் கிழித்து மாமிசத்தைக் குடைந்து தின்று விட்டு அந்தி வேளைக்குப் பறந்து போய் விடுகிறது. இரவில், அவனுக்கு குறைந்த சதை வளர்ந்து விடுகிறது. விடிந்ததும் மறுபடியும் கழுகு தன் இரைக்கு வந்து விடுகிறது.

சொல்லின் தன்மையும் இப்படித்தான். என் தோள் மேல் அமர்ந்து அது என்னைக் கொத்துகையிலேயே என்னின் புதுப்பித்தலை உணர்கிறேன். நடந்து கொண்டிருப்பதுதான் திரும்பத் திரும்ப நடந்து கொண்டிருக்கிறது. இத்தனை கதைகள் எழுதியதும், இனி எழுதப் போவது எத்தனை யானாலும், அத்தனையும் நித்தியத்துவத்தின் ஒரே கதையின் பல அத்தியாயங்கள்தான். அத்தனையும் ஒன்றாக்க எனக்கு சக்தியோ ஆயுளோ போதாது. என்னால் முடிந்தது ஒரு சொல்தான், அச்சொல்லின் உருவேற்றல் தான்.

இதுவே என் தீர்ப்பாளர்களுக்கு என் சொல் என்னை சொல்லச் செய்யும் வாக்குமூலம்.

4-11-1962

லா. ச. ராமாமிருதம்

# மறு சந்திப்பு

கரையோரம், உட்கார்ந்த வண்ணம், சிந்தா நதியில் காகிதக் கப்பல்கள் விட்டுக் கொண்டிருக்கிறேன். புத்தகத்தையொட்டித்தான் இவ்வெண்ணம் தோன்றியதானாலும், இன்றும் எப்பவும், யாவரும் வேறென்ன செய்து கொண்டிருக்கிறோம்?

என் எதிரே, கரையோரம், சிற்றலைகள் தவழ்கின்றன என் பார்வையுள் அடைத்த விஸ்தீரணத்தில், நதி அகலம், ஏரிபோலத் தோன்றுகிறது. பிரம்மாண்டமான அகலம், நீளம், எதிர்க்கரை அதோ, அதோ எங்கோ. ஆனால் இனி நான் அங்கு போய்ச் சேரப்போவதில்லை. சேர வேணும் எனும் வேகமும் இல்லை. என்றேனும் ஒரு நாள் என் வேலையில், குறுக்கே நடக்கத் தோன்றி, நடுவழியில் எனக்குரிய ஆழத்தில் கவிழ்ந்த என் கப்பல்களோடு, அமிழ்ந்து, அமரத்வம் அடைந்துவிடுவேன்.

எதிர் நீச்சலுக்கு எனக்கு இனி நேரமில்லை உள்ள பூர்வமாக மட்டுமன்று. உடல் நிலையே தெரிந்துகொண்டு விட்டது.

கரையோரமாக நடந்தும், இடையிடையே சுழலோடு நீந்தியும், என் வேளை ஏறக்குறைய கழிந்துவிட்டது. ஆனால் என் வேளையுள் இதுவரை நான் வந்திருக்கும் தூரம் ?

இந்தச் சிற்றலைகளுக்குத் தான் தெரியும். அவை என்னைப் பார்த்துச் சிரிக்கின்றன.

ஏளனம்? தாயன்பிலா? 'சரி போ, ஏதோ உன்னால் முடிந்தவரை—' என்கிற சலுகையிலா?

அவை தாம் அறியும்.

★

இத் தொகுதியை, இரண்டாம் பதிப்பில், ஏறக்குறைய முப்பத்திரெட்டு வருட இடைவேளைக்குப் பிறகு காண்கையில், பெருமிதம் உள்பொங்கும் அதேசமயம், லேசான விசனமும் ஏடு படர்கிறது.

இதில் அடங்கியிருக்கும் கதைகள், தொகுதிக்கும் முன் ஐந்தாறு வருடங்களில் எழுதப்பட்டவை. ஆகவே

இவைகள் ஒவ்வொன்றுக்கும் நாற்பதுவயது தாண்டியதே. மனிதனின் இன்றைய சராசரி வயதில் பாதிக்கு மேலானவை, என் குழந்தைகள். ஆனால் நீங்கள் வளர்த் தவை: இவை குழந்தைகளில்லை. பெற்ற ஆர்வத்தில் தொட்டுத் தடவிப் பார்த்துக் கொள்ளலாம்.

அப்படித்தான் இப்போது பார்க்கிறேன்.

எழுத்தாளனுக்குத் தாயகம் இருக்கலாம், ஆனால் எழுத்துக்குக் கிடையாது, எழுத்து ஒரு எடுப்பார் கைப் பிள்ளை என்று வேறு இடத்தில் எழுதியிருக்கிறேன்.

எங்கெங்கோ, எப்படியெப்படியோ வளர்ந்தாலும் இவை நோஞ்சான்களல்ல. நன்றாக செழிப்பாகவே, தாமாவே வளர்ந்திருக்கின்றன. இல்லாவிடில் 'கங்கா', குருக்ஷேத்ரம், 'கஸ்தூரி', 'விடிவெள்ளி'. 'தீக்குளி' என்று இவை இன்னும் பேசப்படுமா? 'சொல்' எனும் முன்னுரை தன் வழியில் தனி பிரசித்தி அடைந்துவிட்டது—வேண் டாம், இனியுமா சுயபுராணம், இனியுமா இவைகளுக்கு என் அரவணைப்பு?

ஆனால் ஒன்று. ஒரு குடும்பத்தின் பெண்டு பிள்ளைகள் எங்கெங்கு சிதறியிருந்தாலும், ஒரு விசேஷ தினத்தன்று—தீபாவளி, வருடப்பிறப்பு, வீட்டுப் பெரிய வனுக்கு ஏதோ விழாவென்று குடும்பம் ஒன்று கூடும்போது அந்த மறு சந்திப்பின் மகிழ்ச்சியே தனிதான். குழந்தைகள் வருகிறார்கள். அணைக்க இருகைகள் போதவில்லையே! ஏடுகளிடையே அமுக்கி வைத்திருந்த தாழம்பூவின் மணம் கமகமக்கிறது. குழ. கதிரேசன் இந்தச் சமயத்தை ஏற்படுத்தி அதன் மஹிமையைத் தட்டிக்கொண்டு போய் விட்டார். அதுவும் சரிதான். ஸாஹித்ய அகாதெமி விருது கிடைத்திருக்கும் இந்தச் சமயத்தில், இரண்டாம் பதிப்பை வெளியிட்டிருக்கும் ஐந்திணைக்கு நன்றி.

எல்லாரும் பண்டிகையில் பங்குகொள்ள வாருங்கள் நீங்கள் வளர்த்த குழந்தைகள்.

Plot. 242, 1, கிருஷ்ணன் தெரு,
ஞானமூர்த்தி நகர் அம்பத்தூர் — லா. ச. ராமாமிருதம்
சென்னை—600 053
15—6—1990

# பொருளடக்கம்


1. கங்கா ... 1
2. கறைபட்ட இலை ... 26
3. குரு-க்ஷேத்ரம் ... 32
4. கஸ்தூரி ... 64
5. ப்ரளயம் ... 84
6. தீக்குளி ... 98
7. இதழ்கள் ...121
8. விடிவெள்ளி ...144
9. எது நிஜம்? ...156
10. கிண்ணங்கள் ...179

# கங்கா

வண்டியை எதிர்பார்த்து ரயிலடியில் காத்திருந்தேன். சம்பளம் பத்திரமா என்று ஒருமுறை உள் பையைத் தொட்டுப் பார்த்துக் கொண்டேன்.

வீட்டுக்குப் போகவேண்டுமென்றில்லை. இதற்குள் அவள் முசுடு முகத்தில் விழிக்கவேண்டாம்; வெடுக்கு வெடுக்கென ஆளைப்பிடுங்கும் வார்த்தைகளுக்கு இப்பவே போய் ஈடு கொடுக்க வேண்டாம். ஆகையால் ரயிலடியில் அவ்வப்போது வரும் வண்டிகளையும், அவைகளிலிருந்து இறங்குவோரையும் ஏறுவோரையும் பார்த்த வண்ணம் உட்கார்ந்திருந்தேன்.இம்மாதிரி நானும் எத்தனை முறை ஏறி இருப்பேன்! வீட்டிலிருந்து கிளம்புகையில் வெற்றிலையை மடிக்கக்கூட நேரமில்லாது வெறுமனே வாயில் சுருட்டிப் போட்டுக் கொண்டு ஆபீசில் மாடாய் உழைத்து விட்டு, மாடாய் வார்த்தைகளையும் வாங்கிக் கட்டிக் கொண்டு, இதே வண்டியில் வீடு திரும்பினால் அங்கும் நிம்மதியில்லை. குழந்தைகள் தொந்தரவும் அவள் சிடுசிடுப்பும்! ஆரம்பத்தில் நாங்கள் இப்படியாயிருந்தோம்? அவளும் இப்படியாயிருந்தாள்?

எனக்கு ஒன்றுமே பிடிக்கவில்லை. ரயிலடியிலேயே உட்கார்ந்து பொருமிக் கொண்டிருந்தேன்.

ஒரு வண்டி வந்தது ஜனங்களைக் கொட்டிவிட்டு ஜனங்களை வாரிக்கொண்டு சென்றது. மாலை வெய்யில் பொன்னாய் மாறிற்று. தென்றல் தவழ்ந்தது.

நினைத்துக்கொண்டேன்: எங்களுக்குக் கலியாணம் ஆகுமுன் நான் ரயிலேறி என் தாயாருடன் இவளைப் பெண் பார்க்கச் சென்றதை. அப்போது அப்பிரயாணம்

அலுப்பாவா இருந்தது? இடமிலாது இரவெல்லாம் நின்று கொண்டே போனேன். ஆனால் புஷ்பக விமானத்தில் போய்க் கொண்டிருந்ததாகத்தான் தியானம்.

அதிலிருந்து இதுவரை நான் செய்த ரயில் பிரயாணங்கள் ஒவ்வொன்றாக நினைவுக்கு வந்தன. நினைவுகள் பின்னோக்கிப் பாய்ந்தன. தகப்பனாருக்கு உடம்பு சரியில்லை எனத் தந்தி வந்ததும் அலறியடித்துக்கொண்டு ஓடியது; காலேஜ் நாட்களில் நண்பர்களுடன் சேர்ந்து திருவனந்தபுரம் போய் 'ஜாலியாய்'ச் சுற்றியது...

அடுத்தபடி காலேஜ் படிக்க ஊரிலிருந்து பட்டணத்துக்கு வண்டியேறுகிறேன். அந்தக் குட்டி ஸ்டேஷன் இரும்புக் கிராதிகளுக்கருகில் என் தகப்பனார், சிறு கூன் விழுந்த நலிந்த உடம்புடன் நின்றுகொண்டு, வண்டி நகருகையில் அன்புகனிந்த முகத்துடன் என்னை ஆசீர்வதிக்கும் பாவனையில் கையைத் தூக்கிக் காண்பிக்கிறார். உணர்ச்சி மிக்கால் தொண்டை அடைத்தது. இப்போது போல் இருக்கிறது. பிறகு, அதற்கும் முன்னால், நான் பள்ளிக்கல்வி முடிந்ததும் விடுமுறைக்குக் கள்ளிக்கோட்டையில் வேலையாயிருந்த என் மாமன் வீட்டுக்குச் சென்றது.

அந்த ரயில் ஞாபகம் வந்ததும் "கங்கா" எனும் நாமம் உள்ளத்தின் அடிவாரத்தினின்று ஜ்வலித்துக் கொண்டே எழுந்து திகிரிபோல் சுழன்றுகொண்டே வந்து மார்பில் மோதியது. அதிர்ச்சி தாங்காமல் பெஞ்சியின் மேல் அப்படியே சாய்ந்தேன். கங்கா! கங்கா!!

நாக்கு சுழன்று சுழன்று வாயை நிறைத்தது. சப்தம் உள் நிறைந்து மேலும் வழிந்தது. என்னுள் வெள்ளம் புரண்டது.

எப்போது பார்த்த கங்கா! இப்போது எங்கிருக்கிறாளோ? மறுபடியும் அவளைக் காண்பேனா? என் கங்காவைப் போய்த் தேடினால்தான் என்ன? எங்குதான் அவள் இருப்பாள்?

இரவு படைத்த ஒற்றை விழிபோல ரயில் பாதையில் ஒரு பெரும் விளக்கு இடையிலிருக்கும் தூரத்தை விழுங்கிக் கொண்டே ஸ்டேஷனை நெருங்கிக் கொண்டிருந்தது. கைக்கடியாரத்தைப் பார்த்தேன். அந்த வேளைக்கு அப்படி வருவது மங்களூர் மெயில்தான். இதில் ஏறினால் கள்ளிக் கோட்டையை அடையலாம். அவ்வளவுதான், நான் எல்லாம் மறந்தேன். வீட்டுக்குப் போகவேண்டுமென்பதை மறந்தேன் மனைவி மக்களை மறந்தேன். நானே என் நினைவில் இல்லை. என் நினைவு விருப்பமாகி கண நேரத்தில் தீர்மானமாய் ஓங்கி, அடக்கமுடியாத ஆவேச மாகி நானும் அதுவானேன். அவசர அவசரமாய் 'புக்கிங் ஆபீசுக்கு' ஓடி கள்ளிக்கோட்டைக்கு ஒரு டிக்கட் வாங்கி வண்டியும் ஏறிவிட்டேன்.

ரயில் ஆனந்தமாய் தண்டவாளத்தில் தாளமிட்டு என் கள்ளிக்கோட்டைக்குப் பாய்ந்து சென்றது. நான் கங்காவின் நினைவுகளை பின்பற்றியவனாய் என்னின் இதுவரை வாழ்க்கையினின்று தப்பியோடிக் கொண்டிருந் தேன். திடீரென்று தளைகளை யறுத்துக் கொண்ட விடுதலையின் வெறியில் என்ன காரியம் செய்துகொண்டி ருந்தேன், அதன் விளைவுகள், அனர்த்தங்கள் எம்மாதிரி, இப்பவும் பின்னும் யார்யாரை எப்படி எப்படித் தாக்கும் எனும் நிச்சயமான உணர்வோ, கவலையோ இல்லாமல் நான்பாட்டுக்கு ரயிலில் போய்க் கொண்டிருந்தேன்.

கங்கா!—

ஜன்னலுக்கு வெளியே, ரயிலுடன் ஓடிக்கொண்டே என்முன் அவள் உருவம் எழுந்தது. வெள்ளைப் பாவாடை; அதன் மேல் பச்சைத் தாவணியின்கீழ் அவள் போட்டுக் கொண்டிருந்த சிவப்புரவிக்கையின் முடிச்சுக்கும் பாவாடை முடிச்சுக்கும் இடையில், அடிவயிறு உள்வாங்கி, மேடேறி, பனி வெள்ளையாய்த் தெரிந்தது. வலையல்கள் குலுங்கும் கைகளை வீசிக்கொண்டு சிரித்தவண்ணம் அவள் தட்டா

மாலை சுற்றிக் கொண்டிருந்தாள். பின்னால் பின்னல் தடியாய், டம்பங் கூத்தாடி சாட்டைபோல் சுழன்றது.

கங்கா வெறுங் கங்காவாயில்லை. கள்ளங்கபடும் கவலையுமற்ற அவளுடைய பருவத்தின் சின்னமாய் விளங்கினாள் அவளை முதலாய்ச் சந்திக்கையில் வயது பதின்மூன்று பதினான்கு இருக்குமா ?

கங்கா வீட்டில்தான் என் மாமா குடித்தனமிருந்தார். கங்காவின் அப்பா பெரிய சம்சாரி. பெரிய ;பணக்காரர். மர வியாபாரம். முதல் தாரத்திற்கு நான்கு குழந்தைகள். இரண்டாவதற்கு மூன்று. அவருடைய மனைவி இப்போது தன் ஐந்தாவது குழந்தையை சீராட்டிக்கொண்டிருந்தாள். இன்னமும் அவருக்கே இளம் வயதுதான். வீடு சத்திரம் தான். எப்பவும் சந்தடி; ஒரு வேளையில் ஒரு இடத்தில் ஒரு பந்தி டிபன் பண்ணும்; அதே சமயம் இன்னொரு மூலையில் இன்னொரு 'ஜமா'வுக்குச் சாப்பாட்டுக் கடை நடக்கும். இன்னும் சிலருக்குப் பொழுது விடிந்தும்கூட இருக்காது.

வீட்டில் கூட்டம் பெருத்தமையால் தாக்கல் மோக்கல் இலாது நடக்கும் காரியங்களை எட்ட இருந்து கவனிக்கையில் வேடிக்கையாயிருக்கும். கங்கா இரண்டாந்தாரத்துக் குழந்தை. ஆனால் தாயில்லாக் குழந்தை என்று கேட்டாலே சம்பிரதாய முறையில் எழும் அனுதாபம் எவ்வளவு பொய், காரணமற்றது என்று இங்குதான் கண்டேன். எல்லாக் குழந்தைகளுக்கும் சித்திமேல் உயிர். கங்காவின் ஒன்று விட்ட சகோதரர்கள் முதலிருவருக்குக் கலியாணம் ஆகி குழந்தைகள்கூட இருந்தன. வீட்டுக்கு வந்த நாட்டுப் பெண்களும் மாமியாரும் சமவயது. சித்திக்கு எப்பவும் சிரித்த முகம், அவள் வீட்டிற்கு வந்த பிறகுதான் அவள் கணவருக்கு திடீரென்று அதிர்ஷ்டம் பெருகினதாகக் கேள்வி.

கங்காவும் அவள் வீட்டுச் சின்னக்குழந்தைகளும் அனேகமாக நாங்கள் குடித்தனம் இருந்த பகுதியில்தான்

வாசமாயிருப்பார்கள். என் மாமிக்கு அவர்கள் இங்கே வந்து அடிக்கும் கூத்து பிடிப்பதில்லை. அவளுக்கு வைத்த சாமான் வைத்த இடத்தில் இருக்கவேண்டும். ஒன்றும் உடையக்கூடாது. சிந்தக்கூடாது, ஆகையால், இவர்கள் அமளி அவளுக்கு ஒப்புமா? "சரி சரி கங்கா வந்துவிட் டாளா பட்டாளத்தைக் கூட்டிண்டு?" என்று காரமாகவே அவள் காது படும்படி அலுத்துக் கொள்வாள் ஆனால் கங்காவா இதுக்கெல்லாம் மசிவாள்?

கிழக்கத்திச் சீமையிலிருந்து மாமாவாத்துக்கு ஒரு பையன் வந்திருக்கானே, அவன் பேச்சு பாவனை எல்லாம் கவனித்து அவனைக் கேலி பண்ணவேண்டாமா? பேச்சுக்குப் பேச்சு வார்த்தைக்கு வார்த்தை ஏதேனும் கோளாறு கண்டுபிடித்துக் கையைக் கொட்டிச் சிரித்த வண்ணமிருப்பாள். சில சமயங்களில் ஒரே வார்த்தையின் ப்ரயோக வேறுபாட்டை நான் அறியாது உபயோகித்து, அர்த்த விபரீதம் ஏற்படுகையில் அவள் கொம்மாளத்திற்கு கங்கு கரையே கிடையாது. எனக்கோ என் பயனற்ற கோபத்தில், சங்கடத்தில், முகம் சிவக்கும். நான் வேதனைப் படப்பட அவள் இரக்கமற்றுச் சீண்டிக் கொண்டேயிருப்பாள்.

சுபாவமாகவே, அவளுக்குப் பொய்லஜ்ஜை, வெட்கம் இவையெல்லாம் கிடையாது. நான் சங்கோஜி என்று அவள் கண்டு கொண்டதும் என்னை வலுவில் பேச்சுக்கு இழுத்துக் கழுத்தையறுப்பதில் அலாதி ஆனந்தம் கண் டாள். அவளைக் கண்டாலே நான் ஓடி ஒளிய ஆரம்பித் தேன்.

ஒரு நாள், சுவாமி படங்களைத் தட்டி மாட்டவேண்டு மென்று மாமிக்குத் தோன்றிவிட்டது. மாமிக்கே சாமான் களை ஒழித்துப் பெருக்குவதிலும் புதுப்புது முறையில் அடுக்கி வைப்பதிலும் ஒரு ஆசை. படங்களைக் கழற்று வதும் மாட்டுவதுமாய் மருமானையும் கங்காவையும் அதிகாரம் பண்ணிக் கொண்டிருந்தாள். ஆனால் இம்

மாதிரிக் காரியங்களில் எனக்கு மனம் செல்வதில்லை. இருந்தாலும் மாமியிடம் உள்ளூற பயம். அவள் கண்டிப்பான பேர்வழி. ஆகையால் செய்யும் காரியத்தில் மனமில்லாது கையையும் காலையும் ஆட்டிக் கொண்டிருந்தேன்.

"டேய் அதை யெடேன்." முக்காலி மேல் ஏறி நின்று கொண்டு மாமி கீழே கையை நீட்டி எதையோ காட்டினாள்.

"எதை?"

"அதான் 'கங்கையை' என்றதை "கங்காவை" என்று மனதில் வாங்கிக்கொண்டு விட்டேன். 'கங்காவையா ?' என்று குழறினேன். உடனேயே என் தவறு எனக்குத் தெரிந்துவிட்டது. ஆனால் அதற்குள் என்னுள் ஏதோ நேர்ந்துவிட்டது. கத்தியுடன் கத்தி சந்தித்துப் பொறி பிறந்தது போல் என்னுள் ஏதோ நேர்ந்துவிட்டது.

"கங்கா!—" ஜாலரோடு ஜாலர் மோதினாற் போல் அவள் நாமம் 'ஜல்' என்று புது நாதத்துடன் செவியின் ஜீவாவை உதைத்துக் கொண்டு கிளம்பிற்று. கட்டிய வெள்ளி மணிகளின் கிணிகிணியுடன் என்னுள் ஒரு சிற்பக் கதவு மெதுவாய் ஆடி அசைந்துகொண்டு திறந்தது. கால் கட்டை விரல்வரை உடல் 'ஜிவ்' விட்டது.

என்னுள் நேர்ந்ததை என் கண்களில் அவள் கண்டு கொண்டாள். கன்னங்களில் சிவப்பு படர்ந்தது. கண்களின் மேலிமைகள் மெதுவாய்த் தாழ்ந்தன. அவள் பார்வை குனிந்தது. முதன் முதலாய் கங்கா என்முன் வெட்கிப் போனாள். கங்கா என் தேவி !

"மண்டு ! அந்த ஸ்தாலியை எடுன்னேனே !" மாமியிடம் அதை எடுத்துக் கொடுத்துவிட்டு, கங்கா சிட்டாய்ப் பறந்தாள்.

ஏதோ சட்டை போல் என் பையல் பருவம் என்னின்று அன்று கழன்றது. ஒன்றுமே புரியாத ஒரு புதுப் பருவத்தில் புகுந்து கொண்டிருந்தேன்.

அன்று முதல் கங்கா என்னைத் துன்புறுத்துவதை விட்டாள். அல்லது அவள் சீண்டல் முன்போல் என்னை உறுத்தவில்லையோ? என் புதுப் பார்வை அவளுடைய ஒவ்வொரு செயலிலும் பேச்சிலும் அங்க அசைவிலும் கவிதை கண்டது. அவளிடமிருந்து எனக்குக் கனிவாய் ஒரு வார்த்தை வரின் அதில் கனவின் அழகு மிளிர்ந்து என்னையும் கனவாக்கியது.

ஒருநாள் மாலை நான் வெளியில் உலாவச் சென்று கால் போன வழி நடந்து வழிதப்பிப் போய் மீண்டும் வழிகண்டு வீடு திரும்பும் வேளை வெகு நேரமாகிவிட்டது. கங்கா வாசலில் நின்று கொண்டிருந்தாள். என்னைக் கண்டதும் முகத்தின் படலம் விலகியது.

"எங்கே போயிருந்தாய்? அடேயப்பா — இந்தக் கிழக்கத்திக்காராளுக்கே என்ன துணிச்சல்! நாங்கள் எல்லாம் எவ்வளவு கவலைப்பட்டுண்டிருக்கோம் தெரியுமா? நான் இப்போ அப்பாவிடம் சொல்லி உன்னைத் தேட ஆள் விடறதாயிருந்தேனாக்கும்".

என்னுள் ஒரு சிட்டுக்குருவி படபடவென்று அடித்துக் கொண்டது. அதன் சுறுசுறுப்புத் தாங்குவதற்குப் பயமாயிருந்தது. "நிஜமாவா?" என்றேன், அர்த்தமில்லாமல்.

"இதில் பொய் என்னவாம்?" என்று கேட்டுக் கொண்டே உள்ளே சென்றாள். அவ்வார்த்தைகளிலேயே ஜன்மத்தின் பரிசை அடைந்து விட்டதாய்த் தோன்றிய என் புதுவிழிப்பு எனக்குப் புரியவில்லையே! புரியாமலும் என்னதான் யோசனை பண்ணுகிறேன்? தெரியாது. உள்ளே போகாமல் நின்றவிடத்திலேயே வெகுநேரம் நின்று கொண்டிருந்தேன்.

கங்காவின் தகப்பனாருக்கு என்னை ரொம்பவும் பிடித்து விட்டது. அவருக்கு என்னைவிட நாலு வயது மூத்தவனாய் ஒரு பையன்—கங்காவுடன் பிறந்தவன்—

எஸ். எஸ். எல். ஸி. பரிக்ஷையை மூன்றாம் முறை படையெடுத்திருந்தான்.

திடீரென்று கங்காவின் தகப்பனார் இடுப்பில் ஒரு முண்டைக் கட்டிக்கொண்டு கிளம்பிவிடுவார். "வா, வா வெள்ளம் அடிக்கலாம்" என்று என் கையைப் பிடித்துக் கரகரவென்று இழுத்துக்கொண்டு வெந்நீருள்ளுக்குப் போவார். வென்னீருள்ளில் ஒரு பெரிய டாங்க் உண்டு கிணற்று ஜலத்தை அதில் நிரப்ப கைப் 'பம்ப்' அடித்தாக வேண்டும். முதலில் நாலு அடி அடித்துக் காண்பித்து விட்டுப் பிறகு என்னை அடிக்கச் சொல்வார், நான் மொண மொணப்பேன். "சரிதாண்டா சின்னப் பையலாயிருந்துண்டு இதுக்குச் சோம்பறாய்! அடிக்க அடிக்க தேகத்துக்கு நல்ல பலமாக்கும்!" என்று அவருடைய மலையான உச்சரிப்பில் இழுத்துஇழுத்துப் பேசி அதிகாரம் பண்ணிவிட்டுப் போய்விடுவார். அந்த ராக்ஷஸ 'டாங்'கில் ஜலம் கட்டுவதற்குள் தோள்விட்டுப் போகும். முன்பின் பழக்கமிருந்தால்தானே! நான் ஓசைப்படாமல் நழுவத் தயாராய்க் கொண்டிருக்கையில், கங்கா ஓசைப்படாமல் அடிமேல் அடியெடுத்து வைத்து, சிரித்தவண்ணம் வருவாள்.

"நான் அடிக்கிறேன்!"

"ஒண்ணும் வேண்டாம்."

"உன்னால் முடியாது. முன்பின் பழக்கமில்லையல்லவா?"

"பரவாயில்லை"—என்று ஆத்திரத்துடன் 'பம்பை'க் கறப்பேன்,

"அப்படியடிச்சால் சீக்கிரமே களைச்சுப் போவாய் கேட்டையா ?"

"நீ இங்கே விட்டுப் போ !" எரிந்து விழுவேன். அவள் சிரித்துக்கொண்டே நகருவாள். இனி நான் ஓடிப்போனால்

என் ஆண்மைக்குப் பங்கம். இனி இந்தக் கைகள் இரண்டும் என்னுடையனவல்ல. வலிக்கிறதா ? வலிக்கட்டும் ! நன்றாக வலிக்கட்டும் ! கழன்றே போகட்டும். அப்புறம் மடியில் கிடத்திக்கொண்டு அழலாம். இப்போதைக்கு இருக்கிறவரை கங்கா எதிரே மானம் போகாமல் அடி.

நான் தன்னிரக்கத்தில் தவித்துக்கொண்டிருக்கையிலே டாங்கிலிருந்து ஜலம் வழிந்து தலைமேல் கொட்டும். ஏற்கெனவே உடல் வேர்வையில் நாய்க்குட்டிபோல் தலையை உதறிக்கொண்டு கிளம்புவேன்.

வாசற்படியில் கங்கா சிரித்துக்கொண்டே டம்ளரும் கையுமாய்க் காத்திருப்பாள். 'இந்தா!'

"எனக்கு ஒண்ணும் வேண்டாம்—!"

"நான் என் கைப்படப் போட்டேனாக்கும் காப்பி! சாப்பிடமாட்டையா ?" திடீரென்று என்னை மாவுப் பொம்மையாய் ஆக்கிவிட முடிகிறது அவளால், பதில் பேசாமல் டம்ளரை வாங்கிக் கொள்வேன்.

"அடேயப்பா, இந்தக் கிழக்கத்திக்காராளுக்குத் தான்என்ன தேவஷீயம் ! ஐயோ ! சொட்டச் சொட்ட நிக்கிறாயே ! இதோ டவல் கொண்டுவரேன்..." என்று உள்ளே ஓடுவாள்.

நான் குச்சு நாய் மாதிரி காத்திருப்பேன்.

நான் ஊஞ்சலில் உட்கார்ந்திருந்தேன். மாமா எதிரே மேஜையில் ஆபீஸ் வேலை செய்து கொண்டிருந்தார்.

காளியாய் அழுது கொண்டிருக்கும் தன் மன்னியின் கைக்குழந்தையைத் தூக்கிக் கொண்டு வந்து கங்கா ஊஞ்சலில் உட்கார்ந்தாள். குழந்தையை சமாதானப் படுத்துவதற்காக ஊஞ்சலை ஆட்டினாள்.

சற்று நேரம் கழித்து, மாமா மூக்குக் கண்ணாடியைச் சற்றுத் தாழ்த்தி, அதன் பின்னிருந்து எட்டிப் பார்த்துக்

கொண்டு, "பேஷ் ! இதுதான் நன்றாயிருக்கிறது ! பேஷ் !" என்றார்.

"என்னது ?" என்றாள்.

"எனக்கு லாலி ஒன்று தெரியும். முதலடி மறந்து போச்சு ! இரு இரு வந்தூட்டேன்" என்று மாமா கூரையைப் பார்த்துக் கொண்டே கையைச் சொடுக்கினார்.

"போங்கோ மாமா ! நான் கலியாணமே பண்ணிக்கப் போறதில்லே !

"பின் என்ன பண்ணப் போகிறாய் ? காளன் ஓலன் இளவன் அவியல் எல்லாம் பண்ணி யாருக்கு போடுவாய்?"

"நான் டாக்டருக்குப் படிக்கப் போறேன்."

"ஐய !" மாமா கிண்டலாக மார்பில் அடித்துக்கொண்டார். நீ பள்ளிக்கூடம் போற ஒழுங்குக்கும் படிக்கிற லக்ஷணத்துக்கும் !'

கங்காவுக்கு முகம் கோவைப் பழமாய்ச் சிவந்து விட்டது. கோபக் கண்ணீர் துளும்பிற்று. கங்கா எல்லா பாடங்களிலும் ஒற்றை லக்க மார்க்கு. கணக்கில் பெரிய, இட்டா. ஆத்திரத்துடன் குழந்தையை இரண்டு அறை அறைந்து ஊஞ்சலை இன்னமும் வீசி ஆட்டினாள். ஊஞ்சல் குறுக்கு நெடுக்குமாய் ஆடியது. மாமாவுக்கு தன் சொத்தில் கவலை வந்துவிட்டது.

"ஊஞ்சல் ஜாக்கிரதை ! சுவத்திலே இடிக்கிறது !"

சடக்கென்று கங்கா ஊஞ்சலை நிறுத்தின வேகம் என்னை முன்னுக்குத் தள்ளிற்று. இருவரும் மண்டையில் இடித்துக் கொண்டோம். கங்கா குழந்தையை எடுத்துக் கொண்டு வேகமாய் அங்கிருந்து சென்றாள். அவள் கோபமும் அவளுக்கு அழகாய்த் தானிருந்தது. எனக்கு மாமா மேல் கோபம் கோபமாய் வந்தது.

ஆனால் கங்காவுக்குப் படிக்க வணங்குவதில்லை. பாட்டு வாத்தியாரும் படிப்பு வாத்தியாரும் மாறி மாறி

வந்து போவார்கள். ஆனால் அவை இரண்டைத் தவிர பாக்கி எது சொன்னாலும் கங்கா செய்யத் தயார்.

அவள் காரியம் செய்வதும் விபரீதமாய்த்தானிருக்கும். திடீரென்று நினைத்துக் கொள்வாள். பற்றுப்பாத்திரங்கள் இன்னும் வேண்டாத சாமான்கள் அத்தனையும் போட்டுக் கொண்டு தேய்ப்பதற்கு முற்றத்தில் குந்திட்டு உட்கார்ந்து விடுவாள். வேலைக்காரி ஒத்தாசைக்கு வந்தாலும் அவளைச் சீறித் தடுத்துவிடுவாள். ஆனால் பாதி தேய்த்துக் கொண்டிருக்கையிலேயே சலிப்பு வந்துவிடும். "இந்தாடி நாராயணி!என்னத்தைப் பார்த்துண்டிருக்காய்? சம்பளம் வாங்கறாயே?" என்று வேலைக்காரிமேல் எரிந்து விழுந்து சாமான்களை அவளிடம் வீசியெறிவாள். நாராயணி சிரித்துக்கொண்டே வருவாள். இன்றைய பழக்கமா நேற்றையப் பழக்கமா அவளுக்கு! கங்காவை கைக் குழந்தையாவே அவளுக்குத் தெரியுமே! அவள் சொல்லுவாள், சிரித்துக் கொண்டே "கங்கம்மை குடித்தனம் பண்ற போதேய்—! வேடிக்கையாத் தானிருக்கும். சாதம் பாதி அரியாயிருக்கும், ரஸம் காயாத புளிவெள்ளம். வேகாத உப்பேரி.. இதுதான் இவள் புருஷன் ஊணுகழிக்கணும்; சமையல் வேகு முன்னையே கங்கம்மை அவசரத்தில் வெந்திடுவாள் !"

ஒருநாள் கொட்டுகிற மழையில் சாக்கடையை அலம்புகிறேன் என்று கங்கா துடைப்பத்தை எடுத்துக் கொண்டு கிளம்பிவிட்டாள். சொட்டச் சொட்ட நனைந்தது போதாதென்று நடு முற்றத்தில் ஒரு டம்ளரை வைத்து, அதில் மழைத்துளிகள் விழுந்து நிரம்பியதும், அந்த ஜலத்தையும் குடித்துவிட்டாள். அன்றிரவே ஜுரம் வந்துவிட்டது.

மூன்று நாட்கள் கங்கா கண்ணிலேயே படவில்லை. எசமானைக் காணாத நாய்க்குட்டிபோல் நான் வீட்டைச் சுற்றிச் சுற்றியலைந்தேன். அவள் உடம்பு பற்றி மற்றவர்களிடம் விசாரிக்கவும் லஜ்ஜை: என் கிலேசமும் எனக்குப் புரியாத ஊமையடி. ஆனால் அவள் வீட்டாரும் அவளைப்

பற்றி ஒன்றும் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. அவர்கள் பாட்டுக்கு சிரித்துக்கொண்டும், கொம்மாளம் அடித்துக்கொண்டும் தின்றுகொண்டும் சண்டை போட்டுக் கொண்டும் அவரவர் ஜோலியில் சர்வசாதாரணமாய் ஈடுபட்டிருந்தனர்.

நான் வாசற்புறத்தில் நின்றுகொண்டு அங்கிருந்த பூச்செடிகளைப் பார்த்துக் குருட்டு யோசனை பண்ணிக் கொண்டிருந்தேன்.

எனக்கு ஒரு சிறு தலைவலி ஏற்பட்டால்கூட அம்மா வும் அப்பாவும் நிமிஷத்திற்கு நிமிஷம் தொட்டுப் பார்ப் பார்கள் நோயாளிக்குக் குணமாகும் வரை வீட்டிலேயே திண்பண்டங்கள் புழங்காது· சமையல்கூட எல்லோருக்கும் கட்டுப்பாடாய் இருக்கும்· தன்னைப் பட்டினி போட்டு மற்றவர்கள் தின்கிறார்களே என்று நான் நினைக்கக் கூடாது எனும் பரிவு, ஆனால் இங்கோ, ஒருவருக்கும் தன் தீனியில் சௌகரியத்தில் ஒரு இம்மி குறைந்ததாய்த் தெரியவில்லை. என்னதான் இருந்தாலும் கங்கா தாயில் லாக் குழந்தைதானே!

"ஓய்—!"—கைதட்டல் கேட்டுத் திரும்பிப் பார்த்தேன்.

"இந்தப் பக்கம் நோக்கட்டும்—"

மாடியிலிருந்து கங்கா சிரித்தாள். முகம் சுண்டி யிருந்தது; மயிர் பரட்டையாய்க் காற்றில் அலைந்தது.

"என்ன பண்ணறாய்? கண்ணிலேயே காணவில் லையே, மேலே வாயேன்!" நான் தலையை அசைத் தேன். மேலே போக இஷ்டம்தான். ஆனால் இந்தப் பாழா போற லஜ்ஜை!

அவள் கையில் பச்சையாய் ஏதோ தெரிந்தது. "கையில் என்னது?" என்றேன். கையை நீட்டினாள் மாங்காய்!

"உனக்கு வேணுமா?"

வேண்டாமென்று தலையை ஆட்டினேன். அவள் மாங்காயைக் கவ்விக் கடித்துத் தின்ன ஆரம்பித்தாள். இப்போ புரிந்தது. கங்காவின் உடம்பைப் பற்றி அவள் வீட்டிலேயே யாருக்கும் கவலைப்பட்டுக் கட்டுப்படிஆகாது கங்கா சூரியனின்று கழன்று தப்பி பூமிக்கு ஓடிவந்துவிட்ட பொற்கதிர். பொறுப்பற்ற பொற்கதிர்தான். ஆனாலும் அவள் கவர்ச்சியே அவள் பொறுப்பற்ற தன்மையில்தான்.

எஸ்.எஸ்.எல்.ஸி. பரீக்ஷை முடிவுகள் பிரத்யேகமாய்க் கிடைக்க ஆரம்பித்துவிட்டன. நான் "பாஸ்" எல்லா பாடங்களிலுமே நல்ல மார்க்கு வாங்கியிருந்தேன். மாமா வீட்டில் எல்லோருக்கும் சர்க்கரை வழங்கினார். கண்ணாடி தட்டிலிருந்து கங்கா அள்ளிஅள்ளி இரண்டுவாய் போட்டுக் கொண்டாள். அதைப் பற்றி எனக்குள்ளேயே நான் தனி அர்த்தம் பண்ணிக்கொண்டு எனக்கே ஆனந்தப்பட்டுக் கொண்டேன்.

ஆனால் அவள் அண்ணன் பரீக்ஷையில் மறுபடியும் 'டக்' அடித்துவிட்டான். அவள் தகப்பனார் வீடு அதிர இரைந்தார். உடனோடொத்தவனைப் பார்த்துக்கோடா—உன்னைவிட நாலு வயசு மட்டு. அவன் கிளாஸ் ஏறிண்டே போகட்டும். நீ படிப்படியா 'ஓம் நாராயணாய நம:வுக்குப் போயிண்டேயிரு' என்று என்னை ஒப்பிட்டு அவனைக் கடிந்துகொண்டது பையனுக்குப் பொறுக்க வில்லை.

அன்று மாலை வாசற்புறத்தில் காம்பவுண்டிற்குள் இசை கேடாய் ஒரு மூலையில் அவனிடம் தனியாய் மாட்டிக் கொண்டுவிட்டேன். வலுச்சண்டைக்கிழுத்து என்னை ஓங்கி ஒரு அறை அறைந்தான். அந்தத் தடிய னுக்குச் சரியாய் என்னால் நிற்க முடியுமா? அடிவேகம் என்னைப் பின்னுக்குத் தள்ளிக்கொண்டே போய் சுவரில் மோதிக்கொண்டேன். முழங்கையில் அடி.

கூவிக்கொண்டே ஓடிவந்து கங்கா அண்ணனை வாயில் வந்தபடி வைத்தாள். அவன் ஏளனமாய்ச் சிரித்துக்

கொண்டே காளைமாட்டு நடை போட்டுப் போய்விட்டான். நான் முக்கிமுனகிக்கொண்டே எழுந்தேன். முழங்கையில் நெருப்பை வைத்துக் கட்டினாற்போல் இருந்தது.

"ஐயையோ!" கங்கா என் கையைப் பிடித்தாள். முழங்கையில் ரத்தம் வழிந்தது. சதை அறுந்து தொங்கிற்று.

"போ!" என்று அவள் கையை உதறினேன். எனக்கு அழுகை வந்துவிட்டது. அடியின் வலி ஒரு பக்கம்; அதை விட நான் உதைப்பட்டதை அவள் பார்த்து விட்டாளே எனும் அவமானம் இன்னொரு பக்கம் இப்பொழுது நான் அழுவதையும் பார்க்கிறாளே என்று நினைக்கையிலேயே அழுகை இன்னும் உடைப்பெடுத்துக் கொண்டு வந்தது.

கங்கா ஓடிப் போய், கையில் தேங்காயெண்ணெய் சீசாவுடனும், பஞ்சும் துணிக் கிழிசலுடனும் திரும்பி ஓடி வந்தாள். நான் சொல்லச் சொல்ல, நான் சொல்வதை சட்டை செய்யாமல் என் அருகே மண்டியிட்டு உட்கார்ந்து கொண்டு பஞ்சை எண்ணெயில் தேய்த்து புண்ணில் அப்பினாள். வாய் ஓயாமல் அண்ணனை வசைபாடிக் கொண்டிருந்தது. "சவண்டிக் கொத்தனை அப்பாவிடம் சொல்லி நன்னா சாடச் சொல்றேன் !"

அவள் கவனம் முழுவதும் அண்ணனைத் திட்டுவதிலும் காயத்தைக் கட்டுவதிலும் ஊன்றியதால், கன்னத்தில் வழியும் கண்ணீரைத் துடைக்கக்கூட மறந்து நான் அவளைக் கவனிப்பதை அவள் கவனிக்கவில்லை. அப் புருவங்கள் தாம் என்ன சீராய் வளைந்திருக்கின்றன! மூக்குத்தான் என்ன எடுப்பு! அந்தக் கண்கள்தான் எப்படி பேசுகின்றன! பெண்ணென்று ஆண்டவன் படைத்து விட்டால் அது எவ்வளவு சின்னக் குழந்தையானாலும், சமயத்தில் அதற்கு நூத்துக்கிழத்தின் தாய்மை எங்கிருந்து தான் திடீரென்று ஏற்படுகிறதோ ?

கனலாய்க் கொதித்த கண்ணீர் திடீரென என் கன்னத்தில் பன்னீராய்க் குளிர்ந்தது.

காற்று சில்லென மோதியது. ஜன்னலுக்கு வெளியே எட்டிப் பார்த்தேன். நீண்டதோர் பாலத்தின் மேல் ரயில் வெகு வேகமாய்ப் போய்க்கொண்டிருந்தது. அடியில் ஜலம் அகண்டமாய் விரிந்தது. எனக்கு ஒரு எண்ணம் தோன்றிற்று. திடீரென்று இங்கு ரயில் கவிழ்ந்துவிட்டால்! அடிக்கடி பத்திரிகைகளில் இப்போது, இதைத்தானே படிக்கிறோம்! அப்படியே கவிழ்ந்தாலும் அடியில் அதி பாதாளத்தில் மினுமினுக்கும் ஜலத்தில் நான் வீழ்ந்து கொண்டிருக்கையிலேயே 'கங்கா!' எனும் நாமம்தான் என் வாயின் கடைசி ஓசையாயிருக்கும் என்று நினைக்கையிலேயே அந்நினைப்பே மனதிற்கு ஒரு ஆறுதலாயிருந்தது.

ரயில் ஏன் இன்னும் கவிழ ஆரம்பிக்கவில்லை ?

ஆனால் அது என்னைச் சட்டை செய்யாமல் பத்திரமாய், வேகமாய்ப் போய்க் கொண்டிருந்தது.

கங்காவிற்குத் திடீரென்று கலியாணம் கூடிவிட்டது. இவையெல்லாம் எப்படி நேருகிறதென்று எனக்குத் தெரியவில்லை. என் அக்காவிற்காக என் அப்பா ஜாதகக் கட்டைத் தூக்கிக்கொண்டு ஊர் ஊராய் வருஷக்கணக்கில் அலைந்தது எனக்கு இன்னும் மறக்கவில்லை. ஆனால் கங்காவிற்கோ திடீரென்று முன்பின் அறிக்கையில்லாமற் கூடி, முகூர்த்தம் கூடக் குறித்தாகிவிட்டது.

பையன் பெண்ணைப் பார்க்க வரும்போது எனக்குப் பொறுக்கமுடியும் என்று தோன்றவில்லை. நான் அந்த வேளைக்கு வீட்டைவிட்டுப் போய்விட்டேன். ஆனால் சில நாட்கள் கழித்து நான் அவனைப் பார்க்க நேர்ந்தது. கங்காவின் தகப்பனார் பெருமிதத்தோடு அவனை வீட்டிற்கு மறுபடியும் ஏதோ சாக்கில் அழைத்து வந்திருந்தார்.

'இவர் தான் புது மாப்பிள்ளை!' என்று மாமாவுக்கு அறிமுகப்படுத்தினார். அவனைப் பார்த்ததும் அவனிடமிருக்கும் குறைகள் தாம் எனக்குத் தலைகாட்டி நின்றன. பையன் பி. ஏ. பரிக்ஷை மூன்றாம் பாகத்தில் 'பல்டி'. தலையைச் சாய்த்துக்கொண்டு, லேசான காக்கைப் பார்வை. உச்சந்தலையில் இப்பவே சின்ன சொட்டை. அதை மறைக்க ரொம்பவும் பாடுபட்டிருந்தான். கால் கட்டைவிரல் நகம் ஒன்று சொத்தை.

இருந்தால் என்ன ? ஒரே பிள்ளை. தகப்பனார் உத்தியோகம் பண்ணி கிம்பளமாய்க் கொள்ளையடித்தது தவிர பூர்வீக சொத்து வேறே நிறைய. இன்னமும் அத்தை வழியிலும் தாய் வழியிலும் வேறு வர ஏராளமாய் காத்துக் கொண்டிருந்தது. சொந்தமாய் கார் கேட்கணுமா ?

ஆனால் இது எல்லாவற்றையும் விட அக்கிரமம் கங்கா திடீரென்று மாறிப் போனதுதான். என்னை அடியோடு மறந்துவிட்டாள். சாப்பாடு வேளை, படுக்கை வேளை போக பாக்கிப் பொழுதெல்லாம் குடியிருக்கிற மாமாவாத்திலே குடியிருப்பவளுக்கு இப்போது 'ஏன்' என்று கேட்க நேரம் இல்லை.

மருதாணியிலையை வரவழைத்து, அதைக் கொய்து அரைத்து இட்டுக் கொள்ளவும், புடவை வாங்கவும் நகை வாங்கவும் பெரியவர்களுடன் கடைகளுக்குப் போகவும், கடையிலிருந்து வந்தபின் வாங்கிவந்த சாமான்களைப் பற்றிச் சண்டை போடவும், விதவிதமாய் அலங்காரம் பண்ணிக்கொண்டு சினேகிதிகள் வீட்டிற்குப் போய் வரத்தான் சரியாயிருந்தது. இவளுடைய அட்டகாசத்துக்கு ஒத்தாசையாக இடையிடையே பிள்ளை வீட்டாரின் கார் வந்து வந்து வாசலில் நிற்கும். அவள் குஷியாய்க் காலத்தைக் கழித்து வந்தாள். ஆனால் நானோ முதுகைத் தடவிக் கொடுத்துக்கொண்டேயிருந்துவிட்டுத் திடீரென்று சமுத்திரத்தில் வீசியெறியப்பட்ட குச்சு நாயின் பயங்கர

நிலையை அடைந்து விட்டேன். எப்படி நீந்திக் கரை சேர்வாயோ அது உன்பாடு—

ஆனால் கங்கா என் சொத்தா? அவளிடம் நான் என்ன எதிர்பார்த்தேன்? எதை அவளிடம் எதிர்பார்க்க எனக்கு என்ன நியாயம் அல்ல உரிமை உண்டு? என்று கேள்விகள் தாமே எழுந்தன. ஆயினும் அவைகளுக்குப் பதிலோ சமாதானமோ தெரியாததால் என் வேதனை அதிகரித்தது. சாப்பாடு வேண்டியில்லை. இருப்புக் கொள்ளவில்லை. ஒருவரும் இல்லாத சமயத்தில் கண்ணில் ஜலம்கூடத் தளும்பிற்று.

'கடவுளே என்னை எப்படியாயினும் இந்தக் கஷ்டத்திலிருந்து விடுவி!'—எனக் குழந்தைபோல் வேண்டுவேன். ஆனால் பக்த பராதீனனாகிய அவனே நேரில் பிரசன்னமாகி "எந்தக் கஷ்டம்?" என்று கேட்டால் அவனுக்கு விவரித்துச் சொல்ல என்னிடம் என்ன பதில் இருக்கிறது?

முகூர்த்தத்திற்கு இன்னும் ஒரு வாரம் இருந்தது.

ஒரு மாலை நான் எங்கள் விடுதியில் இருட்டில் உட்கார்ந்தபடி என்னுள் என்னைச் சுற்றி இடிந்த என் உலகைப் பார்த்து யோசனை பண்ணிக்கொண்டிருந்தேன். பொழுது நன்கு சாய்ந்துவிட்டது. கையெழுத்து மறைந்து கொண்டிருந்தது.

இடையில் குடத்தைத் தாங்கி, புன்னகை புரிந்தபடி, கங்கா என் முன்னே நின்றாள்.

"கிணற்றடிக்கு வரையா துணைக்கு ?"

அவளுக்குப் பதில் சொல்ல எனக்குத் தோன்றவில்லை. அவள் அழகைக் கண்களால் ஆசையாய்ப் பருகினேன். ஆனால் பருகப்பருக தாபம் அதிகரித்தது. இவள் குரூபி ஆகிவிடக் கூடாதா? என்று பயங்கரமாய் ஒரு ஆசை, மனதில் தட்டிற்று. என் எண்ணம்

பாபமானாலும் அம்மாதிரி அவளுக்கு நேரும் சாபமே எனக்கு ஆறுதல் தரும் வரமாயும் கூடும்.

"என்ன, காது கேக்கலையா ?"

"நான் எதுக்கு ?" என்றேன், புழுக்கத்துடன்.

"இந்த நாட்டிலே கள்ளர் பயம். இந்த மாதிரி வேளையிலேதான் கொல்லைப்புறத்திலே ஒளிஞ்சுண்டிருப்பான். யாராவது ஜலத்துக்கு வந்தால் கன்னத்திலே அறைஞ்சு கழுத்திலேயிருக்கிறதை அறுத்துண்டு ஓட்டம் பிடிப்பான்-"

"அந்தக் கள்ளன் என்னை மாத்திரம் அறைய மாட்டானா ?" என்றேன்.

"நீ ஆம்பளை சிங்கமில்லையா ?"

வாய்பேசாது அவளைப் பின் தொடர்ந்தேன். அவள் என்னை ஒரு கருவியாய் உபயோகப்படுத்துகிறாள் என்ற ஆத்திரம் ஒரு பக்கம் பொங்கிற்று. ஆனால் என்னை அவள் நாடும் சந்தர்ப்பத்தை விலக்க மனதில் வலிமையில்லை.

ஏதோ ஒரு மெட்டை முனகிக் கொண்டே, கங்கா கிணற்றிலிருந்து ஜலம் இழுக்க ஆரம்பித்தாள். நான் முன்பு பார்த்ததற்கு இப்போது வளர்ந்திருந்தாள். எனக்கு ஒரு பிரமை. ஒரு மகத்தான சம்பவத்திற்குத்தான் காரணி எனும் எக்களிப்பே உடலிற்கு ஒரு வாளிப்பையும் நடையுடை பாவனைகளில் ஒரு புது மலர்ச்சியையும் தந்ததோ ?

ஜலமிழுக்கையில் பின்னல் பிடரியினின்று சரிந்து கிணற்றுள் தொங்கிற்று.

என்னால் பொறுக்க முடியவில்லை. ஒரு பிரம்மாண்டமான முயற்சியில் என்னில் இருக்கும் தைரியம் அத்தனையும் வருவித்துக் கொண்டேன்.

"கங்கா !" அவளுக்குக் காது கேட்கவில்லை. இன்னும் சற்று கெட்டியாய், "கங்கா !" என்று கூப்பிட்டேன்.

"ஓவ் !—" என்றாள் முயற்சியுடன், ஜலத்தை இழுத்துக் கொண்டே.

'கங்கா !' என்றேன் மறுபடியும். ஆனால் அதற்கு மேல் ஓடவில்லை. என்மேல் ஆயிரம் நட்டுவாக்களிகள் ஊர்ந்தன. "கங்கா !"

திரும்பி, ஆச்சரியத்துடன் என்னை நோக்கினாள். அந்தப் பார்வையிலேயே என் தைரியம் அத்தனையும் கரைந்து போயிற்று. என்ன முனகினேன் என்று எனக்கே காது கேட்கவில்லை.

கங்கா, கிணற்றின் பிடிச்சுவரினின்று குடத்தை இடுப்பில் ஏற்றிக் கொண்டாள். சிரித்துக்கொண்டே, "கங்கா, யமுனா, பாகீரதி, நர்மதா, சரஸ்வதி !" என்று பாட்டாய் பாடிக் கொண்டே இடுப்பை ஒடித்து ஒடித்து நடந்து வீட்டுள் சென்றாள்.

'கிர்'ரென்றது. தலையை கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டு அங்கேயே உட்கார்ந்துவிட்டேன். பாக்கு மரங்களிலும் தென்னங் கன்றுகளிலிருந்தும் பறவைகள் 'கர் கர்' எனச் சத்தமிட்டு கேலி செய்தன. மரங்களின் பின்னாலிருந்து இரண்டு நக்ஷத்திரங்கள் 'என்ன சமாசாரம் ?' என எட்டிப் பார்த்து ஏளனமாய்க் கண்ணைச் சிமிட்டின.

ஆனால் இந்த அவஸ்தையை நான் இதற்கு மேலும் படுவது தருமத்திற்கே சகிக்கவில்லை. காலேஜில் சேரும் விஷயமாய் உடனே புறப்படும்படி மறுநாள் அப்பாவிடமிருந்து தந்தி வந்தது. நான் அன்று சாயந்திரமே கிளம்பும்படி ஆயிற்று.

வாசலில் வண்டி வந்து நின்றதும் என்னை வழியனுப்ப அத்தனை பேரும் கூடினர். கங்கா சிரித்துக் கொண்டே, "வர வருஷமும் வரணும் கேட்டையா? நான் இங்கேதான் இருப்பேன்," என்றாள். அவளைக் கண்ணெடுத்துப்

பார்க்கத் தைரியமிலாது கவிழ்ந்த தலையுடன் டொங்கா வில் ஏறினேன். இனி இப்பக்கம் எப்பவோ? இப்போது கூட இவ்வண்டியும் இன்னும் சற்று நேரம் கழித்து ரயில் சக்கரங்களின் ஒவ்வொரு உருளலும் என்னை கங்காவிட மிருந்து எட்ட எட்டக் கொண்டு போகிறது என்பதை எண்ணுகையிலேயே துக்கத்தையும் மீறிய ஒரு திகிலில் வயிறு பகீர், பகீர்...இது என் வாழ்க்கையில் ஒரு இடை வேளை, என்பதை மனம் லேசில் ஒப்ப மறுத்தது.

நான் நினைத்ததற்கு சரியாக, திரும்பிய சில மாதங் களுக்கெல்லாம் மாமாவிற்கு மாற்றலாகிவிட்டது. நான் கள்ளிக்கோட்டைக்கு மறுபடியும் போவதற்கு ஒரு சாக்கும் ஒழிந்தது. அப்புறம் குடும்பத்திலும் என்னென்னவோ நேர்ந்தன. எல்லாமே நினைத்தபடியே நேருகிறதா?

ஆனால் இப்போது அப்படியல்ல. இப்போது ரயில் முன்னேறும் ஒவ்வொரு அடியும் என்னைக் கங்கா விடமோ அல்லது அவளைக் கண்டு பிடிப்பதற்கான தகவல்களை விசாரிக்கும் இடத்திற்கோ கிட்ட எடுத்துச் செல்கிறது. அன்றுபோல் இப்போது நான் கிணற்றடியில் மயங்கி நிற்கமாட்டேன். கங்காவிடம்சொல்ல வேண்டுவது என்னவென்று எனக்கு இப்போது தெரியும். நான் என்ன சொல்ல வந்தேன் என்பதையும் அவள் இப்போது அறிந் திருப்பாள். எனக்கு வாழ்க்கை சலித்துப் போனதுபோல் அவளுக்கும் கசந்து போயிருக்கும். அவளையும் அவள் குணங்களின் நிரடலான அழகுகளையும் ரஸிக்க அவள் கணவன் எப்படி லாயக்காவான்? எங்களிருவருக்கும் எங்களைத் தவிர இனி கதியில்லை.

ஆனால் கங்கா இறந்திருந்தால்—?

முதுகுத் தண்டு சில்லிட்டது. ஏற்கெனவே பேச்சு வாக்கில் சொல்லியிருக்கிறாள். அவர்கள் கூட்டமே அல்பாயுசு. ஒரு அக்கா பிரசவத்தில் இறந்துவிட்டாளாம். ஒரு அண்ணன் 'டி.பி.'யில் போய்விட்டான்.

குழம்பிய மனத்துடன் ஸ்டேஷனில் இறங்கினேன். ஊரில் மாறுதல் காணோம். வண்டியை வைத்துக்கொண்டு நேரே அவள் வீட்டுக்குச் சென்றேன். கங்காவின் தகப்பனாரின் பேரைச் சொல்லிக் கொண்டே உள்ளே நுழைந்தேன்.

வேற்று முகங்கள் தென்பட்டன. ஆனால் ஊஞ்சலில் ஒரு ஆள் வெற்றிலைப் பெட்டியை எதிரே வைத்துக் கொண்டு உட்கார்ந்திருந்தான். பழகிய முகமாயிருந்தது. கவனித்ததில் கங்காவின் அண்ணன்; என்னை அன்று உதைத்தவன்.

என்னை அறிமுகப்படுத்திக் கொண்டு பிறகு பேர் பேராய் விசாரித்தேன். கங்காவின் தகப்பனார் காலமாயாச்சு. சித்தி அவருக்கு முன்னாலேயே தவறிவிட்டாளாம். வீட்டில் எதற்கோ தேஷியம் கிணற்றில் விழுந்தூட்டாள். சொத்து எல்லாம் பங்காச்சு. கூட்டுக் குடித்தனம்போது நிறைய இருந்த ஆஸ்தி பங்கானதும் துளியாப் போச்சு. வீட்டிலே இப்போது தனித் தனியாய்ப் பத்து சமையல், வியாபாரம் ரொம்ப மந்தம். வருமானம் போதவில்லை. உங்கள் ஆபீஸில் ஏதாவது எனக்குத் தகுந்த பணியுண்டோ? என்று கேட்டான். "கங்கா சௌக்கியமா?" என் தொண்டை தழுதழுத்தது. 'யார் கண்டா?' பகீரென்றது. "புக்ககத்தில்தானே யிருக்கிறாள்?" என் கேள்வியின் அர்த்தமே எனக்குத் தெரியவில்லை.

"இல்லாமல் என்ன? அவள் இப்போ ரொம்ப ராங்கிக்காரி ஆயிட்டா. நாலைந்து வருஷங்களுக்கு முன்னே 'குடும்பம் கஷ்டப்படறது உன் ஆம்படையான்கிட்டேருந்து ஒரு இரண்டாயிரம் பணம் கடன் வாங்கிக் கொடு'ன்னு எழுதிக் கேட்டேன். அதற்கு பதிலும் காணோம். அப்புறம் எங்கேயாவது ஒட்டிண்டுடுமோன்னு வேறு கடலாசும் கிடையாது. இந்தக் குடும்பத்தில்தான் பிறந்தாள் என்கிறதையே மறந்தூட்டா. உடன் பிறந்தது எல்லாம் எப்படி

இருக்கு பார்த்தாயோன்னோ ?" அவனை சமாதானப் படுத்தி, அவள் விலாசத்தை விசாரித்தேன். கடைசியாத் தெரிஞ்ச விலாசம் கொயமுத்தூரில் அவள் புருஷன் 'வெக்கல்' பண்ணிண்டிருந்தான் என்று தெருப் பெயரைச் சொன்னான்.

அன்றிரவே கொயமுத்தூருக்குப் பயணமானேன்.

ஆனால் அங்கு குறித்த விலாசத்தில் அவர்கள் கிடைக்கவில்லை. அக்கம் பக்கம் விசாரித்ததில், வருமானம் மந்தம் என்று பக்கத்திலிருந்த கிராமத்திற்கு ஒரு மாதத்திற்கு முன்னால்தான் மூட்டை முடிச்சுடன் போய் விட்டார்கள் எனத் தெரிந்தது.

கங்கா எட்டப் போகப் போக, என் ஊக்கம் இன்னமும் தீவிரம் அடைந்தது. கங்கா என் சங்கல்பம்; இனி அகப் பட்டு விடுவாள்.

நான் கிராமத்தை யடைந்தபோது ஊர் ஓசையடங்கி விட்டது. ஒரு வீட்டுத் திண்ணையில் காலை அப்பொழுது தான் நீட்டின ஒரு கிழவரை கங்காவின் கணவன் பேரைச் சொல்லி விசாரித்தேன். அவர் நான் தேடிவந்த வீட்டை உட்கார்ந்த இடத்திலிருந்தே சுட்டிக் காட்டினார்.

நெஞ்சில் இதயம் கழைக் கொடியாய் ஆட, அந்த வீட்டுப் படி ஏறினேன். வாசற்கதவு திறந்துதான் இருந்தது. எனினும் உள்ளே வெகுதூரம் வரை இருட் டாய்த் தானிருந்தது. அப்பால் எங்கோ ஒரு 'மினுக் மினுக்'.

இது என் மகத்தான நிமிஷம். விரல் கணுவால் கதவைத் தட்டினேன்.

"யாரது?" என்றது ஒரு ஆண் குரல் அதிகாரத்துடன்.

"பரதேசி" — என்றேன். மார் படபடத்தது. ஏன் அப்படிச் சொன்னேன் ?

"கங்கா ! யாரோ பிச்சைக்காரன் வந்திருக்கான் ஒரு பிடி சாதம் போடு."

தூக்கக் கலக்கத்தில் ஒரு குரல் முனகிற்று ! "சரிதான்! உங்களுக்கென்ன ? எழுந்திருக்கச் சொன்னவா என் பாவம் கொண்டவான்னு எனக்கிருக்கு."

"என்னடீது ? பரதேசின்னு ஒரு ஆள் வந்திருக்கான்— மூலையிலிருக்கிற பழையதைப் பிழிஞ்சுப் போட இவ்வளவு சோம்பினால் ? புதிதாய் சமைச்சாப் போடப் போகிறாய் ?"

முக்கி முனகிக்கொண்டு அவள் எழுந்திருக்கும் அரவம் கேட்டது. சற்று நேரத்திற்கெல்லாம் நான் உள்ளே இருட்டில் கண்ட பொறி என்னை நெருங்கத் தொடங்கிற்று. என்னுள் சிற்பக் கதவுகளில் கட்டிய வெள்ளி மணிகள் ஒரேயடியாய் அலறின.

இருளிலிருந்து பிரிந்து ஒரு கையில் தட்டும் ஒரு கையில் விளக்குமாய் ஒரு உருவம் உள்வாசல்களைக் கடந்து தெரு வாசலை நோக்கி வந்துகொண்டிருந்தது. ஆட்டுக்கல் நடந்து வருவதுபோல் அதுவே ஒரு வியாதி ஏகமாய் ஊதிப்போன சரீரம். ஜலத்தில் கப்பல் புரளுவது போல் ஒவ்வொரு அடிக்கும் பக்கவாட்டில் சாய்ந்தது. கிட்ட நெருங்க நெருங்க கதுப்பாடும் கன்னங்களுக்குமேல் சீயக்காய் விரையைப் பதித்தாற்போன்று கண்கள் இடுங்கிப் போயிருந்தன. அவளுக்கு நடப்பதே பிரயாசை யாயிருந்ததால் புஸ் புஸ் என்று ரோடு என்ஜின் மாதிரி மூச்சு ஊதிற்று.

என் எதிரில் வந்து நின்றாள். என்னுள் ஏதோ மளமள வெனச் சரிந்தது.

"என்னடா ஏனம் கொண்டு வந்திருக்கையா ?"

"கங்காவா ?" என்றேன்.

"ஆமா..." என்று ஞாபக மறதியாய் சொல்லிவிட்டு உடனே ஆத்திரத்தோடே, "பார்த்தேளா இந்த அக்கிரமத்தை..."

"என்னடி! என்னடி!!—" உள்ளே இருந்து அவள் புருஷன் ஓடிவரும் சப்தம் நெருங்கிற்று.

"இந்தக் கட்டையிலே போறவனுக்கு பிச்சை வாங்கறதுக்கு முன்னாலே என் பேரைத் தெரிஞ்சுக்கணுமாம்..."

ஆனால் நான் அவளுடைய பாக்கிப் பேச்சுக்கு அங்கில்லை. ஓட்டமாய் ஓடினேன். வெகுதூரம் ஓடினேன். இருட்டில் எங்கோ தடுக்கிக் குப்புற விழுந்தேன். விழுந்த இடத்தில் விழுந்தபடி விக்கி விக்கி அழுதேன். அழுது கொண்டேயிருந்தேன்.

எனக்கு நினைவு வந்தபோது ரயில்வே போர்ட்டர் என்னைத் தோளைப் பிடித்துக் குலுக்கிக் கொண்டிருந்தான். "என்ன சாமி தூங்கிட்டீங்க? தூக்கத்தில் அழுவ றீங்களே! எளுந்திருங்க எளுந்திருங்க, லாஸ்ட் வண்டி வருது!"

கண்ணைக் கசக்கி விழித்து என்னைச் சுற்றி நோக்கினேன். வண்டி வந்து நின்றது. அவன் கையில் ஒற்றை ரூபாய் நோட்டு ஒன்றைத் திணித்துவிட்டு வண்டியில் ஏறினேன்.

"என்னாத்துக்குங்க இது?"

"என்னை மீட்டுக் கொடுத்ததற்கு" என்று கூவினேன்.

கதவைத் தட்டினேன். கவலை தோய்ந்த முகத்துடன் என் மனைவி கதவைத் திறந்தாள். என்னைக் கண்டு விட்டதும் மறுபடியும் முகம் கடுகடுத்தது. திட்டிக் கொண்டே இலையைப் போட்டாள். திட்டிக்கொண்டே பரிமாறினாள். சாப்பிடும் நேரம் பூரா திட்டிக்கொண்டே

யிருந்தாள். அவள் திட்டத் திட்ட இன்று அலாதி இன்ப மாயிருந்தது.

சாப்பிட்டு எழுந்ததும் தூங்கிக் கொண்டிருந்த குழந்தையை எழுப்பிக் கொஞ்சினேன். என்னைத் திட்டிக் கொண்டே எச்சில் இலையை எடுத்து வாசலில் எறிந்து விட்டு, திட்டிக் கொண்டே திரும்பி வந்தாள். அப்புறம் என்னால் அடக்க முடியவில்லை.

"சாலா இங்கே வா!" ... வந்தாள். கையைப் பிடித்தேன்.

"திட்டு, திட்டு. என்னை இன்னும் திட்டு" என்றேன். அவள் பயந்து போய் சற்றுப் பின் வாங்கினாள். அதைக் காண்கையில் பள்ளிக்கூடச் சிறுவன் போல் எனக்குச் சிரிப்பு பீறிட்டது.

"சாலா. நீ என்னைத் திட்டத் திட்ட எனக்கு நீ நிஜமாகிக் கொண்டு வருகிறாய். எப்பொழுது நிஜமா கிறாயோ அப்பொழுது நீதான் நிச்சயம். எப்போ நிச்ச யமோ நீதான் என் தைரியம்."

"சரிதான் கையை விடுங்கோ. யாருக்குப் புரிகிறது உங்கள் சிக்கப் பேச்சும், சிங்காரப் பேச்சும்? கையை விட்டுட்டுக் கையை அலம்புங்கோ எச்சில்...கையை விடுங் கோன்னா!"

# கறைபட்ட இலை

ஒரு காலத்தில் ஓர் இலை, அணில் கிள்ளி விழுந்தது; ஆலிலை.

விழுந்து, கீழே வளர்ந்திருந்த முட்புதரில் சிக்குண்டது.

வெயிலில் காய்ந்து, மழையில் நனைந்து, பனியில் விறைத்து, காற்றில் குளிர்ந்தது.

கொஞ்ச காலம்.

ஆலமரத்தடியில் ஒரு வாய்க்கால். எங்கேயோ, எப் போதோ பிறந்து, பாம்பைப்போல் நெளிந்து எங்கெங்கோ சென்று கடைசியில் எங்கேயோ மறைந்தது.

ஒரு நாள் ஒருத்தி அங்கே வந்தாள். பறைச்சி. (அந்த நாள் அப்படிச் சொல்லும் நாள்தான்) தலையில் ஒரு சோற்று மூட்டை. வயலில் கவலையடிக்கும் தன் புருஷ னுக்குக் கஞ்சி கொண்டு போகிறாள்.

வாய்க்காலில் தண்ணீர் குளு குளுவென்று ஓடிற்று.

வெய்யில் வெந்தது.

அவள் உடல் வியர்த்தது.

புடவையை அவிழ்த்து, கரையோரமாய்ச் சோற்று மூட்டையுடன் வைத்துவிட்டு, ஜலத்தில் இறங்கினாள்.

அவள் குளிக்கையில் எதிர்க்கரையில் ஒருவன் வந்தான். இளவல். அவனுடைய எண்ணெய் வறண்ட செம்பட்டை மயிரில் வெயில் விழுகையில் தங்கமோதிரக் குவியலாய் தலை மாறியது.

வாய் வெற்றிலைச் சிவப்பு. கன்னத்திலும் உதட்டிலும், அவன் தாயின் பால் இன்னமும் வழிந்தது.

அவன் கண்கள்...அவை எதையோ தேடி அலைந்தன, கனவுகள் உலவும் கண்கள். பஞ்சவடி, பிருந்தாவனம், மானஸாதீரம். ஆம் அவன் ஒரு கவிஞன். (அல்ல பைத்தியம்) இடையில் எழுத்தாணி. அவன் பாட்டனுடையது....எங்கேயோபார்த்தபடி என்னவோ யோசனை பண்ணியபடி வருகையில், திடீரென்று அவளைக் கண்டான். சட்டென நின்றான். அவனை ஒரு புதர் மறைத்தது. அதனால் அவள் அவனைப் பார்க்கவில்லை. அவள் உடல், உள்ளம் எல்லாம், வெள்ளத்தின் வசம் திளைத்தது. புனலின் குளிர்ச்சி உடலில் ஊறும் களி வெறியில், தண்ணீரைக் கையால் அடித்துத் திவலைத்திரை எழுப்பி, அதன் பின் மறைந்து, கட கட கக்கடவென சிரித்து அப்படியே ஜலத்தில் மல்லாந்தாள்.

அவள் மயிர் அவிழ்ந்து, தோகை விரிந்து, பிறகு கனத்து அமிழ்ந்தது. கைகளை விரித்து, கால்களைச் சேர்த்து, சிலுவைபோல் மிதந்தாள். வெயிலின் வெப்பம் கண்கள் கூசி இமைக்கத் தவித்தன. வாய் சிரித்தது. உடல் கரும் பளிங்கென ஒளிவீசிற்று.

அவன் அவளிடம் லயித்தான். இடையில் சொருகிய எழுத்தாணி அவனே யறியாது கையில் ஏறியது.

ஓலை ? இல்லை. ஆனால், அதோ முட்களிடையில் ஓர் ஆலிலை...சட்டென அதையெடுத்து, அங்கேயே மண்டியிட்டுத் தொடைமீது வைத்து, எழுத ஆரம்பித்தான். தன் உள்ளத்தில் எழுந்த உணர்ச்சிகளை உருவாக்க முயன்றான்.

அவன் கவிஞன். (அல்ல பைத்தியம்) அவன் கண்கள், கனவு காணும் கண்கள். அக்கனவுகளில், அக்கடும் வெயிலே, நள்ளிரவின் வெண்ணிலவாய் மாறிவிடும்; இவ்

வெயிலில் வேகும் வயல்களே, அந்நிலவில் குளிக்கும் நந்தவனமாகி விடும்; பாசியும் ஊசலும் படர்ந்த இவ் வாய்க்கால், தாமரையும் 'ர்ராஜாவும் மலிந்து கந்தர்வர் குளிக்கும் அற்புத ஓடையாகும். அப்பொழுது, அவன் கற்பனையின் எழுச்சியில் அப்பறைச்சி என்ன ஆவாள் ?

கற்பக வனத்துப் பொய்கையில் அப்ஸரஸ் விளையாடு வதைக் கண்டானா ? அல்ல, நள்ளிரவின் வெண்ணிலவில் கண்ணனை எதிர்பார்த்து வேளைக்கு முன்னரே வந்து, யமுனையில் காத்திருக்கும் முதல் ஜலக்ரீடியைக் கண்டானா ? அல்ல க்ரீடை முடிந்து, அவரவர் வீட்டுக்கு விரைந்த பிறகும் ஆனந்த மூர்ச்சையில் இன்னமும் ஜலத்தில் லயித்துக் கிடக்கும் கடைசி கோபிகையா ?

அல்ல : பஞ்சவடியில் சூர்ப்பனகையின் சாயை விழு முன்னர்,பம்பையில் ஸீதாபிராட்டி அனுபவித்த ஆனந்தாம் ருதத்தின் ஒரு நிமிஷப் பிரத்யக்ஷமா ?

அல்ல : ஆண்டவன் ஆதி மண்ணில் பிசைந்த முதற் பெண்மையா ?

'பசுபதியையே மணாளனாய்க் கொள்வேன்' என்று இமவான் மகள் இயற்றும் கடுந்தவத்தில் குளிக்கச் சென்ற விடத்தில், கடவுளை நினைந்து, தன்னை மறந்து, யோக நித்திரையில் ஆதிபரை ஆழ்ந்த புனிதமா ?

அல்ல, திலோத்தமையைத் தழுவ, சுந்தோபசுந்தர் இட்ட சண்டையையொத்து, ஒரு பெண்ணைக் குறித்து, வெப்பமும் அப்புவும் இடும் போட்டியா ?

கண்டது என்னவோ ? கண்டதையெல்லாம் எழுத முயன்றான்.

அவரவர் லயிப்பில் அவரவர். அவனுக்கு அவன் எழுத்தில்; அவளுக்கு அவள் குளிப்பில். இன்னமும் அவள் அவனைப் பார்க்கவில்லை. இருவரும் மற்றோர் ஆள் அவ்விடம் வருவதை பார்க்கவில்லை.

அவனுக்கோ, கவலையேற்றத்தினின்று இறங்கிய களைப்பு. பசி வயிற்றை எலியாய்ப் பிராண்டிற்று. கஞ்சியெடுத்துவான்னு சேரிக்கு அனுப்பின பொம்புள்ளே இன்னமும் வந்து சேரல்லே; என்ன திமிர் பார்த்தியா? அவன் பொம்புள்ளே சோற்று மூட்டையைக் கரையில் வைத்துவிட்டு, வாய்க்காலில் குளிப்பதைக் கண்டான். அவளைத் திட்டத் திறந்த வாய் மூடாமல் அப்படியே தொங்கிற்று, கரையில் உட்கார்ந்துகொண்டு அவளைப் பார்த்து இளித்துக் கொண்டிருக்கும் வெறியனையும் கண்டுவிட்டான்.

"அஞ்சு ரூவாயும், அரை பீப்பா கள்ளும், ஒரு சேவலும் வரிசையாக் கொடுத்து, தொட்டுத் தாலி கட்டி, குடும்பம் நடத்தலாமின்னு கூட்டி வந்தேன் இவளை! எத்தினி நாளா, இந்த மாதிரி கட்டினவனுக்குச் சொந்தத்தை விலைக்கு வெளிலே காட்டி தொழில் நடத்திட்டிருக்கா? தேவடியா!...... குடிசைக்குப் போய்க் கூழைக் கொண்டு வாடின்னா இப்படி காலையுமில்லே, மாலையுமில்லே, கால் காசுக்குத் துரோகமா பண்றே— ஆமா, பிறத்தியான் பொம்புள்ளே மானத்தை இப்படிக் கால் காசுக்கு அனுபவிக்கிற இந்தப் பட்டிமவன் யாரு?— பார்த்தா, பார்ப்பானாட்டம் இருக்கான்! ஆமா நான் பறையன்தான்; ஆனால், என்ன? அவன் செங்கல் கட்டி வாழ்ந்தா எனக்கு மாத்திரம் ஒரு குடிசையிலே குடி குடும்பமில்லே? கௌரவமில்லே? நான் புருசனல்ல?

அவனுக்கு மண்டை திகுதிகுவென எரிந்தது காதண்டை 'ஜோ' வென்று சமுத்திரம் இரைந்தது. சரேலென்று பின்னால் வந்து, கவியின் எழுத்தாணியைப் பிடுங்கி அவன் மயிறைப் பிடித்துத் தலையை நிமிர்த்தி, விலாவில் ஓங்கிக் குத்தினான். ஒரே குத்துத்தான். எல்லாம் சொற்பத்திலும் சொற்ப நேரம்தான். (சொல்லத் தான் இந்நேரம்) எண்ணத்தின் நேரம்கூட இல்லை. எண்ணம் நேராய் மாறிய செயல் நேரம்.

அவன் வந்தான், கண்டான், நினைத்தான், கொன்றான்.

ஆலிலை, கவியின் கரத்தினின்றும் நழுவியது. அது ஜலத்தில் விழுமுன்னர், அவனது ரத்தத்தில் ஒரு துளியைத் தாங்கிக்கொண்டது. அவ்வுதிரத் துளி, தண்ணீரில், இலைப் படகில் மிதக்கையில், வெயிலின் ஒளியில் பவழமாய் மின்னிற்று.

வாய்க்காலில் குளித்துக் கொண்டிருக்கும் ஸ்திரி தன்னை நோக்கி மிதந்து வந்த அந்த இலையைக் கையிலெடுத்துப் பார்த்தாள். அவளுக்கு வியப்பாயிருந்தது. ஏதோ நாலு கிறுக்கு : அது நடுவே ஒரு துளிச் சிவப்பு !—

அது காலனின் கையெழுத்து. அதன்மேல் அவன் வைத்த முத்திரையென்று அவள் எப்படிக் கண்டாள் ?

"தேவடியா ! திருட்டுத் தேவடியா !!— பறத்தேவடியா !" கரையின் அத்தனை உயரத்திலிருந்து அவன் குதித்ததும் தண்ணீர் பெரும் சுவர்களாய் எழும்பி இடிந்து விழுந்தது.

அந்த எழுத்தாணி அவள் மார்பிலே அழுந்துகையில் அவளுக்கு வீறிட நேரமில்லை. ஆணியின் வேகம் அவ் வேகம். அது சென்ற பாதையும், அவ்வளவு சொகுசு— காலன் அவளைத் தழுவலில் அவ்வளவு ஆசை.

அவள் கை வீசிய வீச்சில், ஆலிலை, எதிர்க் கரைமேல் விழுந்தது. இச்சமயம் அதன் கனமும் இரட்டை ஆகிவிட்டது. ஒரு துளி ஆண் இரத்தம், ஒரு துளி பெண் இரத்தம் ஒன்றையொட்டி யொன்று.

அவளைக் கொன்ற பிறகுதான், பறையனுக்கு மூளைக் கொதிப்பு தணிந்தது. உணர்வு வந்ததும் உதறல் கண்டது. விழுந்தடித்துக்கொண்டு ஆணியைக் கீழே எறிந்துவிட்டு ஓடினான்.

அப்புறம் என்னென்னவோ நடந்தது—வாய்க்காலில் குளியாடும் சவத்தைப்பற்றியும், கரையில் கிடந்த சவத்தைப்பற்றியும், சோற்று மூட்டையின்மேல் விழுந்திருந்த எழுத்தாணியைப் பற்றியும்—

அதெல்லாம்பற்றி நமக்கென்ன ?

இது இலையின் கதை.

அதுவும் இனிக் கொஞ்சம்தான்.

வெயிலில் காய்ந்து, காற்றில் அலைந்து, எங்கெங்கோ சென்று, அது கடைசியில், அடுப்புக்குச் செத்தை பெருக்கும் ஒருத்தியின் துடைப்பத்தில் சிக்குண்டது.

"எந்தக் கட்டையிலே போவானோ புகையிலை மென்னு துப்பிட்டிருக்கான் — இல்லாட்டி, இலை தைக்கலாம்—இருந்தாலும் பரவாயில்லை; பெரிய இலை, காஞ்ச இலை, நல்லா எரியும் !"—

அவள் நினைத்ததும் சரிதான்,

நன்றாகத்தான் எரிந்தது.

# குரு - க்ஷேத்ரம்

## குரு

வணங்குகிறேன். தாங்கள் விதித்தபடியே தங்களை யலாது தங்களை நான் குருவாய் வரித்த பாவனையை வணங்குகிறேன்.

தாங்கள் ஏன் என் கனவில் வரவில்லை? தங்கள் உருவத்தை வெகுவாயும் மனத்தில் விளம்பிக்கொண்டு தாங்கள் வரவேணும் வரவேணும் என வேண்டி வேண்டிக் கிடந்தேன்.

தரிசனம் கிட்டவில்லை.

தாங்கள் உருவங்களைக் கடந்த நிலையை எய்து விட்டதால், மறுபடியும் கனவிலும் கட்டுப்பட தங்களுக்கு மனமில்லையோ ?

ஆனால், "நீ முழு நம்பிக்கையோடும் உண்மை யுடனும் என்னை நினைத்தால் நான் அப்போதே உன் கனவில் தோன்றக்கூடும்" என்று சொன்னீர்களே !

எனக்கு நம்பிக்கையும் உண்மையும் போதவில்லையா? தங்கள் மனம் இரங்கவில்லையா ?

மன்னியுங்கள், மன்னியுங்கள், தங்களை இரக்க மற்றவர் என்று நான் கனவிலும் நினைத்து உய்வேனோ? உங்கள் அடைக்கல வார்த்தைகளை மறைக்கமுடியுமோ ?

"பூமியே வீடு, ஆகாசமே கூரையாயிருக்கையில், வந்தவனைப் போ என்றோ போவானை இரு என்று

சொல்லவோ நான் யார் ?" என்றீர்களே ! தாங்கள் இருக்கையில் தங்கள் இரக்கத்தை நான் அறியவில்லை.

இப்பொழுது சந்தேகங்கள் எழுகின்றன. நாம் அலைந்த இடங்களில், பகலில், மரத்தடியிலும், இரவில் மடத்திலும் என்னை நிறுத்திவிட்டு, தாங்கள் எடுத்து வந்த பிச்சை பூராவுமே சில சமயங்களில் என்னிடம் கொடுத்துவிட்டு, "எனக்குப் பசிக்கவில்லை" அல்லது "வயிறு சரியில்லை" என்று திருப்பிப் படுத்துக் கொண்ட போதெல்லாம் உண்மையைச் சொன்னீர்களோ ? என் வயிறு பசியாதிருக்க, நீங்கள் பட்டினி கிடந்தீர்கள். எனக்காக வயிறு ஒடுங்கியே, தங்கள் புறப்பாடு அவசரப் பட்டுவிட்டதென்றே நினைக்கிறேன்.

தங்களையலாது, தங்களைக் குருவாய் நான் வரித்த பாவனையை வணங்குகிறேன். ஆனால் என் வயிற்றின் பொருட்டு பொய் சொன்னீர்கள். என்னால் உயிர் விட்டீர்கள், இப்படி எண்ணும் என் எண்ணத்தின் துணிச்சலை மன்னியுங்கள். எண்ணமே இல்லாது இருக்க என்னால் முடியவில்லை. பாபமோ, துணிச்சலோ எண்ணியது எண்ணியதுதான்.

அல்லது;

எனக்கு மறதியை அருளுங்கள்.

ஆனால் தங்கள் ஆத்மா, தங்கள் கடைசி மூச்சில் ஏறிக் கொண்டு, புறப்படுகையில், என் செவியைத் தங்கள் உதட்டசைவின் மேல் குனிந்துக் கேட்ட தங்கள் இறுதிக் கட்டளை:

"...ற வாதே."

முதலெழுத்தைக் காற்றோ இலைகளின் சலசலப்போ விழுங்கிவிட்டது. அதனால் என்ன ?

எதை மறவாதே என்று விதித்தீர்கள் ?

பின்னராயினும், என் கனவிலோ, தாங்கள் விட்டுச் சென்ற தங்கள் சொற்ப உடைமைகளிலோ இதுவரை விளக்கம் கிட்டவில்லை.

ஒரு தடவை நாம் ஆற்று மணலில் உட்கார்ந் திருந்தோம். இருந்தாற்போல் இருந்து தாங்கள், "மணலைக் குவித்து அதில் குச்சியை ஒளித்துக் கண்டு பிடிக்கலாம்" என்றீர்கள்.

எனக்கு வெட்கமாயிருந்தது.

"நாம் என்ன குழந்தைகளா ?" என்றேன்.

"பின் நாம் என்ன பெரியவர்களா ? பெரியவர்கள், குழந்தைகளை அளக்கும் உன் கோல் எது ? குழந்தையா யிருக்க வலிக்கிறதா ? இருக்கத்தான் முடியுமா ? வெளி யில் சொன்னால் வெட்கக்கேடு, நாம் பெரியவர்களும் இல்லை. பெரிய பதவியைத் தேடி வந்திருக்கிறாய், வெட்கப்பட்டால் முடியுமா ? வா, வா..."

விளையாடினோம். சுவாரஸ்யமாய்த்தானிருந்தது, நம்மிடையில், நாம் குவித்த அவ்வளவு சிறிய மணல் கரையுள், எப்படி அவ்வளவு தினுசுகளில் தங்களால் ஒளிக்க முடிந்தது ? என் வியப்பை தங்களிடம் நான் வெளி யிட்டபோது, தாங்கள் குச்சியை ஒளித்த இடத்தின் மேல் கையை அறைந்து ஊன்றிக்கொண்டு, "ஆத்மநாதா, நான் இப்படி ஆகுமுன், ஒரு ஜேப்படி" என்றீர்கள்.

எனக்குக் கண்ட அதிர்ச்சியில் என்னையறியாமலே என் கைகள் சடக்கென்று இழுத்துக் கொண்டன.

ஆனால் அதைக் கண்டு கொள்ளாததுபோல், மேலும்:

"இதுவரை நான் கையும் பிடியுமாய் அகப்பட்டுக் கொண்டதில்லை, ஒளிக்கவும், ஒளிக்கும் இடங்களும் எனக்கு அற்றுபடி. சரி குச்சியைத் தேடுவோம்..."

ஆனால் குச்சி அகப்படவில்லை. மண் குவியலையும் அதன் சுற்றுப்புறங்களையும் சல்லடை போட்டு சலித்துப் பார்த்தாயிற்று. ஊ—ஹூம், கிடைக்கவில்லை.

ஆனால், இதற்காக ஏன் தங்களுக்குத் திடீரெனக் கொஞ்சம்கூட அவசியம், ஏன், நியாயம்கூட இல்லாத இவ்வளவு பரபரப்பு, திகில்?

"இது விளையாட்டு. கெட்டுப்போனது மாணிக்கம், வைரம் இல்லை" என்று ஒரு முறைக்கு இருமுறையாய் நான் ஞாபகமூட்டியும், நீங்கள் தேறவில்லை. அன்றுதான் எனக்கு நினைவு தெரிந்து, உங்கள் அன்புக் குரல் சற்று தடித்தது.

நான் விளையாடவே இல்லை, உன்னை நான் விளையாடவே அழைக்கவில்லை. 'விளையாட்டு' என்கிற வார்த்தையே என் வாயில் வரவில்லை. சரியாய் நினைவு படுத்திக் கொள். எனக்கு விளையாட்டே கிடையாது. மாணிக்கமும் வைரமும் எனக்கேதுக்கு? அவரவர்க்கு அவரவர் மதிப்பு. ஒளித்த பொருள் மாணிக்கமோ வைரமோ, வெறும் நெருப்புக் குச்சியோ—காணோம் என்றால் என்ன அர்த்தம்? அதைக் கண்டுபிடிக்க முடியா விட்டால், அது இல்லை என்று அர்த்தமா?"

எனக்குச் சிரிப்பு வந்துவிட்டது.

"இல்லை, அதற்குக் காலும் கையும் முளைத்து, தானே ஒளிந்துகொண்டது என்று அர்த்தம்" என்றேன்.

உங்கள் முகம் சட்டென மாறியதைக் கண்டதும்தான் நான் இழைத்த அவமரியாதை புரிந்தது. "வாய்க் கொழுப்பை மன்னித்துவிடுங்கள்" என்று உங்கள் பாதங்களில் என் தலையை வைக்கக் குனிந்தேன். ஆனால் நீங்கள் தடுத்துவிட்டீர்கள். உங்கள் பார்வை, எனக்குப் பின்னால், தன் நிழல்கூட படாது நின்று, உங்களுக்கு

மாத்திரம் படும் எதையோ வெறித்தது. முகம் வெடித்து விடும்போல் உப்பிற்று.

"ஆத்மநாதா, நீ சொன்னது உண்மை, உண்மை. முக்காலும் உண்மை. அது ஒளிந்துகொண்டது. ஆத்ம நாதா நான் ஏமாந்து போனேண்டா—"

குழந்தைபோல் விக்கி விக்கி அழுதீர்கள். தங்கள் துயரம் தங்களை எரிக்கையில், பார்க்க பயமாயிருந்தது. அதன் அனல் என்மேல் வீசுகையில், என்னுடைய நெஞ்சுள் ஏதோ இளகிப் புரண்டு, இடறிற்று. நாம் தேடியது குச்சியா ?

யாவதிலும் ஒளிந்து கொண்டிருக்கும் அர்த்தம் இது தானா ?

அதைத் தேடுவதும் இதுதானா ?

அன்று இரவு இருப்பே கொள்ளவில்லை. புரண்டு முனகினேன்.

மையிருளில் எதிர்த் திண்ணையில் உட்கார்ந்திருக்கும் உங்கள் வடிவக் கோடுகள் தெளிவிலாது தெரிந்தன.

லேசாக இலை அசைந்தால்கூட உயிர் பிசகும் மோனம்.

எதிர்த் திண்ணையிலிருந்து, பல மைல்களுக்கப்பா லிருந்து உங்கள் குரல் எட்டிற்று.

"ஆத்மா, தூங்குகிறாயா ?"

"விழித்துக் கொண்டு தானிருக்கிறேன்."

"ஆத்மா, நான் இப்படி ஆகுமுன் ஒரு பெரிய ஜேப்படி."

நான் பதில் பேசவில்லை. நான் பேசவே என்ன இருக் கிறது !

கருவானில் ஒரு நட்சத்திரம்,— ஒரே நட்சத்திரம்! தனித்து நிலைகலைந்து ஊசலாடுகிறது.

அதன் தவிப்பு பீதியை விளைவிக்கிறது.

யாருடைய நட்சத்திரம்?

"—அப்போது என் பிழைப்பே அதுதான். இதற்குக் கூட்டில் வேலை செய்தால்தான் ஆபத்துக் குறைவு. ஆனால் நான் தனியாய்த்தான் வேலை செய்தேன். நான் எப்பவுமே தனி. நிறையோ குறையோ, எனக்குப் பங்கு இஷ்டமில்லை. அகப்பட்டுக் கொள்ளாதவரையில், அகப் பட்டதெல்லாம் என்னுடையது. அகப்பட்டுக் கொண் டால்?— அதுவும் என்னுடையதுதான். நம்பினவன் காட்டிக் கொடுத்து விட்டான் என்கிற சந்தேகத்துக்கு வழியில்லை அல்லவா? காரியம் எப்படியோ, அதைத் தனியாய்ப் புரிவதில் இந்த நிறைவு, தூய்மை காணலாம். எது விளைந்தாலும் என்னுடையது, யாருக்கும் பங்கு இல்லை.

ஆனால், அதிர்ஷ்டம் ஒன்றேபோல் இருக்குமா? ஒரு சமயம் பத்து ரூபாய் நோட்டு கிடைக்கும். ஒரு சமயம் வெறும் வண்ணான் சீட்டை, பணத்தைவிடப் பத்திரமாய் பையில் ஒளித்து வைத்திருக்கும்.

கடைசி சமயம்—(எதற்கும் ஒரு கடைசி உண்டே!) ஒரு 'பர்ஸ்' அடித்தேன். என் ஆளின் மேல் வைத்த ஆரம்ப இலக்கை நழுவவிடாது, பின் தொடர்ந்து கொண்டே வந்து, தகுந்த சமயத்தில் கூட்டத்தில் பின்னா லிருந்து தள்ளி, அவன் மேல் விழுந்தடித்து ஓடுகையி லேயே அவன் ஜேபியுள் இரண்டு விரலைவிட்டு, தகடால் கிழித்து பர்ஸை வெளிப்படுத்தி, பறித்துக்கொண்டு, மடக்கி மடக்கி இந்தச் சந்தில் புகுந்து, அந்தச் சந்தில் திரும்பி, சிட்டாய்ப் பறந்தேன்.

அனுபவத்திற்குத்தான் அந்த வேகம் புரியும்.

கடைசியில், ஒரு குளத்தங்கரைப் படிக்கட்டில் உட்கார்ந்து, களவாடிய பர்ஸில் இருந்த பணத்தை, ஓடிவந்த மூச்சு இரைக்க இரைக்க எண்ணினேன். சில்லரையை விட்டுத்தள்ளு, பத்து ரூபாய் நோட்டுகள் சரியாய் முப்பது. நன்றாய்ப் பழகிய நோட்டுக்கள். நாலு பக்கமும் வீசி எறியாமல், நாலுபேர் கவனம் என் மேல் படாது செலவழித்தால், என் ஒண்டிக் கட்டைக்கு நாலு மாதங்களுக்குக் கவலையில்லை. எடுக்கிற விரல் துரு ஏறாமல் இருக்கவேண்டுமே என்கிற கவலை தவிர கோவில் ஸ்தூபியைப் பார்த்து, பர்ஸை கண்ணில் ஒற்றிக் கொண்டேன்.

மாலை மறையும் நேரம். கோவிலில் சாயங்கால தீபாராதனையின் கொட்டு முழங்கிற்று. நீராழி மண்டபத்துள் திடுக்கென்று ஒரு விளக்கு ஏற்றிக்கொண்டது.

தோலும் சதையும் மெலிந்த ஒரு கிழவர், தலைமேல் கூப்பிய கைகளுடன் படித் துறைமேல் ஏறி வருகிறார். ஒரு மாத்வ மாமி தீர்த்தப்ரதட்சணம் செய்கிறாள். என் மனம் திடீரென, எனக்கே வியப்பாயிருந்த ஒரு நிம்மதியை அடைந்தது.

மறுநாள் காலை, அதே குளத்தின் பக்கமாய்ப் போய்க் கொண்டிருந்தேன். படித்துறையில் ஒரு சின்ன கூட்டம். நாலைந்து கைகள் ஜலத்தில் சுட்டிச் சுட்டிக் காண்பித்துக் கொண்டிருந்தன. காண்பித்த இடத்தில், ஒரு பெரிய துணிக் கொப்புளம் மிதந்தது. இந்த வேடிக்கையில் கலந்து கொள்ளாமல் இருக்க முடியுமா? மூணு தாண்டில் ஜலத்தின் விளிம்பையடைந்து நோக்கினேன்.

சிரம் மேல் கூப்பிய கைகளுடன் ஒரு உருவம் குப்புற மிதந்தது. நான் இரண்டாந்தரம் பார்க்க அவசியமேயில்லை. நேற்று நான் 'ஜேப்படி'த்த சாக்ஷாத் அதே ஆள்.

எத்தனையோ தடவை களவாடிவிட்டு, பொருளைத் தோற்றவனுடன் சேர்ந்து, விளம்பரமாய் அவன் பொருளை தேடியிருக்கிறேன். அவன் வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொள்கையில் நான் தைரியம்தர அவன் முதுகைத் தட்டியிருக்கிறேன். நான் நடத்தும் நாடகம் எனக்கே வேடிக்கையாக, சிரிப்பாயிருக்கும். ஆனால் இதுவரை எவனையும் அவன் சாவுக்கு அனுப்பியதில்லை. திக்பிரமை பிடித்து நின்றேன்.

கடைசி நிமிஷத்தில் முழுகி முழுகி எழுகையிலும் கூப்பிய கை பிரியாமல் இருக்கமுடியுமா ? நான் காண்பது கண்கட்டு வித்தையா ? எந்த மானத்தைக் காப்பாற்ற இந்தப் பணத்தை நம்பியிருந்தானோ அந்தப் பணத்தை இழந்ததால், உயிரைத் துறக்கும் அளவுக்கு உயிர் மேல் நம்பிக்கையிழந்தவன், உயிரினும் பெரிதாய் நம்பிக்கை வைத்து, சாவிலும் அவன் வணங்கிய அது எது ?

அப்போதிலிருந்து இன்னும் என் கேள்விகளுக்குப் பதில் தேடிக் கொண்டிருக்கிறேன். ஆத்மா, உன்னால் சொல்ல முடியுமா ? பதில்கள் இருக்குமோ ? நான் தேடுவது சமாதானங்கள் அல்ல; சமாதானத்தைத் தேடுபவன் சமாதானம் அடையமாட்டான்; எனக்கு வேண்டியது பதில். பதில் கிடைத்தவனுக்குத்தான் சமாதானம் கிட்டும்."

நான் பதில் பேசவில்லை. நான் பேசவே என்ன இருக்கிறது ?

அந்த நட்சத்திரம் இன்னமும் தனியாய்த் தத்தளித்துக் கொண்டிருக்கிறது.

அந்த நிமிஷமே எனக்கு அம்மா, மனோவின் நினைவு எழுந்தது. அவ்வெழுச்சி வேகம் வயிறு குமட்டிற்று. எழுந்து உட்கார்ந்து நெற்றியை அமுக்கிப் பிடித்துக் கொண்டேன்.

அம்மா என்ன செய்கிறாளோ? முதலில் இருக்கிறாளோ இல்லையோ? ஏற்கெனவே தள்ளாமை. அவள் போகும் வரையிலாவது நான் காத்திருக்கலாம்.

மனோ—

என்னைக் காணோமே என்று மனமொடிந்து எங்கேயாவது குளம், கிணறைத் தேடிவிட்டாளோ?

நான் வீட்டை விட்டுக் கிளம்பியபோது மனோ மூன்று மாத கர்ப்பிணி.

அவள் தனக்கேதேனும் இழைத்துக் கொண்டால் அந்த பாவம் வேறு எங்கு போகும்? என்னைத்தானே சேரும்?

குடும்பத்தை விட்டு வந்த பிறகு மறுபடியும் குடும்பத்தைப் பற்றிய எண்ணங்களுக்கு எனக்கு உரிமையுண்டோ?

உண்டோயில்லையோ, எண்ணியது எண்ணியது தான். எண்ணமே இல்லாது இருக்க முடியவில்லையே!

உண்மையில் நாம் எதைத் தேடிக் கொண்டிருக்கிறோம்?

நானே எதற்காக மனைவியை விட்டு, வீட்டை விட்டு வந்தேன்?

இப்பொழுதுதான் இந்தக் கேள்வி சந்தேகமாய் மாறி நெஞ்சு முள்ளில் இடறி உறுத்த ஆரம்பிக்கிறது.

உயர, தூரத்தில் கவிழ்ந்து தத்தளிப்பது என் நட்சத்திரந்தானோ?

இரவு பூரா புரிந்தும் புரியாததுமாய் எண்ணங்கள் எரிந்து எரிந்து, கீழ்வானில் சாம்பல் பூக்கிறது.

நீங்கள் எதிர்த் திண்ணையில் கல்லாய்ச் சமைந்திருக்கிறீர்கள், இரவு முழுவதும் உங்கள் கண்ணும் இமைக்கவில்லை.

அன்றிலிருந்து நீங்கள் இளைத்துக்கொண்டே வருகிறீர்கள், நாளுக்கு ஒரு இம்மி, ஆனால் நிச்சயமாய்.

மௌனம் தன் சிறகுகளை விரித்து, உங்கள்மேல் இறங்கியிருக்கிறது.

உங்களிடம் ஒரு விரக்தியைக்காண்கிறேன். உங்களை உங்களிடமிருந்து கழற்றி எதற்கோ சமர்ப்பித்துவிட்டு, பிறகு அதன் இஷ்டத்தை எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருக்கிறீர்கள்.

எதனிடம் அதன் இஷ்டத்திற்கு உங்களை ஒப்படைத்துக் கொண்டு விட்டீர்களோ, அது உங்களைக் கற்கண்டுக் கட்டியாய்ச் சப்புகிறது. நீங்கள் கரைகிறீர்கள். இப்படியே ஒரு நாள் காணாமல் போய்விடுவீர்கள் என்று எனக்கு திண்ணமாய்த் தெரிந்துவிட்டது.

எனக்கு இப்படி எல்லாம் தோன்றுவதேனோ அறியேன்.

சாதாரணமாய், நான் என்னைச் சுற்றி கண்கூடாய்க் காணும் பொருள்களைப் பற்றிய எண்ணங்களின் தடத்தை மீறி சிந்திக்கச் சக்தியிலேன். எனக்குத் தோன்றுவதெல்லாம் சரியோ தப்போ, நிச்சயமாய், உங்களுக்குள் ஏதோ நேர்ந்து கொண்டிருக்கிறது. ஏதோ விலக்க முடியாதது, விபரீதமானது.

மெலிய, மெலிய, பனி விலகினாற்போல், சட்டையுரித்தாற்போல், மெருகு ஏற்றினாற்போல் உங்கள் உடலில் ஒரு துலக்கம் காண்கிறது. காந்த விளக்கின் திரிபோல் முகத்தில் நீல ஒளி குளுமையாய் வீசுகிறது.

எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது.

திகிலாயிருக்கிறது.

உங்களை விட்டு அகலவும் மனம் இல்லை.

பாதி ராத்திரியில், உங்கள் இடத்தில், நீங்கள் இல்லாமல் போய்விடுவீர்களோ என்ற பயத்திலேயே திடுக், திடுக்கென விழித்துக் கொள்கிறேன்.

நீங்கள் இருக்கிறீர்கள்.

இருக்கவேண்டும் என்பதற்காக அல்ல.

ஏதோ, இருப்பதால் இருக்கிறீர்கள்.

ஏன் இருக்கிறீர்கள் ? என்று தோன்றுகிறது.

தோன்றலாமோ ?

எதையோ எதிர்பார்த்துக் கொண்டு, அதற்காகக் காத்திருக்கிறீர்கள்.

★

ஓரிரவு. ஒரு சத்திரத்துத் திண்ணையில் தங்கியிருக்கிறோம். நான் சரியாய்ப் படுக்காது சுவரில் சாய்ந்து கொண்டிருக்கிறேன்.

கால் தூக்கத்திலும், அரைத் தூக்கத்திலும் என் தலை ஆடுகையில், "வீல்" என்று ஒரு குழந்தையின் வீறல் கேட்டு, திடுக்கிட்டு விழித்துக் கொள்கிறேன். சுற்று முற்றும் பார்க்கிறேன்.

உங்கள் முகம் என் பக்கம் திரும்புகிறது.

ஆசியில் உங்கள் கை உயர்கிறது.

உங்கள் முகத்தில் தவழும் புன்னகையின் ஒளி கண் கூசுகிறது. தலை குனிகிறேன்.

★

அம்மாவுக்குப் பிடித்தமான வாய் வழக்கு ஒன்று.

"ஆமாம்—ஆணுக்கு அழகு என்ன வேண்டிக் கிடக்கு? ஆனை கறுத்தாலும் ஆயிரம் பொன். உங்கப்பா நெருப்பைக் குளிப்பாட்டினாப் போல்தான் இருப்பார். அவர் உடம்பில் அவர் வாய் ஒண்ணுதான் சிவப்பு, புகையிலையும் வெற்றிலையும் போட்டுக் குதப்பி. எங்களுக்கு என்ன குறைஞ்சு போச்சாம்?"

அம்மா சிவப்பு, நெருப்புச் சிவப்பு.

அப்பா எப்படியிருப்பார் என்று அறியேன்.

அவர் போனபின்தான் நானே பிறந்தேன்.

அம்மா தன்னைக் கொண்டாடிக் கொள்வதற்காக, அப்பாவைக் கொண்டாடுகிறாளா? இல்லை அப்பாவை ஏளனம் செய்கிறாளா? இல்லை தன் வாழ்க்கைக் கொடுமைக்குத் தன்னைத் தேற்றிக் கொள்கிற தினுசு இப்படியா? அல்லது உண்மையாகவே தான் சொன்னபடி எண்ணினாளா—எதுவும் எனக்கு நிச்சயமாய்த் தெரியவில்லை.

★

ஆனால் உங்களை இப்பொழுது பார்க்கையில், ஆண்களுக்கு ஏன் அழகு இல்லை? என்றே தோன்றுகிறது. உங்கள் அழகு பிரமிக்கத் தக்கதாயிருக்கிறது. உங்களைப் பார்க்கும்போதெல்லாம் எனக்குப் புல்லரிக்கின்றது. புரியாததோர் வேட்கை ஏற்படுகிறது. இது நல்லதா பொல்லாததா, இருக்கலாமா கூடாதா, இதனுடைய அர்த்தம்தான் என்ன? நான் எதில் மாட்டிக் கொண்டேன்?—என் மனம் குழம்பித் தவிக்கிறது.

எப்படியும் எண்ணியது எண்ணியதுதான். ஆயிரம் அடக்கினாலும் தோன்றினது தோன்றியதுதான்.

அழகு என்பதே என்ன ?

விழி, நிறம், உடல் அங்க அமைப்புகளின் எடுப்பா ? அல்லது;

அன்பு, தயை, ஆண்மை, சாந்தம், கருணை, இவை போன்ற உயர்ந்த குண விசேஷங்களின் வெளித் தோற்றத்தின் சிறப்பா ?

அல்லது;

இரண்டுமா ?

சத்தியம்—?

சத்தியத்தைக் கண்டவர் யார் ?

கண்டவர் சொன்னவர் யார் ?

ஆனால் இப்பொழுது உங்களிடமிருந்து வெளிப்படும் உள்ளொளியைத்தான் அழகாய்க் காண்கிறேன். இந்த அழகை உங்கள் முகத்தில் காண்கிறேனோ ? அதன் இனிமையிலா ? அல்லது உங்கள் மௌனத்திலா ? தெரிய வில்லை. இவையெல்லாவற்றையும் மீறி அது பிரகாசிக் கின்றது. அது உங்களிடத்தில் இல்லை, இனி நீங்களே அதில்தான் இருக்கிறீர்கள். உங்கள் உடற் கண்களி லிருந்தே புறப்பட்டு உங்கள் காலடி ஆதாரத்தையே அது வெட்டியாகிவிட்டது.

எதிலோ மாட்டிக்கொண்டு அதில் மூழ்கிக் கொண்டி ருக்கிறீர்கள். அதிலிருந்து தப்ப உங்களுக்கு இனி வழி யில்லை. நான் பார்த்துக் கொண்டு ஒன்றும் செய்ய முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறேன். எனக்குப் பயமாயிருக்கிறது.

ஆனால் உங்கள் முகத்தில் கொஞ்சமும் பயமில்லை. துளிக்கூட துக்கமில்லை. சந்தோஷமில்லை. ஏதோ ஒரு தெளிவுதான் தெரிகிறது.

நீங்கள் தூங்குகிறீர்களோ ?

நீங்கள் உங்கள் உடம்பைக் கீழே சாய்த்து நான் பார்த்து எவ்வளவோ நாட்களாகிவிட்டன. அதை நிறுத்தி விட்டீர்கள்.

இரவில் நான் கண்ணயரும்போதும், இடையிலோ விடிவிலோ, விழிப்பு வரும் போதெல்லாம் உங்களைப் பார்ப்பேன். அசைவற்று உட்கார்ந்து கொண்டேயிருக் கிறீர்கள்.

ஒரு சமயம்.

நாம் ஒரு நந்தவனத்தில் பாழ் மண்டபத்தில் இரவு தங்கியிருக்கிறோம். இரவெல்லாம் சரியான தூக்கம் இல்லை. விடிவேளையில் கண் அயர்ந்துவிட்டேன். எனக்கு விழிப்பு வந்தபோது நன்றாகப் பொழுது புலர்ந்து விட்டது. உங்களைக் காணோம். அலறிப் புடைத்துக் கொண்டு எழுந்திருக்கிறேன். என்றேனும் ஒருநாள் இம்மாதிரி நேர்ந்துவிடும் என்கிற திகில் என் நெஞ்சத்தில் வேரூன்றி விட்டது.

ஆனால், பூச்செடிகளுக்கிடையில் வளைந்த பாதை யில் மெதுவாய் நடந்து வருகிறீர்கள். செவ்வானத்தி லிருந்தே, மேகங்களின் படிக்கட்டின் வழி, நீங்கள் இறங்கி வந்திருப்பதாய் எனக்கு ப்ரமை தட்டுகிறது. கண்ணைக் கசக்கிக் கொள்கிறேன்.

ஒரு சூர்யகாந்திப் பூ காற்றில் அசைந்து தங்கள் பக்கமாய் தலையை ஆட்டுகிறது. அதன் எதிரில் நீங்கள் தயங்கி நிற்கிறீர்கள். அது அப்பனைக் கண்ட குழந்தை போல் தங்கள் பக்கமாய் சாய்ந்து, இன்னும் பரபரப்பாய் நர்த்தனம் ஆடுகிறது. உங்கள் முகத்தில் புன்னகை தவழ் கிறது. ஒற்றை நாடியாய்—அம்புபோல் நிமிர்ந்த முதுகும், மார்மேல் கட்டிய கைகளும் தகதகக்கும் உங்கள் மேனியும்,

உங்கள் முகத்தின் தேஜஸ்—திடீரென்று உங்களிடம் ஒரு தரிசனம் மலர்கிறது. அதைக் கண்ட எனக்கு மயிர் கூச்செறிகிறது.

நீங்கள் மெதுவாய் நகர்கிறீர்கள். நந்தவனத்தில் ஓடும் வாய்க்காலை நோக்கி நடக்கிறீர்கள்.

நீங்கள் அந்தண்டை போனதும் நான் எழுந்துபோய் அந்தப் பூவண்டை நின்றேன். மெய்யாவே இவ்வளவு பெரிய முகம் நான் பார்த்ததில்லை. விரல்களை அகல விரித்த ஒரு பெரிய உள்ளங்கை யளவிற்கு, காற்றின் கிறுக்கில், முக வேற்றுமையுள்ள குழந்தைபோல் அது அஞ்சி, பின்னுக்கு வாங்கிற்று. திடீரெனத் தாங்கமுடியாத தோர் வேட்கை என்னைக் கவ்விற்று. அதை எட்டினேன். எட்ட எட்ட தலையை ஆட்டிக்கொண்டு அது இன்னும் பின்னுக்கு வாங்கிக்கொண்டே போயிற்று. நானே கொஞ்சம் குள்ளம். அதன் பக்கமாய் சாய்ந்து சாய்ந்து, கால் கட்டை விரல்கள் மேல் நின்று, எட்டி அதைப் பறித்து விட்டேன். பறிக்க எட்டியது பிடிக்க எட்ட வில்லை. செடியின் அந்தண்டைப்புறம் அடர்ந்த புதர் நடுவே அது தலையுருண்டு, சரிந்து விழுந்துவிட்டது.

ஏமாற்றத்தில் சலிப்பும் வெறுப்பும் கோபமும் அடைந்து திரும்பி வாய்க்காலை நோக்கி நடந்தேன்.

படித்துறையில் நீங்கள் விழுந்து கிடக்கிறீர்கள். மார்மேல் வலது கையை அழுத்தியபடி, இடது கையின் முழங்கை மேல் உடம்பை ஊன்றிக்கொண்டு மார்வலியில் வளைந்து வளைந்து ஊசலாடுகிறீர்கள். உங்கள் முதல் ரத்தம் வடிந்து சுண்ணாம்பாய் வெளுத்திருக்கிறது. பதறி ஓடி வந்து உங்களை அணைத்து என்மேல் சார்த்திக் கொண்டேன்.

"ஆத்மா, ஆத்மா, ஏன் அந்தக் குழந்தையைக் கொன்றாய் ?" உங்களுக்கு மூச்சடைக்கிறது. குரல் கம்மி

விட்டது. எனக்கு ஒன்றுமே புரியவில்லை. "நான் ஒன்றுமே பண்ணவில்லையே ! எந்தக் குழந்தையை ?"

"அந்தப் பூ உன்னை என்ன பண்ணிற்று ?" உங்களுக்கு எப்படித் தெரிந்தது ? அந்த வியப்புகூட உடனே தோன்றவில்லை.

"தெரியாமல் செய்துவிட்டேன், தெரியாமல் செய்து விட்டேன்" என்றுதான் திரும்பத் திரும்ப வாயில் வருகிறது.

"ஆத்மா, எதையுமே கொல்லாமல் அனுபவிக்க முடியாதா ? ஏன் இப்படி பிள்ளைக்கறி தின்றுகொண்டேயிருக்கிறோம் ?"

"தெரியாமல் செய்து விட்டேன்; என்னை மன்னித்து விடுங்கள்."

கருணை சொட்டும் உங்கள் முகத்தில் வேர்வை ஜல கண்டமாய் கொட்டுகிறது.

"மன்னிக்க நான் யார் ? என் மன்னிப்பு அழித்ததைத் திரும்பத் தருமா ? ஆத்மா, உலகம் முழுதும் வியாபகம் ஒரு உயிர்—ஒரே உயிர்தான். அதன் உருவங்கள்தாம் பல் வேறு. ஒரு இடத்தில் கழுத்தை முறித்தால், உயிரின் வேதனையில் இன்னொரு இடத்தில் மார் உடைகிறது. நீ அங்கே பூவைப் பறித்ததும், இங்கே நான் விழுந்து விட்டேன்."

எனக்கு அழுகை வந்துவிட்டது. வெட்கமற்று தேம்பித் தேம்பி அழுகிறேன்.

"ஆத்மா, என்னை மன்னிப்புக் கேட்பதைவிட நீ அழுது, உன்னையே மன்னிப்புக் கேட்டுக் கொள்வதுதான் நியாயம். உன் காரியங்களின் எடையை அறிய நீயிருக்கையில் நான் யார் ? நான் அறிவதால் உனக்கு என்ன பயன் ? நீ அழுது, நீயே அறி. அவரவர் வழி அவரவ

ருடையது. ஆத்மா, என் வழியின் முடிவு நெருங்கி விட்டது."

"அப்படிச் சொல்லாதேயுங்கள்— சொல்— லாதே— யுங்கள் நான் என் செய்வேன்?"

நீங்கள் புன்னகை புரிகிறீர்கள். "நீ செய்வதற்கு என்ன இருக்கிறது?"

சற்று நேரம் இருவரும் பேசாமல் இருக்கிறோம். என் குரல் மெலிந்து வருகிறது.

"என் மேல் கோபமா ?"

"கோபம், மன்னிப்பு—எவ்வளவு அர்த்தமற்ற வார்த்தைகள் !" உங்கள் குரலில் அசதி தட்டுகிறது. "செலுத்த இடமில்லாமல் நான் கோபத்தை வைத்துக்கொண்டு என் செய்வது ? துயரமாய் மாற்றினாலாவது சுமையைத் தாங்கலாம், கோபத்தைத் தாங்க இயலாது."

எனக்கு நன்றாய்ப் புரிந்துவிட்டது. அனியாயமாக நான் உங்களைக் கொன்றுவிட்டேன். என் சுமையை உங்கள்மேல் தாக்கி, அதனடியில் உங்களை நான் நசுக்கி விட்டேன்.

மறுபடியும் அழுகை பீறிடுகிறது.

பாதி இரவில் விழித்துக் கொள்கிறேன்.

இருளிலிருந்து உங்கள் குரல் மெத்தென்று வந்து என்னை அணைக்கிறது.

"ஆத்மா, சௌக்கியமாயிரு."

என் எலும்பு உருகுகிறது. ஆயினும் ஏன் திடீரென இந்த ஆசி ? என் கைகள் உங்களை நோக்கித் துழாவுகின்றன.

"ஏன், என்னைத் தனியே விட்டு விட்டுப் போய்விடப் போகிறீர்களா ?"

"எங்கே போவது? உடல் கழன்றாலும் உயிர்இருந்து கொண்டேதானிருக்கிறது. குழந்தாய், மௌனம் என்னை அழைக்கிறது. பேச்சுக்கு விடைபெற்றுக் கொள்ளுமுன் உன்னிடம் சொல்லிக் கொள்கிறேன். ஆத்மா, சௌக்ய மாயிரு !—சௌக்கியமாயிரு !"

இதுவே முடிவின் ஆரம்பம்.

★

நான் எடுத்து வந்த பிட்சையை எதிரே வைக்கிறேன். அதை அப்படியே என்னிடம் திருப்பி விடுகிறீர்கள். விளங் காது விழிக்கிறேன். அன்றிலிருந்து உங்களுக்கு ஆகார மில்லை. தாங்கள் எதையும் தொடுவதில்லை.

உங்களுக்கு ஆகாரம் செல்லவுமில்லை. ஒரு நாள் வலுக்கட்டாயமாய் நான் ஊட்டியே பார்க்கிறேன். உள்ளேயே இறங்காமல், கடைவாயில் வழிகிறது.

நீங்கள் புன்னகை புரிகிறீர்கள். இனி எதற்கும் பதில், உங்கள் புன்னகைதான்.

இரவு முழுவதும் உங்களுக்குத் தூக்கமில்லை.

நாள் முழுவதும் ஆகாரமில்லை. ஆனால் களைப் பின்றி வளைய வருகிறீர்கள்.

நீங்கள் இப்போது யார் கண்ணிலும் படக்கூட விரும்ப வில்லை. ஜன நடமாட்டமில்லாத பாதைகளையும் ஏகாந்தமான இடங்களையுமேதான் தேடுகிறீர்கள்.

நீங்களே உங்களுக்கு அன்னியராகி விட்டீர்கள். அந்த அதிசயத்தைப் பார்க்கிறேன்.

சாலையோரத்தில் ஒரு அடர்த்தியான மாமரத்தடியில் தங்கியிருக்கிறோம்.

பட்டை வீறும் கோடை வெய்யிலில் காற்றின் அனலில் மூச்சு அடைத்துத் தலை சுற்றுகிறது. கானல் நடுநடுங்குகிறது.

எனக்குப் பசி வயிற்றைக் கிள்ளுகிறது. அன்று ஏனோ பிட்சை ஒரு கவளம் கூட கிடைக்கவில்லை.

முன்பின் அறிகுறியிலாது நீங்கள் திடீரென எழுந்து நடக்கிறீர்கள். என்னைப் பார்க்காமல் நடக்கிறீர்கள். உங்கள் புன்னகையின் புதிரை எப்படி விடுவிக்க முடியும் ?

நானும் பின் தொடர்கிறேன்.

வெய்யிலில் என் முதுகு கன்றிப் போகிறது. ஆனால் நீங்கள் நிலவில் நடப்பதுபோல நிதானமாய் நடக்கிறீர் கள். உங்கள் தோள்களில் நீலச் சுடர்கள் பிறந்து ஆடுகின்றன. கண்ணைக் கசக்கிக் கொள்கிறேன். ஆனால் சற்று நேரத்துக்கெல்லாம், மீண்டும் அதே தோற்றம்.

சாலையோரத்தில் ஒரு பிச்சைக்காரி உட்கார்ந்திருக் கிறாள். அழுகிச் சொட்டும் உடல், ஒரு ஓட்டுச் சில்லால் தோளைச் சுரண்டிக் கொள்கிறாள். நீரும் ரத்தமும் கசிகின்றன. நேரே அவளிடம் போய், நிற்கிறீர்கள். இமைகள் கூழையாகிவிட்ட அவள் கண்கள் கூசி, இடுங்கி, உங்களை ஏற இறங்க நோக்குகின்றன. அடையாளம் கண்டு கொண்டாற்போல் அவைகளில் ஒரு வெளிச்சம். துள்ளி எழுந்து உங்கள் மேல் விழுந்து இறுக அணைத்துக் கொள்கிறாள். வியாதியில் தடித்த உதடுகள் உங்கள் வாயைக் கவ்விக் கொள்கின்றன. உங்கள் உயிரை, ஒளியை அவள் உறிஞ்சிக்குடிக்கும் கோரத்தை ஸஹிக்க முடியாமல் முகத்தைப் பொத்திக் கொள்கிறேன்.

கொக்கரிக்கும் சிரிப்பு.

கண்களிலிருந்து என் கைகளை யெடுத்தபோது அவளுடைய அடையாளம் கூடக் காணோம். நீங்கள்

குன்றி, குறுகி, கருகி, சப்பிய தோலாய் வாடி, வதங்கி, சுருண்டு கீழே விழுந்து கிடக்கிறீர்கள்.

அலறிக்கொண்டே, உங்களை வாரி மரத்தின் நிழலுக்கு எடுத்துத் தூக்கிச்சென்று, அங்கு மெதுவாய்க் கிடத்துகிறேன். உங்களுக்கு பிரக்ஞையில்லை. திடீரென ஈ, காக்கை கூட சொல்லி வைத்தாற்போல் அந்தப் பக்கம் காணோம். காற்று கூட அசையவில்லை.

ஊமையாய் உங்கள் அருகில் உட்கார்ந்திருக்கிறேன். இந்தச் சமயத்தில் என் உணர்ச்சி எனக்குத் தெரியவில்லை. நெஞ்சையே ஒழித்துப் பெருக்கித் துடைத்து வைத்திருக்கிறது.

வெய்யில் சாய்கிறது.

பிற்பகல் மாலையாகிறது.

தென்றல் கிளம்புகிறது.

இலைகள் சலசலக்கின்றன. ஆகாயத்தில் மேகங்கள் நகர ஆரம்பிக்கின்றன. என் பார்வை அங்கிருந்து உங்கள் மேல் இறங்கியபோது தங்கள் விழிகள் என்னைச் சிந்தித்துக்கொண்டு இருக்கின்றன. அவைகளில் ஒளி வெகு வேகமாய் மங்கிக் கொண்டிருக்கிறது.உதடுகள் மெதுவாய் அசைகின்றன. அவை மேல் செவியைச் சாய்த்துக் கேட்கிறேன்.

"...றவாதே—"

அவ்வளவுதான்; தங்கள் கருணைக் கண்கள் மூடி விட்டன. குபீரென தங்கள் உடலிலிருந்து தாழம்பூவை யொத்து, ஆனால் அது இலாது, அதனினும் மயக்கமாய், அமானுஷ்யமான பரிமளம் கிளம்புகிறது.

அதை நினைக்கும்போதெல்லாம் இப்பவும் நான் மணக்கிறேன்.

நீங்கள் மலர்ந்துவிட்டீர்கள்.

# க்ஷேத்ரம்

தங்களையலாது, தங்களை நான் குருவாய் வரித்த பாவனையை வணங்குகிறேன்.

நேற்று என் கனவில் வந்தீர்கள்.

வினோதமான கனா. சமுத்திரக் கரையோரமாய், அவசர அவசரமாய்ப் பூமியைத் தோண்டுகிறேன். ஆழமாய்த் தோண்டுகிறேன்.

கிட்டத்தட்ட ஒரு ஆள் உயரத்திற்குத் தோண்டிய பிறகு ஒரு பெட்டி கைக்குத் தட்டுகிறது. அதை ஒரு கருநாகம் அணைத்துக் கொண்டிருக்கிறது. என்னைக் கண்டதும் மேலே ஏறிவருகிறது. வந்ததும் அதைக் கடலிலிருந்து ஒரு அலைமோதி வந்து தன்னுடன் இழுத்துச் சென்றுவிட்டது. முக்கி முனகி தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டு பள்ளத்திலிருந்து மேலேறுகிறேன். விளிம்பில் நீங்கள் நின்று கொண்டிருக்கிறீர்கள. உங்கள் உடலில் முன்னிலும் தகதகப்பு ஏறியிருக்கிறது. புன்னகை புரிகிறீர்கள்.

"ஆத்மா, என்ன பண்ணுகிறாய்!"

"கண்டு பிடித்துவிட்டேன் ஸ்வாமி!"

"ஓ!"

எனக்கு மூச்சுத் திணறுகிறது. தலை வயிற்றுள் புதைந்துவிடும்போல் கனம் அழுத்துகிறது. "ஒரு கை கொடுங்களேன்!"

நீங்கள் கை கொடுக்கவில்லை. என் பேச்சு காதில் விழாததுபோல் வெறுமே என்னைப் பார்த்துக் கொண்டு நிற்கிறீர்கள். அதை நானே கீழேயிறக்குகிறேன். கனம் இழிந்ததும், தலை கிர்ர் என்கிறது.

கனிவுடன் என்னை நோக்குகிறீர்கள்.

"ரொம்பவும் சிரமப்பட்டு விட்டாய்!" எனக்குப் பெருமிதம் பொங்குகிறது. என் அருகில் வந்து முதுகைத் தட்டிக் கொடுக்கிறீர்கள். ஆனால் உடனேயே உங்களை சந்தேகத்துடன் பார்க்கிறேன். இதென்ன, பங்குக்கு அஸ்திவாரமா?

"ஆத்மா, பெட்டி அகப்பட்டுவிட்டால் போதுமா, அதைத் திறக்க வேண்டாமா?"

பெட்டியைப் பூட்டியிருக்கிறது. அதனால் என்ன? சுற்று முற்றும் பார்க்கிறேன். பத்தடி தூரத்தில் ஒரு பாராங்கல் கிடக்கிறது. அதைக்கொண்டு பெட்டியை உடைக்க முயல்கிறேன். பெட்டிமேல் கல்லை மோதும் போதெல்லாம் உள்ளிருக்கும் பொருள்கள் இனிய ஓசையுடன் குலுங்குகின்றன. வேர்வையில் தெப்பமாகி விட்டேன். ஆனால் பெட்டி மூடி இம்மிகூட நகர்ந்து கொடுக்கவில்லை.

நீங்களும் எனக்கு உதவி புரியவில்லை. சௌகரியமாய்க் காலை மடித்து மணல்மேல் உட்கார்ந்து கவனித்துக் கொண்டிருக்கிறீர்கள். உங்களைப் பார்க்க எரிச்சலாய்க் கூட வருகிறது. ஒரு கைகூட கொடுக்காமல் பங்குக்கு மாத்திரம் ஆவலுடன் காத்துக் கொண்டிருக்கிறீர்களா?

"ஆத்மா, உடைக்கவோ வரவில்லை. சாவி எங்கே, தேடு."

நான் உடனே அவசர அவசரமாய் பள்ளத்தில் இறங்கித் தேடுகிறேன். அங்கேயில்லை. சாவியை வேறெங்கே வைத்திருக்கிறதோ?

"ஆத்மா, இந்தப் பெட்டியை உடைக்க முடியாது. சாவி கொண்டுதான் திறக்க முடியும், மெதுவாய்,

லகுவாய், கொஞ்சலாய், ஒரு திருப்பில் திறக்கும் சாவி ! ஒரே சாவி ! சாவி ! சாவி !! சாவி !!!......

நீங்கள் அப்படிச் சொல்கையில். அப்படியே திறந்து விட்டால், உள்ளிருக்கும் பொருள்களை நினைக்கையில், நாக்கில் ஜலம் ஊறுகிறது.

சாவகாசமாய் நீங்கள் எழுகிறீர்கள்.

"ஆத்மா !"

"என்ன ?"

"அந்தப் பாம்பு ! அதில்தான் சாவி !" எனக்குப் புரியவில்லை.

'அதுதான் சாவியை விழுங்கி விட்டு புதையலுக்குக் காவலாய் இருந்திருக்கிறது.'

நீங்கள் சொல்வது நியாயமாய், உண்மையாய்ப்படுகிறது. இனி என் செய்வது? பாம்பைத்தான் அலை அடித்துக்கொண்டு போய்விட்டதே ! ஏமாந்து போனேன். உடைக்கவும் முடியாது. திறக்கவும் முடியா பெட்டிக்கா இத்தனை காத்திருந்து பாடுபட்டேன் !

பெட்டியை எந்த முட்டாள் எடுத்துக் கொண்டு போனால் என்ன, சாவி என்னிடம்தானே இருக்கிறது என்ற பிரஹஸ்பதியின் கதை நினைவுக்கு வந்தது. ஒரு வேளை அவன் மெய்யாவே ப்ரஹஸ்பதிதானோ !

நீங்கள் அந்தப் பெட்டியை உங்கள் காலால் எற்றி ஒரு உதை விடுகிறீர்கள். பந்து போல் அது உயர எழும்பி சுழன்று கொண்டேபோய் நடுக்கடலில் விழுகிறது. அது விழுந்த இடத்தில் அலைகள் மலைபோல் விசிறி எழுகின்றன. திரும்பிப் பார்க்கிறேன்.

நீங்கள் நின்ற இடத்தில் நீங்கள் இல்லை.

★

நீங்கள் உங்களுக்கென்று எதையும் வைத்துக் கொள்ளவில்லை. ஆனால் நீங்கள் சம்சாரிதான்; உங்களோடு நான் இருந்தேனே!

உங்களுக்கு ஒரு பணிவிடை நான் செய்ததில்லை. செய்யவும் நீங்கள் விட்டதில்லை. ஆனால் நீங்களோ என்னைக் கூட்டிலிருந்து விழுந்துவிட்ட குஞ்சைப்போல் காப்பாற்றி வந்தீர்கள்.

இப்பொழுது என்னைத் தனியாய் விட்டுச் சென்று விட்டீர்கள்.

நீங்கள் இருக்கும்வரை தெரியவில்லை. இப்பொழுது உணர்கிறேன்.

ஆனால் நான் மாத்திரம் மனோவைத் தனியாய்விட்டு வந்துவிடவில்லையா?

மூன்று மாத கர்ப்பிணி.

மனோ இப்போது அடிக்கடி மனதில்வந்து நிற்கிறாள், மேனி அழகிட்டிருக்கிறது. மேல் மூச்சு வாங்குகிறது. நிறைந்த விழிகள் என்னைக் குற்றம் சாட்டுகின்றன.

நான் செய்தது நியாயமோ?

பிறகு எனக்கே தோன்றுகிறது. இல்லை— நீங்கள் தோற்றுவிக்கிறீர்கள்.

சில சமயங்களில் நேரும் செய்கைகள், தோன்றும் எண்ணங்கள், என் செயலோ, தற்செயலோ இல்லை. நீங்கள் நெஞ்சை உலுக்குகிறீர்கள். எண்ணங்கள் உதிர்கின்றன.

நியாயம் அனியாயம்,<br>
பாபம் புண்ணியம்,<br>
நல்லது கெட்டது,<br>
இவையெலாம் அப்புறம், அவையே

இருக்கின்றனவோ இல்லையோ ?
என் வைராக்ய பலம் எந்த மட்டும் இருக்கிறது ?
அது எவ்வளவு தாங்கும் ?
அதுதான் முக்கியம்.
அதுவேதான் அது.
அதுவன்றி எதுவுமில்லை.

எது அது அதுதான் புரியவில்லை. மூளை குழம்புகிறது.

★

என் எண்ணங்களை நானே நூற்று, என் மேலேயே பின்னிக் கொண்டு, அவை இன்னதெனக் கூடப் புரியாது அவைகளில் சிக்குண்டு தவித்து இரையாகிக் கொண்டிருக்கிறேன்.

பசிக்கிறது, பசிக்கிறது. எப்பவும் பசித்துக்கொண்டேயிருக்கிறது.

நீங்கள் இருந்தவரை எனக்கு வயிற்றுக் குறைவேயில்லை. ஆனால் இப்பொழுது, நான் ஓட்டை ஏந்தி ஊமையாய் நின்றால், யார் போடுகிறார்கள்? "நீ நோவாமல் தின்று மேனி மொழு மொழுவென வளரத்தான் நாங்கள் எங்கள் உடம்பைக் கசக்கிப் பிழிகிறோமா? எங்களுக்குக் குடும்பம் இல்லையா? உனக்கு உழைத்துப் போடத்தான் அர்ப்பணமாகி யிருக்கிறோமா? இந்த வயசில் யாரை ஏமாற்றடா பண்டார வேஷம்?" இன்னும் என்னென்னவோ ஏசி, சீறி விழுகிறார்கள். இன்று ஒருவன், அவனுக்கு என்ன ஆத்திரமோ மடிக்கொம்பால் என் முதுகில் இரண்டு போட்டே விட்டான்.

ஆண்டவனே !
அவனைக் கூப்பிட்டு விட்டால் அவன் வந்துவிட
முடியுமா?
இல்லை. பக்தி வந்து விடுமா ?
பக்தி வேண்டாம்.
அவன் வேண்டாம்.
எண்ணத்தின் வைராக்கியம்தான் வேண்டும்.
அது எந்த மட்டும் இருக்கிறது ?
எவ்வளவு நீ தாங்குவாய் ?
நீ தேடுவது உன்னை வந்து அடையும்போது, அதை
ஏந்த எந்த மட்டுக்கும் பாத்திரமாயிருக்கிறாய் ?
உன் க்ஷேத்ரம்—பூமி—எது ?
பூமிக்கேற்ற பயிர்.
பயிருக்கேற்ற பூமி.
உன் பூமியில் எது விளையும் ?

என் செவிகளை விரல்களால் அடைத்துக் கொண்டால் உங்கள் குரல் கேட்கிறது.

எண்ணங்கள் என்னுடையவை.
குரல் உங்களுடையது.

உங்கள் அருகாமையில் உங்கள் வெளிச்சம் என் மேல் விழுந்து கொண்டிருந்த வரை, என் இருள் எனக்குத் தெரியாமலிருந்தது.

இப்போது என் தனிமையில் என் இருள், அதிலிருந்து வழியும் என் கறைகள், கறைகளின் நிழல்கள், நிழல்கள் தீட்டும் உருவங்கள், உருவங்கள்— உயிர் கொண்டு, இரவு, பகல், வேளை இலாது காட்டும் பேய்கள்—எல்லாம் ஆடி என்னைப் பயமுறுத்துகின்றன.

உங்கள் குரல் கேட்டுக் கொண்டிருந்த வரையில் இவைகளை நான் பாராட்டவில்லை.

ஆனால், ஒரு நாளிரவு திடீரென எனக்குப் பயங் கண்டது. எதனால், என்ன, எப்படி, ஏன், எதைக் கண்டு, என்று விவரமாய்த் தெரியாது. வீட்டில் பெண்டு ஒண்டி யாய் இருக்கையில், ஒரு அன்னியன் பேசாமல் உள்ளே புகுந்து, கதவைத் தாளிட்டுக் கொண்டாற் போல் பயம் என் உள் புகுந்ததை என் தூக்கத்தில் உணர்ந்து, வாய் குழறியபடியே விழித்துக் கொண்டேன். உங்களைக் கூப்பிடுவதாக நினைப்பு. ஆனால் உங்கள் குரல் என்னுள் கேட்கவில்லை. அது திடீரென்று, தூர, தூர வெகுதூரம் சென்றுவிட்டது. அதன் தூரம் இன்னும் நீண்டு கொண்டேயிருந்தது. அதனால் என்னுள் நேர்ந்த வெறிச்சிலேயே விழித்துக் கொண்டேன். என் வீடு காலி யானதும், அதில் என்குரல் எழுப்பிய எதிரொலிகளே என்னை எழுப்பியிருக்கின்றன.

என்ன வாய் குழறிக்கொண்டு எழுந்தேன்? அந்த சமயத்தைத் திரும்பத் திரும்ப நினைவில் திருப்பினேன். திடீரென அந்த ஒலி ஞாபகத்தில் எழுந்தது. உங்களு டைய பெயர் அல்ல. நினைப்பு அப்படி. வாயிலிருந்து புறப்பட்டது:

"மனோ!"

இது என்ன ஜாலம்?

☆

என்னவோ தெரியவில்லை, இன்று மனம் உவகை நிரம்பியிருக்கிறது. என்னுள் யாரோ கோலமிடுகிறார்கள். யாரோ பந்தாடுகிறார்கள். நெஞ்சு அப்படி துள்ளு கிறது. உடம்பெலாம் பிய்த்துப் பிடுங்குகிறது. கண் விழித்ததே முதல் ஏதோ பண்டிகை தினம் போல்,

வேளையிலேயே ஒரு அழகு மிளிர்கிறது. காலை வெய்யில் தினத்தைவிட இன்னும் பொன்னாயிருக்கிறது.

ஒரு வாசற் குறடில் கால்களைச் சோம்பல் முறித்து நீட்டியபடி கண்களை மூடி, ஒரு பூனை படுத்திருக்கிறது. அதன் மேல் இரு குட்டிகள் விழுந்து புரண்டு விளையாடுகின்றன. சாட்டை போலும் சுழலும் தாயின் வாலை நிறுத்தப் பார்க்கின்றன. ஆனால் வால் எப்படியோ அவைகளின் பிடிக்கு நழுவி ஒரு சமயம் அவைகளை அணைத்து, ஒரு சமயம் அவைகளினிடையில் சுழல்கிறது. இந்த விளையாட்டு அலுத்ததும் குட்டிகள் தாமே ஒன்றோடொன்று கட்டிப் புரண்டு உருள்கின்றன. என்னை மறந்து வெகுநேரம் பார்த்துக் கொண்டு நிற்கிறேன்.

இன்று விழித்த வேளை நல்ல வேளையேதான். ஒரு வீட்டில் அழைத்து, கூடத்தில் உட்கார்த்தி இலை போட்டு சாதம் போடுகிறார்கள்.

ஒரு வயதான அம்மாள் பரிமாறுகிறாள்.

"வேணுங்கறதைக் கேட்டு வாங்கிச் சாப்பிடு; உன் தாயைப் போல் எண்ணிக்கோடாப்பா—"

எனக்குப் பேச முடியவில்லை. உதடுகள் நடுங்குகின்றன. ஓரங்களில் உறுத்திக் கொண்டு விழிகள் நிறைகின்றன. இலைமேல் தலை கவிழ்கிறது. திடீரெனப் பசிகூட இல்லை. சொல் நெஞ்சுவரை நிரம்பியிருக்கிறது.

இலையில் அன்னம் துல்லியமாய், மலராய்க் குவிந்திருக்கிறது. சுற்றி, கறி, கூட்டு, வறுவல், பச்சடி, பருப்பு எல்லாம். நெய் ஊற்றிய இடத்தில் சாதத்தின் மேல் பளபளக்கிறது. இம்மாதிரி இலையில் சாதத்தை முறையாகப் பார்த்து எத்தனை நாட்கள் ஆகிவிட்டன!

இந்த உணர்ச்சியிலேயே நெஞ்சடைக்கிறது. இலையில் அன்னத்தை இப்படிக் காணும் ஏற்பாடே ஒரு தனி அழகாயிருக்கிறது. அதில் ஒரு தருமம் தெரிகிறது. சாதத்தைப் பிசைந்தால் கலைந்து விடுமே என்று கலைக்கக் கூட மனம் வரவில்லை.

பிற்பகல்.

மெதுவாக நடந்து கொண்டிருக்கிறேன்.

சாலையோரத்தில், மரத்தடியில் ஒருத்தி மெய்ம் மறந்து தூங்குகிறாள். அவளுடைய வாயோரம் எச்சில் வழிகிறது.

அவள் குழந்தை அவளிடம் விளையாடிக் கொண்டே பால் குடித்துக் கொண்டிருக்கிறான். கொழ கொழவென்ற குழந்தையின் உடலில் பால் வடிகிறது.

அவனைப் பார்த்துக் கொண்டு நிற்கிறேன். என்னைக் கண்டதும் வாயை எடுத்து விட்டுத் திரும்பி என்னைப் பார்த்துச் சிரிக்கிறான். அவனுக்கு இப்போது பால் வேண்டியில்லை. வயிறு முட்டியிருக்கிறது.

என் நெஞ்சில் ஏதோ பிராண்டுகிறது. காலையில் கண்ட பூனைக் குட்டிகளா ?

எனக்கு, என் மனோவுக்கு என்ன பிறந்திருக்கும் ?

பெண்ணா ? பிள்ளையா ?

மாலை வருகிறது. அத்துடன் பயங்கள், சந்தேகங்கள், குழப்பங்கள் எல்லாம் கூடவே வருகின்றன. உற்சாகம் முறுக்குத் தளர்ந்து, வேகம் குறைந்து, அடியோடு விழுந்தும் விடுகிறது. மனதில் ஏதோ அலுப்பு தட்டுகிறது.

இரவுக்கு ஒரு வீட்டுத் திண்ணையில் ஒதுங்குகிறேன். வாசற் கதவை யடைத்தாகி விட்டது. ஆனால் உள்ளே இரைச்சல் கேட்கிறது.

"ஓஹ்ஹோ! அவ்வளவு தூரம் என்னை எதிர்த்துக் கேட்க ஆயிடுத்தா? கொஞ்சம் நிதானத்திலேயே இரு: அவன் வரட்டும் சொல்றேன். உன் குதிகால் மண் என்று நினைச்சுண்டிருக்கையா? நான் பிள்ளையாய்ப் பெற்றுக் கொடுத்தப்பறந்தாண்டீ உனக்கு ஆம்படையான், ஞாபகம் வெச்சுக்கோ—"

"என்னம்மா இது? யார் இல்லேன்னா? நான் ஒண்ணுமே சொல்லவில்லையே!"

"இல்லை, இல்லை இதுக்கு ஒரு வழி பிறந்துதான் ஆகணும். அவன் பாவம், ஊரிலேருந்து வந்தவுடனே தர்க்கம் பண்ணுவானேன்னு விட்டு வெச்சா, நீ அதுக்குள் அவன் மண்டையைத் திறந்து உண்டை ஏத்தி, ஒண்ணுக்கொன்பதாய் உபதேசம் பண்ணிடுவே— உன்னைத் தெரியுண்டீ நேக்கு: நன்னாத் தெரியும்!"

இருந்து இருந்து இங்கு வந்து தங்கினோமா?

ஆனால் நேரம் ஆகிவிட்டது: ரொம்பவும் அலுப்பாயிருக்கிறது: திடீரென்று தூக்கம் கண்ணிமைகளை அழுத்துகிறது: சண்டையும் என்னவோ, சட்டென அடங்கிவிட்டது:

அயர்ந்து தூங்கிவிட்டேன்: ஸ்னானம் செய்து, உடலின் அசதி தீர்ந்தாற் போல், ஒரு புது உணர்ச்சியுடன் விழிப்பு வந்தது: இன்னும் விடியவில்லை.

வாசற் கதவு க்றீச்சிட்டுக்கொண்டு மெதுவாய் நகர்ந்து கொண்டே திறந்தது. ஒரு உருவம் என்னருகே வந்து திண்ணைத் தூணைக் கட்டிக்கொண்டு அதன் மேல் சாய்ந்து நின்றது: நீண்ட இமைகளில், நீண்டு

சுருண்ட ரப்பைகளின் கீழிருந்து, பெரிய கருவிழிகள் என்னைத் துயரத்துடன் நோக்கின. மேலாக்கு காற்றில் படபடவென அடித்துக் கொண்டது. முன்றானைக் கொடுக்கு என் முகத்தில் பட்டது.

எனக்கு உடல் வெலவெலத்தது. திண்ணையி லிருந்து குதித்து ஓட்டமாய் ஓடினேன். ஒருமுறை திரும்பிப் பார்த்தேன்.

அவ்வுருவம் நிலைமாறவில்லை. அதன் பார்வை மாறவில்லை. திரும்பாமல் ஓடினேன்.

ஓடிக்கொண்டேயிருந்தேன்.

என் ஓட்டம் நின்றாகிவிட்டது.

ஆனால் நான் இன்னும் உள்ளே போகவில்லை. வாசல் திண்ணையில் உட்கார்ந்திருக்கிறேன். வாசற் கதவு தாளிட்டிருக்கிறது. உள்ளே மனோவின் குரல் கேட்கிறது. குழந்தையைக் கொஞ்சுகிறாள்.

"அது ஷமத்துடீது! அரக்கு ஷமத்து! கொள்ளை ஷமத்து! வண்டி ஷமத்து! 'இங்கா' குடிச்சுட்டு தூங்கப் போறதுடீது அது!"

எனக்கு உடல் பரபரக்கிறது. பலத்தைக் கூட்டிக் கொள்கிறேன். நினைவை நிலைநிறுத்திக் கொள்ளப் பார்க்கிறேன். பௌர்ணமி நிலவில் வானத்தில் நட்சத் திரக் கொள்ளை நடக்கிறது. அத்தனை நட்சத்திரங்களி னிடையிலும், என் நட்சத்திரம் எனக்கு அடையாளம் தெரிகிறது. அன்று போல் நிலை குலைந்து தத்தளிக்க வில்லை. ஒரு வெள்ளை மேகத்தை வெற்றியுடன் சவாரி செய்கிறது. அதைப் பார்த்து நான் தெரிந்துகொள்ள வேண்டிய அவசியமில்லை. நான் என் நிலை வந்தடைந் தாகிவிட்டது.

அப்போது, நீங்கள் உங்கள் நிலையை அடையுமுன் அருளிய உங்கள் இறுதி வார்த்தை நினைவில் எழுகிறது. மூளையில் இதுவரை ஏதோ அழுத்திப் பிடித்துக்கொண்டிருந்து இப்போது விடுபட்ட முதலெழுத்துடன், உங்கள் சொல் முழுமையின் வெற்றியுடன் எழுகிறது.

"இறவாதே"

புரிகிறது.

உங்களையலாது உங்களைக் குருவாய் வரித்த பாவனையை வணங்குகிறேன்.

உள்ளிருந்து குழந்தையின் மழலைக் குரல் அழைக்கிறது.

# கஸ்தூரி

பக்கத்து வீட்டில் குடி கூட வந்தாகிவிட்டது. அட்டை தொங்குமுன் 'காலி' மோப்பம் எப்படித்தான் எட்டுகிறதோ ?

இவ்வீட்டையும் அடுத்த அகத்தையும் இணைத்து இரவும் திறந்தபடியிருந்த கதவை அடைத்தாகிவிட்டது. முதன் முதலில் திறந்து வைத்ததுகூட மறந்து போக, திறந்தேயிருந்த கதவு, ஒரு நாள் மூடிவிடும், மூடியே விட்டது. அதற்குத்தான் கதவே, எனும் உண்மையின் உணர்விலேயே முதுகுத் தண்டு சில்லிடுகிறது. நெஞ்சில் இருள் திரள்கிறது. சே, இனி இங்கிருக்க இயலாது. நானும் வேறு இடம் பார்க்க வேண்டியதுதான்.

போய் எட்டு நாள் ஆகிவிட்டது. ஆனால், கஸ்தூரி மணம் விடாது இன்னும் வீட்டில் கமழ்கிறது, எதைச் சாக்கிட்டேனும்.

குழந்தை ஊமையடி பட்டவனாய் தாழ்வாரத்துத் தூண்களைச் சுற்றிச் சுற்றி வருகிறான்.

"கச்சூவி மாமா எங்கேப்பா ?"

வருவாரம் சதாபிஷேகத்துக்குக் காத்திருக்கும் எதிர் வீட்டுப் பட்டு சாஸ்திரிகளிடமிருந்து சாவித்ரிக்கு இனிப் பிறக்கப்போகும் பாப்பாவரை யாருக்கும் கஸ்தூரியான தால், கஸ்தூரிக்குக் கௌரவம் குறைந்து விடவில்லை. பெருமை இன்னும் கூடத்தான். பொறாமையைக் கிளறாது, பிரியத்தையே கூட்டும் அதிசயம் வெகு

சிலருக்கே தனியாக வாய்ந்த வரம், அவர்கள் ஆத்ம சக்தி தூவும் சொக்குப் பொடி. அடே கஸ்தூரி, உனக்கு அமைந்த பேரடா!

நம் ஒற்றுமையைத் தெருவின் கண்ணே சுட்டுவிட்டதடா! நெருப்பில் நல்ல நெருப்பு, பொல்லா நெருப்பு இரண்டுமே சுடுநெருப்புத்தானே!

நாமிருவரும் ஆபிஸுக்குப் போம்போது எத்தனை முறை சிவப்புத்தலைப்பா எச்சரித்திருக்கிறது! "இந்த மாதிரி பக்கத்தில் பக்கத்தில் தோளைத் தொட்டுக்கிட்டுத் தெருவை அடைச்சுக்கிட்டு சைக்கிள் விடாதீங்க ஸார்!" ஆனால், கேட்டோமோ? ஆனால், ஒரு தரமேனும் கேஸ் எழுத 344க்கு மனமில்லை. திருப்பத்தில் நாம் வரும்போதே பா ரா த து போ ல், சிரிப்பையடக்கிக் கொண்டே திரும்பிக்கொள்வான்.

ஒரு தடவை நினைவிருக்கிறதா? பேச்சு ஸ்வாரஸ்யத்தில் தராசு பிசகி, சைகிளோடு சைகிள் மோதி முடிந்துகொண்டு, நாம் நடுவில் விழுந்து மாட்டிக் கொண்டு, பின்னால் "பூம்! பூம்!!" ப்ரேக்குகளின் க்றீச்—என்னை எப்படியடா அப்படியொரு குண்டுக் கட்டாய்த் தூக்கிக் கொண்டு ப்ளாட்பாரத்திற்கு ஒரு தாவு தாவினாய்?

பிறகு அதைப்பற்றிப் பாராட்டாய் ஒரு வார்த்தைக்குக் கூட யாருக்கும் நீ இடம் விடவில்லை. சாவித்ரி கண்கலங்கினபோது — அவள் வாய் பேசாள், மனந்தாங்காள் — "என்ன மன்னி? உன் அகமுடையானைப் பத்திரமாய் உன்னிடம் சேர்த்தபின் ஏன் அழுகை? சேர்த்தேனே என்றா?" என்று கேலி பண்ணினாய்.

"அந்த மாதிரி சமயங்களில், மனிதன், தான் கதாநாயகனாகத் திட்டமிட்டா காரியம் செய்கிறான்?

அப்போ நான் நானாவாயிருந்தேன் ? எனக்கு என் உயிர் வெல்லமாயிருந்தது. கீர்த்திக்கு ஆயுசு கெட்டியா யிருந்தது அவ்வளவுதான். வேளை சரியாயிருந்தால் எல்லாம் சரி. எல்லாம் உன்னாலும் என்னாலும் நம்மாலுமில்லை என்று எப்போத்தான் தெரிந்து கொள் வோமோ ?"

அதே போல் கார்த்திகையன்று கிட்டுவின் சொக்காய் அகல் சுடரில் பற்றிக் கொண்டபோது இப்போ நினைத் தால்கூட உடல் பறக்கிறது. நிமிஷத்தில் குழந்தை அப்படியே ஜோதியாகவே அன்றோ மாறிவிட்டான் ! நானும் பெற்றவன் அவளும் பெற்றவள்தான். ஆனால் ஓலமிட்டபடி சுற்றிச்சுற்றி வருவதுதவிர என்ன தெரி கிறது ? ஆனால் குறுக்குச் சுவரின் வாசல் வழி நீ தாய்ப் பசுப்போல் பாய்ந்து வந்தது இமைச் சிமிழில் மையாகி எடுத்தெடுத்து இட்டுக் கொள்ள இன்னும் அலுக்கவில்லையடா ! இடுப்பு வேட்டியை அவிழ்த்து கிட்டு மேல் போட்டு மூடி கெட்டியாய்க் கட்டிக்கொண்டு நீ தரையில் உருண்ட காட்சியை, பயமுறைந்து கல்லாய்ப் போன எங்கள் மனத்தில் உளியால் எழுதி விட்டாய்,

எனக்கு அழுகை வந்துவிட்டது.

"கஸ்தூரி, நீ எங்கள் தெய்வண்டா !" என்று ஏதோ குழறிக்கொண்டு விரித்த கையுடன் நான் உன்னிடம் ஓடி வந்தபோது, உனக்கு மெய்யாகவே கோபம் வந்து விட்டது. என் கையை உதறினாய்.

'ஏன், உன் உயிர்தான் உசத்தியோ ? குழந்தை உயிர் கொசுரா ? கணக்கில்லையா ?'

திருப்ப முடியாக் கடன்களாகிவிட்ட செயல்களை அலட்சியமாய்ப் பந்தாடி, மணம் வீசும் பேச்சுக்களால் எங்கள் மனதுக்கினியவனாகிவிட்டாய்.

முகராசி என்பது தனிதாண்டா! நான் உத்யோகத்திலமர எவ்வளவு அலைந்திருப்பேன்! 'பார்க்கலாம், நாளை வாரும், இன்று நேரமில்லை. இன்னொரு நாள்'— இப்படியே அலுக்காத மழுப்பல்களுக்கு நானும் தளராது மிரளாது எத்தனை தரம் படிமிதித்திருப்பேன்! ஆனால் அதே ஆபீஸில் அதே துரையிடம் நான் உன்னைக் கொண்டுபோய் நிறுத்தினதும் அவர் அப்படியாயிருந்தார்? இத்தனைக்கும் நான் உனக்காக சிப்பக் கட்டு கட்டவில்லை, உள்ளதைத்தானே சொன்னேன்!

"ஸார், இன்று காலை இவர் தன் மனைவி சகிதம் என் வீட்டுக்கு வந்தார். (உன் பெயர்கூட அப்போது நான் அறியேன்.) "நேரே ரயிலடியிலிருந்து வருகிறோம். எங்கள் கட்டு சாதத்தைச் சாப்பிட இடமும் இலையும் ஜலமும் வேணும்" என்று கேட்டார். பிறகு பேச்சு வாக்கில் வேலை தேடும் படலமாய்ப் பட்டணம் வந்திருக்கிறார் என்று தெரிந்து, நம் ஆபீஸில் காலியிருக்கிறதே, அதற்குத் தேவையான படிப்பும் யோக்யதையும் தனக்கு உண்டென்று சொல்கிறாரே என்று உங்களிடம் கொண்டு வந்தேன். உங்களிஷ்டம் உங்கள் பொறுப்பு. இன்று காலைமுன் இவர் ஒருவர் உண்டு என்றுகூட எனக்குத் தெரியாது.

உன்னை அவன் பண்ணினது உண்மையில் பரீட்சையா?

அது விஷயத்தில் எனக்குக்கூட மனத்தாங்கல்தான். துரையை ஒரு சமயம் கேட்டும் விட்டேன்: "ஏன் சார், என்னை இவ்வளவு சுலபமாய் விட்டீர்களா?" ஆனால் அவனும் லேசுப்பட்டவனா? "அதனால்தானே கீர்த்தி இப்போ நீங்கள் இட்டது சட்டமாயிருக்கிறது!" என மழுப்பிவிட்டான்.

இப்போது பின்னோக்குகையில், வேலை வேணுமென்று என்னை நீ கேட்கக்கூடவில்லை. ஆனால் அன்று

மாலை வந்ததும் உன் மனைவியிடம் நீ சொன்னதை மறக்க முடியாது.

'மங்கை, இவர் பெயர் சத்யகீர்த்தி. மன்னி பேர் சாவித்ரி. இவர்கள் பேரும் உறவும் சேர்ந்த இடத்தில் சத்யம் வாசம் பண்ணுவதால்தான் இந்த வாசல் மிதித்ததுமே நமக்கு வேளை வந்துவிட்டது."

நீ சொன்னதில் முகத்துடைப்பில்லை. வெறும் வாய்ச் சாலக்கில்லை. நன்றி அறிவிப்பு என்றுமில்லை. ஆவேசம் வந்தாற்போல் உன் முகம் குங்குமமாகிவிட்டது. வெறும் பேரின் வாய்ப்பிலேயே சொல்லுக்கு வல்லமை தந்து பேரை மந்திரமாக்கி, அதைச் சத்தியத்தின் உக்கிரமாய் வரவழைத்து அவ்வுக்கிரத்தைத் தாங்கிக்கொண்ட ருத்ரமூர்த்தியாய் அந்நிமிஷம் உன்னை நான் கண்டதும் எனக்கு உடல் முழுவதும் புல்லரித்துப் பிழிந்த மாதிரியாகிவிட்டது. பேரளவில் சொல்லளவில், சத்யகீர்த்தியென்றதால், செயலாகி விடுவேனோ? ஆனால் திடீரென சொல்லுக்கும் செயலுக்கும் இடைக்கோடு உன் ருத்திரத்தில் அழிந்ததும் ப்ரளயம் புரண்டெழுந்து ஒரு கணம் என்மேல் மூடி உடல் கிடுகிடுத்துத் தலை 'கிர்ர்'ரிட்டது.

எனக்கு நினைவு வந்தபோது, நீ என்னைத் தாங்கிக் கொண்டிருந்தாய்; என் விரலால் உன் முகம் தொட்டேன். உன் முகம் தழல் தணிந்து நிழலுக்குத் திரும்பிவிட்டது.

என்ன நேர்ந்தது கஸ்தூரி ?

நீ எனக்கு என்ன செய்துவிட்டாய் ? சமயங்களில் நீ புரிவதில்லை; ஆனால் உன் பேச்சில் லாகிரி இருக்கிறது.

உனக்கு வேலை கிடைத்தவிதம் பற்றிப் பேச்செழும் போதெல்லாம் நீ பெருமை கொள்வாய். "என்ன மங்கை, நான் சொன்னது நிஜமாச்சு பார்த்தையா ? நீ மூக்கால்

அழும்போதெல்லாம் 'ஆண்டவன் நம்மைக் கைவிட மாட்டான், கைவிடமாட்டான்' என்று எத்தனை தரம் படித்திருப்பேன்! நீயே பார்த்துக்கொள். தெரியாவிட்டால் இப்போ தெரிஞ்சுக்கோ; அவனை விட்டால் நமக்குக் கதியில்லை, நம்மை விட்டால் அவனுக்கு வழியில்லை. எதற்கும் வேளை வரனும்: வேளையேதான் தெய்வம்: வேளை வந்தால் தெய்வம் வந்தது. தெய்வம் வந்தால் வேளை வந்தது. வேளை வந்து வேலை கொடுப்பதை யார் தடுக்க முடியும்? காலத்தின் விளிம்பில் வேளை எப்பவும் துளும்பி நிற்கிறது—"

அவன் அப்படிச் சொன்னதும் நக்ஷத்ரம் உதிர்ந்தது.

இரவு முதிர்ந்த வேளையில், வாசற்குறட்டில் உரு விளங்கா மையிருளில், 'கணகண'வெனும் அவன் குரலும், மார்தட்டலும் தமக்கெனத் தனி உயிர்கொண்டு என்னை எட்டிப் பற்றுகையில், வியப்புறுவேன்.

இந்தச் சின்ன வயதில் ஆண்டவன் மேல் இவ்வளவு பற்றுதலா? இதென்ன பக்தி மீறிய பரவசமா? பரவச மீறலில் உரிமையாய் வந்த சலுகையில் ஆண்டவனை நையாண்டியா? வெற்றி வெறியா? சொற் சீண்டலா? சொல்லில் பல்லாங்குழியாடி, 'புதையல்' பொத்து கிறானா?

மங்கை, நீ ஏன் வாய் திறப்பதேயில்லை? 'ஊம்!' 'ஊ—ஹூம்' கூடக்கிடையாதா? படமாடத் திரையோ சுவரோ தேவைபோல், அவன் விரித்தாடும் தோகைக்கு நீ அரங்கா? நீங்கள் வந்த புதிதில் நீ ஊமையோ என்று கூட நாங்கள் ஐயுற்றதுண்டு. அதற்காகக் கஸ்தூரிக்கு இரங்கினதுமுண்டு.

ஏண்டா கஸ்தூரி, என் மனம் உனக்குக் கண்ணாடியா? எப்படி—? அப்படியேதான் இருக்கட்டுமே,

உள்ளும் புறமும் கிடையாதா ? அல்ல உனக்கு இல்லை யென்பதன் விளம்பரமா ?

"கீர்த்தி, என் பெண்டாட்டி லேசுப்பட்டவள் என்று எண்ணாதே. குரல் தூக்காமல் ஏதாவது குழிபறித்துக் கொண்டிருப்பாள். இன்று என்ன செய்தாள் தெரியுமா ? நடுக்கதவை இரவிலாவது அடைத்தாகணுமாம். ஏன், கூரை வழியாகத் திருடன் இறங்கிவந்து கிட்டுவின் பாலாடையை அழுத்திவிடுவானா ? இல்லை, மூலைப் பழையதை முழுங்கிவிடுவானா ? மங்களத்தம்மாள் சந்தேகங்கள், பயங்கள், எல்லாமே தனி !"

—"நேக்குப் பாலாடை மாணாம் நானே தமத்தா குச்சூடுவேன்—"

"கதவை நாங்களா திறந்து வைத்தோம்?ஏற்கெனவே திறந்திருந்ததுதானே ! தாழ்ப்பாள் எங்கள் பக்கமாயிருக்கிறது? திறப்பதும் மூடுவதும் உங்கள் இஷ்டமா, இவள் இஷ்டமா ?"

"பட்டணத்தில் ராத்திருட்டு ஏது ? எல்லாம் பகலிலேயே, கண்ணெதிரில், கண்ணில் மண்ணைத் தூவுவது தான் இங்கைய வழி !"

சாவித்திரியின் குரல் எப்படி எப்பவுமே வெல்வெட் போல் இதமாய் செவியில் அழுங்குகிறது ! தர்க்கத்தை வளர்க்காமல், சமாதானம் பண்ணுவதாய், அதே சமயத்தில் எதிலும் பட்டுக்கொள்ளாமல் வழுக்குகிறது.

"ஹா, இரவு பகல் இது வேறே ! கண்ணை மூடினால் இருட்டு, திறந்தால் வெளிச்சம். உண்மை தான் ஒளிந்து கொள்ள ஏற்படுத்திக் கொண்ட தோற்றங்கள், புளுகுகளில் ஒன்று—இல்லை இரண்டா? அல்ல ஒன்றே இரண்டான ஒன்றா ?"

"பட்டப்பகலில் கண் அவிஞ்சாலோ? அது என்ன ?"

மங்கையின் குரல் இருட்டில் வெடுக்கென சொடுக்கிற்று.

"பார்த்தாயா, பார்த்தாயா கீர்த்தி, மங்கைக்கு வாயில்லை என்றாயே! 'ராபணா' என்கிறாள் பார்!"

என்னின்று சிரிப்பு பீறிட்டுத் தெறித்தது. மின்னலில் மின்னேரம் இரவு பகலாவதுபோல், நினைவில் மின்னிட்டு உடனே மறைந்த பளிச்சில், என் சிரிப்பு சரம்போல் கேள்வியில் வளைந்து அதன் கொக்கியினடியில் துளித்த சொட்டு தடுத்து இடையில் அறுந்து தொங்கிற்று.

மங்கையின் குரலில் ஏன் இவ்வளவு கோபம்?

சாவித்திரி, "நேரமாச்சு, உள்ளே போவோமா?" என்றாள்.

பேச்சு இம்சையடைந்து, அந்த அவஸ்தையில் அடங்கின பிறகுதான் நேரம் போனது தெரிகிறது.

வெளிக் கதவைத் தாளிட்டுக்கொண்டு உள்ளே வந்ததும் சாவித்திரி உடம்பை சிலிர்த்துக் கொண்டாள்.

"என்ன சாவித்திரி?"

"சில்லென்றாற் போலிருந்தது."

காற்று நடு வாசற்படியிலிருந்து மோதிற்று.

அங்கு சென்றேன்.

"என்ன, கதவை மூடுகிறாயா?"

அப்பாலிருந்து அவன் குரல் வந்தது. அதில் சிந்திய கேலி சுருக்கென்றது.

"என் கதவு எப்பவும் திறந்திருக்கும்" என்றேன்.

"எனக்குத் தெரியும்."

என் தோள்மேல் அவன் கை விழுந்து தங்கி, அழுந்திற்று. அவன் விரல் நுனிகள் வழி அவன் மன நெகிழ்ச்சி என்னுள் இறங்கி என் ரத்த ஓட்டத்தில் கலப்பது தெரிந்தது.

ஒரு தரமேனும் எது சாக்கிட்டேனும் அவனைத் தொடாமல் இருக்க முடியவில்லை. யதேச்சை போலேனும் அவன் மேல் பட்டாகனும். இதென்ன சபலமோ ?

சாவித்திரிகூட சொல்வாள். தெருவில் யாரேனும் ஒருத்தி, கூடுமானவரை இலக்கணத்துக்குக் கிட்டிய உடலமைப்புடன், சுருக்கங்கள் கசங்கல்கள் இல்லாமல் உருவிவிட்டாற்போல் உடலோடு ஒட்டி ஒழுங்காய் உடுத்திக் கொண்டு போனால், தனக்கு அவளைத் தழுவிக் கொள்ளணும் போலிருக்கும் என்பாள். "அப்படித் தோன்றுவது தவறு என்று எனக்குப்படவில்லை. நம்மிடம் இல்லாத நிறைவுகளைப் பிறரிடமாவது கண்டு ஈடுசெய்து கொள்ளும் மகிழ்ச்சியில் ஆத்மிகம் கூட இருக்கிறது" என்பாள்.

அப்படிப் பார்த்தால் கஸ்தூரி உன்னிடமிருப்பது எதுவுமே என்னிடத்தில் இல்லை. ஒப்பிடலுக்கிடமிருந்தால்தானே பொறாமைக்கிடம்! ஈடேயில்லாததனால்தானோ உன்மேல் எனக்குப் பாலாய் வழிகிறது ?

★

நீங்கள் 'லஞ்சி'லிருந்து வந்தோம். ஒரு கையால் அவன் கழுத்தையிறுக்கியபடி அவன்மேல் தொங்கிக் கொண்டே வந்தேன்.

மானேஜர் எங்களைக் கண்டதும் எழுந்து கையில் பேனாக் கத்தியுடன் எங்களை நோக்கி வந்தார்.

"எந்த இடத்தில் ஒட்டிக் கொண்டிருக்கிறீர்கள்? அந்தச் சதையை அறுத்துவிடுகிறேன்—கஸ்தூரி! துரை உன்னைக் கூப்பிட்டானப்பா."

மேஜை நாற்காலிகளுக்கிடையில் வீச்சு நடையில் உயரமாய், துரையின் அறை நோக்கி அவன் செல்கையில் வேங்கை போலிருந்தான்.

போனான் போனான் ஆளை வெகு நேரம் காணோம். எனக்கு வியப்பாயிருந்தது.

அறையினின்று வெளிப்பட்டதும் குனிந்த தலையோடு சீட்டியடித்தபடி தன்னிடம் வந்து அமர்ந்தான். முகம் லேசாய் வெளிறிட்டிருந்தது. மேஜைமேல் கோர்த்த தன் கைகளை வெறித்தபடி உட்கார்ந்திருந்தான். இந்தக் கஸ்தூரி எனக்குப் புதிது.

அவனையே உற்று நோக்கிக் கொண்டிருந்த மானேஜர் முகத்தில் இளநகை படர்ந்தது.

"என்ன ஸையமிஸ் ட்வின்ஸ்களை துரை தனிப்படுத்தி விட்டானா ?"

"எனக்கு இந்தூருக்கு மாற்றலப்பா !"

மேஜைகளும் நாற்காலிகளும் என்னைச் சுற்றிச் சுழன்றன. தலையை உதறிக்கொண்டு நாற்காலியைப் பின்னால் தள்ளிக் கொண்டு வேகமாய் எழுந்தேன்.

"கீர்த்தி !"

எனக்குக் காது கேட்கவில்லை. விடுவிடெண துரையின் அறையுள் நுழைந்தேன். என்னைப் பார்த்ததும் அவன் கண்ணாடியைக் கழற்றி மேஜைமேல் வைத்தான்.

"ஹலோ !"

"ஸார், கஸ்தூரி—"

"ஆ, கஸ்தூரி. கஸ்தூரியும் நீங்களும் நெருங்கிய நண்பர்கள் அல்லவா ?"

கேள்வியில் கேலியில்லை. ஆனால் பரிவுமில்லை. நான் மௌனமாய்த் தலையசைத்தேன். என் முகத்தில் ரத்தம் குழம்பிய வேகத்தில் கன்னங்கள் குறுகுறுத்தன.

"மிஸ்டர் கீர்த்தி, இது பாங்க்; ஒரு வியாபார ஸ்தலம், அதிலும் நம்முடைய பாங்க் மிகப்பெரிய வியாபார ஸ்தலம். வியாபாரஸ்தலத்தில் வியாபாரத்தைத் தவிர சொந்த உணர்ச்சிகளுக்கு இடமில்லை. என்னை எடுத்துக் கொள்ளுங்கள். மூவாயிரம் மைல் தூரத்திலிருந்து என் உற்றார் உறவினரைப் பிரிந்து வந்திருக்கிறேன். ஐந்து வருஷங்களுக்கு ஒரு முறைதான் என் பெண்டுபிள்ளைகளிடம் நான் போக முடியும். இடையில் எனக்கோ அவர்களுக்கோ என்ன நேர்ந்தாலும் கடவுளுக்குத்தான் புண்ணியம். நாம் எல்லாரும் பாங்க் ஊழியர்கள் என்ற முறையில் ஒரே குடும்பம் என்று வைத்துக்கொள்ளுங்கள். ஆனால் ஒரு குடும்பமாய் பாங்கின் நன்மை எனும் ஒரே குறிக்கோளுக்குத்தான் உழைப்பவர்கள். தவிர மிஸ்டர் கீர்த்தி—இது உத்யோக முறையில் அல்ல...சொந்தமாய் நம்மிடையில்—யாரிடமும் அன்பாயிருங்கள், நட்பை வளருங்கள். கூடப்பிறந்தவர்களாயிருந்தால் ரத்தத்தின் ஒட்டுதலைக் கொண்டாடுங்கள். ஆனால் எவரிடமும் பாசத்துக்கு இடம் கொடுக்காதீர்கள். அது காலைப் பின்னி, கையைக் கட்டி, கழுத்தையிறுக்கி, கடமையை அழித்து, ஆளை அவமானத்தில் ஆழ்த்திவிடும். இதற்குப் பின்னும் ஏதாவது கேள்வி உண்டா ?"

நான் அடைத்தவாயுடன் திரும்பினேன்.

"என்ன, திக் விஜயம் பண்ணி வந்தாச்சா ?"

கஸ்தூரி இல்லாமல் இனி எப்படி இருக்கப் போகிறோம்? முதலில் என் பையனுக்கு யார் பதில் சொல்வது?

பக்கத்து நாற்காலியிலிருந்து ஒன்றிருவர் வந்தனர்.

"என்னப்பா கஸ்தூரி, "அவுட்"டா? போ, அங்கெல்லாம் சப்பாத்தி கிழங்குதான். காய்ந்த ரொட்டிபோல் ஒட்டி உலர்ந்திருக்கேயே, அங்கே போய் ஆட்டாவைத் தின்னு தின்னு இடுப்பு செக்குமாதிரி ஆகிவிடப் போகிறது."

"அங்கெல்லாம் வெற்றிலைக்குப் பஞ்சம் தெரியுமோன்னோ? தழை குதப்பறதெல்லாம் இனிமேல் வேகாது அப்பேன்! வெற்றிலையைக் கடிதாசில் வரைந்து, கண்ணால் பார்த்துக் கொண்டே வெறும் வாயை மெல்ல வேண்டியதுதான்."

"என்னப்பா கீர்த்தி, இடிஞ்சு போய் உட்கார்ந்துட்டியே! மாற்றல் உனக்கா, அவனுக்கா?" விழிகள் உறுத்தின. எனக்குமிருந்தால் நல்லதே, அவனோடு சேர்ந்து.

கஸ்தூரி என் முதுகில் பளார் என்று அறைந்தான்:

"சமாளி ப்ரதர் சமாளி. வேளை வந்துவிட்டது. சேர ஒருவேளை. பிரிய ஒருவேளை. பிளேட்டைத் திருப்பிப்போடு. ஆட்டம் முடிந்தது. சீட்டைக் கலை. புதிதாய் வெட்டு. ஹஹ்ஹாஹஹாஹ்ஹா-!"

'ஆட்டம் முடிந்தது' என்றதும் முந்தின இரவு ஞாபகம் வந்தது.

நாங்கள் சொக்கட்டானாடினோம். சாவித்ரியும் கஸ்தூரியும் ஒரு கட்சி. நானும் மங்கையும் இன்னொரு கட்சி. 'இதென்ன விளையாட்டு, 'போர்' இதுவும் ஒரு விளையாட்டா என்று முனகல், ஆக்ஷேபணைகளுடன்

தான் ஆட்டம் தொடங்கிற்று. ஆனால் பொழுது போக வில்லை. சினிமாவுக்கு நேரமாகிவிட்டது. தூக்கமும் வரவில்லை.

என் கட்சி இரண்டு பழங்கள் ஏறிவிட்டது. அவர் களை நாங்கள் இதுவரை ஒரு பழம்கூட ஏறவிட வில்லை. எங்கள் காய்கள் துரத்தித்துரத்தி எதிர்க் காய்களை வெட்டின. மங்கைக்குக் கண்கள் ஜ்வலித்தன; இதன்மூலம் வெகு நாளைய, வெவ்வேறு பழிகளைத் தீர்த்துக் கொள்வதுபோல்.

ஆனால் கஸ்தூரிக்குத் திடீரெனத் தொகை பெருகிற்று. வெறும் தாயக் 'கட்டைகள்' தாம். ஆனால் அவைகளுக்கும்தான் வெறிபிடிக்கிறது!

"தாயம் பன்னிரண்டு ஐந்து—"

"இருபன்னிரண்டு ஒரு தாயம் ஆறு ஈரைந்து —"

"இரு பன்னிரண்டு ஒரு தாயம் ஈராறு ஈரைந்து —

மந்திரம் சொல்வது போல், ராகமாய்த் தொகையை உருப்படுத்திக் கொண்டே கஸ்தூரி கட்டைகளை வீசி உருட்டினான். தொகை பறந்தது.

"ஈராறு ஒரு தாயம் மூவைந்து இரு பன்னிரண்டு."

சாவித்ரி களிப்பில் கைகொட்டினாள். மங்கை அவளை வெறித்தாள். மங்கையின் கண்கள் கலப்பற்ற தூய பகையைக் கக்கின.

"முப்பன்னிரெண்டு, மூவைந்து, இருதாயம் ஈராறு—"

"ஒரு நிமிஷம்"—

கண்களில் வினாவுடன் தலை நிமிர்ந்தான். புருவங்கள் கம்பளிப் பூச்சிகள் போல் நெளிந்தன. உள் பரபரப்பில் லேசாய்த் திறந்தவாய். கண்களில் தனி

பளபளப்பு. கால்களை மண்டியிட்டு ஒரு கையைத் தரையில் ஊன்றி, இன்னொரு கையில் பாய்ச்சிகையுடன் என் வார்த்தைக்குக் காத்திருக்கையில், பாய்ச்சலில் பதுங்கிய விலங்கு போலிருந்தான். எதை வேட்டை யாடுகிறான்? அவனின்று காந்தம் விறுவிறுத்தது. அது என்னைக் கவ்வி விடாதபடி என் ப்ரக்ஞையை என்னில் ஊன்றிக் கொண்டேன்.

"நீ இதுவரை ஒரு தாயந்தான் போட்டிருக்கிறாய். ஆனால் இரு தாயமாய்க் கூட்டுகிறாய்" என்றேன்.

"இல்லை இருதாயம் விழுந்தது."

"இல்லை ஒரு தாயம்தான். வேணுமானால் மங்கையைக் கேள்."

"ஓஹோ உன் கட்சி ஆளையே சாட்சி வைக்கிறாயா?" அவன் அப்படிக் கேட்டது எனக்குக் கொஞ்சம் ரோசமாய்த்தானிருந்தது.

"தம்பி, இந்த சமயத்துக்கு உன் பெண்டாட்டியைத் தான் சாட்சிக்குக் கூப்பிடுகிறேன் கட்சியை, அல்ல."

"ஹாம்! அவளுக்கென்ன தெரியும்? விழுந்த தொகையைத் திருப்பிச் சொல்லத் தெரியுமா?"

"என்னால் கூடத்தான் முடியாது. அதனால் நான் பைத்தியக்காரனா? இல்லை நீ இரு தாயம் போட்டவனாகி விடுவாயா?"

"அப்போ என்னைப் பொய்யன் என்கிறாயா?" அவன் பற்கள் ஒளி வீசின.

"அது எனக்குத் தெரியாது; விழுந்தது ஒரு தாயம் தான் என்கிறேன். கூரை மேலிருந்து கூவுகிறேன்."

எல்லாருக்கும் ஒரே சமயத்தில் சட்டென வாயடைத்துவிட்டது. இம்சையான மௌனம் அங்கு தேங்கிற்று.

இடை வாசற் சந்திலிருந்து காற்று சில்லென கூடத்துள் சீறிற்று. விளக்கு மிதந்தது. சுவர்களில் எங்கள் நிழல்கள் எங்களைவிட மிகப் பெரிதாய் ஆடின.

"இதென்ன பச்சைக் குழந்தைகள் மாதிரி!" மெத்தென்று சாவித்திரியின் குரல்தான் அந்த நிலையை நிதானத்துக்குத் திருப்பிற்று. அவள் சொல் கேட்டதுமே, கோல்பட்ட மாதிரி கஸ்தூரி படமொடுங்கிப் போனான். மிகவும் பணிவான குரலில், "மன்னி சொன்னால் சரி" என்றான்.

சாவித்திரி இடதுகை வளையல்களை வலது கையால் நெகிழ்த்துக் கொண்டாள். மடிமேல் படிந்த கைகளின் மேல் அவள் தலை குனிந்தது. அதன் கருமை விளக்கொளியில் பளபளத்தது. கூந்தலின் சிற்றலைகளைப் பிளந்து கொண்டு வகிடு நடு பிறழாமல் 'விர்'ரென ஓடிற்று. மேனி உள்செழிப்பில் மினுமினுத்தது. நான்கு மாதங்களாக ஸ்நானம் பண்ணவில்லை.

"இரு தாயந்தான்" அவள் பேச்சு மூச்சுக்கு மேல் எழவில்லை.

எனக்கு ஆச்சரியமாயிருந்தது. இதென்ன கட்சியை விட்டுக் கொடுக்காமல் 'குஞ்சரः' வா?

கூடவே எனக்குச் சந்தேகமும் குழப்பமும் வந்து விட்டன. நான்தான் முட்டாளோ? நிஜமாவே இரு தாயந்தானா?

மங்கையின் பார்வை எங்கள் மூவர்மேலும் மாறி மாறி நிலைக்க இடங்கொள்ளாது தவித்தது. அவள் புருவங்கள் நெறிந்தன. மோவாயும் உதடுகளும் நடுங்கின. கையை வீசி காய்களைக் கலைத்துவிட்டு, சரேலென எழுந்து இடை வாசல் வழி ஓடினாள்.

நட்சத்திரச் சுடர் போலும், காலும் கையும் அகலப் பரப்பித் தூங்கிக்கொண்டிருந்த கிட்டுவைச் சாவித்ரி தூக்கித் தோள்மேல் சாத்திக்கொண்டு மாடி ஏறினாள்.

எனக்கு ஒன்றுமே புரியவில்லை.

"ஏம்பா இவர்கள் இப்படியிருக்கிறார்கள் ?"

"யார் கண்டது ? பெண்களை யாரால் புரிந்து கொள்ள முடிகிறது ?"

வீடு என்பது கூட மறந்து அவன் உதடுகளில் ஒரு சிகரெட் ஆடிற்று. குவிந்த கரங்களுள் சுடரையணைத்துச் சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டிருந்தான். பசு நாக்குப்போல் முன்மயிர் அடையாய் நெற்றியில் சரிந்தது. விழிகளின் மேல் இமைகள் கவிந்து முகத்தில் இரு நீண்ட கீறல்களாயின.

★

"அப்பா பச்சீக்கதப்பா" என முனகிக்கொண்டு வந்து கிட்டு மடியில் விழுந்தான்.

அவனைத் தூக்கிக் கொண்டு எழுந்து சமையலறையில் எட்டிப் பார்த்தேன்.

அடுப்பெதிரே முழங்காலைக் கட்டிக்கொண்டு அவள் உருவம் அறையின் பாதியிருளில் மங்கலாய்ப் பிதுங்கிற்று. அடுப்பு தூங்கிற்று. உட்கார்ந்தபடியே அவளும் தூங்குகிறாளா ? இன்று காலையிலிருந்தே அசதியாய்த் தானிருக்கிறாள். இடுப்பு இப்பவே அகல ஆரம்பித்து விட்டது.

ஆனால் இன்று ஞாயிற்றுக்கிழமைதான்.

"கிட்டு, உனக்கு இட்லி பிடிக்குமோ?"

"ஓ இக்கிலி புக்குமே !— இக்கிலி, தட்டணி, அளுவா எல்லாம் புக்குமே !"

"ஹோட்டலுக்கு வரையா ?"

"நான் வரேம்பா ! நான் வரேன் !! பூனிலே குத்திக் குத்தித் தாப்படலாமாப்பா ?"

"அது யாருடா சொல்லிக் கொடுத்தது ?"

"கச்சூவி மாமா சொல்லிக்குத்தாளே !"

நீங்கள் கிளம்பினோம். மேகங்கள் ஒன்றன்மேல் ஒன்றாய்த் தம்மையடுக்கியிழைந்து ஒன்றாய்க் குழுமிக்கொண்டிருந்தன. மழை எட்டு ஊருக்குக் காத்திருந்தது. கொஞ்சம் வேகமாய் மிதித்தால் பொட்டலத்துடன் திரும்பிவிடலாம். சாவித்ரிக்கும் சேர்த்துத்தான். சமையல் ஏறத்தாழ ஆகலாமே ! இன்று ஞாயிற்றுக் கிழமை தான்.

சாவித்ரி இருந்த இடத்தைவிட்டு நகரவில்லை அவளுக்கே இந்தத் தடவை இப்பவே தள்ளவில்லை. பிறந்த வீட்டுக்கு அனுப்பலாமா என்றால் அவள் அண்ணனுக்கு நாலு குழந்தைகள். அவள் மன்னி மறுபடியும் உண்டாயிருப்பதாகக் கேள்வி. அவள் அங்கு போகமாட்டாள். ஏற்கெனவே பேச்சுவாக்கில் ஒரு சமயம் சொல்லியிருக்கிறாள்; "பெற்றவர்கள் போனபின் பிறந்த வீடு ஏது ?"

சாவித்ரி பேசினால் கல் பேசின மாதிரி.

எங்களுக்கு மணமாகி முதன்முதலாய் அவள் பேசிய வார்த்தைகளே போதும். நான் ஊருக்கு கிளம்புகையில், வாசற்கதவு மூலையிருட்டில், தாழ்ப்பாள் மேல் தங்கிய என் கைமேல் அவள் கை பொத்திற்று. அவள் மூச்சு என் கன்னத்தின் மேல் அனல் கக்கிற்று.

"என்னை எப்போ கூட்டிக்கப் போறேள்?"

அந்த மூர்க்கம் ஒன்றே போதும். நான் அவளைக் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டியது ஒன்றுமில்லை. நான் கேட்டதுமில்லை.

கிட்டு பிறந்த ஒரு மாதத்திலேயே திரும்பிவிட்டாள். பிறகு இன்னும் பிறந்தகம் போகப் போகிறாள்.

ஊஹூம்: அவளுக்கு அங்கு திக்கில்லை.

கஸ்தூரியின் எதிர்பாராத மாற்றல் இல்லாவிடில், சாவித்திரியின் பிள்ளைப்பேறுக்கு மங்கையை நம்பியிருந் தேன். "மங்கையை நிறுத்தி வைத்துக் கொள்கிறேனே" என்றுகூட கஸ்தூரியிடம் பிரஸ்தாபித்ததற்கு, "எங்கேப்பா, அவ்வளவு தூரத்திலிருந்து நான் திரும்பி வந்து இவளைக் கூட்டிப் போவது, அல்லது நீ கொண்டுவந்து விடுவ தெல்லாம் லேசாயிருக்கிறதா? அவளும் கிராமத்துப் பெண் ஏற்றிவிட்டால் வந்து சேர்வாள் என்ற தைரியமுமில்லை. நாங்கள் எப்படி வந்தோமோ அப்படியே போய்விடு கிறோம்."

அவன் அப்படிச் சொல்கையில் எனக்கு நெஞ்சை யடைத்தது. அவன் சொன்னதும் வாஸ்தவந்தான்.

பாதையின் இரு பக்கமும் மைதானம் அகன்று விரிந்தது. வானவிளிம்பில் தோப்புகளின் பச்சை, மேகங் களுடன் இழைந்த இடத்தில், இடி, துண்ணி திணித்த வாய் போல்' எட்டக் குமுறிற்று.

வாழையிலைமேல் அல்வாத் துண்டுபோல் ஸைகிள் வழுக்கிக்கொண்டு போயிற்று.

"அப்பா?"

"என்ன?"

"நேக்கு ஐக்கிரிம் வாங்கித் தரையாப்பா?"

"அது சரி, ஐஸ் க்ரீமுக்கு இதாண்டா சரியான வேளை !"

"கச்சூவி மாமா வாங்கித் தவ்வாளே ! பூனுலே நக்கி நக்கித் திம்பேனே, தொப்பைக்குள்ளே சில்லுனு போகுமே ! நல்லாயிருக்குமே !"

"ஒஹ்ஹோ, அப்படியா அது ? கிட்டு, உனக்கு யார் மேலே ஆசை ?"

"அப்பா மேலே ஆச்சை. அம்மா மேலே ஆச்சை. கச்சூவி மாமாமேலே ஆச்சை. கச்சூவி மாமா எல்லாம் வாங்கித்தவ்வாளே ! சாக்கேட்டு, கேக்கு !—

"அப்படியா ?"

"அன்னிக்குக்கூட வாங்கித் தந்தாளே !"

"என்னிக்கு ?"

"நாளைக்கு—நீ கூட ஆபீசிலிருந்து லாத்திரி வந்தையே ! நீ வரத்துக்குள்ளே நான் கூடத் தூங்கிப் போயிட்டேனே !"

"எப்போ ?"

"தாங்காலமா கட்டில்லே அம்மா மடிலே நான் தாச்சிண்டிருந்தேனே ! 'கிட்டு, என் கையிலே என்ன பாரு'ன்னு கச்சூவி மாமா எட்டிப் பார்த்து, கையிலே ரவுண்டு பப்புட்டு வெச்சுண்டு காமிச்சாளே ! நான் ஏந்து ஓடிவந்தேன். என் கையிலே நெண்டு பப்புட்டு தந்தாப்பா ! தந்து என்னை "ஜம்மு"னு தூக்கி வெளியிலே வெச்சுக் கதவைத் தாத்திண்டுட்டாளே ! அப்புறம் நான் அம்மாகிட்டப் போணும்னு அயிதாக்கூடத் திறக்கல்லேப்பா !"

அப்பவே இலை உதிர்ந்த பிரம்மாண்டமான மரம் போல் ஒரு ராக்ஷஸ மின்னல் கிளைபிரிந்து வானத்தில்

முறிந்து விழுந்தது. என் கண்கள் இறுக மூடிக் கொண்டன. ஆனால் அதற்கு முன்னேயே அது என் இமையுள் புகுந்துவிட்டது. உள்மண்டையை மூன்று விரியாய்ப் பிளந்தது. என் கீழ் சைக்கிள் நிலைதடுமாறித் தத்திற்று. என்னிடமிருந்து புதுக் குரலில் ஒரு வீறல் கிளம்பிற்று.

"கஸ்தூரி !"

ஒரு பேரிடி வானின்று விடுபட்டு உருண்டு உடைந்து நொறுங்கிற்று. கல்மாரி என பெருந்துளிகளில் மழை சரசரவென எங்கள் மேல் இறங்கிவிட்டது.

# ப்ரளயம்

நான் என்னை வெறுக்கும் வெறுப்பில், என்னை மறந்த வெறியில்; வானை நோக்கிக் கைகளைக் காட்டிப் பழித்து இழைத்த சாபங்களே உருவாயின போலும், இதுவரை தூயதாய்த் துலங்கிய வானில், கருமேகங்கள் திரளத் துவங்கின. அவை எங்கிருந்து, எப்படி, எப்பொழுது, அப்படி வந்தன? எதிரில் ஒரு வரும் இல்லையென்று நான் என்னுடனேயே என்னைப் பற்றிப் பேசிக் கொள்ள ஆரம்பித்ததுமே எண்ணங்கள் பெருக்கெடுத்து விட்டன. அவை போன வழி என்னை இழுத்துச் சென்றதில், நான் செல்வழியும், என்னைச் சுற்றி இருந்தனவும் நேர்ந்தனவும் மறந்தன. நானே என் எண்ணங்களை அடைத்துக் கொண்டிருந்ததில், மற்றவை மறைந்தும் போயின.

அச்சமயம் என்னை என்னிலிருந்து பிரித்து என்னெதிரில் நிறுத்தி வைத்துக் கேள்விகள் கேட்டு என்மேல் என்னை நான் துப்பிக் கொண்டிருந்தேன். தன்மீது தான் வைத்திருக்கும் பாசத்திற்கு மிஞ்சியது இல்லை. அதே போல் தன்னைத் தானே வெறுக்கும் பயங்கரம் போல் எதுவும் இல்லை. தன்னை வெறுக்கையில் தான் வெறுக்காதது எதுவும் இல்லை.

அவளை அவள் ஊருக்கு அழைத்துச் சென்ற ரயிலை வெறுத்தேன். அவளை அழைத்துச் செல்ல வந்திருந்த அவள் வீட்டாரை வெறுத்தேன். பச்சைக் கொடி காட்டி மணியடித்து, வண்டியைத் துரிதப்படுத்திய ரயில் சிப்பந்திகளை வெறுத்தேன். என்னை ஏளனம்

செய்த புகை வண்டி ஊதலை வெறுத்தேன். அவள் புன்னகையின் மயக்குக்கே முழுப் பங்கென நான் நினைக்கும் அவள் தத்திப்பல், இப்போது பிரியும் சமயம் அவள் சிரித்த சிரிப்பில் தோன்றியதும் அதையும் வெறுத்தேன். பிரிவு தாங்காது என் முகத்தில் குறு குறுத்துக் குழம்பிய ரத்தச் சிவப்பை வெறுத்தேன். இப் பிரிவுக்குக் காரணமாயிருந்த என் வித்தை வெறுத்தேன். இதுபோலவே நான் உண்டான போதும் என் தகப்பன் என்னை வெறுத்திருப்பான் என்று நினைக்கையில், என் தகப்பனை வெறுத்தேன். அவனைப் பார்த்து சிரித்திருந் திருக்கும் தாயை வெறுத்தேன். பிறகு, உலகில் நான் வெறுக்காதது எதுவும் இல்லை.

இம்மாதிரி நேரும் என்று நான் நினைக்கவில்லை, இம்மாதிரித்தான் எல்லோருக்கும் நேருகிறது என்பதை யும் நினைக்கவில்லை. இம்மாதிரி நேராவிடில் நானே நேர்ந்திருக்கமாட்டேன் என்பதையும் நினைக்கவில்லை. என்னைப் பற்றி மாத்திரம்தான் நினைத்தேன். இந்த 'என் என்' என்று என்னுள்ளிருந்து என்னை ஆட்டு வித்த எந்த 'என்னை' நான் வெறுத்தேன்? மண்டை யெரிச்சலில் எண்ணங்களின் உருக்களும் உருகிச் சவுங்கிக் குழம்பின.

திடீரென ஒன்றும் இரண்டுமாய்த் தூறல்கள். உடனே மடமடவெனக் கொட்டவும் ஆரம்பித்துவிட்டது. கோடை மழை ஒவ்வொரு துளியும் ஒரு வெள்ளத்தின் அம்சம். திக்குமுக்காடி ஒதுங்க இடந் தேடுவதற்குள், கணுக்கால் ஆழத்திற்கு வெள்ளம் காலடியில் மண்ணைப் பறித்துக் கொண்டு ஓடிற்று. வேரோடு பிடுங்கிக் கொண்டு, ஜலத்தில் அடித்துக் கொண்டு வந்த ஒரு கொடி காலைச் சுற்றிப் பின்னிற்று. ஜலம் கோபக் கண்ணின் அடிச் சிவப்புடன் வண்டல் மண்ணைக் கரைத்துக் காலடியில் சுழித்து ப்ரளயமாய் ஓடிற்று. வானம் எதிர்த்துச் சீறிற்று. என் கண்கள் இடந்தேடி

அலைந்தன. எதிரில் ஏரிக்கரை; இருமருங்கிலும் காற்றில் அலைந்து பிசாசு ஆடும் பனைகள், அப்பால் வயல்களும் கட்டான் கட்டானாய் வயற்பரப்புக்களும்; அந்தண்டை ஊருக்கு மதில்போல் நிற்கும் சவுக்குத் தோப்பு; அதன் மேல் அடிப்பாரம் போட்டுக் கொண்டு கொட்டத் தயா ராகும் இன்னொரு மேகத்திரள்.

இத்தனையும் வட்டமிட்டு மீள்கையில்தான் பார்வை எதிரேயே, கிட்டவே நின்ற பாழ் மண்டபம் மேல் விழுந்தது. இடுப்பின் கீழ்க் கல்லாய்க் கனத்த கால் களை என்னோடு எதிர் வெள்ளத்தில் இழுத்துக் கொண்டு மண்டபத்தை அடைந்தேன். உடலோடு ஒட்டிப்போன சட்டையை உரித்துப் பிழிந்தேன். சாரல் சாட்டை நுனி மாதிரி கொட்டிற்று. பழுக்கக் காய்ச்சிய ஊசிபோல் குளிர் சுறீலென உடலை ஊடுருவிற்று.

“நல்ல மழை”

உருத் தெரியாது. குரல்மாத்திரம் மண்டபத்தில் தேங்கிய இருளின் உள்ளினின்று வெளிப்பட்டதும் தூக்கி வாரிப்போட்டது. கண்கள் இருளைத் துருவ முயன்றன. உதவியாய் குரலுக்குடையோனும் இருளினின்று வெளிப் பட்டான். அவனும் இடுப்புவரை வெறும் உடம்பு.

“சமயமும் இதுதான் சரி, இத்தனை காய்ச்சலுக்கப் புறம் இப்படிப் பூமி குளிர்ந்து, ஆடி விதைப்புக்கு, மாசியறுப்பு சுமாராய் இருக்கும். போன வருஷமே பயிர் பதராய்ப் போச்சு. இப்போது அரை வயிற்றுக்காவது ஆகுமா ?”

அவன் தொடுத்த பேச்சு என் செவி பட்டதே யன்றிக் கவனம், அவன் வலக் கரத்தில் பாய்ந்து அங் கேயே விறைத்தது. அவன் கை, தோள் பூட்டினின்று முழங்கைவரை இரு சுண்டு விரல் பருமனுக்குச் சூம்பிப் போயிருந்தது. அவ்விடத்துத் தோல் சுட்ட பழம்போல்

சுருங்கி அருவருப்பையும் சிறு பயத்தையுங்கூடத் தந்தது. கொஞ்சம் சுரண்டினால், அல்ல இசைகேடாய் எங்கே யாவதுபட்டுவிட்டாலும் எலும்பின் முகடு வெளிப்பட்டு விடுமோ என்னவோ ?

அவன் புரிந்து கொண்டு விட்டான். "சட்டையைப் பிழிந்து உலர்த்தியிருக்கிறேன்"

நான் வெட்கி வார்த்தைக்குத் தட்டுத் தடுமாறி னேன். அவன் புன்னகையுடன் கையமர்த்தினான். "ஒரு விஷயம்: என்னைப் போன்றவர்கள் ஒரு தினுசில் உங்களைப் போன்றவர்களைவிட உயர்ந்தவர்கள்தான். நாங்கள் போனவிடமெல்லாம், கவனம் கவர்ந்து விடுவோம். எப்போதுமே அழகைவிட அங்கஹீனத் துக்குத்தான் ஆச்ரயிப்பு."

பதில் சொல்ல முடியாமல் தவித்தேன்.

"ஒரு தினுசில் நாங்கள் துறவிகள் கூட; நாங்கள் ஒட்ட விரும்பினாலும் எவரும் எங்களோடு ஒட்டப் பயப் படுவார்கள். சிதைவு கண்ட அருவருப்பு அப்புறம் என்ன தான் இழைந்தாலும், இடையில் சுவர் விழுந்துவிடுகிறது. இந்தச் சுவர் எங்களுக்குத் தெரியவில்லை என்று நினைக் கிறீர்களா ? பழகப்பழக அருவருப்பு மறைந்துவிடுகிறது என்றே சாதிப்பீர்கள். அதையும் உண்மையென்றே வைத்துக் கொள்வோம். சரி, அருவருப்புத் தாண்டி, அல்ல, மாறி உங்களுக்குத் தோன்றுவதென்ன ? இரக்கம், அனுதாபம் ! படியேறிக் கைநீட்டும் பிச்சைக்காரனுக்கும், நாக்கைத் தொங்கப் போட்டுக் கொண்டு வாலைக் குழைக்கும் நாய்க்கும் காட்டும் மனக்கசிவு ! வேண்டா மையா, உங்கள் இரக்கம் !"

"பின் என்ன வேண்டும் உங்களுக்கு ?"

அவன் விரலைச் சொடுக்கினான், "அன்பு."

"முதலில் இரக்கம் கண்டுதான் அன்பாய் மாறும்." என்றேன்.

"நீங்கள் சொல்வது கருணை. நான் குறிப்பது அது வல்ல. அன்பு, அன்பு, அன்புகூட இல்லை. உள்ளத்தின் நேர் எழுச்சி. இரு தன்மைகள் திடீரென ஒன்றுடன் ஒன்று இழைந்தோ, மோதியோ விளையும் ரஸாயனம். அது வேண்டுகிறேன்—இப்படி வாருங்கள் உட்கார்ந்து பேசுவோம். மழையோ விட்டபாடில்லையே !"

"இந்த அன்புக்கு நாங்கள் எவ்வளவு ஏங்குகிறோம் உங்களுக்குத் தெரியுமா? உங்களால் அறியவே முடியாது. உங்களைவிட அங்கம் சிதைந்த நாங்கள் நன்கு அறிவோம்."

"இம் 'மெய்யெனும் பொய்' என்று மெய்கண்டார் உடலைப் பழிப்பது ஏனோ எனக்குத் தெரியவில்லை. இம் 'மெய்யி'னும் மெய் எது ? நான் யார் என்று என்னை நான் எண்ணிப் பார்த்தால் இவ்வுடலைத்தான் 'நான்' என்பேன். அழியும் உடல்தானே என்பீர்கள். அழியட்டுமே' அதனால் அதன் 'நான்' குறைந்துவிடுமா ? நீங்கள் சிகரெட் குடிக்கும் பழக்கமுண்டா ? இல்லையா ? நான் குடிக்கலாமா? Thank you."

புகையை ஆசையாய் இரண்டு இழுப்பு இழுத்தான். "இந்தக் கை, இது என் பிறவியூனம்."

"என்னைப் பெற்றவள், இதைப் பார்த்த பயத்தில் சுவர்ப் பக்கம் திரும்பினவள் திரும்பினவளைத் திருப்பியதும் உயிர் போயிருந்ததாம்.

"கடவுளை ஒன்று கேட்க நியாயம் உண்டு. ஏன் கஷ்டத்தைக் கொடுத்தாய் என்று நான் கேட்கவில்லை. ஆனால் கூடவே ஏன் ரோசத்தைக் கொடுத்தான் ? நான் ஏதோ ஒன்றும் இல்லாததைப் பிரமாதம் பண்ணுகிறேன்

என்று நீங்கள் நினைக்கலாம். ஆனால் உங்கள் கை நல்ல கை நினைவில் வையுங்கள். ஆகையால் எப்பவும் நீ நானாக மாட்டாய். நானும் நீயாக மாட்டேன். நம்மின் 'நான் நான்' தனித்தனி."

அவன் சட்டென ஒருமையில் நழுவியது மரியாதைக் குறைவாய், பண்புக் குறைவாய் இல்லை. பாந்தமாகவே பட்டது.

"என்னுள் எனக்கு ஒரே கேள்விதான். என்னைச் சமமாய்ப் பாவிப்பவர் யார்? நான் படிக்கும் நாளிலும் என்னுடன் ஒரு பையனும் சண்டைக்கோ, சச்சரவுக்கோ வரமாட்டான். வாத்தியாரே தடுத்து விடுவார். "பாவம், அவனோடு என்னடா சண்டை?" "பாவம்! பாவம்! பாவம்!" பாவத்தின் ஸ்மரிப்பு எப்பவும் என்னைச் சூழ்ந்தது. வாழ்நாள் முழுவதும் உலகம் என்னிடம் காட்டும் நடைமுறையே இதுதான். என் கையைக் காட்டிலும் இதுதான் என் குறை. இதையா வேண்டினேன்?

ஆயினும் நான் வேண்டுவதை அடைவது எப்படி? மனத்தை திருப்புதல் எப்படி? எதனின்று மனத்தைத் திருப்ப முயற்சியுடன் அதனின்று திருப்புகிறோமோ, அத்தனைக்கத்தனை அதிலேயேதான் மனம் திரும்பத் திரும்பத் திரும்புகிறது.

சில சமயங்களில் வாழ்க்கையின் இன்பப் பகுதிகளைப் பலவந்தமாகவே வாழ்க்கையினின்று பிடுங்கி அனுபவித்தல் நலம் என்று தோன்றுகிறது. முதலில் அக்ரமமாகத் தோன்றினாலும் இறுதியில், பயன்பட்டவன் பயன்படுத்துவோன், இருவருக்குமே அதுதான் நன்மையாய் முடியும் கொள்கை. ஆனால் அந்த ஆரம்ப முரட்டுத்தனத்திற்கு அஞ்சுவதில்தான் நாம் அவஸ்தைப்படுகிறோம். அந்த முரட்டுத்தனம்கூட அவ்வளவு அக்ரமம் அன்று. அதை விலக்க நமக்குப் பக்கபலமாய் நாம் கொண்டாடும்

தன்மானம், சுய கௌரவம், தன்மதிப்பு, பிறர் மனம் கருதுதல் முதலிய லட்சியங்களெல்லாம் இறுதி எடையில் பலவீனங்களாய்ப் போய்விடுகின்றன.

"உதாரணமாய்ப் பாருங்களேன், முன்னோர்கள் தயவில் எனக்குப் பணம் காசுக்குக் குறைவில்லை. ஒரு மனைவியை நான் விலைக்கு வாங்கிவிடலாம். இருந்தும் என் கை அந்தத் துணிச்சலுக்குக் குறுக்கே நின்று தடுத்தது. வந்தவள் என் எதிரிலோ, கண் மறைவிலோ என் கையைப் பற்றி வாய்விட்டுப் பேசாவிட்டாலும் மனத்தில்கூடவா அஞ்சாமல் இருப்பாள்? பச்சையாய் வாய் விட்டுச் சொல்கிறேன். ஊனமற்ற ஆர்வத்துடன் என் நல்ல கையால் அவளை நான் இறுகப் புல்லுகையில் என் தோள்மேல் பதிந்த அவள் முகம் என் கண்ணுக்குத் தெரியாமல் என் முதுகுவழி என் கைச் சூம்பலைக் காணாது இருக்குமோ? அப்போது அவள் அருவருப்பின் விதிர்விதிர்ப்பு அவளை ஊடுருவுகையில் அது எவ்வளவு ஸன்னமாய் இருப்பினும் அதை நான் உணராமல் இருப்பேனோ? அதன் கொடும் நிழலைக் குறுக்கே வைத்துக் கொண்டு நாங்கள் வாழ்க்கை நடத்துவது எப்படி என்று நினைக்கையிலேயே என் உள்ளம் பதறிற்று. ஆயினும் உலகில் இதைவிட அநியாயங்கள் நடக்கவில்லையா? சில சமயங்களில் நியாயமாகவே சேரவேண்டிய உரிமைக்குக் கூட சுய கௌரவம் இடம் கொடுக்க மாட்டேனென்கிறது."

இன்னொரு சிகரெட்டை அவன் பற்ற வைத்தான். "சுர்' ரென்று தீக்குச்சி பற்றிச் சுடர் அவன் முகத்தை எற்றி உடனே அவிந்தது. விக்ரஹத்தின் உக்ரஹ விழிகள். பிறகு இருளிலிருந்து அவன் குரல் மாத்திரம் வந்துகொண்டிருந்தது. அவன் இருந்த இடத்தைச் சிகரெட்டின் தணல் நுனிதான் குறித்தது. இருளின் கண்.

வெளியே அடை மழை. இப்போதைக்கு நிற்குமெனத் தோன்றவில்லை.

"சொந்தத்திலேயே ஒரு பெண் இருந்தாள். ஊரும் பேரும் இப்போ எதற்கு? நாமே நமக்குப் புரியவில்லை. பேருக்கும் ஊருக்கும் என்ன முக்கியம் வந்தது? பிரமாத அழகு என்று சொல்வதற்கில்லை. ஆனால் அவள் அவயங்கள் முழுமையாயிருந்தன. எனக்கு அதைவிட உயர்ந்த லக்ஷணம் கிடையாது. ஏழைக் குடும்பந்தான். ஒருவேளை நானே மணம் புரிந்திருக்கலாம். ஆயினும் என் கை...?"

"நான் என் கைக்கு அஞ்சி, அவள் வீட்டாரைக் கேட்கவில்லை. என் பணத்திற்கு அஞ்சி அவர்கள் எனக்கு அவளைப் பேச முன்வரவில்லை. அல்ல அங்கேயும் என் கைதான் பேசிற்றோ என்னவோ? பிள்ளைப் பருவத்தில் சேர்ந்து விளையாடுகையில் அவள் என் கையை எத்தனையோ கேலி பண்ணியிருக்கிறாள்.

"எப்படியிருந்தால் என்ன? அவளுக்குக் கல்யாணமாகாமல் போகிறதா? அந்தப் பையனைக்கூட எனக்குச் சுமாராய்த் தெரியும். நல்ல பையன். ஆனால் அவர்கள் மாதிரியே அவனும் பரம ஏழை. ஏழைதான் ஏழையாகிக் கொண்டு வருகிறான். அவனுக்கும் உற்றார் உறவினர் இல்லை. மணமானதும் அவளை கூடவே தான் பிழைக்கும் இடத்திற்கு அழைத்துப் போய்விட்டான். எப்போதாவது ஒன்றிரண்டு மாதங்களுக்கு ஒருமுறை அவனிடமிருந்து ஒரு வரி வரும்.

"ஒரொரு சமயம் மனதில் கவியும் இருளை எப்படி அளவிடுவது? மனோவிகாரத்தின் மூட்டத்தில் கண்ணால் காணுவதெல்லாம் கூடச் சுய ஒளி மங்கியழுகின்றன. என் தனிமையில் எத்தனை தடவை உலகம் அம்மாதிரி சோபை இழந்திருக்கிறது தெரியுமா?"

"காட்டிலும் சிறையிலும் உணரும் தனிமை சகிக்கக் கூடியது; தன் இஷ்டமாவோ, பிறராலேயோ பலவந்தமாய் ஏற்படுத்திக் கொள்ளும் அந்தத் தனிமைகளிலிருந்து

விடுவித்துக் கொள்ளவோ விடுதலை பெறவோ வேளை யுண்டு. அல்ல வேளைவரும் எனும் நம்பிக்கையேனும் உண்டு. ஆயினும் எத்தனை பேர் என்னைச் சுற்றி யிருந்தும் நான் என்னுள் உணர்ந்த தன்மை சகிக்க முடியவில்லை. இது உள்ளத்தின் தனிமையா? உடலின் தனிமையா?

"ஓரிரவு சரியான தூக்கம் இல்லை. நடுநிசி தாண்டி சற்றுக் கண்ணயர்ந்தேன். ஆயினும் எனக்குத் தூங்கின மாதிரியே உணர்வு இல்லை. விழித்த கண்களுடனேயே நேரே ஒரு கனவுள் புகுந்துவிட்டேன்."

"நீலக் கண்ணாடியிட்டாற் போல் கண் குளிர என்னைச் சுற்றி நீல இரவு. பார்வையை ஏமாற்றிய சரடுகளிலிருந்து நக்ஷத்ரங்கள் விளக்குகள் போல் தொங்கின. நான் நடு ஜலத்தில் ஒரு ஓடத்தில் துடுப்புக் களை நானே தள்ளிக்கொண்டு போய்க் கொண்டிருந் தேன். எங்கென்று அறியேன். இரு பக்கங்களிலும் அலை மடிந்த நீலக்கரை மேட்டிலிருந்து தென்னை மட்டைகள் ஜலத்தின்மேல் தாழ்ந்து தோளிலும் ஜலத்திலும் இடித்தன. என்ன ஆச்சரியம்! என் தோளில் ஊனம் இல்லை. துடுப்புக்களை முன்னும் பின்னுமாய் குனிந்தும் நிமிர்ந்தும், தள்ளிக் கொண்டு நான் தண்ணீரைக் கிழித்துக் கொண்டே முன்னேறுகையில் நரம்பு முடிச் சுக்கள் புஜங்களில் பந்து பந்தாய் எழும்பி வடிவது கண்டேன்.

"இருந்தாற்போலிருந்து ஓடம் கரை தட்டிற்று. அவள்—என் பால்ய சிநேகிதி—கரைமீது நின்றிருந்தாள். ஏன் தன்னந்தனியாய் அந்நேரத்தில் அங்கே நின்றாள் என்று நான் கேட்கவில்லை; கேட்கத் தோன்றவும் இல்லை. நாங்கள் சந்திக்க முன்னாலேயே ஏற்பாடு பண்ணிக் கொண்டோம் போல் அவள் அங்கே காத் திருந்தாள். நான் கையை நீட்டினேன்.

"என் கையைப் பிடித்துக் கொண்டு அவள் ஓடத்தில் தாவி ஏறினாள். ஓடம் தானே நகர்ந்தது. அவள் நீலப் புடவை உடுத்தியிருந்தாள். அடித்தட்டில் மல்லாந்து படுத்தபடி என்மேல் வைத்த விழி மாறாது என்னையே பார்த்துக் கொண்டிருந்தாள், ஓடத்தின் இரு பக்கத்திலும் ஜலம் கிளுகிளுத்தது. நான் அவளை அணைத்தேன்.

"நான் அப்பொழுது நானாய் இல்லை; ஆனால் என் நினைவு என்னைவிட்டு ஓடிவிடவில்லை. ஆனால் நான் அப்போது எப்படி இருந்தேன் என்று உன்னிடம் சொல்ல முயல்கையில் பாஷை தடைப்படுகிறது; தளர்வு அடைகிறது. இருந்தாலும்—

"நான் ஒரு நீலச் சுடரானேன், கர்ப்பூரம் அசைவற்று எரிவதுபோல. அதாவது மனம் ஒன்றில்—அது எதுவாயினும் சரி—ஒன்றில் ஒன்றுபட்டு, அவ்வொன்றன்றி மற்றெல்லாம் மறந்து, அல்லது மற்றவையினின்று விடுபெற்று அவ்வொன்றின் நினைவும் அடங்கி, நினைவு என்று ஒன்று இருந்தால் ஒன்று என்று நினைவு குறித்த அது, அந்நினைவும் இன்றியதால், அதுவும் அழிந்துவிடின், பிறகு அது என்று எது?

என்னுள் உருவற்று இருந்த அத்தனையும் உருவானதோடல்லாது அவ்வுருக்களின் ஒன்றாயும் ஒருமையாவும் நான் அதுவாகி, அதுவும் தாண்டிய எதுவும் ஆனதனால் என்னுள் குறையாய் இருந்த அத்தனையின் நிவர்த்தியுமானேன்; என்னின் நிவர்த்தியுமானேன்.

"திடீரென ஓடம் எங்கோ ஜலத்தடியில் பாறைமீது மோதியதுபோல் குலுங்கி, அடித்தட்டு திறந்து கொண்டது. அவள் அப்படியே மூழ்கிப் போனாள். என் உடல் குலுங்கியது. நான் விழித்துக் கொண்டேன். ஜன்னலுக்கு வெளியே கருவானில் வெண் மேகங்கள்

விரைந்து சென்று கொண்டிருந்தன. என் மனத்தி லிருந்து பிதுங்கிய தோற்றம் மனதிலேயே மறைந்து போயிற்று. ஆயினும் அழிந்து போகவில்லை. அதன் ஒவ்வொரு அங்கமும், என் அங்கத்தின் கதை அல்லவா! ஆழமாய்ப் பதிந்து போயிற்று. இல்லாவிடில் இவ்வளவு பளிச்சாய் இன்னமும் சொல்ல வருமா?

"இரண்டு மாதங்கள் கழிந்தன. ஒரு நாள் மாலை. வெளியிலிருந்து அறைக்குத் திரும்பிக் கதவைத் திறந் ததும் உள்ளே காலடியில் ஒரு கடிதம் இடறிற்று. தபால்காரன் கதவிடுக்கின் வழியே உள்ளே தள்ளியிருந் தான். பிரித்துப் படித்தேன். என் சிநேகிதன் கால வித்தியாசத்தையும், கிரகக் கோளாறுகளையும், அதிருஷ் டத்தையும், வயிற்றுப் பிழைப்பின் கஷ்டங்களையும் பற்றி பக்கம் பக்கமாய் எழுதிவிட்டு, கடைசியில் ஒரு வரி, அவள் இரண்டு மாதங்களாய் ஸ்நானம் பண்ண வில்லை என்று எழுதி இருந்தான்.

எனக்குக் கண்ட அதிர்ச்சியில் நான் அப்படியே உட்கார்ந்து விட்டேன். நான் எக்காரணத்தினால் அப்படி நினைத்தேன் என்று கேளாதேயுங்கள், அல்லது நான் நினைத்தது நடக்கக் கூடியதா என்றும் கேளாதே யுங்கள், அல்லது நான் நினைத்தது பாபமா, புண்ணி யமா என்று கேளாதேயுங்கள். பாபம், புண்ணியம் இரண்டின் வித்தியாசம் திண்ணமாய் எனக்கு இன்னமும் தெரியாது. அவள் வயிற்றில் கண்டிருக்கும் பொறி என்னுடையது என்ற திண்ணம், என் மனத்தில் மின்னலைப் போன்று பளிச்சென்று பாய்ந்த வேகத் திலேயே விழுந்துவிட்டது. அந்த நிமிஷத்திலிருந்து என்னை உறுத்திக் கொண்டிருந்த தனிமையின் ஏக்கமும் தணிய ஆரம்பித்தது. நானும் எல்லோரையும் போலத் தான். இல்லை, ஒரு படி உயர்ந்தவன்.

"அவனுக்குப் பணம் அனுப்பினேன். திருப்பிக் கொடுப்பதைப் பற்றி கவலைப்படவேண்டாம், ஒருவருக்

கொருவர் உதவத்தான் பணம் இருக்கிறது என்றும், இன்னும் நான் நம்பியதும், நம்பாததுமான பொது வேதாந்தங்களும் எழுதிவிட்டு, இனித் தாயாகப் போகிறவளின் உடம்பை ஜாக்கிரதையாய்ப் பார்த்துக் கொள்ளும்படியும் எழுதினேன்.

"அப்புறம் நான் நாட்களை எண்ண ஆரம்பித்தேன். என்றேனும் என் குழந்தையை நான் என் மார்மேல் சாத்திக்கொண்டு அதன் கண்ணத்தை நிமிண்டி விளையாடும் நாள் வரும். அது தன் கனவில் அது மலர் காணுகையில் அதன் வாய் மலர்வதைக் கண்டு களிக்கவும் முடியும். ஏன் ஒரு வேலை அதைப் பெற்றவர்களிடத்துக்கே நான் போனாலும் போய்விடுவேன். இப்பொழுது நான் இருக்கும் இடத்திலேயே இருந்து கொண்டேயிருக்க வேண்டுமென்று எனக்கு என்ன கட்டாயம்? பெண்ணாய்த்தான் பிறக்கும். அதைப்பற்றி நான் ஏன் அவ்வளவு நிச்சயமாயிருந்தேன்? சில சமயங்கள் பாருங்கள், நல்ல அறிவோடு இருக்கையிலேயே கட்டும் இம் மனக் கோட்டைக்கு ஜுர ஜன்னியின் வாய்ப்பிதற்றல் எவ்வளவோ தேவலை. ஏதேனும் ஒரு சாக்கை வைத்துக் கொண்டு மாதம் தவறாது அவனுக்குப் பணம் அனுப்பி வந்தேன்.

பிள்ளைப்பேறுக்கு அவள் பிறந்தகம் வந்திருந்தாள். கூட அவள் கணவன் வர முடியவில்லை: அந்தப் பக்கம் வந்த யாரோடேயோ துணைகூட்டி அனுப்பியிருந்தான்: நான் அவளைப் பார்க்கப் போகவில்லை. ஆனால் ஒரு முறை அகஸ்மாத்தாய்க் குளக்கரையில் சந்திக்க நேர்ந்தது. ஸ்நானம் பண்ணிவிட்டு ஈரப்புடவையுடன் படித்துறை ஏறிக் கொண்டிருந்தாள். நான் இறங்கிக் கொண்டிருந்தேன்: மேனி மினுமினுப்பாய்த்தான் இருந்தாள்.

அத்தனை நாள் கழித்து முதன் முதலாய்க் கண்ட உணர்ச்சிதானோ அல்ல அவளுடைய வயிற்று நிலையில்

நான் அவளைக் கண்டதால் பிடுங்கிய வெட்கமோ? அல்ல, என்னைக் கண்டதும் அவள் விழிகளில் கண்ணீர் சரசரவென நிறைந்து தளும்பிற்று. இருவருக்கும் ஒரே சமயத்தில் வாய் மூடிமூடித் திறந்ததேயொழிய, வாயடைத்துவிட்டது. அவள் குனிந்தபடி விருக்கென நடந்து சென்றுவிட்டாள். நான், நின்றவிடத்திலேயே நின்று கொண்டிருந்தேன். என் ஊனத்தோள் துடித்தது. அது என்ன பேச முயன்றது?

அப்புறம் அவளை நான் உயிருடன் பார்க்கவில்லை. வேளை இன்றைக்கோ நாளைக்கோ என்றிருக்கையில் கிணற்றடியில் வழுக்கிவிழுந்துவிட்டாள். படாத இடத்தில் பட்டு அப்புறம் நினைவுகூட இல்லை. ஏக அமர்க்களம். குழந்தை வயிற்றிலேயே இறந்துவிட்டது. அதென்னவோ சம்பிரதாயப்படி வயிற்றைக் கிழித்து எடுத்தார்கள். பிணத்தை எடுத்துச் செல்லுமுன் அதன் உயிரற்ற உடலை ஒரு முறை தொட்டுப் பார்த்தேன். குழந்தையாகவா இருந்தது? கடோத்கஜன் மாதிரி இருந்தது. கருப்பையைக் கூட மீறிய உடல் பருமன் பிள்ளை.

பிணத்தை எடுத்த பிறகுதான் அவள் கணவன் வந்து சேர்ந்தான். அன்று மாலை நாங்கள் இருவரும் குளத்தின் படிக்கட்டில் நெருங்கி உட்கார்ந்து கொண்டு அவளைப் பற்றியும் அத்தனை ஏழ்மையில் அவளுடன் அவன் நடத்திய இன்ப வாழ்க்கையைப் பற்றியும் அவன் பேசுகையில் எங்களை இணைப்பதாக நான்உணர்ந்த உறவே அலாதி. என் குழந்தையைப் பெற்றவள் அவள். என் குழந்தைக்குத் தந்தையாய் இருப்பவன் அவன்..."

அவன் பெருமூச்செறிந்தான்.

"இப்பொழுது தோன்றுகிறது: என் அளவு கடந்த ஆசைப்பசியே அவளை விழுங்கிவிட்டது என்று நினைக்கிறேன். இதிலிருந்து எதை நான் உங்களுக்கு

நிரூபித்தேன் அல்லது நிரூபிக்க முயன்றேன் என்று எனக்குப் புரியவில்லை. உள்ளத்தின் மூலம் உடலை வெற்றி கொண்டேனா ? அல்லது உடலின் மூலமே உள்ளத்தின் தாபத்தைத் தணித்துக் கொண்டேனா ? மொத்தத்தில் இந்த வெற்றி தோல்வி என்னும் இரண்டு வார்த்தைகளுமே எனக்குப் பிடிக்கவில்லை. இரண்டும் இரண்டு முற்றுப் புள்ளிகள். அம்மாதிரி முற்றுப் புள்ளிகள்தான் வாழ்க்கையா ? என்னவோ பேச்சு எங்கேயோ ஆரம்பித்து எப்படியோ முடிந்தது. மழையும் நின்றுவிட்டது. நான் ரயிலடிக்குப் போகிறேன். நீங்கள் ரயிலடியிலிருந்துதான் வருகிறீர்களாக்கும் சரி நமஸ்காரம்—"

எனக்கு என்ன தோன்றிற்றோ தெரியவில்லை. அன்றிரவு அவளுக்கு எழுதினேன்.

"இன்று வரை நான் என்னுடைய 'நானை'ப் பற்றியே எண்ணிக் கொண்டிருந்துவிட்டேன். உனக்கும் ஒரு 'நான்' உண்டு என்பதை எண்ணவில்லை. நம்மிருவருக்கும் சேர்ந்த ஒரு 'நாம்' உண்டு என்பதையும் எண்ணவில்லை. அந் 'நாமி'ற்கே ஒரு 'நான்' உண்டு, அந் 'நானி' லிருந்து இப்பொழுது பிறக்கப் போகும் 'நானைப்' பற்றியும் எண்ணவில்லை. நாமே தான் நான்; நானேதான் நாம்—"

# தீக்குளி

வர்ணத்தின் வெடிப்பைக் காட்டிலும் அதன் அவசரம் தான் அவனை எழுப்பிற்று. யார் விட்டு எங்கிருந்து கிளம்பியதோ? ஆனால் அவனை மாத்திரம் அறைகூவி அழைத்துத் தட்டியெழுப்பிற்று.

"தோ பார்! கிளம்பப் போகிறேன்—கிளம்பிக்கொண்டிருக்கிறேன்—கிளம்பிவிட்டேன்!"

கண் விழித்துக் கொண்டிருக்கையிலேயே அதன் பொறிவால் ஆகாயத்தில் வரைந்த வளை கோட்டைத் தான் கண்டான். ஜன்னலுக்கு கௌரி கட்டியிருந்த வெள்ளைத் திரையினூடே அத் தீக்கோடு மங்கலாய்த் தான் தெரிந்தாலும் புலன்களுக்கும் தாண்டிய உள்ளறிவில் கத்திபோல் சரேலென உள் சொருகிற்று. அதுவே சுரீலென வலித்தது. கட்டிலுக்கு வெளியே தொங்கிய கை வேதனையில் முஷ்டித்து விரிந்தது.

வெடிப்பிலிருந்து பச்சை, நீலம், ஊதா, சிவப்புப் பொறிகள் சரம் சரமாய்க் குடை கவிழ்ந்து இறங்கின.

ஒரு கணம், ஜன்னல் சட்டமிட்ட வானவெளி ஜோதி மயமாகி, மறுகணம் பொறிகள் கருகின. மனக்குகையில் கலைந்த இருள் படலங்கள் வானளவு எழும்பி, வான் திரும்பவும் இருண்ட இருள் அவனையும் கவ்வித் தன்னுள் இழுத்தது.

மாட்டேன்! மாட்டேன்! உள்ளுணர்வு அலறிற்று ஆயினும் மனக் குகையில் கலைந்த இருள் படலங்களின் பலாத்கார ஆலிங்கனத்தில் அவன் புதைய ஆரம்பித்து

விட்டான். பழைய நினைவுகளுள் அழுந்திக் கொண்டிருக்கையிலேயே வெளியரவங்களின் ஊமைச் சப்தங்கள் மேல் மோதின.

தெருவில் பையன்களின் ஆரவாரம். கீழே குடித்தனக்காரர் வீட்டில் ரேடியோவின் தும்மலும் இருமலும் வாந்தியும் கனைப்பும். குழந்தைகள் ஏற்றும் மத்தாப்புகளின் திடீர் திடீர்ச் சீறல்.

குடித்தனக்கார மாமி அபசுரமான கட்டைக் குரலில் பாடுகிறாள். "கௌரி கல்யாணம் — வைபோ — ஓ — ஓகமே !—" பாட்டோடு பாட்டாய், "நீங்களும் தேச்சுண்டுடுங்களேன் ! விடிஞ்சா அமாவாசை !" என்று புருஷனைக் கூப்பிட்டுப் பார்க்கிறாள்.

அரவங்கள் அவன்மேல் கூடுகட்டிக் கொண்டிருக்கையிலேயே கட்டிலில் படுத்தபடி அவன் வருடங்களைக் கடந்து கொண்டிருந்தான். பின்னோக்கி ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து.

மாமனார் வீட்டுக்குப் போய் இந்தத் தீபாவளியோடு ஐந்து வருடங்களாகிவிட்டன.

கௌரி ஐந்து உடன் பிறந்தவர்களுக்கிடையில் ஒரே பெண்: செல்வக்குமாரி. முதல் பிறப்பு. ஆகையால் தலை தீபாவளி மட்டுமல்லாமல் மற்றைய தீபாவளிகளுக்கும் அவள் வீட்டிலிருந்து அவளுக்கும் அவனுக்கும் வலுக்கட்டாயமான அழைப்பு வரும். ஒவ்வொரு தீபாவளியும் தலை தீபாவளி மாதிரித்தான்.

ஆனால் கலியாணமாகி கடைசியாய்ச் சென்ற அந்த மூன்றாவது தீபாவளிக்குப் பிறகு அவனும் மாமனார் வீட்டுக்குப் போகவில்லை. அவளும் பிறந்த வீடு எட்டிப் பார்க்கவில்லை. இப்பொழுது அவன் வருஷங்களைக் கடந்துவிட்டு அந்த மூன்றாவது தீபாவளிக்கு வந்து

விட்டான். வேலைத் தொந்தரவால் முதல்நாள் மாலை தான் வர முடிந்தது.

மச்சான்மார்களுக்கு அத்திம்பேர் மேல் உயிர்; கடைக் குட்டி மாது வாசலுக்கும் உள்ளுக்குமாய் அலைந்தான். அத்திம்பேரின் வரவையறிவிப்பதில் எல்லோருக்கும் 'பஸ்டா'யிருக்கணும், அதில் ஒரு பெருமை.

ஆனால் வாசலில் வண்டி வந்து நின்றபோது அவன் சமையல்கட்டில் இருக்கும் சமயமாய்த்தான் நேர்ந்தது. அம்மா தலை திரும்பிய நேரம் பார்த்து மைசூர்ப்பாகுக் கட்டியை லவட்டிக்கொண்டு விழுந்தடித்து வருவதற்குள் கௌரியும் அவள் புருஷனும் வண்டியை விட்டு இறங்கிக் கொண்டிருந்தார்கள்.

"அம்மாவ்! அத்திம்பேர் வந்துட்டார்! அக்கா வந்துட்டா!"

முன்றானையில் கையைத் துடைத்துக் கொண்டு அவன் அம்மா வந்தாள்.

"வாங்கோ! வாம்மா, கௌரி!"

வாய் வரவேற்கையிலேயே கண் மகளை வெள்ளோட்டம் விட்டது. வெளித் தோற்றத்திலிருந்தே உள் அந்தரங்கத்தை அறியப் பார்க்கும் ஸ்திரி சாமர்த்யம் 'சௌக்கியமா' என்று கேட்டால் நான் சௌக்கியம் என்றுதான் கிடைக்கும் பதிலடியில் பதுங்கும் அசௌக்யம், அவலம், நிஜம் எது என்று தனக்கே கண்டுகொள்ளப் பார்க்கும் மிருக சூசகம்.

"என்னம்மா சௌக்கியமா?"

கௌரியின் சிரிப்பு சந்தோஷத்துடன்தான் ஒலித்தது. ஆனால் நெஞ்சில் இடறும் ஒற்றைப் பருக்கை போல் கௌரியின் கலகலப்பில் ஏதோ ஒரு பொய்மை ஒளிந்தது

போல் அவள் தாய்க்குப் பட்டது. இம்மாதிரி ஒருவரை யொருவர் தாயும் பெண்ணும் ஊடாராய்ந்து கொண்டிருக்கையிலேயே மாது, மைசூர்ப்பாகின் நெய்யும் அவன் எச்சிலும் தோய்ந்த கையுடன் அத்திம்பேர் தோளைக் கட்டித் தொங்கிக் கொண்டே அவருடன் மாடிக்குப் போய் விட்டான். படிக்கட்டுக்கள் ஏறி முடிவதற்குள் சமாச்சாரங் களை எல்லாம் கொட்டியாகிவிட்டது.

"அப்பாவும் அண்ணன்மார்களும் மாச்சுக்குப் போயி ருக்கா: பள்ளிக்கூடத்திலே நாங்க எல்லாம் வாத்தியா ரோடே செஞ்சிக்கு எக்ஸ்கர்ஷன் போனோம். நானும் எதிர்த்தாத்து சுப்புணியும் 'எனிமி'. எங்க பள்ளிக்கூடத் திலே 'ஓல்ட் பாயிஸ்' டிராமா போடப்போறா. அதில் நான் 'நாரதர்'. அத்திம்பேர்! அத்திம்பேர்! நீங்களும் ஒரு டிக்கெட் வாங்கறேளா? வாங்கணும்! அதெல்லாம் முடியாது ரைட்!"

கேள்வி, பதில் எல்லாம் அவனே போட்டுக்கொண்டு விஷயத்தை முடித்துக்கொள்வது மாதுவின் தனிப்பாணி! அவன் பாணியே அவன் கவர்ச்சி.

மாதுவின் லொடலொடாவுக்குப் பதிலே பேசாமல், தன் கழுத்தைக் கட்டிய மாதுவின் ஆசைக் கனத்தைத் தாங்கிக் கொண்டு புன்னகை புரிந்தவண்ணம், அவள் கணவன் படிகளை ஒவ்வொன்றாய் ஏறுவதை கௌரி தன் தாயாருடன் பேசிக் கொண்டிருக்கையிலேயே ஓரக்கண் ணால் கவனித்தாள். அவளையுமறியாமல், அவளுக்குத் தன் தம்பிமேல், அவனுடைய பின்னணியில் மற்றைய உடன்பிறந்தார்மேல், ஒரு அசூயை எழுந்தது. சில நாட் களாகவே அவள் தன் நினைவுக்கு விளங்காது, உள் பட்டுக்கொண்டிருக்கும் சொல்ல இயலாத வேதனையில் ஒரு இம்மி கூடிற்று.

சற்று நேரத்திற்குப் பிறகு காப்பியை ஏந்திக்கொண்டு கௌரி மாடிக்குச் சென்றபொழுது அவள் கணவன் தனி

யாய்த்தான் அறையிலிருந்தான். அறைக்கு வெளியே வாசற்புறம் பால்கனியிலிருந்து, மாடியே அதிரும் குரலில் மாது, "கேட்கிறதா? கேட்கிறதா?" என்று கேட்டுக் கொண்டிருந்தான். பொறுமையுடன் நெருப்புப் பெட்டி டெலிபோனைக் காதில் வைத்துக்கொண்டு அத்திம்பேர் புன்னகை புரிந்தவண்ணம், 'ஊம்', கொட்டிக் கொண்டிருந்தார்.

காப்பி டம்ளரும் கையுமாய், அவனைச் சிந்தித்தபடி வாசற்படியில் நின்றாள். அவளுக்கு அவன்மேல் ஒரே எரிச்சல் எழுந்தது. ஒருமையில் கூட எண்ணங்கள் ஓடின.

ஆளுக்குத் தக்கமாதிரி பச்சோந்தியாய் இவனால் எப்படி அவ்வளவு உண்மை போன்ற வர்ணம் மாற முடியறது? குழந்தைக்குச் சரி குழந்தையாய் நெருப்புப் பெட்டி போனை எப்படிக் காதில் வைத்துக் கொள்ள முடியறது? ஆபீஸில் இவனுக்கே ஒரு தனி போன் இருக்கிறது எனக்குத் தெரியாதா? இந்த போனே அந்த போன்மாதிரி, பெரிய காரியத்தில் தன்னை மறந்த தினுசில் எப்படி மாதுவோட விளையாட முடியறது? மாது ஒரு சமயம் செய்யும் நிர்த்தூளி எல்லோருடைய பொறுமைக்கும் பெரிய சோதனை. ஆனால் இந்த மனுஷனின் பொறுமை அல்ல பொறுமைகளுக்கு எல்லையே கிடையாதோ? இதோ, முகம் இப்போ என்பக்கம் திரும்புகிறது. மனுஷன் வர்ணம் மாறுவதைப் பார், பாரேன் இந்த விந்தையை! கன்னத்தின் கோணத்தில் ஒரு சிறு ஒடிப்பு. உதட்டோரத்தில் ஒரு இழுப்பு. எனக்கேற்ற சிரிப்பில் முகம் வார்ப்பு மாறி அந்தச் சிரிப்புக்கேற்ற மலர்ச்சியில் முகம் திரியறது.

அவளுக்கு அச்சமயம் ஏன் அவ்வளவு கோபம் வந்ததோ! கடுகடுத்த முகத்துடன் விடுவிடெனப் போய் அவர் குனிந்து காதண்டை பிடித்துக் கொண்டிருந்த நெருப்புப் பெட்டியைப் பிடுங்கி வீசி எறிந்தாள்.

அவன் கோபிக்கவில்லை. ஒருக்காலும் அவன் அவளைக் கடிந்ததில்லை. அவள் கோபத்தின் வேடிக்கையைத் தனக்கே அனுபவிக்கும் மோனச் சிரிப்பில் அவன் கண்கள் அவளைச் சிந்தித்தன; அம்மாதிரி நிலையில் அவனைப் புரிந்து கொள்ள முடியாமல் அவள் திகைத்தாள். அச்சமயங்களில் யாவிலும் பரவிநிற்கும் பரம்பொருளின் தன்மையை அவன் தாங்கியிருந்தது போல் அவளுக்குத் தோன்றும். இப்படி ஆயிர மூர்த்திகள் அவனில் இருப்பின் அவற்றுள் அவளுடைய மூர்த்தி எது? அதை அவள் அடைந்து தனக்கென்றே இருத்திக் கொள்வது எப்படி? போகப்போக இடத்தைக் கொடுத்துக்கொண்டே எட்ட எட்டப் போவது தெரியாவிடினும், அவைகளின் ஊமை உறுத்தல் தாங்கக்கூடியதாயில்லை.

தன் சீற்றத்தின் காரணம் தனக்கே தெரியாமல் அதன் வேதனையை மாத்திரம் பட்டுக்கொண்டு, கையை நெறித்தபடி அவள் நிற்கையில், கௌரியின் அழகு ப்ரமிக்கத்தக்கதாய்த் தான் இருந்தது. அதை அறிந்து தானோ என்னவோ அவளைச் சீண்டுதற்கென்றே, அச் சீண்டலில் அவள் அழகைத் தூண்டுவதற்கென்றே, அவன் உதட்டில் கட்டிய அரும்பு கலையாமல், அவன் கண்கள் அவள்மேல் சிந்தனையில் ஆழ்ந்தன.

★ ★ ★

அந்தத் தீபாவளியைக் கௌரி மறக்கவே முடியாது. ஸ்நானம் பண்ணிவிட்டு, பளீரடிக்கும் வெண்ணெற்றியில் சந்தனப் பொட்டு அதனுள் நெற்றிக் கண்ணெனக் குங்குமம் துலங்க, கர்ணன் குண்டலங்களுடன் பிறந்தாற் போல் உடலோடிழைந்த புதுமஞ்சள் பட்டு ஜிப்பா, சரிகை வேட்டியுமாய், மாடியறையினின்று அவன் வெளிப்படுகையில் அவள் கீழே மாடிப்படி அடியில் நின்று கொண்டிருந்தவள், கைக்காரியத்தை மறந்து அவனில்

தன்னையிழந்து நின்றாள். அவன் தன்னுள் பதுக்கிய எல்லையற்ற சக்திகளுள் இப்படித் தன்னைத்தானே புதுப்பித்துக் கொள்வதும் ஒன்றா ? வேளைக்கு வேளை சட்டையுரிப்பு. கலியாணமாகி மூன்று வருடங்களாகியும் எப்படி இன்னும் இந்தப் புது மெருகு இவர்மேல் இப்படி கமழ்கிறது ? கலியாணத்திற்குப்பின் அவளுக்கு உடல் குழைந்துவிட்டதாக அவள் பிறந்த வீட்டிலேயே சொல்கிறார்கள். ஆனால் இவர் மாத்திரம் என்றும் புது மெருகு அழியாமல் மார்க்கண்டனாய்த் தானிருப்பாரா ?

அவனைப் பார்க்கையில் ஒரு பக்கம் பெருமிதம் பொங்கிற்று. ஆனால் ஓர் அச்சமும் அவ்வுவகையைச் சூழ்ந்தது. அவன் மேல் நிலைத்த பார்வையைக் கலைக்க இயலாது, அவனின்று பறந்த அவன் உள் ஒளியில் கண் கூசி, கதவின் மேல் சாய்ந்தாள்.

சர்க்கஸ் புலி நெருப்பு வளையங்களுள் நுழைந்து வருவதுபோல் புன்னகை புரிந்தபடி படிகளின் வழியிறங்கி வந்தான்.

"அத்திம்பேர் ! அத்திம்பேர் ! !"

அந்த அவசர விளிப்பு அவளை மூர்ச்சையினின்று விடுவித்தது. திடுக்கிட்டுக் குரல் வந்த திக்கில் திரும்பினாள்.

மாது வாசற்குறட்டில் ஒரு வாணத்தை வைத்துக் கொண்டு செத்துப்போனதை உயிர்ப்பிக்க முயன்று கொண்டிருந்தான். அவன் கண்களில் ஏமாற்றக்கண்ணீர் துளும்பிற்று.

"ஏமாத்திட்டான் அத்திம்பேர் !"

அத்திம்பேர் சாவதானமாக அவனிடம் சென்றார். அவள் பார்வை விடாது தொடர்ந்தது. சிரித்துக் கொண்டே வாணத்தை இடறினார். பிரயோஜனமில்லை

என்ற பாவனையில் மாது உதட்டைப் பிதுக்கித் தலையை ஆட்டினான்.

"அத்திம்பேர்! அத்திம்பேர்!! தரேளா? கடை இந்தத் தெரு திருப்பத்திலேதான் இருக்கு. திறந்துதான் இருக்கு—"

அத்திம்பேர் கீழே உருண்ட வாணத்தைக் கையி லெடுத்தார். திரியிருக்கிறதா என்று பார்ப்பதற்காக அதை உற்று குனிந்து நோக்—

"படா—ர்"

ஐந்து வருடங்களுக்கு முன் நேர்ந்த அந்தச் சமயத் துடன் மறுபடியும் மோதின அதிர்ச்சியில், அவன் கட்டி லில் துடித்து விழுந்தான்.

அறையில் கந்தக நாற்றம் பொசுங்கிற்று.

★ ★ ★

ஆகாயத்தில் வாணம் வெடித்தபோது கௌரி வெந்நீருள்ளில் இருந்தாள். குடை அவள் மேலும் கவிந் தது. அவளும் அதன் நிழலுள் நழுவினாள். பிடரியி னின்று அவிழ்ந்து புரளும் நீண்ட கருங் கூந்தலாள் கௌரி. இருண்ட சிந்தனைகளைத் தனக்குள் அடைத்த கௌரி,

நல்லவேளையாக ஒண்டிக்குடித்தனமானாலும், தனி வெந்நீருள், கதவைத் தட்டி அவளை அவசரப் படுத்து வார் இல்லை.

கௌரிக்கென்னவோ ஆசைதான், யாராவது பெரிய வளாய், குடித்தனக்கார மாமியாத்தானிருக்கட்டுமே— தனக்கு ஒரு கை எண்ணெய் வைத்தால் தேவலைதான்

ஆனால் தானாகப் போய் மாமியைக் கேட்க லஜ்ஜை. மாமியும் முன் வரவில்லை, "ஒண்டியாயிருக்கையே, சிறிசாயிருக்கையே வா வா, வெத்திலையை வாயில் அடைச்சுக்கோ, நான் கௌரி கல்யாணம் பாடறேன்" என்று. மாமியைக் குற்றம் சொல்வதிலும் முறையில்லை. அவள் குழந்தைகளுக்கு உழல்வதே அவளுக்குச் சரியா யிருந்தது.

ஒன்று புரிந்தது. தனிக்குடித்தனம் சில விஷயங் களுக்குச் சரியாயிருக்கலாம். ஆனால் தனித் தீபாவளி என்னவோ நிச்சயமாய்ச் சரியாயில்லை.

ஆனால் இந்தத் தனிக்குடித்தனமே அவள் தாயின் திட்டம்தான். அவள் தாயே திட்டம் போட்டு எதையும் நடத்துவதில் கெட்டிக்காரி. "நான் மாமியார், மாமனார், நாலு கொழுந்தன்மார், நாத்திமார் நடுவிலே வாழ்க்கைப் பட்டு, பட்டது போதும்; என் பெண்ணாவது கண்ணைக் கசக்காமல் வாழறதைக் கண்ணோலே பார்க்கிறேன்—" என்று போவோர் வருவோரிடம் அவள் முறையிட்டுச் சொல்லும் தினுசிலிருந்து ஏதோ தன் தாயார் சிங்கம் புலி கரடி நடமாடிய கூட்டுக்குள்தான் காலம் கடத்திக் கொண்டிருந்தாள் என்று நினைத்துக்கொண்டிருந்தாள் ஆனால் அவளுக்கு நினைவு தெரிந்தது முதல் அம்மாதிரி சித்தி, சித்தப்பா, அத்தை, பாட்டி, பாட்டனார் எல்லோ ரையும் சேர்ந்தாப்போலேயோ அடிக்கடியோ அவள் பார்த்ததில்லை.

விஷயமறிந்த ஒன்றிருவர் சொல்வதும் காதில் விழுந்தது. அவள் தாய் புக்ககத்தில் காலெடுத்து வைத்து ஒரு வருடத்திற்குள் பொட்டலமாயிருந்த குடும்பத்தைப் பத்து கோலமாக்கி ஒருத்தருக்கொருவர் விரோதமுண் டாக்கி, தானும் விரோதமாகி தன்னோடு தன் கணவனையும் கைக்குழந்தை கௌரியுடன் கூட்டுக் குடும்பத்திலிருந்து பிய்த்துக்கொண்டு வந்து விட்டதாகச்

சொல்லிக் கொண்டார்கள். ஆனால் அதைப்பற்றி கௌரிக்கு அதிகம் தெரியவோ ஆராயவோ வழியில்லை; சந்தர்ப்பமில்லை. அவளுடைய தாயார், தனக்கும் தன்னுடைமைக்கும் சௌகரியம் என்று அமைத்துக் கொண்ட சூழ்நிலையில் வளர்ந்தாள்.

அதனாலேதானோ அல்ல கௌரி என நாமம் படைத்து விட்டதனாலேயோ அவள் சில சமயங்களில் தன்னை மலையத்வஜ ராஜகுமாரியாகக்கூட நினைத்துக் கொண்டு விடுவாள். சுபாவத்தில் அவளைச் சாது, ஒரு சிறு அசடு என்றுகூட சொல்லலாம். ஆனால் இந்த எண்ணம்—தான் ஏதோ ரொம்ப 'உசத்தி' என்கிற எண்ணம் மாத்திரம் அவளுள், வயதுடன் கூடவே வளர்ந்து வந்தது. ஐந்து தம்பிமார்களுக்கிடையில் ஒரு செல்வ குமாரியாக வாய்ந்த செல்லம், உற்பவித்த உதர மகிமை, வீட்டில் அவள் தாய் நடத்திய பூரண ஆட்சி, பிறரிடம் காட்டும் மேட்டிமை எல்லாம் சேர்ந்து அவ்வெண்ணத்திற்கு ஊட்டம் அளித்தன. அப்பாவுக்கு அம்மாவிடம் இருந்த பயம் எல்லோருக்கும் வெட்ட வெளிச்சம். குத்திமாட்டி இழுக்கும் கொடுஞ் சொற்களைக் கக்குவதில் அவள் தாய் வரப்ரசாதி. ஆபீஸ் விட்டால் அப்பா வீட்டில் அதிகம் தங்குவதில்லை. அவருக்கு 'மாட்ச்' பைத்தியம். அந்த சாக்கில் அடிக்கடி வெளி யூரும் போய்விடுவார். அவருடைய பரம விரோதிகூட சொல்வான். "அந்த மனுஷன் சந்தோஷமாய் இருக்கும் வேளையே 'மாட்ச்' மைதானத்தில்தானே!"

ஆகையால் வீட்டில் அம்மாவும் அவளும் இட்ட சட்டமும் அடித்த கொட்டமும்தான்.

கௌரிக்குக் கலியாணம் ஆவதற்கு மூன்று வருடங் களுக்கு முன்தான் அப்பா அம்மாவின் ஓயாத பிடுங்கலின் பேரில், ஒரு நிலத்தை வாங்கி ஒரு வீட்டைக் கட்டி முடித்தார். வீடு, பார்க்க அழகாய்த்தானிருந்தது. சிநேகி

தர்களையும் புதியவர்களையும் வீட்டுக்குள் அழைத்துப் போய் அதன் நாலு அறைகளையும் மொட்டை மாடியையும் சுற்றிச் சுற்றி வந்து, "இதோ பாருங்கோ சமையலுள்ளில் தனிக்குழாய், வெந்நீருள்ளில் தனிக் குழாய், இந்தச் சாரியிலே ஒரு சின்னக் குடித்தனமும் வெச்சிருக்கேன். ஆம்படையான் பெண்டாட்டி, வீடில்லாத் திண்டாட்டத்திலே வந்து கேட்டா என்ன சார் பண்றது? மாட்டேன்னு சொல்ல வாய் வரமாட்டேன்கறது" என்று தன் முதுகைத் தானே தட்டிக் கொள்ளும்போதும் பெருமையாய்த்தானிருந்தது. ஆனால் இந்தக் கௌர வத்தில் ஒரு பெரிய ஓட்டையும் விழுந்திருந்தது. வீட்டைக் கட்டி முடிக்கு முன்னாலேயே கடன் சுமையா யிறங்கிற்று. அப்புறம் மனைவி படுத்தும் வேதனை தாங் காது, மாடிமேலும் கட்டடம் எழுப்பினார். அதற்குமேல் எழுந்து கொக்கரித்து சதிராடும் கடன் அசுரனை உணரு கையில் பீதிதான் விளைந்தது. ஆனால் அம்மாவுக்கு இன்னும் திருப்தி ஏற்படவில்லை. பக்கத்து வீட்டுக் காரன் தெருவை அடைத்துப் பந்தல் போட்டதால், "அதற்குக் குறையாமல் நம் வீட்டுக் கலியாணமும் நடந் தால்தான் அந்தாத்து மாமியை நான் தலை நிமிர்ந்து பார்க்க முடியும்" என்று அவள் பண்ணிய அட்டகாசத் திற்கு இணங்கி கௌரி கலியாணமும் சிறப்பாகக் கொண்டாடிய பின்னர், இன்னமும் ஒரு சுள்ளி வைத் தால் முதுகு முறியும் கடன் பளுவடியில் அப்பா அழுந்தி ஆயிற்று.

ஆனால் அதைப்பற்றி கௌரிக்கு என்ன கவலை? என்ன தெரியும்? அவள் வளர்ந்த முறையே கஷ்டப் படுவது புருஷர்கள் பங்கு, சுகப்படுவது நம் கடமை என்று கடன் பட்டாவது ஊர் மெச்சப் பால் குடிப்பது தான் குடும்ப கௌரவம் என்ற முறையில் வாழ்க்கை நோக்கு அவளுக்கு அவள் வளர்ந்த முறையில் அமைந்தது. கௌரியின் தாயார் தேடிய திட்டத்திற்கு

ஏற்ப அவளுக்கு மாப்பிள்ளையும் வாய்த்து விட்டான். தாய் தகப்பன், உடன்பிறந்தார் எவருமில்லை. நல்ல உத்தியோகத்திலிருந்தான். பந்தலில் பார்த்தவர்கள் பெண்ணைவிட பிள்ளையே எடுப்பு என்று சொன்னார்கள்.

ஏற்கெனவே வீட்டில் குடியிருக்கும் தம்பதிகளை விரட்டி விட்டுப் பெண்ணையும் மருமகப்பிள்ளையையும் தன் கண் காணிப்பிலேயே வைத்துக்கொள்ளலாம் என்ற யோசனை கூட கௌரியின் பெற்றோர்களுக்கு இருந்திருந்தால் அந்த எண்ணம் பலிக்கவில்லை. மாப்பிள்ளைக்கு உத்யோகம் வெளியூரில்.

கௌரி, கணவன் வீட்டுக்குப் புறப்படுகையில் அவளுடைய சிநேகிதிகளும் பக்கத்து வீட்டு மாமிகளும்—சிலர் நிஜ அசூயையுடனேயே, "உனக்கென்னடியம்மா குறைச்சல், கண்ணிறைஞ்ச கணவன் அவன் உத்யோகம் கை நிறைஞ்ச காசு, நீ பிறந்த இடத்திலும் ராணிதான், போகுமிடத்திலும் ராணிதான். மடிநிறைஞ்ச குழந்தை ஒண்ணுதான் இனி பாக்கி"—என்று சொல்லி வழி அனுப்பியபோது கௌரிக்குப் பெருமை கங்கு கரையுடைந்தது. அச்சமயத்தில் அவள் தன்னைப்பற்றியும் தன் கணவனைப் பற்றியும் என்னென்ன நினைத்துக் கொண்டிருந்தாளோ அவளுக்கே தெரியாது. ஆனால் அந்த உருவமற்ற எண்ணங்களும் உணர்ச்சிகளும் கட்டிய கோட்டைகளும் "ஹிமவானின் புத்ரி" என்னும் ஒரே எண்ணத்தின் நடுத் தண்டிலிருந்து முளைத்து அதையே சுற்றிச் சுற்றிப் படர்ந்தவையாய்த்தான் உழன்றன.

குடும்ப வாழ்க்கையில் இன்றியமையாத சிறு மோதல்களும் மனஸ்தாபங்களும் அவர்களிடையில் நேராமல் இல்லை. ஆனால் எப்படியும் அவைகளுக்குத் தான் காரணமில்லாமல் அம்மோதலின் அதிர்ச்சிகள் அவனைத்

தாக்காதபடி லாகவமாய் விலகிக் கொள்ளும் சாமர்த்தியம் அவனுக்கிருந்தது. ஆகையால் அவைகளின் வேகம் முழுவதையும் அவள் மேலேயே விழுந்தது. ஒவ்வொரு சச்சரவையும் சாவகாசமாய்த் தனக்குத்தானே அலசிப் பார்த்துக் கொள்கையில் தர்க்கத்திற்குக் காரணம் அவனாயிருக்கமாட்டான். "நீயே பார், நானா பண்ணி னேன்?" என்று அவன் சுட்டிக்கூடக் காண்பிப்பதில்லை. எந்தக் காரியத்தை அவள் அத்தனை இடும்பு செய்து சாதித்துக் கொண்டாளோ, சாதித்த பின்னர் அதன் சக்கைதான் அவளிடம் எஞ்சிற்று அதன் வெற்றியும் சுவையும் அவன் புன்னகையில் உதட்டோரம் சுழித்த குழிகளில் தங்கிப் போயின. அதற்காக அவள் எடுத் தாடிய சொரூபங்களே அவளைக் கேலி செய்தன. பிறந்த வீட்டில் அவள் அழுச்சாட்டியங்களுக்கு அப்பா பயந்து கீழ்ப்படிந்து போவார். ஆனால் இங்கோ அப்படியில்லை. தும்பையறுத்துக் கொண்டு பின்னங்கால்களை உதைத்துக் கொண்டு துள்ளி, குடல்தெறிக்க எங்கென்று கூடத் தெரி யாது ஓடும் கன்றுக்குட்டியின் விடுதலையில் எவ்வளவு பொய்மையும் கேலிக்கிடமும் இருந்ததோ அப்படித்தான் முடிந்தது, அவளுடைய சொரூபங்களின் வியர்த்தம்.

ஆனால் அவனையும் எப்படி அத்தனை சிநேகி தர்கள் ஈ மாதிரி மொய்த்தார்கள்? அவளுக்கு ஆச்சரியமா யிருக்கும். "உடம்பு சிரமமாயிருக்கிறது" என்று சாக்குச் சொன்னாலும் "சரிதாம்பா வீட்டை அடைகாத்தது போதும் நாங்கள் வேணுமானால் காலைப் பிடிக் கிறோம்" என்று குண்டுக் கட்டாய்த் தூக்கிக்கொண்டே போய்விடுவார்கள். தன் கணவன் எத்தனையோ விஷயங் களுக்கு நடுநாயகமாக விளங்கியது கௌரிக்குப் பெருமை, சந்தோஷந்தான். ஆனால் தன் அசூயையே மனதில் உறுத்தி உறுத்தி, அரித்துத் தள்ளிக் குவிந்து மலையாகியளித்த காக்ஷி அவளுக்கே பயமாயிருந்தது. இவ்வளவு பெரிய குப்பை மேடா நான்? ஏன் இப்படி

என்னோடேயே போராடிண்டிருக்கேன்? ஆனால் யுத்தம் நடந்து கொண்டேயிருந்தது. குப்பை இன்னும் ஏறிக் கொண்டேயிருந்தது.

நாளடைவில் கௌரி தன்னிலேயே புழுங்க ஆரம்பித்தாள். மனம் இதுவரை தோன்றாத புதுப்புது சந்தேகங்கள் புழுத்த எண்ணங்களின் களமாகியது.

அவருக்கு என்மேல் பிரியமில்லையா? அதனால்தான் ஒதுங்கி ஒதுங்கிப் பிடிபடாமல் போகிறாரா? புருஷர்களே இப்படித்தானா? சமூகத்தில் கலியாணம் என்று ஏன் ஏற்பட்டிருக்கிறது? இந்த அவஸ்தை படத்தானா? இதுதான் முடிவா? லக்ஷிய புருஷன் எனக்குக் கிட்டியும் என் வாழ்வு ஏன் லக்ஷிய வாழ்வாயில்லை? லக்ஷிய புருஷர்கள் எல்லாம் சுவரில் படமாகவும் மாடத்தில் பொம்மையாகவும் பூஜை பண்ணச் சரியே அன்றி; சதையும் பிண்டமுமாய் சேர்ந்து வாழ லாயக்கற்றவர்களா? பிறந்த வீட்டிற்கே திரும்பிப் போய் விடுவோமா?

அந்த ப்ரம்மாஸ்திரத்திற்கு அம்மாவிடம் அப்பா பயந்து போவார். ஆனால் இந்த ஆசாமி மசியமாட்டானே! போகிறேன் என்றால் சற்றேனும் கோபம் செய்யாது இரு கைகளையும் வாசற்புறம் நீட்டி வழி காட்டி விடுவான்: அப்படி வீடு திரும்புவதைவிட தோல்வியும் அவமானமும் வேறெது? வாழாவெட்டியாய் இருப்பதற்கு ஒரு வழியாகக் கைம்பெண்ணின் கதியே தேவலை.

அவள் கணவன் மேல் புரியாத பகை அவளுக்கு வளர ஆரம்பித்தது. எந்தச் சமயமும் தன்னுள் உவகை பூத்த வண்ணம் எப்படி அவனால் இருக்க முடிகிறது? ஆனால் சற்றேனும் களைப்புத் தட்டாது சதா களை திகழும் அம்முகம் கலங்குவதுதான் எப்போ? அதைக் கலக்க வைப்பதுதான் எப்படி? காலம், வயது— எல்லோ

ரையும் பாதிக்கும் சக்தி அவனிடம் மாத்திரம் நீர்த்துப் போய்விட்டதா? இதுவே தான் அவள் கவலை, புழுக்கம், வேதனை.

பாதியிரவில் திடுக்கென்று சில சமயங்களில் விழித்துக்கொள்வாள். பக்கத்தில் அவன் முகத்தின்மேல் நிலாவின் ஒளியில் ஜன்னல் கம்பிகளின் நிழல் கட்டானிட்டது. வங்கி வங்கியாய்ச் சுருண்ட ஒரு மயிர்த்திருகு, நெற்றியில், காற்றில் அசைந்தது. நிர்மலமாய்த் தூங்கும் அம்முகத்தை, அப்பொழுதுதான் தலையணை மேல் மலர்ந்த நீலமலர் போன்று மாசுமறுவற்ற அம்முகத்தைப் பிராண்டினால் என்ன?

பேய் எண்ணங்கள்! பயங்கர எண்ணங்கள்.........

மண்டையைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு குடு குடு வென்று குழாயண்டை ஓடி முகத்தை நனைத்துக் கொள்வாள்.

அவளுள் நேர்ந்து கொண்டிருப்பதையெல்லாம் அவன் அறிவானோ? ஆனால் அவன் அவளிடம் நடந்துகொள்ளும் முறையில் வேறுபாடு ஏதும் தெரியவில்லை.

இம்மனோ நிலையில்தான் அவள் இந்தத் தீபாவளிக்குப் பிறந்தகம் வந்திருந்தாள். அவளுக்கே தெரிந்தது. இது யாருடனும் பங்கிட்டுக் கொள்ளக்கூடியதாயுமில்லை. தனக்குத்தானே பொருமித் தன்னையே தின்று கொண்டிருந்தாள்.

ஆகையால், யானைவெடி அவள் புருஷன் முகத்தில் வெடித்ததும், வெடி வெடித்ததாகவே அவளுக்கில்லை. இத்தனை நாள் தன்னுள்ளே உருண்டு திரண்டு குமுறிக் கொண்டிருந்த எரிமலைதான் வெடித்தாற் போலிருந்தது. ஒரு வேளை இதைத்தான் அவள்

வேண்டினாள் என்று அவனே அறிந்து, யுத்தத்தில் அம்பை மார்பில் தாங்கிக் கொள்ள முன் வரும் சுத்த வீரனைப் போல், தானே அவள் எண்ணத்தின் வெடிப்பைத் தாங்க அவ்வளவு அலங்காரத்துடன், சிரித்த முகத்துடன் அதை நோக்கிச் சென்றானோ? அவள் கணவன் வெடியின் ஜோதியில் ஒருகணம் ஜ்வலிப்பதைக் கண்டாள், அவ்வளவுதான்—

அவளுக்கு நினைவு தப்பிவிட்டது.

ஏறக்குறைய ஒரு வருஷம் ஆஸ்பத்திரியில் படுத்த படுக்கையாய் அவன் கிடந்தான். முதல் ஒன்றிரண்டு மாதங்களுக்கு மயக்கமருந்திலேயே அவனைக் கிடத்தினார்கள். நினைவு தாங்க உடலுக்குச் சக்தி இருக்குமோ எனும் பயம். இடையிடையே விதவிதமான கோளாறுகள் நேர்ந்தன. ரண ஜன்னியும் கண்டுவிட்டது.

அவன் தீயிலேயே குளித்திருந்தான்.

பிறகு அவன் நினைப்பை அவனிடம் திருப்பிக் கொடுக்க மெதுவாய்த் துணிந்தனர்.

"சாவே வாவா" என்று கூவி அழைத்தால் வந்துவிடுமா? கட்டிலோடு பிணைத்த கட்டிலிருந்து திமிர அவன் துடித்துப் புரளுகையில் வெறித்த பார்வையுடன் கௌரி, இதயத்தில் விழுந்துவிட்ட பள்ளத்தின் அடிபாதாள ஆழத்திலிருந்து, செயலற்று அவனருகே நின்றுகொண்டிருந்தாள். காங்கையடித்த கண்கள், பார்வையிலாது கட்டிலிலிருந்து அவளைப் பதில் வெறித்தன.

வலியின் வேதனையிலேயே உடைப்பெடுத்து ஓடிய பிரமையில் ஒரு சமயம் அவன், தன்மேல் செஞ்சுடர்க் குழம்பு ஊற்றிக் கொண்டேயிருப்பதாகக் கதறுவான். இன்னொரு சமயம் செஞ்சுடரின் நடுவே மிளிரும் நீல ஜோதியில் தான் மிதந்து கொண்டிருப்பதாக அலறுவான். மற்றும் ஒரு வேளை, கந்தகத்தின் எரிப்பில் எழும் மஞ்சள்

தீயில் தான் புகுந்து புறப்பட்டுக் கொண்டிருப்பதாகக் கற்பனையின் விபரீதம் ஓடும்.

அவள் சிலையாகச் சமைந்து அவனையே வெறித்த பார்வை நிலை மாறாது நின்றாள்.

அவன் ஆபீஸே திரண்டு ஆஸ்பத்திரிக்கு வந்தது. அவனுக்கு சுயநினைவில்லாததால் அவனுடைய முதலாளி அவளிடம் வந்தார். "பணக்கவலை, வேலைக்கவலை எதுவும் நீங்கள் படவேண்டாம். மாதா மாதம் ஆஸ்பத்திரியில்லை ஆபீஸுக்கு அனுப்பித்து விடணும். ஐந்து வருடமானாலும், அவருடைய நாற்காலி மேஜை அவருக்கே காத்திருக்கும்." இன்னும் இதே ரீதியில் ஏதேதோ தைரியம் சொன்னார்.

அவர் பேச்சை அவள் க்ரஹித்துக் கொண்டாளோ? அறியாள். ஆனால் ஒரு தோற்றம் நெஞ்சில் பதிந்தது. ஆபீஸில் அத்தனைபேர் வேலை செய்ய, அவர்கள் நடுவே இன்னமும் வருஷம், ஒன்றோ இரண்டோ, எத்தனை காலமோ, அல்லது காலத்திற்குமோ, காலியாய் ஒரு மேஜையும் ஒரு நாற்காலியும் கண்ணெதிரில் எழுகையில், தன்மேல் விழுந்து கொண்டிருப்பதாக அவன் அலறும் எரி நீர்வீழ்ச்சியிலிருந்து ஒரு வாளி, கண்ணுக்கு தெரியாக் கைகள் எடுத்து அவள் மேலும் வீசியதுபோல் அடிவயிற்றிலிருந்து அனல் கிளம்பிற்று. அதன் ஜ்வாலையில் அவள் எரிந்தாள். மருண்ட கண்கள் அப்படியே தாழ்ந்து கழுத்தங்குழியெலும்பின் மேல் சாதுவாய் உறங்கும் மஞ்சள் சரடைப் பார்த்து பயங்கரத்தில் புருவங்கள் சுளித்தன. அது தன்னைக் கடிப்பதற்காகக் கழுத்தைச் சுற்றிக் கொண்ட பாம்பா, அல்ல தன் வாழ்வின் ரக்ஷையா?

அந்த உள் பயத்திற்கு ஏற்ப, அவன் உடல்நிலையில் எதிர்பாராக் கோளாறுகள் புகுந்தன. ஊன், மாமிசம் முதற் கொண்டு வெந்து போனதால் மூன்று முறை புது

ரத்தம் பாய்ச்சியும் உடல் மஞ்சள் பூத்துவிட்டது. ஒரு மருந்துக்கொரு மருந்து கொடுத்து நிலைமை இன்னமும் மோசமாகிவிட்டது. இரவும் பகலுமாய் வைத்தியர்கள் அவனைச் சுற்றி வட்டமிட்ட வண்ணமாயிருந்தனர்.

அவன்மேல் கவிந்துகொண்ட கருமேகத்துடன் அவன் போராடுகையில், அவன் இத்தனை நாளாகத் தன்னுள் சேர்த்து வைத்திருந்த மனோபலம் அனைத்தும் செல வாகி வருவதைக் கண்கூடாகக் காண்கையில். இந்தப் போராட்டம் ஒரு பக்கம் அச்சத்தை விளைவித்தாலும், அதன் காம்பீர்யத்தையும் அவளால் தரிசிக்க முடிந்தது. இந்த யுத்தத்தின் யானைப் பசியில் தன் கணவனுக்கு அவள் இப்போது செய்த பணிவிடை அனைத்தும் ஈடிழந்து, பொருட்டிழந்து, பிசுபிசுத்து, சூன்யமாய்ப் போவதையும் கண்டாள்:

வயதான சுமங்கலி ஒருத்தி அவளை மாங்கல்யபிச்சை எடுக்கச் சொன்னாள். அவள் சொல்லிக் கொடுத்த படியே, ஜாதி முறைப்படி கொசுவம் வைத்துக் கட்டிக் கொண்டு, முன்றானைத் தலைப்பை இரு கைகளிலும் பிடித்துக் கொண்டு, கால் மெட்டி ஒலிக்க, விடுவிடென வீட்டுப்படி இறங்கி, "என் புருஷனுக்கு உயிர்ப்பிச்சை போடுங்கோ எனக்கு மாங்கல்ய பிச்சை போடுங்கோ!" என்று கேட்டுக்கொண்டே தெருவழியே அவள் கோவிலுக் குச் செல்கையில், அவளுக்கே இதுவரை தெரியாத ஏதோ ஒன்று அவளுள் புரண்டது. சொல்லிக்கொடுத்த வார்த்தை களேயாயினும் அவை தொப்புளினின்றெழுந்த கதற லாய்த்தான் வெளிவந்தன: பிச்சையிட்ட கைகள் வெட வெடத்தன. அவளை முகமெடுத்துப் பார்க்க யாவரும் அஞ்சினர்.

கௌரி.

ஹிமவான் புத்ரி.

பாண்டிய ராஜகுமாரி.

அவளையும் மீறி, சமயத்திற்கு அவளுள் எழுந்த சக்திதான் காரணமோ, வைத்தியத்தின் சாமர்த்தியமோ, அவனுடைய பலம் தானோ,— பெரியவர்களின் ஆசியோ அகஸ்மாத்தோ, ஒருவாறாக, அவன் தன்மேல் கவிந்த கருமேகத்தின் தழுவலினின்று மீண்டான். ஆயினும் எப்படிப்பட்ட மீட்சி !

ஆஸ்பத்திரியில் இருந்தவரை கூடத் தெரியவில்லை. விடுதலையடைந்து வீட்டுக்கு வந்த சில நாட்களுக்குப் பிறகுதான் தெரிந்தது. பழரஸம் பிழிந்தோ, மருந்தோ ஏதோ எடுத்துவரக் கீழே போன கௌரி மறுபடி மாடியேறி வந்தபோது அசப்பில் அவன் நிலைகண்டு அயர்ந்து நிலை வாசல்மேல் அப்படியே சாய்ந்தாள். பகீர் என்றது.

அவன் சாய்வு நாற்காலியில் சாய்ந்து சுவரைப் பார்த்துக் கொண்டிருந்தான். முகத்திலும், மார்பிலும், கழுத்திலும் தழும்புகள் வீறுவீறாய்த் தடித்து எழும்பின.புருவங்களும் கண் ரப்பைகளும் இருந்த இடம்கூடத் தெரியாது தீய்ந்து போயிருந்தன.

உயிருக்கும் சாவுக்கும் ஒரு வருடமாய் நடந்த போர்க்களமாய் உடல் விளங்கிற்று. உயிர் உடலோடிருந்ததால் 'என் வெற்றி' என்றாலும் சாவு, 'எப்படியும் உடல் எனக்குத்தான் சொந்தம்' என்று ஸ்தாபிப்பதுபோல் தன் முத்திரையை உடலெங்கும் பொறித்திருந்தது.

"கௌரி ! திருப்திதானே ?" என்று ஒருகுரல் அவளுள் திடுக்கென எழுந்ததும் அது பேசியே கேட்டதுபோல் கௌரி சுற்றுமுற்றும் விழித்துப் பார்த்து, விதிர்விதிர்த்துப் போனாள். அவளால் அங்கு நிற்க முடியவில்லை. கைச் சாமானுடன் தடதடவெனக் கீழேயிறங்கி, உக்கிராண உள்ளில் ஓடோடியும் போய் அதன் இருளில் சரண்புகுந்தாள். தன்னின்று தனக்குத்தானே தன் குரல் கேட்ட

பயங்கரம், பொறியில் எலிபோல் உடல் பூரா வெடவெட வென உதறிற்று.

அன்றிலிருந்து ஒவ்வொரு நாளும் ஊர்ந்துசென்றது, ஏனென்று அவளுக்கே தெரியவில்லை. அவளுக்கு அவள் தாய்வீட்டுக்குப் போக்குவரத்துப் படிப்படியாய் குறைந்து போய் அறுந்தும் போயிற்று. அவளுக்கு அங்கு போகவே பிடிக்கவில்லை. திரும்பத் திரும்ப தன்னை "ஐயோ கௌரி! என்னடி இப்படி ஆயிடுத்தேடீ!" என்று உபசாரம் கேட்க வருபவர்களைக் கண்டாலே கரிப்பெடுத்துவிட்டது, பயமெடுத்துவிட்டது. "என்னடி இப்படி பண்ணீட்டை யேடீ! என்பதைத் திருப்பித்தான் அவர்கள் அப்படி கேட் டார்கள் போல் தோன்றிற்று.

ஏனென்று புரியாமலே அவளுக்குத் தன் தாய்மேல் திடீரென்று வெறுப்புத் தட்டிற்று. ஏதோ ஒரு முறையில் இதற்கெல்லாம் தன் தாய்தான் காரணம் என்று தோன் றிற்று. தனக்கு அப்படித் தோன்றுவதன் நியாய அநியாயம் தோன்றினாலும் தோன்றாவிட்டாலும் ஏதோ ஒருவிதத்தில்— தனக்கு அது எப்படி என்று புரியாவிட் டாலும் போகட்டும்— தன் அடிப்படையில், தனக்குத் தோன்றியதுதான் சரி என்று பட்டது. தனக்குத் தானே இட்டுக்கொண்ட சிறையின் இரும்பு கிராதிகளின் வழி யாகத் தன் கணவனை வெறித்துக்கொண்டு உள்ளுக்கு உக்கிப்போய்க் கொண்டிருந்தாள். தன் எண்ணத்திலேயே அவனைச் சுட்டுவிட்ட ஏக்கம், இவ்வளவு கிட்ட இருந்தும் அவளுக்கும் அவனுக்குமிடையில் அவள் உணர்ந்த எட்டாத தூரம். அவளும் ஒரு தீயில் குளித்துக்கொண்டு தானிருந்தாள்.

இந்த ஐந்து வருடங்களாய் அவனுள்ளும் ஏதோ நேர்ந்துகொண்டு தானிருந்தது. அவனுடைய உடல் நிலையையும் மனம் படக்கூடிய பாட்டையும் உத்தேசித்து

ஆபீஸில் அவனுக்கென்று தனி இடவசதியும் வேலை வசதியும் ஏற்பாடாயின. இஷ்டப்பட்டால், சௌகரியப் பட்டால், அவன் ஆபீஸுக்கு வரலாம்; அல்லது வீட்டி லேயே வேலையைச் செய்து ஆள் மூலம் அனுப்பலாம்; சில சமயங்கள் வேலை செய்யாமலும் இருக்கலாம்.

ஆனால் அவன் வெறி பிடித்தாற்போல் உழைத்தான். அம்பு பாய்ந்த மிருகம் இடந்தெரியாமல் அங்குமிங்கு மாய் வேகமாய் ஓடுவதுபோல் அவன் வேலையில் முனை கையில் அவனுக்கு குறுக்கே எவரும் ஏதும் சொல்லவும் முடியவில்லை; தடுக்கவும் முடியவில்லை. வேலை வெறியி லேயே தன்னை மறக்க முயன்றான்.

ஆயினும் அம்மாதிரி முடுக்கிக்கொண்ட வேகம் நீடித்து நிற்க முடியாதாகையால் அவன் மறுபடியும் தன்னிடமே மீளும் நேரங்கள், அவனை விழுங்கக் காத்துக்கொண்டே இருந்தன. அம்மாதிரி நேரங்களில் எவரும் அவனிடம் அண்டமுடியாதபடி அவன் இருந்தான். அநேக வேளைகள் மாடியறைக் கதவு மூடியபடியே யிருக்கும்.

கௌரி அறைக்கு வெளியே கைகளைப் பிசைந்து கொண்டு, பீதியும் கவலையும் அவளில் ஏற்றிய பிரமிக்கத் தக்க அழகில் மிளிர்ந்துகொண்டு நிற்பாள்.

உள்ளே என்ன பண்ணிண்டிருக்கார் ? என்னவாவது பண்ணின்டுடுவாரோ ?

கதவின் சந்து வழி தைரியமிருந்தால் எட்டிப் பார்ப் பாள்; சாய்வு நாற்காலியிலே சாஞ்சுண்டு மண்டைக்குப் பின்னால் கைகோத்துண்டு என்ன யோசனை பண்ணிண் டிருக்கிறார் ?

அதே கேள்விதான் அறைக்குள் அவனுக்கும் தோன் றிக்கொண்டிருந்தது; திரும்பத் திரும்ப; திரும்பத் திரும்ப.

"என்ன குருட்டு யோசனை பண்ணிக் கொண்டிருக்கிறேன்? எனக்கு ஏன் இது நேர்ந்தது? எனக்கு—எனக்கு எனக்கா?"

அவன் அகந்தைகள் என்னென்னவோ அவையனைத்தும் அவன்முன் அலங்கோலமாய்ச் சென்றன. தன்னைப் பற்றி அவன் என்னென்ன எண்ணிக் கொண்டிருந்தானோ எல்லாம் அவனைக் கேலி செய்தன.

"ஏ, மனிதா! நீ விழுந்த நிலையென்ன பார்த்தாயா?"

காலடியிலிருந்த செருப்பைத் தூக்கி சுவரின்மேல் ஆத்திரத்துடன் வீசியெறிந்தான். ஆனால் அது அவன் மேல்தான் சுவரிலிருந்து குதித்துத் திரும்பிற்று.

கண்களில் சிவப்பு நரம்புகள் துடித்தன. இப்போதெல்லாம் சற்றுநேரம் சேர்ந்தாப்போல் விழித்துக்கொண்டிருந்தாலே விழிகளில் கண்ணீர் நிறைந்தது.

"எனக்கு ஏன் இது நேர்ந்தது?"

ஐந்து வருடங்களாய் அலுக்காத, சலிக்காத கேள்வி.

சில சமயங்கள் சமாதானத்தைத் தானே இட்டுக் கட்டிப் பார்த்துக் கொள்வான்.

சீ! என்னைவிட எத்தனைபேர் கேவலமாயில்லை! எத்தனை பேர் கால்போய் கைபோய் நளாயினியின் கணவன்போல் கூடையில் தூக்கிக்கொண்டு போகும் 'கேஸ்' களாக இல்லை? அவர்களைவிடவா நான் மோசம்?

குருட்டு யோசனைகளிடையே அவனுடைய முந்தைய நாட்களின் நினைவு வரும்.

இளம் வயதிலே பெற்றோரை யிழந்து உற்றார் உறவினர் ஆதரவின்றி, நடுத்தெருவில் நின்று, நாலுபேர் வீட்டில் வாரச் சாப்பாடு சாப்பிட்டுத் தருமசம்பளம் பெற்று

படாத கஷ்டங்கள் பட்டு, தன் முயற்சியாலேயே படித்து, உத்தியோகமும் தானே தேடிக்கொண்டு, படிப்படியாக உயர்ந்து, தானே முன்னுக்கு வந்து, மனிதர்களோடு மனிதனாகத் தானும் தன்னாலே தலைநிமிர்ந்து ஆகி...... ஆகி ?.........ஆகி ?? உச்சாணிக் கிளையிலிருந்து இது மாதிரிச் சறுக்கித் தடாலென்று விழவா ?

இதுதான் தன்னை உறுத்தும் கேள்விக்குப் பதிலா ? கௌரி, ஜன்னலுக்கு அலங்காரமாய்க் கட்டியிருந்த வெண்திரை, வண்ணான் மடிப்பிலிருந்து பிரிந்து வந்த தூய வெண்மையுடன் காற்றில் படபடத்தது.

அவன் கேள்வி முற்றுக்கூடப் பெறாமல் பந்துபோல் அவனிடம் திரும்பத் திரும்ப வந்தது. அதனின்று அவன் ஓடி ஒளியப் படும் அவதிக்குச் சாவே மேல் என்று தோன் றிற்று. குனிந்த தலையுடன் இறக்கை யொடிந்த பறவை போல் அவன் மௌனமாய் உட்கார்ந்திருப்பதைக் காண் கையில் வயிறு ஒட்டிக்கொண்டது. ஜீவ தாதுவே அவனுள் கருகி விட்டாற் போலிருந்தது.

கௌரி கட்டிலண்டை வந்து நின்றாள். கவிழ்ந்து கிடக்கும் அவன் உடல் குலுங்குவதைக் கண்டாள்.

பிறகு என்ன நேர்ந்ததென அவளுக்கே தெரியாது. அவளை ஒரு வெள்ளம் அடித்துக்கொண்டு போயிற்று. மெதுவாய் அவனை மல்லாத்தி மூர்க்கமான பரிவுடன், அப்படியே வாரி இறுகத் தழுவிக்கொண்டாள்.

விடியற்காற்று ஜன்னல் வழி உள் புகுந்து அவர்கள் மேல் சில்லென்று மோதிற்று.

# இதழ்கள்

அம்மா அடிக்கடி சொல்லுவா: "நாக்கைப் பிடுங்கிண்டு சாகலாம் போல இருக்கு; ஆனால், கைதான் எச்சிலாப் போயிடுமேன்னு பாக்கறேன்"— அப்போல்லாம் அதுக்கு சரியான பதில் என்னன்னு தெரியாது. இப்போ தெரியும்;

"ஏம்மா, சாகத் துணிஞ்ச பிறகு, எச்சிலைப்பத்தி என்ன கவலை?"

அப்போ கேட்கத் தெரியாது. கேட்டிருந்தாலும் முதுகில்தான் கிடைத்திருக்கும். ஆனால், கேட்டாலும் கேட்டிராவிட்டாலும், அம்மா சொன்னதில் வாஸ்தவம் இருக்கென்றே தோணறது.

பாறேன், சாகணும்னு வந்திருக்கிறேன். ஆனால், இந்த ஜலம் இப்படி நாறுகிறதே! உவ்வே!— வாடை வயிற்றைக் குமட்றது. சாகத் துணிஞ்ச பின் நாற்றத்தைப் பற்றி என்ன கவலை? சாவில்கூட மனம் சுகம்தான் நாடுகிறது, சந்தேகமேயில்லை.

ஆனால், இன்னிக்கு நான் பார்த்திருக்கும் வேளை சரியில்லேன்னுதான் தோன்றுகிறது. எதிர் பெஞ்சில் இந்தக் கிழவி இன்னும் உட்கார்ந்திருக்கிறாள். உட்கார்ந்த இடத்தை விட்டு அசையவுமில்லை. இதுவரைக்கும் என்னை ஏன் என்று கேட்க யாருமில்லாமல், இந்த சமயத்துக்கு எங்கிருந்து இவள் காவல் வந்தாள்? இருக்கட்டும், பார்க்கலாம். இன்னும் வேண்டிய பொழுது இருக்கிறதே!

பாட்டி, அம்மா அப்பாவிடம் சொல்லிண்டிருப்பாள்.

நான் பம்பரம் ஆடிண்டிருப்பேன்.

"ஆமாம், எல்லாத்துக்கும்தான் புண்ணியம் பண்ணியிருக்கணும். ரொம்ப நாள் இழுபடாமல், பிறருக்கு சிரமம் கொடாமல், உடம்புக்கும் ரொம்ப உபாதையில்லாமல், சனிக்கிழமையில்லாமல், வேளையில்லா வேளையில் யசர் தூக்கத்தையும் கெடுக்காமல்—"

"டே சேகர், கூடத்தில் பம்பரம் விடாதேன்னு எத்தனை தடவை சொல்வது ? Get out !"

பாட்டி சிரிச்சுண்டே, 'ஊம், இதையும் சேர்த்துக்கோ. இதுமாதிரி ராஜா சொல்லச் சொல்லக் கூடத்தில் பம்பரம் ஆடி, அது எகிறி, ஆணி பொட்டிலே பொத்து—எனக்கென்ன. நான் போனப்பறம் எனக்குத் தெரியப் போறதா ?'

"சேகர் !"

பம்பரம் வண்டாய்க் கூவிண்டு,கற்பூரமாத் தூங்கறது. இருந்தும், அதை அப்படியே அழுத்திக் கலைச்சு எடுத்துண்டு வாசலுக்குப் போயிடணும். இல்லாட்டா அப்பா பிடுங்கி ஓட்டு மேலே வீசி எறிஞ்சுடுவார்.

எடுத்துண்டு வாசலுக்குப் போறேன்.

சே, இந்த வீட்டில் எடுத்ததுக்கெல்லாம் தர்க்கம்; தொட்டதுக்கெல்லாம் கட்சி.

பேரில் இருந்து பெரிசு வரைக்கும்.

பாட்டிக்கு நான் 'ராஜா'.

நான் வயிற்றில் இருந்தபோது, அப்பாவும் அம்மாவும் ஸ்வாமிகளைத் தரிசனம் பண்ணி வந்தாளாம்; அதனால் பிறந்தவுடன் அப்பாவுக்கு நான் சந்திரசேகர்; சுருக்கமாய் 'சேகர்'.

அம்மாவுக்கு 'குமார்'. அம்மாவுக்கு ஒரே முருக பக்தி.

"பேனா முடியைக் கழட்ட ஒத்தராலும் முடியாட்டா, நான் மனஸுக்குள்ளே 'முருகா'ன்னு தலைப்பில், பிடிச்சுண்டு ஒரு திருகுதான் திருகுவேன். தனியா வந்தூடும்."

"ரஸத்துக்குப் புளி ஜாஸ்தி ஆயிட்டா, சுப்ரமணி யான்னு உப்பை அள்ளிப் போடுவேன்; எப்படியோ சரி பண்ணிக்கும்."

"குழம்புக்குத்தான் இல்லையேன்னு என் இஷ்ட தெய்வத்தை நினைச்சுண்டு கூடையிலே தேடுவேன். ஒரு உலர்ந்து போன சேப்பங்கிழங்காவது அகப்படாமல் போகாது. குமரன் செயல் !"

பாட்டி குடித்தனக்கார மாமியோடு சண்டைக்குப் போவாள்.

"என்ன ஸுகந்தா, நீயும் அவளோடு சேர்ந்து 'குமார், குமார்'னு கொண்டாடறையே. அதென்ன 'குமாரு-விளக்குமாறு ?' வீட்டுக்கு மூத்த பிள்ளையா, குடும்பத்தில் பெரியவா பேர் விளங்க வேண்டாமா ? நான் தான் அவர் பேரை முழுக்கச் சொல்ல முடியவில்லை. நீயாவது வாய் நிறைய 'நாகராஜா'ன்னு அழைக்கக் கேட்டு மகிழறேனே !"

"உங்காத்து விவகாரம் எல்லாம் எனக்கேதுக்கு, பாட்டி ? இது சாக்கில் வீட்டைக் காலி பண்ற அளவுக்கு ஏதாவது தர்க்கம் முத்திவிடப் போறது. என் ஆத்துக்காரர் ஒரு மாதிரி. சும்மா இருந்தால் இருப்பார், கோவம் வந்துட்டா தலைகாலே தெரியாது. நான் எதிலும் பட்டுக்கப் போறதில்லை. குழந்தை கொழுகொழுன்னு இருக்கான்; இனிமேல் கண்ணான்னுதான் கூப்பிடப் போறேன்—டேய் கண்ணா, 'ஊம், ஏன்'னு கேளேண்டா!"

அப்புறம் பாட்டி ரகஸ்யமாய், "சரி சரி, ராஜா இன்னி சாயந்தரம் எங்கேயாவது ஓடிப் போயிடாதே; சுற்றிப் போடணும்."

"ஆமாம்மா, அந்த மாமி கண் நல்ல கண் இல்லை."

இதில் மாத்திரம் அம்மாவும் பாட்டியும் ஒண்ணு.

ஆனால், எனக்கென்னவோ மாமிதான் இஷ்டம். சுட்ட அப்பளத்திலிருந்து மாமா வாங்கிவரும் பொட்டலம் வரை எனக்கு எப்பவும் ஒரு பங்கு வைத்திருப்பாள்.

"போறது, இந்த ஜன்மத்தில்தான் இல்லை. வர ஜன்மத்திலாவது வாய்க்காதா !"

மந்திரம் மாதிரி ஜபிச்சுண்டே அல்வாத் துண்டைத் தானே தன் கையால் என் வாயுள் தள்ளுவாள். நாக்கு, நெஞ்சு, மார்பு, வயிறு, உடம்பு முழுக்க உள்ளே தித்திக்கும்.

"என்ன வாய்க்காதா ?"— வாய் நிறைய முழுங்க முடியாமல், குதப்பிண்டே கேட்பேன்.

என்னை ஒரு தினுசாய்ப் பார்த்துண்டே—கண் கோகு லாஷ்டமி நாவல் பழம்போல் பளபளக்கும்—'கண்ணன்' என்பாள்.

Bore

பசங்க கூடக் கேலி பண்றான்கள்.

"டேய், இன்னிக்கென்னடா பேர் வெச்சிருக்கு ?"

"தினம் பேர் வெச்சா உங்காத்திலே தினம் பாயஸம் உண்டா ?"

"என்னடா, அவனைச் சும்மா கிண்டல் பண்ணிண்டு? சுவாமிக்கு அஷ்டோத்ரம் இருக்கறப்போ, மனுஷனுக்கு நாலுகூட இருக்கப்படாதா ?"

அன்றிலிருந்து ஐந்தாவதாய் அஷ்டோத்ரம்னு ஒரு பேர் கூட !

தொட்டால் குற்றம், திரும்பினால் குற்றம்.

"ராஜா, கூடம் அதிர்றது, ஓடாதே ! பூமாதேவிக்குப் பொறுக்காது !"

"குமார், கெஞ்சிக் கேக்கறேண்டா!" கெஞ்சிக் கேக்கறதாவது? பல்லைக் கடிக்கிறாள். "ஊஞ்சலை வீசி ஆட்டாதேடா! போறவா வரவா மேலே படப் போறது!"

ஏன் ஆட்டக்கூடாது? ஊஞ்சலை ஆட்டல்லியே, பஸ்னா ஓட்றேன்? பஸ் வேகமாப் போகாதா? அதுவும் ஆபீஸ் டைம்! நானே டைவர், நானே கண்டக்டர்!

"புர்ர்ர்-ர்ர்-ர்ர்-ர்— பஸ் ஸ்டாப் வந்துடுத்து! ஏறுங்கோ! ஆச்சா, ரைட் ரைட்! டபின் ரைட்! ணக்ணாக்-டுர்ர்ர்ர்-"

"எனக்கு சாவு வரமாட்டேங்கறதே! ரெண்டு நிமிஷம் கண்ணசர விடாமல், ஊர்ப் பசங்களையெல்லாம் கூட்டி வந்து நிர்த்தூளி பண்றானே! இதுகள் எல்லாம் பிறக்கல் லேன்னு யார் அழுதா? தவங்கிடக்கறவா வயத்திலே தொலையக் கூடாதா?"

அம்மா நிஜமாவே முகத்தைப் பொத்திண்டு 'ஊ-ஊ'ன்னு நீளமா அழுவாள்.

எனக்கு வெக்கமாயிருக்கும். துக்கமா வரும். பயமா யிருக்கும். வெறுப்பாயிருக்கும். திகைக்கும்.

நான் ஏன் விளையாடக்கூடாது? அது ஒரு தப்பா? பாவமா?

"ஸோபா மேலே திமிதிமின்னு குதிக்காதேடா. இன்னும் அதுக்குப் பணம்கூடக் கொடுத்தாகல்லே. கிழிஞ்சுதுன்னா அப்பா தோலை உரிச்சுடுவா."

இப்படி ஒவ்வொத்தராய். ஒண்ணொண்ணுக்கும் ஒரு ஒரு தோலாய் உரிச்சால், அப்புறம் எனக்கென்ன இருக்கும்? நான் எங்கிருப்பேன்? மொத்தம் எனக்கு எத்தனை தோல்? உரிச்சால், உரிக்க உரிக்க, எத்தனைன்னுதான் உரிக்க முடியும்?

நான் வளர்றது எனக்கே தெரியறது. உள்ளே சதையின் குறுகுறுப்பு உடம்பு தாங்கல்லே.

நான் கண்ணாடியில் என்னைப் பாக்கறப்போ ஒரொரு சமயம் எனக்குத் தோணும் :

இப்பொ கண்ணுக்குத் தெரியறமாதிரி ஒரு தலை, ஒரு மூக்கு, ரெண்டு கண், ரெண்டு கை, ஒரு வயிறு, ரெண்டுகால்...... இது மாதிரி, இது மாத்திரந்தானே பார்க்க முடியறது ? ஆனால், இந்தத் தோலுக்கடியில் இன்னும் எத்தனை கண், மூக்கு, காது ? இன்னும் இது வரைக்கும் உலகத்திலிருந்து மானம் வரைக்கும் கண்ணால் கூடக் காணமுடியாமல், இன்னும் பேர்கூட வைக்காமலே, இன்னும் என்னென்ன, எத்தனை எத்தனை முளைச்சிருக்கும் ?

பூவுக்குள்ளே இதழ் இதழாய்
மரத்துக்குள்ளே முண்டும்
முடிச்சுமாப்போல்
உடம்புக்குள்ளே, தோலின்
கெட்டிக்கடியிலே
இன்னும் என்னென்ன ?
எத்தனை எத்தனை ?

இதைப் பார்த்துத் தெரிஞ்சுண்டுடணும்— ஆத்திரம் மீறிப் போச்சு. ஒரு சமயம் அப்பா க்ஷவரம் பண்ணிண்டு எறிஞ்சுட்ட ப்ளேடாலே நானே கட்டை விரலை வெட்டிண்டேன்.

ரத்தம் பீச்சியடிச்சுது. பயமாப் போச்சு. காயத்தி லிருந்து கிளை கிளையா, கொடி கொடியாப் பிரிஞ்சு உள்ளங்கையில் வழிஞ்சுது. ஆனால், வேறொண்ணுந் தெரியல்லே.

அம்மா பார்த்துப் பயந்து போனாள். 'லபலப'ன்னு வாயிலடிச்சுண்டா.

'அட மஹாபாவி ! எந்தக் கசாப்புலேருந்து நேரே என் வயத்துலே முளைச்சேடா ? எந்த ராக்ஷஸப் பிறவிடா நீ ?"

டிங்சர் ரொம்பவும் எரிஞ்சுது. அழுதேன்.

"வாயைத் திறந்தையோ, போட்டுடுவேன் பலி! செஞ்ச காரியம் ஜரிக்க அழுகை வேறேயா ? உம்-மூச்சு !"

வாயை இறுகப் பொத்திண்டு, பீறி வர தேம்பலை உள்ளேயே தள்ளிண்டு, அவஸ்தையில் முழி பிதுங்கிண்டு, அம்மா பயந்துபோய் ஏண்டா கண்ணேன்னு அணைச்சுண்டு—

அத்தோடு சரி.

மறுபடியும் என்னத்தைச் செய்யலாம். எதை உடைக்கலாம்னுதான் துருதுருக்கறது.

"சேகர், கத்தாதே !"— ஆபீஸ் ரூமிலிருந்து அப்பா-

அப்படிச் சொன்னதனாலேயே "ஹொஹ்—ஹோ !". வாய்விட்டுக் கர்ஜிக்கத் தோணறது.

கர்ஜிக்கிறேன்.

வாங்கிக்கறேன்.

வசவு, அடி, திட்டு, உதை-ஊ-ஹூம்.

"கைதான் வலிக்கிறது: அத்தனையும் துடைச்சுப் போட்டுத்தானே வளையவரான் !"

"நீயே பார்த்துக்கோ, உன் பிள்ளையை !"

"ஏன் நீங்களேதான் பாருங்கோளேன், உங்கள் பிள்ளையை !"

எனக்கு என் அப்பா. என் அம்மா, ஆனால், இவா மாத்திரம் உன்னுது உன்னுதுன்னு ஒருத்தருக்கொருத்தர் ஒதுக்கித் தள்றாளே !

ஏன், எனக்கு ரோசமில்லையா ? வலிக்காதோ ? வலிச்சால் அழுகை வராதோ ?

நான் ஒண்ணும் துடைச்சுப் போட்டுடல்லே. அது அமுங்கிப் போறது, அவ்வளவுதான்.

அன்னிக்கு மழை பேஞ்சுதே, அப்போ கொல்லையிலே, பள்ளத்திலே சேறு—என்னவோ உளையாமே—அங்கே ஒத்தரும் போகக்கூடாதுன்னு அப்பா உத்தரவு போட்டு, அதில் ஒரு கல்லை விட்டு எறிஞ்சு காண்பிச்சாரே, அது மெதுவாய் மனசில்லாமல், அமுங்கி உள்ளேயே போயிடுத்தே, அது மாதிரி அமுங்கிப் போறது. அவ்வளவுதான்.

உடம்புக்குள்ளே உடம்பு எப்படி வளர்றது ? உள்ளே என்னென்ன சக்கரம் எப்படிச் சுழல்றது ? மாரில் எப்படி 'டக் டக்' கேக்கறது ? அப்பா கடியாரத்தில் 'டிக் டிக்' பார்க்க கடியாரத்தைப் பின்னாலே திறக்கணும். அது மாதிரி, அப்பாக்குக் கோவம் வந்தால், முதுகைப் பிளந்துடுவேன்கறா. ஆனால், அப்படி என்னைப் பின்னால் திறந்துட்டாலும். நான் எப்படிப் பாத்துக் கறது ? கழுத்தை என்ன ஒடிச்சுண்டாலும், முதுகு வரைக்கும் பின்னாலே திருப்பிக்க முடியாதே !

இந்தப் பழசு, இத்தனைப் பழசுகள் எல்லாம் இப்போ ஏன் நினைவுக்கு வருகின்றன ? இந்த அம்மா இன்னும் நகரவில்லையே ? நேரம் ஆகல்லியா ? எனக்குத்தான் நாளில்லை, கிழமையில்லை, போக்கிடமில்லை: தீபாவளியுமதுவுமா இந்நேரம் இவள் இங்கே என்ன பண்ணறாள் ? பட்டாசை அடுப்பில் காச்ச வேண்டாமா ? மருந்து இழைக்க வேண்டாமா, மாட்டுப் பெண்களுக்கு மருதாணி இட வேண்டாமா ? வேலையை சின்னவா பார்த்துக் கொண்டாலும், பேரன்மார் பட்டாசு கொளுத்தறதையாவது பார்க்க வேண்

டாமா? சப்தங்கள் கேட்க ஆரம்பித்தாச்சே? இவள் கழுத்துச் சங்கிலியைப் பிடுங்கிண்டு, இந்த இருட்டில் இவளை இப்படியே குண்டுக்கட்டாய்த் தூக்கி, இந்த ஜலத்தில் எரிய மாட்டேன் என்று இவள் என்ன கண்டாள்?

ஆனால், எனக்கொன்றும் அவசரம் இல்லை. வேண்டிய பொழுது இருக்கிறது. தானாக எழுந்து போகிறாளா, பார்க்கலாம். எனக்கு அவசரமே இல்லை.

இந்தத் துணிவுக்கு எப்போது வந்தேனோ, அப்பவே என்னைச் சுற்றி என்னைக் கட்டிய காலத்தின் கோடுகளை அழித்து விட்டேன். இல்லாவிட்டால், நினைவுகள் இந்த மாதிரி அவைகளின் அடிப்படையை இழந்து, அடியில் புதைந்தவை எல்லாம் எப்படி மேலே வரும்? அப்படி யப்படியே, அப்பட்டமாய், அதனதன் அப்போதைய வடிவங்களிலேயே—

"நான் செத்தாலும் இது இருக்கும்"னு பெருமையாச் சொல்லிண்டே பாட்டி போடுவாளே, சுருள் சுருளாய், எண்ணெய் பளபளத்துண்டு, ஜாடியுள் பாம்புபோல், கெடாமல், வருஷமாய் உறங்குமே நார்த்தங்காய் ஊறு காய் மாதிரி.

பாட்டி ஊறுகாய் போடும்போதெல்லாம், அதன் பெருமையை ஜபிச்சுண்டே ஒரு காலை நீட்டியபடி, அரிவாமனையில் காயைச் சுருளின் வளையம் கெடாது, ஒரே சுருளாய் நறுக்குவாள்.

"இது இந்தச் சீமைக்காராளுக்குப் பிடிக்காது." (இது அம்மாவை ஒரு குத்தல்) எனக்கென்ன, இதைப் பிடிக் காதவா கொடுத்து வைக்காதவா. கசப்புக்குப் பயந்தவா ருசியை ஏமாந்தவா. எனக்கென்ன, உண்டவாதான் மகிமை கண்டவா. இன்னும் தொப்புள் கொடி விழாத பச்சைக் குழந்தைக்காரிக்குப் போடலாம், ஒண்ணும் பண்ணாது; இரும்பை ஜீரணம் பண்ணீடும்."

உடனே 'பக்'கெனச் சிரிப்பாள். வாய் பொக்கை. சிரிச்சால் அழுற மாதிரியிருக்கும்.

"ஆனால், தன்னைப் பண்ணிக்கத் தெரியாது. பழையதுக்குக் காலையில் தொட்டுக்கோ, சாயந்திரம் ஏப்பத்தில் நெடியடிக்கும்."

அதுபோல், என் மாலையில், என் காலை நெடி கிளம்புகிறதோ ? அப்போ கசந்தது. இப்போ இனிக் கிறது. இன்னும் கொஞ்ச நாழி, என்ன அவசரம் ?

வீட்டுக்குப் பின்புறம் ஒரு மாமரம்.

கொல்லைத் தாழ்வாரத்தில் தூண்மேல் சாய்ஞ்சுண் டிருக்கேன். என்னென்னவோ யோசனை யோசனையா வரது.

இந்த மரம் எப்படி, இப்படியே வருஷக்கணக்கா நிக்கறது ? ஒரு சமயம் இதன்மேல் கல்லைவிட்டு எறிஞ்ச துக்கு "அதுக்கும் உசிர் உண்டு, வலிக்கும். எப்படியும் உன்னைவிடச் சமத்து, வெச்ச இடத்தில் இருக்கு பார் !"னு அப்பா கடிஞ்சார்.

அப்போ சமத்தாயிருக்கணும்னா மரமாயிருக்கணுமா ? மரமாயிருந்தால்தான் சமத்தாயிருக்க முடியுமா ?

"சமத்தாயிரு, சமத்தாயிரு" — எல்லாரும் எப்போ பார்த்தாலும், எதுக்கெடுத்தாலும் "சமத்தாயிரு".—இது ஒரு ஜபம்.

கோவிச்சுண்டா, "அப்படியெல்லாம் இனிமேல் பண்ணப்படாது. இனிமேல் சமத்தாயிருக்கணும். தெரிஞ் சுதா ?"

பயமுறுத்தல்.

சந்தோஷப்பட்டால், "ஆ, அப்படித்தான் ! எப்பவும் இதே மாதிரி சமத்தாயிருக்கணும்."

ஷொட்டு.

தப்பே பண்ணவேண்டாம். வெறுமனே புதுசு உடுத்திண்டாலோ, நாள் கிழமைக்கு நமஸ்காரம் பண்ணாலோ அப்பவும் "சமத்-த்-த்தாயிரு"ன்னு அழுத்தந்திருத்தமா ஆசீர்வாதம்.

சமத்தாயிருக்கறதுன்னா, யார் சொன்னதையும் கேட்டுண்டு எல்லாரிஷ்டப்படிக்கும் இருக்கணும். அதானே? என்னிஷ்டம்னே கூடாது. இந்த மரம் மாதிரி மரமாயிடணும். வெய்யில்லே காயணும், மழையிலே நனையணும், காற்றில் அலையணும், கல்லடி படணும், வெட்டுக்காயம் படணும்; பூவைக் கொட்டணும், காயைத் தரணும், பழமாத் தொங்கணும், நிழலைக் கொடுக்கணும், நின்ன இடத்தை விட்டு நகரக்கூடாது; இத்தனையும் பட்டுண்டு ஊமையாயிருக்கணும்; உசிரோடேயும் இருக்கணும். அதானே?

இது எனக்கு வருமோ?

அப்பறம் பெரியவாள் தங்களுக்குள்ளே என்னவோ அடிக்கடி சொல்றா "இதென்ன உன்னிஷ்டமா, என்னிஷ்டமா? மரம் வெச்சவன் தண்ணி ஊத்தாமலா போறான்?" இந்த மாதிரி மரமாயிருக்கறதுக்கு இதுக்குத் தண்ணி ஊத்தி, இதுக்கு ஏதோ பெரிய தயவு பண்ணிட்ட மாதிரி.

ஐயோ, நான் மாட்டேம்பா! இந்தச் சமத்து என்னால் இருக்க முடியாது. எனக்கு வேண்டவும் வேண்டாம். எனக்கு என்னிஷ்டம் கிடையாதாம், அவர்களுக்கு மாத்திரம் அவா இஷ்டம் உண்டாம். ஏனோவாம், என்னிஷ்டம் என்ன ஆறது? என்னிஷ்டம்னு எனக்கு இருக்கே! இருக்கறத்தை இல்லேன்னா, இல்லேங்கப் பண்ணால் அது மாத்திரம் பொய் சொன்ன மாதிரி, பொய் பண்ண மாதிரி ஆகாதோ?

எனக்கு இஷ்டம், குழம்புஞ் சாதம்: அதுவும் வெங்காய சாம்பார் பண்ணிட்டா, கூடக் கத்தரிக்கா (அப்படியே முழுசா நடுவுலே பிளந்து) முள்ளங்கி, முருங்கக்காய், எல்லாம் சேர்த்துப் போட்டு—அப்பா நாக்கிலே தண்ணி ஊர்றது கன்னம் வலிக்கிறது.

"ஏய் உன்னைத்தான்! குழைச்சு செவுர் கட்டாதே, மோருக்குப் போ!" என்னை அப்படிச் சொல்லிட்டு, அப்பா ரஸத்தைக் குளம் கட்றார். அதன் பேர் என்னவாம்? அப்போ, அவருக்கு அவரிஷ்டம் உண்டு எனக்கு என்னிஷ்டம் கிடையாது. ஏனாம்?

அம்மாவை ஏதாவது கேட்டால் "அதெல்லாம் அப்புறம் அப்பா மாதிரி நீயும் பெரியவனாறப்போ, அப்போ" என்கிறாள்.

எப்படி நான் நாளைக்கே பெரியவனாறது?

எனக்கொரு யோசனை தோணறது.

கொல்லைப்புறத் தாழ்வாரத்தில் பாட்டி ரெண்டு காலையும் நீட்டிண்டு, ரெண்டு காலையும் தடவிண்டு—கால் மரத்துப் போறதாம் — உக்காந்திருக்கா. பாட்டி தானே இந்தாத்துக்கே பெரியவள், அவளைக் கேட்டால் தெரியும்.

'பாட்டி நீ எப்போ பெரியவள் ஆனே?'

பாட்டிக்குத் தூக்கிப் போட்டு, ரெண்டு கையையும் கன்னத்தில் வெச்சுக்கிறாள்.

"இதென்னடியம்மா அக்ரமம்? கலி ஆனாலும் இப்படியா முத்திப் போகணும்?"

அம்மா உள்ளிருந்து விடுவிடுன்னு வந்து, என்னைக் கையைப் பிடிச்சு இழுக்கறா.

ரகஸ்யமா, "உஷ், அப்படியெல்லாம் தத்துப்பித்துன்னு பேசாதே!"

உள்ளூர அவளுக்கு சிரிப்பு பொங்கறது. எனக்குத் தான் புரியல்லே.

பாட்டி கேலிக் குரலில், "ஓஹோ. பெரியவா சிக்ஷையாக்கும்!"

அம்மாவுக்கு இப்போ சிரிப்பை யடக்கவே முடியல்லை. "இல்லே, அப்படி யில்லேம்மா. இப்படி—"ன்னு புரியப் பண்ணறாள்.

அது சரி, நான் பெரீஈஈஈயவளாயிருக்கறதை நீ தாண்டா மெச்சிக்கணும்! நான் எதுக்குப் பிரயோஜனம், என்னத்துக்கு மதிப்பு? நானும் இதோ நிக்கறது பார். இந்த மரமும் சரி."

வீட்டிலேயே பெரியவள் பாட்டிக்கும் மரமாயிருக்கப் பிடிக்கல்லே, சின்னவன் எனக்கும் பிடிக்கல்லே, அப்போ நாங்க ரெண்டு பேரும் ஒண்ணுதானே!

★

'ஏய், எங்கேடாயிருக்கே?'

மதனாவும், ஸாயியும் என்னைத் தேடிண்டு வரான்கள். ஸாயி ஒரு மூடின பெட்டி வெச்சிண்டிருக்கான். சுற்றிக் கறுப்புக் காகிதம் ஒட்டி, நடுவில் சின்ன துளைவிட்டிருக்கு. பார்த்தாலே ஆசையாயிருக்கு.

"டேய் டேய், என்னடாது?"

ரெண்டு பேருக்கும் கண் பளபளக்கறது. வாய்க்குள்ளே சிரிப்பு கூத்தாடறது.

"அதாண்டா, காமெரா, உன்னைப் போட்டோ எடுக்கப் போறோம் வரையா ?"

வாசல் பக்கம் போறோம்.

மதனா ஒரு நாற்காலியை இழுத்துப் போடறான். நான் உக்கார்றேன்.

"நான் பிடிக்கிறேன்—"

"இல்லை நான்தான் பிடிப்பேன்—"

"மாட்டேன்—"

"போடா—"

நான் தீர்ப்பு சொல்றேன்: "ஸாயியே பிடிக்கட்டும். அவன் அப்பாதான் போட்டோ ஷாப்புலே வேலையா யிருக்கார்."

"ஆல் ரைட், மதனா! சேர் பின்னாலே நின்னுக்கோ வெரிகுட், ஸார்—லைட் அட்ஜெஸ்ட் ஆகல்லே—கொஞ்சம் இந்தப் பக்கம்...நோ—ஸ்டாண்ட் அப் ப்ளீஸ்—"

எழுந்து நிக்கறேன்.

"ஸிட்"

உக்கார்றேன்.

"ஸ்டாண்ட்"

நிக்கறேன்.

"ஸிட்"

தடால்னு விழறேன்.

ரெண்டு பேரும் உள்ளடக்கித் தவிச்சுண்டிருக்கறச் சிரிப்பு தண்ணி மாதிரி மூஞ்சியில் பீச்சியடிக்கறது.

எனக்குச் சப்பையில் நல்ல அடி. ஏமாந்த கோவம் வேறே. விழுந்த இடத்திலிருந்து எழுந்திருக்காமலே

'ஓ'ன்னு கூப்பாடு போட்டு அழறேன். நான் அழ அழ, அவங்க சிரிச்சிண்டேயிருக்கான்கள். வயத்தைப் பிடிச்சுண்டு விழுந்து விழுந்து சிரிக்கிறான்கள். மதனாவுக்குப் புரைக்கேர்றது. ஒரு கையால் வயத்தைப் பிடிச்சுண்டு, ஒரு கையால் தலையில் தட்டிக்கிறான்.

கொஞ்ச நாழிக்கெல்லாம் அவங்க சிரிப்பு எனக்கும் தொத்திக்கிறது. என் அழுகை, என் இஷ்டமில்லாமலே, என் கண்ணெதிரிலேயே, என் காது கேக்கவே சிரிப்பாய் மார்றது.

மூணுபேரும் சேர்ந்து சிரிக்கிறோம். ஒரே சிரிப்பு! ஒரே சிரிப்பின் மூணு குரல். ஆர்மோனியத்தில் மூணு பல்லை சேர்த்து அமுக்கின மாதிரி.

மதனா, ஸாயி, இப்போ நீங்கள் எங்கிருக்கேளோ? ஆனால், அன்னிக்கு அது படே ஜோக்குடா!

★

ஆனால், இந்தச் சிரிப்பு என்னை விடவில்லை. இத்தனை நாளாவே உள்ளே இருந்ததுதான்; இப்போ இன்னும் பளிச்சாத் தெரியறது.

அப்பா யாரையாவது பத்தி ஏதாவது சொன்னால், "அவன் மஹா யோக்யன்னா, மஹா பெரிய மனுஷன், மஹா கர்வி"—'மஹா மஹா'ன்னு சேர்த்துப்பார். அது மாதிரி இது ஒரு 'மஹா' சிரிப்பு, உடம்புக்குள்ளேயே அடுக்கடுக்காய். தனித்தனி விள்ளலாய் குதிக்கிறது. விசிறியில் ஓலை மடிமடியாயிருக்கிற மாதிரி. ஸர்க்கஸ் காலரி மாதிரி. கோவில் கோபுரத்தில் செதுக்கல்கள் அடுக்கடுக்காய், தனித்தனியா, ஆனால், ஒரே கட்டாய் நிக்கற மாதிரி, பருப்புத் தேங்காயில், வரிசையாய் வேர்க்கடலைப் பருப்பு பதிஞ்ச மாதிரி. மைசூர்பாகு துளைவிட்ட மாதிரி.

நம் உடம்பே ஒரே துளைமயமாமே! அப்படியானால் ஒவ்வொரு துளை வழியாய் இந்த மஹா சிரிப்பு எட்டிப் பாக்கறப்போ என்ன பண்றதுன்னே புரியல்லே. உடம்பு அப்படிப் பரபரக்கறது.

"ராஜா, ஆண்டவன் உனக்கு உடம்புக்கு மீறி உசிரை வெச்சுட்டான். இல்லாட்டா இப்படி ஆம்புலே ஏறி தோம்புலே விழுவையா? அடிப்பட்டாலும் அழாமல் இருப்பையா? தூக்கத்தில் கூடக் கையும், காலும் உதைச்சுப்பையா? நாய் கனவு காணற மாதிரி! உனக்கு ஏன் இப்படி அலையறதோ தெரியல்லியே, ஈசுவரா!"

பாட்டி உசிர் என்கிறாள்.

நான் சிரிப்பு என்கிறேன்.

அதுவும் அஷ்டோத்ரம்தான் போலிருக்கு.

அதுமாதிரி சமயம்தான் அந்தச் சமயம் சாயங்காலம்.

முற்றத் தாழ்வாரத்தில் கிட்டக்கிட்ட ரெண்டு தூண்; ஒரு தூண்மேல் முதுகை நட்டுண்டு இன்னொரு தூண் மேல் காலைத் தலைக்குமேல் உயரமா உதைச்சுண்டு சாஞ்சுண்டிருந்தேன். அந்த மாதிரி சாய, அந்த இடம் எனக்கு அளவு எடுத்தாப்போல் இருக்கும். அப்படி உடம்பை விரைச்சுண்டு சாஞ்சிருக்கறதில் ஒரு குஷி இருக்கு. என் காலுக்கும் தலைக்கும் நடுவில் இருக்கும் காற்றைக் கயிறாய்த் திரிச்சு இழுத்துக் கட்டினால், நான் வில்லாயிடுவேன், இல்லையா? ராமர் வில், அர்ச்சுனன் வில், நாணைத் தட்டினால், 'பூம்ரொய்ஞ்ஞ்......' ராமர் வளைச்ச வில் வீணாய் வளையாதாமே! 'என் பாணத்துக்கென்ன தரே?'ன்னு ராமர் கேட்பாராமே!

"வழி—"

அப்பா நிக்கறார். பட்டை பட்டையா விபூதி, பஞ்சக்கச்சம், கையில் டம்ளரில் ஜலம். அப்பா சந்தி பண்ணப் போறா.

"ஊம், வழி—"

மனஸேயில்லை. வில்லைக் கலைச்சு உடம்பைத் தளர்த்திண்டேன்.

'பூம்ரொய்ஞ்ஞ்......'

திடீர்னு உடம்பெல்லாம் அதிர்ந்தது. வளைச்ச வில்லி லிருந்து அறுந்த நாணாய், என்னுடைய மஹா சிரிப்பு சத்தம் போடாமல் சிரிச்சுண்டே கால் கட்டை விரலி லிருந்து உள்ளே கிளம்பிடுத்து.

அப்பா என்னைத் தாண்டிண்டிருந்தார். நான் என்ன செய்யறேன்னு எனக்கே தெரியறது; ஆனால் அடக்க முடியவில்லை. தமாஷ் அப்படி உடம்பை ஊடுருவித்து. அப்பா காலுக்கு நடுவில் என் காலை விட்டேன்.

அப்பா ஸர்க்கஸ் பல்டி அடிச்சு விழுந்தார். அம்மி விளும்பில் மூஞ்சி 'டண்' ணுனு மோதி அப்பாவுக்கு தலை தொங்கிடுத்து. நெற்றியில் ரத்தம் பிடுங்கிண்டுடுத்து.

சப்தம் கேட்டு அம்மா சமையலுள்ளிலிருந்து ஓடி வந்தாள்.

பூனை எலியைக் கவ்வற மாதிரி கிலி என்னைக் கவ்வித்து.

"வேவே— வூவூ"— வாயிலிருந்து எனக்கே புதிசா ஏதேதோ சப்தங்கள் கிளம்பித்து. சிட்டாய்ப் பறந் துட்டேன்.

அன்னிக்கு வீட்டை விட்டவன்தான்.

இன்னமும் ஓடிண்டிருக்கேன்.

அப்பா, அப்பா ! நீங்கள் உடனே செத்துப் போயிட் டேளா, இன்னும் உசிரோடிருக்கேளா ?

ஆனால், சத்தியமாய்ச் சொல்றேம்பா, உங்களைத் தடுக்கிவிட்டது நான் இல்லேப்பா, என் சிரிப்பு. சத்திய

மாய்ச் சொல்றேன்: அப்பா, விட்டேன்னுங்கோ! சத்தியம் வெச்சுட்டேன் விட்டேன்னுங்கோளேன்!

ஆனால், நீங்கள் சொன்னாலும் எனக்கெப்படி காது கேட்கும்? அப்படியும் இன்னும் கேட்டுண்டு தானிருக்கேன்.

அகப்பட்ட வேலையைப் பண்ணி கூலிவாங்கி
வயத்தைக் கழுவறபோது
வாய்க்ககப்பட்டதைத் தின்னு கையலம்பறபோது
கூலிக்குத் தூக்கற சுமை பாரத்தடியில்
தலை வயிற்றுக்குள் அழுங்கும்போது
அன்னன்னிக்கதை அன்னன்னிக்கு
வந்ததை வந்ததும் வந்ததே தீர்த்துவிட்டு
வராதன்னிக்கு வயிறு காய
மரத்தடியில் வேர்மேல் தலைவெச்சு
படுத்து, அண்ணாந்து பார்த்து
ஆகாசத்து நக்ஷத்திரங்களில்
உங்களைத் தேடிண்டு

இன்னமும் இப்பவும் கேட்டுண்டுதானிருக்கேன்.

ஆனால், வீட்டுக்கு வர பயமாயிருக்கப்பா! உங்கள் குரல் இங்கேயே கேட்டாலே ஒழிய நான் வரத்துக்கில்லை. அன்னிக்கு பயமாய மாறின சிரிப்பு, இன்னும் பயமாவேதானிருக்கப்பா. எத்தனை வருஷங்களாச்சு, இன்னும் ஓடிண்டுதானே இருக்கேன்!

ஆனால் இப்போ அது பயம்னு பயமாயில்லை. அலுப்பாய் மாறியிருக்கு. நிற்கவும் முடியாமல் இப்படியே எத்தனை நாள், எவ்வளவு தூரம் ஓடிக்கொண்டேயிருக்க முடியும்?

ஒரு வாணம் சீறிக் கொண்டு உயரப் போய் வெடித்து, பச்சை, சிவப்பு, ஊதா சரங்கள் மலர்ந்து இறங்கிக் குடை கவிகிறது. எவ்வளவு அழகாயிருக்

கின்றது ! எப்படி இத்தனை நக்ஷத்திரங்களை, வர்ணப் பொறிகளை, 'படா'ரை, வாணத்தின் விரல்நீளத்தில் அடைத்தான் ! இதைப் பண்ணின பிரயாசையென்ன, வெடித்த சுருக்கென்ன ?

எனக்குத் தோன்றுகிறது:

வெடிக்க வேணும் என்றே எண்ணி, இப்படி வெடித்துப் போவதில் என்ன அர்த்தம் ? அதைப் பண்ணினவனுக்கென்ன அர்த்தம் ? எதில்தான் என்ன அர்த்தம் ? அர்த்தம் இல்லாமல் இருப்பதே ஒரு அர்த்தமா ?

ஏது, இந்தக் கிழவி கிளம்பமாட்டாள் போலிருக்கிறதே ! தூங்கிப் போயிட்டாளா ?

"ஏ, பாட்டி, நாழியாகல்லியா ? நானும் பார்க்கிறேன், ரொம்ப நாழியாக என்னோடு போட்டி போட்டுண்டு இங்கேயே இருக்கேளே ! வீட்டுக்குப் போக வேண்டாமா ? தேடமாட்டாங்களா ? என்ன, உதட்டைப் பிதுக்கிண்டு சிரிக்கிறேள் ? இல்லை, எல்லாரும் போனப்புறம், தண்ணியிலே கிண்ணியிலே விழுந்து தற்கொலை பண்ணிக்கணும்னு காத்துண்டிருக்கேளா ?"

"எனக்கென்னத்துக்கப்பா அதெல்லாம் ? எனக்கோ கை காட்டி சாஞ்சாச்சு. இன்னும் கொஞ்ச நாள். நானா ஏன் அவசரப்படணும் ?"

"இல்லே பாட்டி, தமாஷ் பண்ணினேன். இப்படிக் கொஞ்சம் முரட்டுத்தனமாப் பேசினால்தானே, நேரம் ஆவது உங்களுக்குத் தெரியும்."

"எனக்கு ஒரு கோவமுமில்லை. என்ன வேணுமானாலும் சொல்லு, உன் மனசிலே உனக்கு தோனினதைச் சொல்றே, அவ்வளவுதானே !"

"உங்களுக்கு நேரமாகல்லியா ?"

"நேரமாவது, பொழுதாவது! எனக்கு இப்பொ ஒண்ணும் அதனால் உபயோகமில்லை."

"ஏன், வீட்டுக்குப் போகவேண்டாமா ?"

"வீட்டில் என்ன இருக்கு, அப்பனே ?"

"மனுஷா இல்லியா ?"

"எல்லாரும் மனுஷாள்தான். நான் மனுஷியில்லியா. நீ மனுஷன் இல்லையா ?"

"பாட்டிகளுக்கே மூட்டம் போட்டுத்தான் பேச வரும் போல் இருக்கிறது—மடியில் என்னவோ கட்டிக்கொண்டு தவிச்சிண்டிருக்கேளே, என்னது ?"

"ஓ, இதுவா ?"

"பொட்டலமாயிருக்கே! தீபாவளி பக்ஷணமா !"

"இல்லை. பட்டாசு—"

"என்ன பாட்டி, கைகாட்டி சாஞ்சூட்டுது என்கிறேள். பட்டாசு ஆசை விடல்லியா ? எல்லாமே இருக்காப் போலிருக்கே, கம்பி, ஊசி—"

"இது என் பேரன் போன வருஷம் சுட்டுத் தீர்த்த மிச்சம்."

"போன வருஷத்து பாக்கியையா இன்னும் வெச்சிண் டிருக்கான் ? அப்படியானால் அவன் வயஸுக்குத் தகுந்த பையனே இல்லை"

"நிஜம். அவன் வயஸுக்குத் தகுந்த பையன் இல்லை."

"சாதாரண சமத்தாயிருக்க முடியாது."

"அசாத்திய சமத்துதான்."

"தெய்வப் பிறவின்னு கூடச் சொல்லுவேன். பசங்களாவது பட்டாசை விட்டு வைக்கறதாவது!"

"உன் நாக்கில் வாக்குப் பேசறது; அவன் தெய்வமே தான்."

"உங்கள் பேரனுக்கு என்ன வயஸு?"

"இந்த தீபாவளிக்கு சரியா பத்து. தீபாவளி அன்னிக்கு பிறந்தான்."

தேவலையே! தனியா பிறந்தநாள் கொண்டாட வேண்டாம். உங்கள் வீட்டில் மாத்திரம் இல்லை, ஊரே கொண்டாடும்னு சொல்லுங்கோ!...... எல்லாம் சரி, பேரனை விட்டுட்டு பட்டாசை நீங்கள் வெச்சிண்டிருந்தால் என்ன அர்த்தம்? பயல் எங்கே?

"............"

"என்ன சும்மாயிருக்கேள், உங்கள் பேரன் எங்கே?"

"............"

"என்ன பாட்டி அழறேள்? கன்னத்தில் கண்ணீரா வழியறதே!"

"............"

"பாட்டி, மன்னிச்சுடுங்கோ: என்ன உடம்பு இப்படி வெடவெடன்னு உதர்றதே!"

"வயஸாச்சோன்னோப்பா, சக்தியில்லை. ஒரு நினைப்பு கூட தாங்க முடியல்லே."

"என் மேலே சாஞ்சுக்கோங்கோ. பரவாயில்லை. என் வயஸில் உங்களுக்கு ஒரு பேரன் இருக்கலாம்—ஆ. அப்படித்தான்!"

"போன தீபாவளிக்கு இருந்தான்..."

"உஷ், கொஞ்ச நாழி பேசாதிருங்கோ..."

"எனக்கு ஒத்தரும் இல்லை. இந்தத் தள்ளாமையில் அவன் இட்ட பிச்சைன்னு நினைச்சு மகிழ்ந்திண்டிருந்தேன். அதுகூட அவனுக்கு பொறுக்கல்லே. அவ்வளவு கர்வமா உனக்குன்னு இட்ட கையாலயே பிடுங்கிண்டு போயிட்டான்."

"பாட்டி, அதெல்லாம் சொல்றதில் என்ன பிரயோசனம்? கொஞ்ச நாழி பேசாதேங்கோ. உடம்பு உதறல் அடங்கட்டும். என்னவோ திடீர்னு ஆசையாயிருக்கு. ஒரு பட்டாசு கொளுத்தட்டுமா?"

"தாராளமா எடுத்துக்கோயேன். உனக்குன்னுதானே கொண்டு வந்தேன்!"

"என்ன பாட்டி கேலி பண்றேளே?"

"ஏன், அதுக்குள்ளே மறந்துட்டியா? நீ தானே சொன்னே. உன் வயசிலே எனக்கு ஒரு பேரன் இருக்கலாம்னு?"

"பலே, நன்னா மடக்கறேளே!"

"மடக்கல்லே. உண்மையே அதுதானே! என்ன முழி முழின்னு முழிக்கிறே?"

"ஒண்ணுமில்லே,"

"என்னை சொல்லிட்டு உன் கன்னம் நனைஞ்சிருக்கு. அழாதே."

"இல்லை பாட்டி, அழல்லை. கண் அழுக்கு கரையறது கலிக்கமாத் தெரியறது."

"என்ன தெரியறது?"

"இப்போ கொஞ்ச நேரத்துக்கு முன்னால்தான் எதிலேதான் அர்த்தம் இருக்கிறதென்று நினைத்தேன்.

அப்படி நினைத்ததில் அவசரப்பட்டு விட்டேன்னு இப்போது தெரிகிறது. பாட்டி, பட்டாசு வேண்டாம், வெடித்து விடும். மந்தாப்பு கொளுத்தறேனே !"

"கொளுத்தேன்."

கம்பியிலிருந்து ஒரு பெரிய புஷ்பம் மலர்கின்றது அதன் இதழ்களில் குளுமை வீசுகின்றது.

எங்கிருந்தோ கம்மென்று பன்னீர்ப் பூவின் மணம் எழுகின்றது.

கிழவியின் தலை என் தோள்மேல் சாய்ந்து, அவளிட மிருந்து நீண்ட பெருமூச்சு கிளம்பிற்று. என்ன ஆச்சர் யம். அப்பா உங்கள் குரல் கேட்கிறதே !

விட்டேன் என்கிறேளா ?

# விடிவெள்ளி

கோஷம் ஆகாயத்தைப் பிளந்தது.

"மார்ணிங் ஸ்டார்! மார்ணிங் ஸ்டார்! கம் ஆன் கம் ஆன் மார்ணிங் ஸ்டார்!—"

"இல்லேடா அதோ பார், எவர் ரெடி வருது—வந்தூட்டுது! எவர் ரெடிதான்! எவர் ரெடி! எவர் ரெடி!!—"

"யாரப்பா ஜாக்கி?"

"போடா முட்டாள் பணம் அத்தினியும் மார்ணிங் ஸ்டார் மேல்தான் கட்டியிருக்கேன் — அப்புவையன் ஆரூடம்டா பொய்க்காது! இன்னிக்குக்கூட விபூதியும் குங்குமமும் குலுக்கிப் போட்டுப் பார்த்தேன். குங்குமப் பொட்டலம்தான் கைக்கு வந்தது. பிள்ளையாரே, உனக்கு ஒரு காலணா கற்பூரம்!—மார்ணிங் ஸ்டார்! மார்ணிங் ஸ்டார்!"

குதிரைகள் திருப்பத்தில் விரட்டியடித்துக் கொண்டு வருகின்றன. 'மார்ணிங் ஸ்டா'ரின் கால்கள் பூமியில் பதிவதாவேத் தெரியவில்லை; தரை மட்டத்துக்கு ஓர் அடி பரப்பி அந்தரத்தில் நீந்துகின்றன.

"மார்ணிங் ஸ்டார்! மார்ணிங் ஸ்டார்!! — பார்த்தையாடா நான் அப்பவே சொன்னேனே, மார்ணிங் ஸ்டார்! நம்ப சந்து பிள்ளையாருக்கு சக்தி ஜாஸ்திடா! ஒரு நாளும் என்னைக் கைவிடமாட்டார். நீ என்ன லைட்னிங் மேலேயா கட்டினே?—சரிதான்; பணமும் லைட்னிங்தான் —அப்பப்பா கண்டெடுத்தேன், அம்மம்மா

காணோமே என்கிற மாதிரி ! நான் சொல்ற பேச்சைக் கேட்காமல் போனால் உச்சந்தலையில் கை வெச்சுக்க வேண்டியதுதான். பஸ்மாசூரன் மாதிரி — மார்ணிங் ஸ்டார் ! மார்ணிங் ஸ்டார் ! ! !—"

பந்தயம் முடிந்து விட்டது !

மார்ணிங்ஸ்டார் வாயில் நுரை தள்ளிற்று. விலாவில் வியர்வை பொங்குகிறது. மேலே ஜாக்கி அதன் கழுத்தைத் தட்டிக் கொடுக்கிறான். அவனுக்கும் மூச்சு இறைத்தது. ஹரிஹரன் 'மார்ணிங் ஸ்டாரி'ன் கடிவாளத்தைப் பிடித்துக் கொண்டு, தன்னைச் சூழ்ந்திருப்பவர்களின் அசூயையை ஆனந்தமாய் அனுபவித்த வண்ணம் வெற்றி நடைபோட்டு வருகிறான்.

விலாவில் விழுந்த உதையின் விலுக்கில் கனவு கலைந்து ஹரிஹரன் உளறியடித்துக் கொண்டு எழுந்திருந்தான்.

தொந்தியில் துணி சரிய, பொறி பறக்கும் கண்களுடன் மணி ஐயர் எதிரில் நின்றார்.

"ஏண்டா, போண்டாவை வேகப்போட்டுட்டு, அடுப்பண்டை என்னடா தூக்கம் ? மூதேவி எங்கேன்னு காத்துண்டு இருப்பாளே ! கருகல் நாத்தம் வாசலுக்கு வந்து ஆளைப் பொசுக்கறது ! என்ன, ஹோட்டல் பேரைக் கெடுக்கவா வந்தே ? உங்கப்பன் வீட்டு சொத்தா, சாமானை வீணடிக்க ?"

ஹரிஹரன் அவசர அவசரமாய்ப் போண்டாவைத் திருப்பினான். கொஞ்ச நாளாவே இந்த மணி ஐயன் ஒரு மாதிரியாத்தான் இருக்கான். இருக்கட்டும் பய வா ! நேற்று மாதிரியிருக்கு, சமுத்திரக்கரையில் கூடையிலே சுண்டலை வைத்துக் கொண்டு ஈ ஓட்டிக் கொண்டிருந்ததை இவன் மறந்துட்டாலும் எனக்கு மறந்துடுமா? நானே காலணாவுக்கு வாங்கி வாயிலே போட்டுண்டு

"தூ! ஊசிப் போச்சு"ன்னு இவன் மூஞ்சியிலே துப்பாத தோஷம் காலடியிலே உமிஞ்சவன் தானே! இருக்கட்டும் இவனுக்கெல்லாம் ஒரு வழி வெக்கணும், ஏதோ ஸ்வாமி புண்யத்தில், 'மார்னிங் ஸ்டார்' 'வின்' அடிச்சதும் இவன் ஓட்டலுக் கெதிரேயே ஒரு ஓட்டல் போட்டு, இவனுக்கு மேலே ஒரு முழ உயரத்துக்கு மேஜையைப் போட்டுண்டு உட்காரணும். இதனால் நஷ்டமானாலும் ஆயிட்டுப் போறது. வந்த பணமெல்லாம் போண்டியானாலும் சரி, ஒரு கை பார்த்துவிடணும். ஆமாம். வாசலுக்கெதிரே ஸைக்கிள் ஸ்டாண்ட். மேஜை மேலே ரேடியோ. உள்ளே சாப்பிடற 'டேபிள்' ஒவ்வொண்ணுக்கும் கண்ணாடி போட்டு ஒவ்வொரு மேஜைக்கும் கடுதாசுப் பூ வெச்சு ஒஸ்திப் பீங்கானிலே ஆமாம் ஸ்விட்சுப் போடவேண்டியது தான் எலெக்ட்ரிக் விசிறி கிர்ர்ன்னு—

"அடே, அவனை அங்கேயிருந்து எழுப்புங்கடா! சாமி, ஆடிண்டிருக்கான் வயத்தெரிச்சலைக் கொட்டிக்கிறான், வந்தவாளை விசாரிக்கச் சொல்லு. மயக்கங் கலையட்டும்—" என்று மணி அய்யர் 'கல்லா'விலிருந்து கத்தினார்.

"ஏண்டா ஹரிஹரா, கொஞ்ச நாழி வெளியில் காத்தாட நின்றுவிட்டு வருவதற்குள் ப்ரளயம் பண்ணிப் பிடறையே!" என்று சொல்லிக் கொண்டே, ராமையர் உள்ளே நுழைந்தார். பிறகு குறும்புத்தனமாய், "என்னடா உன் எஜமானுக்கு வயிறு எரியறதாமே, கொஞ்சம் 'ஐஸ் வாட்டர்' ஊத்தக்கூடாதா ஊறுகாய் ஜாடி மாதிரி அந்த வயத்திலே?"

"எல்லாம் இரு இரு இன்னி சாயங்காலம் வரைக்கும் தான். அப்புறம் இந்த மணி ஐயன் எங்கேயோ, நான் எங்கேயோ!"

"ஏன் அதற்குள்ளேயும் எந்த மாமனார் பணத்தோடே இன்னொரு கல்யாணம் நிச்சயம் பண்ண வரான்?"

"மார்ணிங் ஸ்டார்."

"என்னமோ அப்பா, நீதான் மார்ணிங் ஸ்டார் மேல் அப்படி ஒற்றைக்கொம்பா நிக்கறே! எல்லாரும் 'லைட்னிங்'—"

"ராமையரே உமக்கும் எமக்கும் எவ்வளவோ வாரெடை இருக்கு இந்தக் குதிரை ஜாதக விஷயத்தில் நீர் எனக்கு விட்டுக் கொடுத்துதான் ஆகணும். மூளையில் லாமலா 'மார்ணிங் ஸ்டார்' மேலேயே போட்டிருக்கேன்!"

"எனக்கு எப்படியப்பா தெரியும், உனக்கு மூளை யிருக்கு இல்லையென்று?"

"இன்னி சாயங்காலம் தெரியுங்காணும் ஓய்! நூறு ரூபாய் ஸ்வாமி முள்ளங்கிபத்தை மாதிரி நூறு ரூபாய்!"

"ரூபாய் ஏது அப்பேன் இப்போ? பஸ் டிக்கட் மாதிரி நோட் என்று சொல்லு!"

ஹரிஹரன் மேல் துண்டால் உடம்பைத் துடைத்துக் கொண்டே வெளியே வந்தான்.

நூறு ரூபாய்! சிறுகச் சிறுக, 'எம். எஸ்.' கச்சேரி கேட்ட பணம் போக, 'பாகவதர் படம்' பார்த்த பணம் போக, மூர்மார்க்கெட்டுக்கு ஷோக்காய்க் கண்ணாடி, சீப்பு, வாசனைத் தைலம் எல்லாம் வாங்கப் போய், முடிச்சவிழ்ப்பவன் பறிச்சது போக, ஹோட்டலில் கை தவறிக் கீழே நழுவவிட்ட கண்ணாடி டம்ளர்களுக்கு (இது தினம் ஆகும் இரண்டு மூணு சராசரி) அழுத அபராதப் பணம்போக, வீட்டில் செலவுக்கு தர்மபத்தினி அலமேலுவுக்குக் கட்டின கப்பம்போக, ஆசைக் கிழத்தி சந்திராவுக்கு ஸமர்ப்பித்த பணம் போக— இத்தனை கண்டங்களையும் சமாளித்துக் கொண்டு, தேனீ தேன் கூட்டுவதுபோல் சிறுகச் சிறுகச் சேர்த்த பணம்—நூறு ரூபாய்!

ஆமாம். இந்தச் சந்திரா விவகாரம்தான் வரவர ரொம்ப மோசமாய்ப் போச்சு. புள்ளி போட்டால் அவள், பற்றுத்தான் தூக்கி நிற்கும். எப்படியாவது அவளைத் தொலைத்துவிட வேண்டியதுதான். ஆனால் இப்படியே தான் எட்டு வருஷமா.

ஹரிஹரா! அடே, அக்ரமம் பண்ணாதேடா யாராரோ வந்திருக்காளே, கவனீடா!"

"என்ன, ஸார், வேணும்? டில்பர்டோஸ் ஸ்ரெத்காரி பாம்பே காஜா, காசி ஹல்—"

"அதெல்லாம் நமக்கென்னாத்துக்குங்க ஐயரே! ரெண்டு போண்டா ஸாம்பார் நிறைய சாம்பார் விட்டுக் கொண்டாங்க. கையோடே ஒரு கப் காப்பி. சுருக்க ஆவட்டும் சரக்குப் பிடிக்கப் போவணும்—"

காப்பி கலப்பதில் ஹரிஹரனுக்கு இணை எவருமே யில்லை. அது ஒண்ணுக்குத்தான் ஹரிஹரனை மணி ஐயர் வேலையில் வைத்துக் கொண்டிருந்தார் என்று சொல்லணும். காப்பிக்கு மாத்திரம் ஹரிஹரனுக்குத் தனிக் கைராசி— 'காப்பி' ராசி.

டிகாக்ஷனை ஸத்தாயிறக்கி, கெட்டிலில் ஊற்றி, இறுக மூடி, பால் 'குபு குபு' என்று மணத்துடன் புகைவர ஒரு பக்கத்தில் காய வைத்துக்கொண்டு, அப்போதைக்கப் போது "ஒரு கப் காப்பி!" "அரை கப் காப்பி ஸ்ட்ராங்!" என்று கூவல் கிளம்பும் பொழுதெல்லாம், சட்டென்று கெட்டிலை எடுத்து ஒரு சுழற்று சுழற்றி, டம்ளரில் டிகாக்ஷனை ஊற்றி, ஒரு கரண்டி பாலை உயரத் தூக்கி ஆற்றி, காப்பி பவுன் நிறமாய் மாறி நுரை தளும்ப, கம கமவென்று மணங் கமழ—

"சபாஷ்! காப்பி என்றால் மணி ஐயன் ஹோட்டல் தானப்பா! பாக்கியெல்லாம் பாடாவதியானாலும் காப்பி

யிலே எல்லாமே அடிச்சுண்டு போயிடறது. காப்பின்னா எப்படியிருக்கும் தெரியுமா? எப்படிச் சொல்றது? 'திக்'காயிருக்கும் என்கட்டுமா? மணமா யிருக்கும்னு சொல்லட்டுமா?— அதெல்லாம் சரியில்லேப்பா! பொம்ம னாட்டி மாதிரியிருக்கும், அழகாய்! ஜோராய் சொகு—"

"ஆமா—காப்பி போட்டால் மாத்திரம் ஆயிட்டுதா" கலக்கற ஷோக் வேறேயிருக்கப்பா! அதுக்கு ஹரிஹரன் தான் சரி. பார் அவன் ஆத்தற 'ஸ்டைலை'யே பார்!?

வந்தான் ஹரிஹரன். காப்பி டம்ளரையும் டபரா வையும் பந்தாடுவதுபோல் ஏந்திக் கொண்டு வந்து மேஜையண்டை நின்று, காப்பியை ஒரு விசிறு விசிறி ஆற்றினான். டம்ளருக்கும் டபராவுக்கு மிடையில், சுமார் மூன்றடி வீச்சுக்குக் காப்பி சாட்டை அடித்தது. ஆனால், டபராவில் இறங்க வேண்டிய காப்பி மறுபடியும் டபரா வில் இறங்கவில்லை. நேரே, காப்பி கேட்டிருந்த ஆள் தலைமேலேயே போய் இறங்கி ஒரு இடம் பாக்கி இல்லை—அவருடைய முகம் மீசை மயிர் நுனிகள், பட்டுச் சொக்காய், அங்க வஸ்திரம்' ஜரிகை விசிறி மடிப்பு வேஷ்டி—ஒன்று பாக்கியில்லை. (அப்புறம் ராமையர்: "ராமபாணம் கெட்டுது போடா!")

நாற்காலிகளும் மேஜைகளும் நகர்ந்தன. கண்ணாடி டம்ளர்கள் கிண் கிணுத்தன. பித்தளை டம்ளர்கள் கலகலத்தன.

"த்ஸோ! த்ஸோ! த்ஸோ!"

"ஹ ஹ ஹ!"

"ஹோ ஹோ ஹோ!"

"அடாடா! புத்தம் புதிசுபோல இருக்கே ஸார்"

"ஹரிஹரா!"

ஹரிஹரன் கல்லாவுக்கெதிரே நின்றான். மணி ஐயருக்கு நாக்கு மேல்வாயை முட்டுகிறதேயொழிய, வார்த்தை வரமாட்டேன் என்கிறது.

"பில் புஸ்தகத்தை இங்கே வை !"

ஹரிஹரன் பேசாமல் அப்படியே வைத்தான்.

"பென்சிலை வை !—"

அதுவும் ஆயிற்று.

"வெளியே போ—! போயிடு—இங்கே நிற்காதே—"

ஹரிஹரன் சற்று நேரம் தெருவில் அலைந்து கொண்டிருந்தான். அவனுக்குக் காற்றாட ஸௌகரிய மாயிருந்தது. பக்கத்து வெற்றிலை பாக்குக் கடையில் வெற்றிலை போட்டுக் கொண்டான்.

வேலை ? ?

ஓ ! வேலையா ? அதைப்பற்றி அவனுக்குக் கவலை யில்லை. அவனைவிட்டால், மணி ஐயனுக்கு வேறு கதியில்லை ; மணி ஐய்யனை விட்டால், அவனுக்குக் கதியில்லை. இம்மாதிரி இரண்டு, மூன்று மாதங்களுக் கொருதடவை நேர்வதுண்டு இந்த வேலைக்குத்தான் மானம், வெட்கம், ரோசம், விவஸ்தை ஒன்றும் கிடை யாதே !

அபிஷேக சுந்தரர் வெளியில் செல்லும் வரையில் ஹரிஹரன் சற்றுத் தலைமறைவாயிருந்தான். அவர் போன பிறகு, சற்றுத் தைரியமாகவே ஹோட்டல் வாசற் படியண்டை உலாவ ஆரம்பித்தான்.

சாயங்கால வேளை முற்ற முற்ற, உள்ளே கூட்டம் நெரிந்தது.

"ஹரிஹரா !"

"இதோ !"

"உள்ளே போய்க் கவனி !"

ஹரிஹரன் பம்பரமாய்ச் சுழன்றான். அவன் வேலைக்கு வேகம் ஏற்பட்டாலே ஒரு குஷிதான். அங்கே போவதும் இங்கே வருவதும், கொட்டியிறைப்பதும் இதைக் கூடையில் வாருவதும், உடைப்பதும் துடைப்பதும்—

பந்தயத்தின் முடிவுகள் பத்திரிகைகளில் வந்து விட்டன. சோடாக் கடையில் ஒரு சின்ன 'ஜமா' கூடிப் பேசிக் கொண்டிருந்தது. ஹரிஹரன், அவசர அவசர மாய், இடுப்பு முண்டில் கையைத் துடைத்துக் கொண்டு அங்கே வந்து சேர்ந்தான்.

"ஹரிஹரனா ! வா, வா, வா, வாடா அப்பனே !— வந்தையா ?—"

இந்த அலாதியான கொஞ்சல் வரவேற்பு ஹரிஹர னின் அடிவயிற்றை என்னவோ பண்ணிற்று.

"அஹோ வாரும் பிள்ளாய் ஹரிஹரரே !—" என்றான் இன்னொருவன்.

அடுத்தாற்போல் ராமையர் வந்து சேர்ந்தார். "நம் நாட்டில் மாதம் மும்மாரி பெய்கிறதா ? உன் குதிரை கெலித்ததா ?"

"இன்னும் கெலித்துக் கொண்டேயிருக்கு !—" என்றது ஒரு குயுக்தி.

"அப்படின்னா ?"

"தெரியாதா ? தெரிஞ்ச விஷயந்தானே ? 'லைட் னிங்க்' முதல் ; 'ஸாவேஜ்' இரண்டாவது ; 'ஜாலி' மூணாவது—"

"மார்ணிங் ஸ்டார்?" என்று பரபரப்பாய்க் கேட்டான் ஹரிஹரன்.

"நோவேர்தான்! கடைசியிலே முதல்!"

"மார்னிங் ஸ்டாரரா சாமி?—" என்று சோடாக்கடை நாயர் குறுக்கே பேச ஆரம்பித்தான். அவன் முகத்தில் விஷமம் கூத்தாடிற்று. "யான் பந்தயங் காணப் போயிருந்தது. ஈ மார்ணிங் ஸ்டார் விஷயம் யாவரும் கேளணும்! வாலைத் தூக்கி ஓடவும் சக்தியில்லா. ஆ குதிரை யாவதுக்கும் கடைசி. அதுக்கு ஆகாரம் இல்லா என்னு என் சம்சயம். யாது காரணம் கேட்டோ?— முன்னே குதிரை ஓடறதில்லா, ஆ குதிரை வாலை ஈ மார்ணிங் ஸ்டார் மென்னு அசை போடறது. அது குதிரையல்லா கழுதை—"

நாயரை அடிக்க ஹரிஹரன் கையை ஓங்கிவிட்டான். நாயர் தலைகுனிந்து பின் வாங்கிக் கொண்டே, "யாது ஸாமி, இந்தா தேஷீயம்? யான் உள்ளதைப் பறைஞ்சுது. ஞான் அரிச்சந்த்ர வம்சமாக்கும்—என் குடும்பம் மலையாளம் போய்க் குடியேறியது—யான்—"

தலை சுழன்றது.

★ ★ ★

ஹரிஹரன் வந்து கதவை இடித்தான். இல்லை, உடைத்தான். அவன் விடுதி கடைசிக் கட்டு. நல்ல நாளிலேயே முன் கட்டிலிருப்பவர்கள் கதவைத் திறக்க மாட்டார்கள். அதுவும் நடுநிசியில் கேட்பானேன்?

"ஹூம்—ஹூம்" என்று முனகிக்கொண்டு, மெல்ல, மெல்ல ஆடி ஆடி அசைந்து தள்ளாடி வந்து, கதவைத் திறந்த அலமேலு கையில் விளக்கைப் பிடித்த வண்ணம்

நின்றாள். உடலெல்லாம் 'வெடவெட' வென்று உதறிற்று: கடுஞ்ஜுரம்.

சற்று நேரம் எங்கேயோ ஞாபகமாய் அவளைப் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு, குனிந்த தலையுடன் ஹரிஹரன் உள்ளே நடந்தான்.

"மூணு நாளாய்க் கண்ணைத் திறக்கக்கூட முடியல்லே என் நினைப்பேயில்லை— உங்களையும் காணோம்—இந்த வீட்டில் இத்தனை பேரிருக்கான்னு பேரேயொழிய, மல்லாந்த வாய்க்குத் தண்ணு ஊத்தற மனுஷாள் ஒத்தருமில்லே— நீங்களோ—"

ஹரிஹரனின் மூளை எங்கேயோ வேலை செய்து கொண்டிருந்தது.

"தாகமோ நாக்கை வறட்றது. அன்ன ஆகாரம் பச்சைத் தண்ணு மூணு நாளாயில்லை. இப்பொத்தான் எழுந்திருந்து ஒரு வாய்க் காப்பித் தண்ணு போட்டேன் அதுக்குள்ளே குளிர் வந்துடுத்து — அதை மாத்திரம் கொஞ்சம் கலந்து கொடுங்கோ—பாலைக்கூடக் காய்ச்சி ஆயிடுத்து—"

ஹரிஹரன் இன்னமும் பேசவில்லை. இவ்விடத்து நினைப்பில்லாமலே, சின்ன அடுக்கில் டிகாக்ஷனை இறக்கி, அதன் மேல் பாலை விட்டுக்கொண்டே, கஷாயம் திரிவதைக் கவனித்துக் கொண்டிருந்தான். பிறகு, ஒரு கலக்குக் கலக்கி, ஒரு தரம் தூக்கி ஆற்றினான்—தன்னினைவு சுரீலென்று எழுந்தது.

மத்துக் கடைந்து பொங்கியது போன்ற அம்மன வெழுச்சியில் அவனுக்கென்ன தோன்றிற்றோ காப்பியை விசிறியடித்த வேகத்தில், எதிர்ச் சுவரில் பரவி விழுந்தது. அங்கிருந்து அது கோடு கோடாய் வழிவதை ஒரு

நாழிகை கவனித்துக் கொண்டிருந்துவிட்டு, ஹரிஹரன் வெளியே நடந்தான்.

எங்கே செல்வது ?

சந்திரா—

சந்திரா நல்ல அழகு; மஹா புத்திசாலி. பேச்சிலே தேன் ஒழுகும்; பாடினால், சாப்பாடுகூட வேண்டிய தில்லை; இன்றைக்கெல்லாம் உட்கார்ந்து கேட்டுக் கொண்டிருக்கலாம். ஆனால், சந்திரா மனுஷ ஜன்ம மில்லை. இப்போது போய்க் கதவையிடித்தால், "அஞ்சு ரூவாயானாலும் சும்மா வரப்போமோ?..." என்று ஸஹானா பாடிக் கொண்டே, சிரித்த முகத்துடனேயே கதவைச் சாத்திவிடுவாள்.

குனிந்த தலையுடன் ஹரிஹரன் நடக்க ஆரம்பித் தான். அவன் கால்கள் அவனையும் அறியாமல் சமுத் திரக்கரைக்கு இழுத்துச் சென்றன. போய், மணலில் குப்புற விழுந்தான்.

மையிருட்டில் குளிர்ந்த காற்று உடலின் மேலும், மூடிய கண் இமைகளின் மேலும், மெல்லெனத் தவழ்ந்து விளையாடியது. பிறகு, குளிர ஆரம்பித்துவிட்டது. ஆனால் அவன் அப்படியே படுத்திருந்தான். இரண்டு தினங்களாகவே நல்ல தூக்கமில்லை. இன்றிரவு சாப்பாடு மில்லை. குடித்திருக்கும் காப்பிக்கோ அளவேயில்லை. வயிற்றைப் பிரட்டி, வாந்தி வருவதுபோல் குமட்டிற்று. மூர்ச்சை போட்டாற்போல் விழுந்து கிடந்தான்.

எங்கிருந்தோ ஸென்ட்ரல் ஸ்டேஷனின் மணி அடித்தது. 1, 2, 3, 4—!

நேரமாகிவிட்டது; அடுப்பை மூட்டி, இட்டிலிப் பாத் திரத்தை அதன்மேல் ஏற்ற நேரமாகிவிட்டது. இன்று அவன் 'டேர்ண்'.

தலையைத் தூக்கிச் சுற்றுமுற்றும் பார்த்தான். விடியும் சமயந்தான். நட்சத்திரங்கள் எல்லாம், ஒன்றன் பின் ஒன்றாய் அவிந்தாகி விட்டது. அப்பொழுது தூரத்தில் அடிவானம் வெள்ளத்தைத் தொடும் எல்லையில் பளிச்சென்று ஒரு நட்சத்திரம் பிறந்தது.

அதுதான் விடிவெள்ளி. Morning Star.

உதட்டில் ரத்தம் கசிய அமுக்கிக் கடித்து விழுங்கிய அழுகை கண்களில் பீறிட, ஹரிஹரன் எழுந்து ஹோட்டலைப் பார்க்க நடந்தான்.

# எது நிஜம் ?

மூன்று நாட்களாய் மழை. பத்து நிமிஷம் அடித்து, பத்து நிமிஷம் காயும் மழையில்லை. பிசுபிசுவென ஓயாது நச்சரிக்கும் தூறல். வெளியிலும் போக விடாது, உள்ளேயும் இருக்க விடாது இம்சை. வாசலுக்கும் உள்ளுக்குமாய் பின்னால் கையைக் கட்டிக்கொண்டு அலைந்தேன். ஊஹூம் ஒரு 'கேஸ்' கூட வருவதாய்த் தெரியவில்லை. இத்தனை மழைக்கு இதென்ன ஒரு ஜலதோஷ ஜுரம் கூடவாயில்லை ? அலுப்புத் தட்டிற்று. மறுபடியும் வாசலில் வந்து எட்டிப் பார்த்தேன். என் பெயர் பொறித்த மரப்பலகையிலிருந்து இறங்கிய கசண்டாய் மழை ஜலம் மூக்கின் மேல் சொட்டிற்று. என் பெயரே பாதிக்குமேல் அழிந்துபோயிருந்தது. போர்டை மாற்ற இன்னும் கைவரவில்லை. வந்தவர்களிடம் சொல்லிக்கொள்ளலாம். "இதென்ன ஸார் நாடறிந்த பார்ப்பானுக்குப் பூணூல் எதற்கு ?" ஆனால், விஷயம் என்னவோ வேறு.

அதற்கென்ன பண்ணுகிறது ? சம்சாரியென்றால் எல்லாவற்றையும்தான் கணக்குப் பண்ண வேண்டியிருக்கிறது. ஒரு சமயம் போலவே இருக்கிறதா ? பாரு எதற்கெடுத்தாலும் சொல்கிறாள்: "இரண்டு தம்பிடியுடன் ஒரு தம்பிடி சேர்த்தால்தானே அரையணா ஆகும் ? வெறுமெனே இரண்டு தம்பிடியை மாத்திரம் நிறுத்தி வைத்துப் பாருங்களேன். அதற்கு அரையணா மதிப்பு உண்டா ?"

இதோ இப்போத்தான், இரண்டு நிமிஷத்துக்கு முன்னால் கூட சண்டை. அறையில் அதன் ஆவி இன்னும் கலையவில்லை.

"தரித்திரம் பிடித்த மனசு உனக்கு:"

"ஆஹா, தாராளப் பிரபுவைத்தான் பார்த்துண்டே யிருக்கேனே. நாளுக்கு நாள் கண்ணுக்கெதிரே, சிபிச் சக்ரவர்த்தியை! இருக்கிறதையெல்லாம், கடனாயும் தானமாயும் கொடுத்துவிட்டு ஏராளமாய், "ஹோ லட்சுமணா!" என்று நிக்கிறதை!"

"பாரு, நீ 'லா' பாயிண்டெல்லாம் ஷோக்காய்ப் பிடிக்கிறாய். உங்கப்பா உன்னைப் பேசாமல் வக்கீலுக்குப் படிக்கப் போட்டிருக்கலாம்."

"ரொம்ப சரி போங்கோ! நீங்கள் டாக்டருக்குப் படித்திருக்கிறமாதிரிதான்!"

எனக்கு சிரிப்பு வந்துவிட்டது.

"என்னைக் கோபப்படுத்த வேண்டுமென ரொம்பவும் சிரமப்படுகிறாய். ஆனால் எனக்கே இப்போது கோபம் கூட வருவதில்லை. கோபம் வருகிற இடத்தில் சிரிப்புத் தான் வருகிறது. எது நிஜம், கோபமா? சிரிப்பா? இல்லை எனக்கு சொரணையற்று விட்டதா?"

விரித்த துணிமேல் கால் கட்டை விரலைச் சப்பியபடி தூங்கிவிட்ட குழந்தையைப் பார்த்தபடி, அவள் யோசனையாய் நின்றாள்.

"என்னைக் கேட்டால்?"

நான் தொண்டையைக் கனைத்துக் கொண்டு, கௌரவத்தை மீட்க முயன்றேன். "எனக்கு இப்பொழுது ஒரு எண்ணம் தோன்றிற்று."

"உங்களுக்கு ஒண்ணுதானே! எனக்கு ஒன்பதாயிரம் தோணிண்டேயிருக்கு."

"பேச்சில் மடக்குகிறது அப்புறம் இருக்கட்டும்! எனக்குத் தோன்றியதைச் சொல்கிறேன். ஒரு பத்து வருஷங்களுக்கு முன்னால் என்னிடம் நீ இப்படிப் பேசித் தான் இருக்க முடியுமா?"

குழந்தைமேல் தாழ்ந்த அவள் பார்வை மெதுவாய் உயர்ந்து என்னைச் சிந்தித்தது.

"பத்து வருஷங்களுக்கு முன்னால் நான் இப்படி இல்லை—"

"ஓஹ்ஹோ!"

நகைப் பெட்டியைக் கெட்டியாய் அமுக்கிப் பிடித்துக் கொள்வதுபோல் அவள் கைகள் ஒன்றன்மேல் ஒன்று இறுகிப் பொத்திக் கொண்டன.

"பத்து வருஷங்களில் நான் இப்படி ஆனேன்." இரண்டு சொட்டுக்கள் விழியோரங்களில் புறப்பட்டு மன மிலாது கன்னங்களில் வழிந்து மோவாயிலிருந்து உதிர்ந் தன. எனக்கு மூச்சுத் திணறிற்று.

அவள் சரேலென சமையலறைக்குள் போய்விட்டாள்.

நான் வாசலறைக்குப் போய், மேஜைமேல் கையைக் கோர்த்துக் கொண்டு உட்கார்ந்துவிட்டேன்.

என்னையுமறியாமல் என்னிலிருந்து ஒரு பெருத்த மூச்சு தேம்பிப் பிரிந்தது, அதன் அசதியை உணர்கையில் எனக்கே ஆச்சர்யமாயிருந்தது. மிகப் பழைமையான மூச்சு. வெகு நாட்களினடியில் புதைந்திருந்து இப்போதுதான் விடுதலையடைந்த மூச்சு. நாம் பிறக்கு முன்னரே நம் உயிர், வாழ்வில் விடப்போகும் மூச்சுக்களை எண்ணி நம் உடலில் அடைத்து வைத்திருந்தால், பின் தங்கிவிட்ட இந்த மூச்சின் இடம் எங்கிருந்திருக்கும்? அது போனதும் எனக்கே கொஞ்ச நேரம் உடல் லேசாய்க் காற்றில் மிதப்பதுபோல் இருந்தது.

"பிங் ! பிங் !!—"

குழாய் வழி காற்று ஊதும் சப்தம். பாரு அடுப்பில் நெருப்பை எழுப்புகிறாள். திடீரென அவள் மேல் எனக்கு மனம் பரிதபிக்கிறது. பாரு! உன்மேல் குற்றமில்லை; நீ எழுப்பித்தான் பார்க்கிறாய் ஆனால் குழந்தாய், நீ ஊதும் இடத்தில் சாம்பல் பூத்து மாத்திரம் போகவில்லை; நீர்த்தே போய்விட்டது. நீ என்ன செய்ய முடியும்? பாரு! நீ சொன்னது நிஜம். உனக்கு நான் வணங்குகிறேன் பத்து வருடங்களுக்கு முன் நீ இப்படி இல்லை.

ஆனால், பத்து வருடங்களுள் எவ்வளவு நேர்ந்துவிடு கின்றன? பிள்ளைப் பேறுகள். வைத்தியன் வீட்டில்தான் வியாதி. குழந்தைகள் பெரியவர்களின் பிடுங்கல், ஆசா பாசங்கள் எல்லாம்தான். மடு மேடாகிவிடுகிறது மேடு மடுவாகி விடுகிறது. இறக்கைகள் முளைத்து மூலைக்கு மூலை பட்சிகள் பிய்த்துக் கொள்கின்றன. கூடு கலைந்து விடுகிறது. பொட்டலம் அவிழ்ந்து விடுகிறது.

ஆசையே இல்லை என்று சொன்னவர்களுக்கு ஆசை ஏற்படுகிறது. ஏற்பட்ட ஆசை நிறைவேறுகிறது; நிறை வேறின ஆசை துராசையாக மாறுகிறது. அப்புறம் கோணி, குதிர், பூமி, ஆகாசம் எதுவுமே போதவில்லை. நான் மாத்திரம் ஏணிபோல், சார்த்திய இடத்திலேயே இருக்கிறேன்.

"போஸ்ட் !"

கடிதத்தைப் பிரிப்பதற்கு முன்னால் முன்னும் பின்னும் திருப்பிப் பார்த்தேன். ஒன்றும் நம்பிக்கையாயில்லை. கடன் கொடுத்த பணத்தைத் திருப்பித் தருவோனோ டாக்டர் பில்லைத் தீர்ப்பவனோ எவன்? பிரித்தேன். பாச்சா எழுதி இருக்கிறான்: "யார் எழுதி இருக்கா ?" என்று கேட்டுக் கொண்டே பாரு வந்தாள்.

'அண்ணாவுக்கும் மன்னிக்கும் அநேக நமஸ்காரம். நெடுநாட்களாக எழுதாததற்கு மன்னிக்க வேணும்;

வியாபார அலுவலில் வாயில் ஈ புகுந்தது கூடத் தெரிய வில்லை. நிற்க: நான் நம் வீட்டை இடித்துக் கட்டிக் கொண்டிருக்கிறேன். கேள்விப்பட்டிருப்பீர்கள் என்று நினைக்கிறேன். ஆனால் ஒரு சிக்கல்; சின்ன விஷயம் தான் என்னவோ ஏதோ என்று திகில் அடையாதே. இஞ்சினீயர் போட்ட பிளானில் உன் பாகத்துக்கு விழுந் திருக்கும் அறையும், கூடமும் தடங்கலாய் நிற்கின்றன. உன் சம்மதத்தைப் பற்றி எனக்குத் துளிக்கூட சந்தேகம் கிடையாது. ஆகையால் இடிக்க ஏற்பாடு பண்ணிவிட் டேன். இடித்து மேலே கட்டடமும் எழும்பிக் கொண்டிருக் கிறது. ஆனால் செல்லாவின் பிடுங்கல்தான் தாங்க முடிய வில்லை. அண்ணாவுக்கு எழுதினேளோ எழுதினேளோ? என்று தூங்கவிடமாட்டேன் என்கிறாள். அதனால் அண்ணா உனக்கு எழுதிவிட்டேன். கிரஹப்ரவேசம் முகூர்த்தம் குறித்ததும் தெரியப்படுத்துகிறேன். நீயும் மன்னியும் அவசியம் வரணும்; ஏமாற்றக் கூடாது—'

"இதென்னடிம்மா பகல் கொள்ளையாயிருக்கே! இந்த அக்ரமத்தைக் கேப்பாரில்லையா?"

பாதியிலேயே பாரு இரு கைகளாலும் வாயைப் பொத்திக் கொண்டாள். விழிகள் வளையங்களாயின.

"இரு இன்னும் இருக்கிறது ஒரு பின் குறிப்பு:— 'அண்ணா நீ குறைப்பட்டுக் கொள்ளாதே. கிரயமாய் ஏதாவது வேணுமானாலும்—பிறகு உன் இஷ்டம். உன் கஷ்டம் நமக்கு ஏதுக்கு என்கிறாள் செல்லா."

"கையெழுத்து என்ன செல்லாவா? செல்லா சொற்படி பாச்சாவா? அடிக்கிறதையும் அடிச்சுட்டு உங்கள் தம்பி யும் என் ஓர்ப்படியும் நம்மைச் சிரிக்கச் சொல்றாளா? நீங்களும் இப்போத்தான் சொன்னேள், கோபம் வருகிற இடத்தில் சிரிப்பு வரதுன்னு."

அவள் இடிக்கையில் எனக்கு மறுபடியும் சிரிப்புத்தான் வந்தது. ஆனால் காதிலும் மூக்கிலும் ஆவி பறந்தது.

"என்ன செய்யப்போறேள்? ஏதோ சாமி தரிசனத்துக்கோ குழந்தைகளுக்கு முடியிறக்கவோ போனால் பொங்கித் தின்ன நமக்குன்னு நாலடி இருக்குமேன்னு பார்த்தேன்."

"அதுக்கென்ன தம்பி வீட்டிலேயிறங்கினால் ஆகாதா? சத்திரம் மாதிரி வீடு பெரிதாயிருக்காதா?என்ன அப்படிப் பார்க்கிறாய்?"

'நீங்களென்ன இப்படியேதான் இருக்கப் போறேளா கடைசி வரைக்கும்?'

"ஏன், எப்படி இருக்கிறேன்?"

"உங்கள் மனசுக்குள்ளே நீங்கள் பெரிய ரிஷி என்று எண்ணமா?"

"ஐந்து குழந்தைகளைப் பெற்று வைத்துக்கொண்டு நான் ரிஷி என்றால் யார் ஒப்புக் கொள்வார்கள்?"

"உங்களுக்கு அந்தப் பொறுப்பு இருக்கோ?"

எனக்குக் கோபம் வந்துவிட்டது. "நீ வாத்தியார் மாதிரி என்னை நிறுத்தி வைத்துக் கேட்கிறது நன்றாயில்லை. என்னை என்ன பண்ணச் சொல்கிறாய்? அவன் என் தம்பி."

"யார் இல்லேன்னா?" பாருவுக்கு சீற்றம் தாங்க முடியவில்லை. கைகளை முஷ்டித்து மேஜைமேல் ஊன்றிக் கொண்டாள். "அவர் தம்பிதான். நீங்கள் அண்ணா, அண்ணாவிலும் அண்ணா. முத்தண்ணா..."விடுவிடென்று உள்ளே சென்றாள்.

எனக்கு மஞ்சள் பித்தமாய் நெஞ்சுதான் கசந்தது. இருந்தும் நான் என்ன செய்ய முடியும்? பாச்சாவோடு சிண்டைப் பிடித்துக் கொள்வதா? அவன் பிச்சையை வாங்கிக் கொள்வதா மறுப்பதா? இருந்தும் அவன் என்

பாகத்திற்கு விழுந்து என்னைக் கேட்காமலே அழித்து விட்ட அறையை நினைக்கையில் எனக்குக் கண்கள் இருண்டன. என் அறையில்லை; என்னுடையது என்று நான் எதையும் கொண்டாடியதில்லை.அது அப்பா அறை. அப்பா வாசற்படி தாண்டி பேச்சுக்கோ பொருளுக்கோ போகமாட்டார். கோவிலுக்குப் போகும் நேரமும், சாப்பாட்டு நேரமும் போக, பாக்கி நேரம் ஜன்னலுக்குப் பக்கத்தில் போட்ட விசுப் பலகைமேல் உட்கார்ந்து ஏதாவது படித்துக்கொண்டோ எழுதிக் கொண்டோ யிருப்பார். இரவு அங்குதான் படுப்பார். அப்பாவுக்கு எல்லா மருந்துக்கும் ஒரே மருந்துதான். அவர் இடுப்பில் நிமிண்டிக் கொண்டிருக்கும் வெள்ளி விபூதி சம்புடந்தான். "போடா ராமு, உன் ஊசிகளையும் புட்டிகளையும் தூக்கிக் குப்பையில் போடு. இந்தா, ஒரு சிம்டாவை எடுத்து அன்னத்தில் தூவி சாப்பிட்டால், எல்லாம் பறந்தோடிப் போகும்—"

அப்பா அந்த அறையில், அந்த விசுப் பலகையின் மேல் தான் உயிர்நீத்தார். மருந்து மாயம் பார்க்கவில்லை. பார்க்க நேரம்கூட இல்லை. இரவு எட்டு இருக்கும். நான் கூடத்தில் அம்பிப் பாப்பாவோடு விளையாடிக் கொண்டிருந்தேன். அது விளக்கைப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தது.

"ராமா! ராமா!!" என்று அப்பா கூப்பிட்டார். "என்னப்பா?" கூடத்திலிருந்தே கூவினேன். எனக்குக் குழந்தையுடன் விளையாடும் சுவாரஸ்யம். என் மூக்கையும் வாயையும் அதன் வயிற்றில் புதைத்துக்கொண்டு தேய்த்ததும் கிளுகிளுவென சிரிப்பு மத்தாப்பு கொட்டிற்று.

"ராமா சுருக்கவா!—" அப்பாவின் குரல் கணீரென்றது. "என்னப்பா?" என்று கேட்டுக்கொண்டே ஓடினேன், யார் தாய், யார் கன்று?

"ராமா! என்னை மெதுவாய் படுக்கவை. எனக்குக் கால் விழுந்துவிட்டது. இன்னும் கொஞ்ச நாழியில் போய் விடுவேன்—"

"என்னப்பா? என்னப்பா சொல்றேள்??" என்று பதறினேன். என்னதான் நான் வைத்யனானாலும், என்ன தான் சாவு பழக்கமானாலும், நான் என் அப்பாவுக்கு மகன்தானே!

"ஒண்ணுமில்லை ராமா, கவலைப்படாதே — ஊ—ஹூம், தலைகாணி வைக்காதே—தலையைக் கீழே போடு."

"அப்பா! அப்பா!!—"

"உஷ்—இப்போ அழக்கூடாது. அப்புறம் அப்புறம், எனக்கென்னடா குறைச்சல்? ராமா ராமா என்று என் பிள்ளை பேரைச் சொல்கையில் ராமதாரகத்தைச் சொல்லிக்கொண்டே போகிறேன். அந்த ராமாயணத்தை என் கையில் வை. ராமா, நீ நல்லவன்; உலகத்தில் எப்படிப் பிழைக்கப் போகிறாய் என்று உன்னைப் பற்றித் தான் கவலை. ஆனால் அதற்கு நான்தான் என்ன செய்யமுடியும்? நான் என்ன சதமா? யார்தான் சதம்? உன் அம்மா கூப்பிடுகிறாள் போகிறேன். ராமா ராமா—"

அந்த இடந்தான் என் பாகத்துக்கு விழுந்து என் தம்பி யழித்துவிட்ட என் அப்பாவின் அறை. என்னுடையது என்று எதையும் நான் கொண்டாடியதில்லை. அந்த விசுப்பலகையாவது இருக்கிறதோ அல்ல செல்லா அதையும் பிளந்து வென்னீரடுப்பில் சொருகி விட்டாளோ யார் கண்டது. யார் என்னத்தைச் செய்ய முடியும் எப்பவுமேதான் யார் என்னத்தைச் செய்ய முடிகிறது? நியாயத்தை விதிக்க நான் மனுவா அல்ல மனுசொன்ன படிதான் எல்லாம் நடக்கிறதா? அவரவர்களுக்கு அவரவர் நியாயம். அதன்படி ஒரு பொது நிதி. அங்கு

என் தம்பி வீட்டையழித்துக் கட்டி வாடகைக்கு விடப் போகிறான். அவனுக்கு ஏற்கெனவே மூன்று வீடுகள் இருக்கின்றன. இங்கு நான் இன்றைய பொழுது எனக்கு குடும்ப ஜீவனத்துக்கு ஒரு நோயாளியாவது வரமாட்டானா என்று காத்துக் கொண்டிருக்கிறேன்.

ரேழியில் ஒரு நிழல் தட்டிற்று. என்னப்பா என் பிரார்த்தனை உன் காதுக்கு எட்டிவிட்டதா ?

"டாக்டர் இருக்காரா ?"

"வாங்கோ வாங்கோ உட்காருங்கோ. என்னய்யா, மழை நின்று வரக்கூடாதா ? ஒரே தொப்பலாய் இருக்கிறீர்களே !"

வந்த ஆள் நாய்க்குட்டி போல் உடம்பை உதறிக் கொண்டான். என் முகத்தில் ஜலத் துளிகள் தெறித்தன. முகத்தைத் துடைத்துக் கொண்டேன். வந்தவனுடன் உடனே சண்டை போட முடியுமா ? ஒண்ணே ஒண்ணு கண்ணே கண்ணு என்று வந்திருக்கிற பேரம். நினைத்துப் பார்த்தால் சிரிப்புத்தான் வருகிறது.

"டாக்டர் ! நீங்கள் ரொம்பவும் கெட்டிக்காரர் என்று சொல்கிறார்கள்."

"எனக்கு வெட்கமாயிருக்கிறதே" என்றேன். அம்மாதிரி ஒருவரும் சொன்னதாய் நான் கேட்டதில்லை, இருந்தாலும் சொல்பவனை ஏன் தடுக்கணும் ?

"டாக்டர், நீங்கள் ரொம்ப நல்லவர் என்று கேள்விப்படுகிறேன்—"

என் உற்சாகம் விழுந்தது.

"டாக்டர், நீங்கள் ரொம்ப நல்லவர்"

"டாக்டர், நீங்கள் பொருள் படுத்த மாட்டீர் என்று எனக்குத் தெரியும்—"

"டாக்டரய்யா, உங்க கொளந்தை குட்டி நல்லா யிருக்கணும்."

"சரிதான் போ, வேலையைப் பாரய்யா!" என்று வெளியில் அனுப்ப எனக்குத் தைரியமிருக்கிறதோ? எதனால் நான் உருப்படவில்லை என்று எனக்கே தெரியும்.

அவன் கையைப் பிடித்தேன். தூக்கி வாரிப் போட்டது. நாடி தேரைபோல் தாவிக் குதித்தது. இவனுக்கு உள் ஜன்னியல்லவா கண்டிருக்கிறது! ஒருவர் துணையுமில்லாமல் எப்படி வந்தான்? தப்பி வந்தானா? அட ஈசுவரா வழியில் போவோர் பொறுப்பெல்லாம் என் தலையிலா? அவசர அவசரமாய், அவன் ஈர உடையை மாற்றி என் ஆடையில் உடுத்துப் படுக்க வைத்து மோவாய்க்கட்டைவரையிழுத்துப் போர்த்தினேன். சிவப்புக் கம்பளியிலிருந்து கழுத்துவரை வெட்டினாற்போல் தலை மாத்திரம் எட்டிப் பார்த்தது. இப்போதுதான் ஆள் முகத்தை சற்று அவகாசமாய்க் கவனித்தேன். அவன் முகம் வெறியில் களை கட்டி யிருந்தது. குழந்தைகள் கதையில் ஏன், கோட்டான்கள் கதையிலும்தான்—தலையை வெட்டியெறிந்த பிறகு தலை மாத்திரம் பேசிற்று என்கிற மாதிரி சிவப்புக் கம்பளியினடியிலிருந்து அவன் தலைமாத்திரம் பேசிற்று.

பெயர் விலாசம் கேட்டுத் தெரிந்துகொண்டேன்.

"சரி என்ன உடம்பு?"

"டாக்டர், நான் சொல்லப் போவதை நீங்கள் நம்புவீர்களா?"

"சொல்லுங்கள்—"

"நான் என் கண்ணால் கண்டேன்—"

"நீ உன் கண்களை நம்பாதே" என்று நான் சொல்லவில்லை. கண்கள் வேறு காண்பது வேறு; கண்டதை

நம்புவது வேறு; இவை எல்லாவற்றையும் தாண்டி; ஆம்—பாரு, பாச்சா, குழந்தைகள், செல்லா, வீடு, அப்பா, வந்திருக்கும் நோயாளி, அவன் நோய், எல்லா வற்றையும் தாண்டிய உண்மை இருக்கிறதே அதுவேறு, இதெல்லாம் வந்தவனிடம் ஏதுக்கு?

வெறுமெனே "சொல்லுங்கள்" என்றேன்.

"டாக்டர், வேலைபோய் மூன்று மாதங்கள் ஆச்சு, இன்னும் விடியவில்லை. வீட்டு வாடகை, பால்காரன், மளிகைக் கடை, எங்கேயும் பாக்கி—"

நான் கையமர்த்தினேன். "அதற்கெல்லாம் மருந்து எனக்குக் கூட அகப்படவில்லை. நீங்கள் போக வேண்டிய இடம், கோவில், ஜோஸ்யன் Employment Exchange—"

"டாக்டர், கொஞ்சம் பொறுங்கள். நான் யாரிடம் தான் சொல்லிக்கொள்வது? கைக் குழந்தைக்கு வயிற்றில் கட்டி. ராப்பகலாய் 'வராட் வராட்'டெனக் கத்திப் பிறரையும் தூங்கவிடுவதில்லை.

"எதிர் வீட்டுக்காரன் நாய் வளர்க்கிறான். அந்தப் பெருமையில் நாயை கேட்டில் கட்டிப் போட்டிருக் கிறான். போவோர் வருவோர் மேல் அது பாய்கிற தினுசையும் குரைக்கிற தினுசையும் பார்த்தால், எந்த நிமிஷம் சங்கிலியை அறுத்துக் கொள்ளுமோ, தெருவில் விளையாடும் என் குழந்தைகளுக்கு என்ன நேர்ந்து விடுமோ எனக் கதி கலங்குகிறது. இன்று காலை என் நிலையைப் பற்றித் திடீரென என்னவோ யோசனை வந்து விட்டது. புழுங்கிக் கொண்டு வாசல் ஜன்னலில் உட்கார்ந்து கொண்டிருந்தேன்.

"பால்காரன் பசுவை ஓட்டிக் கொண்டு எதிர் வீட்டு லாந்தர் கம்பத்தில் கட்டினான். மார் உயரம் பசு:

வெள்ளை வெளேரென்று. அதை பார்க்க என்றுமே எனக்குப் பிடிக்கும். ஆனால் ஏனோ மூன்று நாளாய்ப் பசுவைக் கட்டிக் கறக்கக் கொண்டு வரவில்லை. அவன் மாத்திரம் பால் குவளையோடு வந்தான். இப்போது அவன் தோளில் அணை கயிறு தொங்கிற்று. ஆனாலும் கன்று வரவில்லை. இரண்டு மூங்கில் சிம்புகள் வைத்துக் கட்டிய ஒரு தோல் பையை அக்குளில் இடுக்கிக் கொண்டு வந்தான். அதன் சந்துகளிலிருந்து வைக்கோல் எட்டிப் பார்த்தது. அதை இரண்டு மூன்று தடவை மாட்டு மடியில் முட்டிக் கம்பத்தில் சாய்த்துவிட்டு மாட்டைக் கறக்க ஆரம்பித்தான்.

"அந்தத் தோலை அடையாளம் கண்டு கொண்ட அதிர்ச்சியில் வயிறு பகீரென்றது. பட்டணத்தில் கன்றுத் தோல்கள் சகஜமான காக்ஷிதான். ஆனால் அதை அப்படிப் பார்த்ததும் எனக்குத் திக்கென்றாகிவிட்டது. சில சமயங்களில் அற்ப விஷயங்கள் கூட ஜரிப்பதில்லை. மூன்று நாட்களுக்கு முன் மொழு மொழு வென்று முழு உயிரோடிருந்த கன்று.

குவளையுள் பால் பீறல்கள் 'கிண் கிண்' என்றன மார்பில் செம்மட்டியால் அடிப்பது போலிருந்தது. அந்தச் சப்தம் எனக்கு எப்பவுமே பிடிப்பதில்லை. அதில் எப்பவுமே ஒரு பொய்மையிருப்பதாய் என் துணிபு. அது பால்காரனின் நாணயத்தை விளம்பரப்படுத்தும் சப்தம். அத்துடன் அது பொய் விளம்பரம்—

'அண்ணா நீ குறைபட்டுக் கொள்ளாதே. கிரயம் வேணுமானாலும்—பிறகு உன் இஷ்டம். உன் கஷ்டம் நமக்கு எதுக்கு என்கிறாள் செல்லா.'

"திடீரென்று எதிர் வீட்டு நாய் உறுமிக் கொண்டு தோல் மேல் பாய்ந்தது. சங்கிலி கணகணத்தது. தோல் கம்பத்திலிருந்து சரிந்து நாயின் காலடியில் வீழ்ந்தது.

இன்னொரு தாவு தாவி—சங்கிலியை மாட்டிக் கோர்த்திருந்த தாழ்ப்பாளுடன் கதவே பெயர்ந்துவிடும் போல் கிடுகிடுத்தது—முன் கால்களால் சுரண்டிப் பிராண்டி இன்னும் கிட்ட இழுத்துக் கொண்டது. அதற்குள் அதற்கு அவசரம் தாங்கவில்லை.

"தோலின் தொடைப் பக்கம் கிழித்துக் கடிக்க ஆரம்பித்தது. காது வரை அதன் உதடுகள் மடிந்து கடைவாய்ப் பற்கள் வெளிறிட்டன. பிடித்தக் கடியை விடாது, தலையை உதறிக் கொண்டு பற்களினிடையிலிருந்து உறுமுகையில் அதன் கண்கள் வெறியில் மங்கிப் பளபளத்தன."

இந்த ஆளுக்குக் கதை சொல்லும் வன்மையுடன் அவன் ஜூர வேகமும் சேர்ந்தோ ஏனோ அவன் சொல்லில் வசியமிருந்தது. அவன் விவரிக்கும் காக்ஷி கண்முன் படிப்படியாய் எழுகையில் அதனுள் என்னையும் இழுத்துக் கொண்டிருந்தான். என்னையறியாமல் அதில் என் இழைகளும் பாய ஆரம்பித்தன.

குவளையுள் பால் உயர்ந்து கொண்டே நுரை மேல் பால் பீறல்கள் மெத்து மெத்தென வீழ்ந்தன. தோல் கன்றிலிருந்து வைக்கோல் பிரிகள் பிய்ந்து தரையில் சிந்தின. பசுவின் கண்களிலிருந்து தாரைகள் பெருகி வழிந்தன.

கன்றுக்குட்டியின் முகத் தோலில் என் முகம் பொருந்தினாற் போல் இருந்தது. பசு முகத்தில் அப்பா முகத்தைக் கண்டேன். அப்பாவின் கண்களிலிருந்து மௌனமான கண்ணீர் தாரை தாரையாய் வழிந்தது. அப்பாவுக்கு ஏற்கெனவே கண்ணில் கோளாறும் உண்டு.

"ராமா" என்று அப்பா என்னைக் கூப்பிடும் போதே அவர் குரல் அப்படி நெகிழும். அவருக்கு என் மேல்

எப்பவுமே பாசம் கொஞ்சம் கூடத்தான். எனக்கும் அப்பா மேல் அப்படித்தான்.

"ராமா, எனக்கு சொத்து இல்லை. என் செல்வங்கள் எல்லாம் என் குழந்தைகள்தான். எதுவோ என்னால் முடிந்தது உங்கள் தலையில் கடன், பொறுப்பு என்று சுமத்தாமல் போய்விட்டால் அதுவேதான் இந்த ஜென்மத்தில் என்னால் முடிந்த மகத்தான காரியம்."

அப்பா கிராமத்தில் பள்ளிக்கூட வாத்தியார். சின்ன வயதில், முன்னுக்கு வரவேண்டிய சமயத்தில் நோய் வாய்ப்பட்டு சறுகி விட்டார். அவர் நோயால் படும் வேதனையைக் கண்டு நான் சபதம் பண்ணிக் கொண்ட விளைவாய்த்தான் டாக்டருக்குப் படித்தேன். அதனால் என்ன, படித்து முதலில் தேறிவிட்டால் மாத்திரம் போதுமா ' அதிருஷ்டம் வேண்டாமா ? அம்பாளின் அருள் வேண்டாமா ?"

எனக்கு நேர் எதிரிடை பாச்சா. வகுப்புக்கு வகுப்பு பல்டி, வாத்தியார் பிள்ளை மக்கு என்ற வசனத்தைக் காப்பாற்றக் கங்கணம் கட்டிக் கொண்டாயாடா என்று அப்பா நொந்து கொள்வார். பரிக்ஷை வேளைக்குப் பட்டை பட்டையாய் விபூதி இட்டுக் கொண்டு பயபக்தி யாய் வேஷ்டி மேல் இடுப்பில் துண்டை முடிந்து கொண்டுகோவிலுக்குப் போய் தூணுக்குத் தூண் சுற்றி வருவான்

பிரயோஜனம் ?

பாச்சாவுக்கு வீட்டுப் பொம்மனாட்டுகளிடம் நல்ல பேர், உலக விவாரம் ரொம்பவும் தெரிந்தவன் என்று. அவன் போய் வாங்கிவரும் சாமான்கள் எப்பவுமே தரத் திலும் அளவிலும் உயர்ந்து விலையும் குறைந்திருக்கும்.

ஒரு தடவை என் அத்தை என்னை அடுப்பில் குழம்பு காயறது என்று அவசரமாய் உப்பு வாங்க அனுப்பினாள்.

அத்தை எப்பவுமே கொஞ்சம் கோபக்காரி. அவளைக் கண்டால் எனக்குக் கொஞ்சம் பயந்தான்.

அத்தை பெண் பாரு; அம்மா வரத்தைத் தான் வாங்கிக் கொண்டிருக்கிறாள்.

அந்த நாளிலிருந்தே நான் புத்தகப் புழு: படித்துக் கொண்டே தெருவில் நெருப்புக் கோழி போல் வளைந்து வளைந்து நடந்து சென்றேன். அதன் ஆபத்தைப் பற்றி அப்பா எத்தனையோ முறை எச்சரிக்கை பண்ணி, அடித்துமிருக்கிறார்; ஆனால் சமயத்தில் எனக்கு மறந்து விடும்.

"உப்புக் கேக்கறையே ஏனம் கொண்டு வந்திருக் கையா ?" என்று கடைக்காரன் கேட்டான். நான் திரு திருவென விழித்தேன். மறந்து விட்டேன். அப்போ தான் நினைவு வந்தது: நான் கடைக்கு எடுத்துப் போக அடுக்கை அத்தை அடுப்பின் அவசரத்தில், விசப் பலகை மேல் 'ணக்' என்று வைத்து விட்டுப் போன சப்தம்.

"பிடிசாமி மடியை, தொலையாத பேரம் பண்ண வந்துட்டே !" என்று கடைக்காரன் எரிச்சலுடன் கத்தி னான். அவனுக்கு பேர நெருக்கடி. பேசாமல் மடியில் வாங்கிக் கட்டிக் கொண்டேன். போகிற வழியெல்லாம் படித்துக் கொண்டே சென்றேன். அத்தை வாசலில் கோபத்துடன் காத்திருந்தாள். "ஒரு காரியத்துக்கு அனுப்பிச்சால் எத்தனை நாழி ? எங்கேடா உப்பு ?"

மடியை அவிழ்த்துக் கொட்டினேன். நாலு உப்புக் கற்களும், ஒரு வற்றல் மிளகாய்க் காம்பும் கீழே விழுந்தன. திரு திருவென விழித்தேன். சொல்லவும் வேண்டுமா ? மடியை சரியாய்க் கட்டவில்லை. திரும்பி வந்த வழியெல்லாம் கதை சுவாரஸ்யம்.

அத்தை ஓவென இரைந்தாள். "ஒரு உப்புவாங்கத் துப்பு இல்லை. உலகத்தில் நீ எப்படித்தான் பிழைக்கப்

போறாயோ? உனக்கு என் பெண்ணை வேறே கொடுக்கணும்னு இருக்கேன்—"

விஷயங்களில் அவ்வளவு பெருமை வாய்ந்தவன் நான். அப்பாகூட அடிக்கடி சொல்வார். "ராமா, முழிச்சுக்கோடா. கண்ணைத் திறந்து சுற்று முற்றும் பார்."

அப்பா சொற்படி விழித்துக் கொண்டு சுற்றுமுற்றும் பார்க்கிறேன்.

நிலக் குத்தகைக்காரன் ஊரெல்லாம் பொன்னாய் விளைந்தாலும் மாசூலை நாலு வருஷமாய் அளக்கவில்லை ஆனால் அவர் வாசல் வழியாய் செல்ல நேர்ந்தால் திண்ணையிலிருந்து அவசர அவசரமாய் எழுந்து கும்பிடு பலம்.

"நாளைக்குக் கொடுக்கிறேன் சார்" என்று கை மாற்றாய்க் கடன் வாங்கிப் போனவர் நாலு மாதங்களாயும் அதைப் பற்றி மாத்திரம் பேசமாட்டேன் என்கிறார். எனக்குப் பேச்செடுக்க லஜ்ஜையாயிருக்கிறது. நாளடைவில் பயமாயிருக்கிறது. அவர் மற்றதெல்லாம் அடித்துப் பேசுகிறார். என்னுடன் ஒண்டிக் குடித்தனம் இருப்பவர். "என்னதானிருந்தாலும் ஸார் நீங்கள் ரொம்ப soft. அதான் வழியில் போகிறவன் வரவன் எல்லாம் தலையில் கல்லரைத்து விட்டுப் போகிறான்கள்" என்கிறார்.

ஆனால் அவர் எனக்கு இரண்டு மாத வாடகை பாக்கி.

அப்பா இறந்து போன இரண்டு மாதங்களுக்கெல்லாம் பாச்சா ஒருநாள் என்னிடம் வந்தான்.

"அண்ணா, எனக்கோ சுட்டுப் போட்டாலும் படிப்பு வரவில்லை. நான் எங்கேயாவது வெளியூரைப் பார்க்கப் பிழைக்கப் போகிறேன். எனக்கு ஒரு முன்னூறு ரூபாய் இருந்தால் கொடேன்."

"இப்போ இல்லையேடாப்பா" என்றேன். நிஜமாகவே அந்த சமயத்தில் குடும்பத்தில் நெருக்கடி.

"என்னண்ணா கிண்டல் பண்றே? மன்னி நேற்றைக்குக் கூடப் பெட்டியைத் திறந்து வைத்துக் கொண்டு, கற்றை கற்றையாய் நோட்டை எண்ணிக் கொண்டிருந்தாளே !"

எனக்கு வியப்பாயிருந்தது. அவளிடம் ஏது? பாரு பாரு!!" சிவந்த முகத்துடன் பாரு வந்தாள். "ஆமாம் ஒரு நூறுரூபாய் வைத்திருக்கிறேன். வருஷக்கணக்காய், ஈ, தேன் கூட்டற மாதிரி, எங்கம்மா அப்பா கார்த்தி, சங்கராந்திக்கெல்லாம் கொடுத்தது, நீங்கள் நவராத்திரி தீபாவளிக்குக் கொடுத்தது, நம் குழந்தைகளைப் பார்க்க வந்தவா கொடுத்ததெல்லாம் மிச்சம் பிடித்து, நமக்குத் தான் ஒரு அந்த அவசரத்துக்கு உதவும். ஏன், எனக்கே கைவளையல் எல்லாம் தேஞ்சு போச்சு. கூடக் கொஞ்சம் பொன்னை வாங்கிப் போட்டு—"

"பாரு, பாச்சாவிடம் அந்தப் பணத்தைக் கொடுத்து விடு."

பாருவின் பார்வை என்னை எரித்தது.

"பாரு, பணம் என்றைக்கும் வரும். உன்னை வழியில் போகிறவனுக்குத் தானம் பண்ணச் சொல்லவில்லை, என் தம்பிக்குத்தான் கொடுக்கச் சொல்கிறேன்—கொடு, கொடு—"

"அது என் பணம்."

அடேயப்பா இந்தப் பாருவின் 'லாபாயிண்ட்' இருக்கிறதே! பாரு என்றுமே பேச்சில் அடங்கியதில்லை, பாவம்! நியாயத்தைப் பேசிப் பேசியே, வீட்டில் வாயாடிப் பட்டம் வாங்கி விட்டாள்.

"உன் பணமாயிருந்தால் என்ன, நீ இந்த வீட்டுப் பெண்தானே! நான் சொல்கிறேன் நீ கொடு" என்றேன்

பாருவின் கண்களில் கனல் கண்ணீராய்த் தளும்பிற்று. விர்ரென்று வெளியே சென்று, ஒரு நிமிஷத்திற்கெல்லாம் ஒரு ஓலைப் பெட்டியை வீசியெறிந்துவிட்டு ஓடினாள். அது என் காலடியில் வீழ்ந்தது. குனிந்து எடுத்துக் கொண்டேன். எனக்குக் கோபம் வரவில்லை. ஏன் எனக்கு இப்படி சுரணையில்லாமல் போய்விட்டது? நாய்குட்டியைப் பார்ப்பதுபோல் இனி என்னையும் காதைப் பிடித்துத் தூக்கித்தான் பார்க்க வேணுமோ ?

"இந்தா பாச்சா வெச்சுக்கோ."

"அண்ணா, மன்னி மனம் கஷ்டப் படுகிறாள்—"

"பாச்சா உன் மன்னி நல்லவள். அவள் சிரமப்பட்டு சேர்த்தது. ஆகையால் இது நல்ல பணம்; நன்கு விளையும்; எடுத்துக் கொள்."

பாச்சா இரவு வண்டி ஏறினான். அவனை வழியனுப்பி விட்டுத் திரும்புகையில் ஏதோ யோசனையில் சட்டென நடுவழியில் திகைப்பூண்டு மிதித்தாற் போல் நின்றேன்.

திடீரென்று எனக்கு ஒரு பழைய நினைவு வந்தது. சிறு வயதில் நானும் என் தம்பியும் இரவில் ஒரே கோரைப் பாயில் படுத்து உருண்டது. எங்கள் இருவருக்கும் ஒரே போர்வைதான். இதைத் தலைமேல் இழுத்துப் போர்த்திக் கொண்டு அந்த உள் இருட்டில் விளையாடுவோம். பாதி ராத்திரியில் எனக்கு விழிப்பு வரும்போதெல்லாம் பாச்சாவுக்குக் குளிருமே என்று போர்வையை இழுத்து இழுத்து அவன்மேல் மூடுவேன். அவன் அதை உதறி உதறித் தள்ளிவிட்டு தூக்கத்தில் தடாலென வயிற்றில் காலைப் போடுவான்.

அப்படியிருந்து விட்டு எங்கள் வழி இப்பொழுது ஏன் தனித்தனியாய்ப் பிரிந்து போயிற்று ? இம்மாதிரி கேள்வி களுக்கெல்லாம் சரியான பதில் கிடைக்குமோ ?

வாசற்படி ஏறுகையிலேயே பாருவின் அழுகுரல் கேட்டது. எனக்கு அடிவயிற்றைச் சுரீலென்றது. குழந் தைகள் என்னவோ ஏதோ ? பதறி எதிர்க்குரல் கொடுத்து கொண்டே உள்ளே ஓடினேன். பாரு எதிரே ஓடி வந்தாள்.

"வளையலைக் காணோமே!"

"எங்கே வைத்தாய் ?"

"பெட்டிக்குள்ளேதானே பத்திரமா வெச்சிருந்தேன் ! டைப்ரேட்டர் ரிப்பன் டப்பாக்குள் போட்டு வெச்சிருந் தேனே ! தேஞ்சு, கையிலிருக்கக்கூட லாயக்கில்லாமல் இற்றுப் போயிடுத்து. நேற்றுதான் நினைச்சுண்டிருந்தேன் உங்களிடம் சொல்லி என்னிடமிருந்த நூறு ரூபாயை உங்களிடம் கொடுத்து, இன்னும் கொஞ்சம் பொன்னை வாங்கி சேர்த்துப் போட்டு—"

என் நெஞ்சுள் எலி பிராண்டிற்று. ஆனால் அதை ஒப்புக் கொள்ளாமல்:

"நீ பெட்டியைத் திறந்து போட்டுவிட்டுப் போனால் யார் என்ன பண்ணுகிறது ?" என்றேன்.

"யார் ? என்னையா சொல்கிறீர்கள்? ஏன், உங்கள் மாதிரி நினைச்சுண்டேளா ?" பாரு சுபாவம் எனக்குத் தெரியாதா ? குழந்தைகளுக்கு வாங்கும் சாக்லேட், பிஸ் கோத்து, தலைக்கு வைத்துப் பின்னும் உல்லன் நூல், துணிக்குப்போடும் சோப்புக்கட்டி முதற் கொண்டு உள்ளே வைத்துக் கொண்டு விடுவாள். சமாளித்துப் பார்த்தேன்.

"சாவியை எங்கே வைத்தாயோ ?"

பாருவின் கண்களில் பொறிபறந்தன. தாலிச்சரட்டை இழுத்து என் முன் நீட்டினாள். அதில் சாவிக் கொத்துத்

தொங்கிற்று. அவளுக்கு அப்புறம் பேச்சு எழவில்லை. கரகரவென என்னைக் கையைப் பிடித்திழுத்துக் கொண்டு போய் அறை விளக்கைப் போட்டாள்.

எலி வால்போல் வளைந்த ஒரு குடைக்கம்பிப் பூட்டு சந்திலிருந்து தொங்கிற்று. என் கண்ணெதிரில் ஒரு கேள்வி சிறகடித்து மறைந்தது. பாச்சா இப்போ எங்கிருப்பான்? ஜோலார்ப்பேட்டை தாண்டியிருப்பானா?

ஒரு ஐந்தாறு வருடங்களுக்கும் பாச்சா இருக்கும் பொறிகூடத் தெரியவில்லை. இதற்குள் என் நிலைமை ஒன்றும் மாறிவிடவில்லை. நான் மூலையில் சார்த்தின ஏணியாய்த்தானிருக்கிறேன்.

ஒருநாள் வாசலறையில் வழக்கம்போல் உட்கார்ந்து கொண்டிருந்தேன். பாரு முரளியை இடுப்பில் வைத்துக் கொண்டு வழக்கம் போல ஏதோ உபதேசம் பண்ணிக் கொண்டிருந்தாள்.

ஒரு டாக்ஸி 'டீ'க்காய் வாசலில் வந்து நின்றது. அதிலிருந்து பாச்சா 'ஜம்'மென்று இறங்கினான். பின்னாலேயே ஒரு ஸ்திரீயும் இறங்கினாள்.

"என்னண்ணா, சௌக்கியமா? செல்லா, நமஸ்காரம் பண்ணு. இதாண்டி என் அண்ணா, மன்னி!"

"இருங்கோ—இருங்கோ உள்ளே வராதேங்கோ—" பாரு அவசர அவசரமாய் உள்ளே போய் ஆரத்தி கரைத்து வந்து சுற்றிக் கொட்டினாள்.

நான் பாருவை ஓரக்கண்ணால் கவனித்துக்கொண்டே நின்றேன். அவள் முகத்திலிருந்து திடீரென பத்து வருடங்கள் உதிர்ந்திருந்தன. பாரு இவ்வளவு அழகாவாயிருக்கிறாள்! எனக்கெப்படி இதுவரை தெரியாமல் போயிற்று? உள்ளூரச் சிரிப்பாய்க்கூட இருந்தது. பாவம், தனக்கு

ஓரகத்தி வந்த சந்தோஷத்தில், கண்டு கொடுத்த பணத்தையும், காணாமற் போன நகையையும் மறந்து விட்டாள். பாச்சா நமஸ்காரம் பண்ணினாள். ஆனால் செல்லா பண்ணவில்லை என்பதைக்கூட அவள் கவனிக்க வில்லை.

அப்பொழுதுதான் முதன்முதலாய் சந்தித்துக்கொண்ட இருவருக்கும் மூச்சு விடாமல் நாள் கணக்காய்ப் பேச என்ன இருக்குமோ? வந்தவள் தன் பெட்டியைத் திறந்து புடவைகளையும், நகைகளையும் கடைபரத்திக் காண்பிப்பதும் மூத்தவள் அதைத் தொட்டுத் தொட்டுப் பார்ப்பதும், பேசுவதும் சிரிப்பதுமாய் நேரம் போதவில்லை. நாலு நாட்களுக்கு சம்பிரமமாய்ச் சாப்பாடு, சிற்றுண்டி, செலவைச் சமப்படுத்த இத்தனைக்கும் பின்னால் சுட்ட அப்பளமும் வெற்று ரஸமும் பின்னால் அல்லவா இருக்கிறது! ஐந்தாம் நாள் முன்பின் சொல்லவேயில்லை. திடீரென ஒரு டாக்ஸி 'டீ'க்காய் வாசலில் வந்து நின்றது. "போயிட்டு வரோம் அண்ணா! மன்னி!!"

தெரு முனையில் திரும்பிய பிறகுகூட, அது தன் பின்னால் விட்டுச் சென்ற புழுதித் தோகையைப் பார்த்துக்கொண்டு பாருவும் நானும் மௌனமாய் நின்றோம். முரளி குறுநடை நடந்து வந்து அம்மாவின் காலைக் கட்டிக் கொண்டான்.

"குட்டிப்பா, குட்டி சித்தி எங்கேம்மா? எனக்குப் பப்பூட்டு வாங்கித் தரேன்னாளே!" பாரு குழந்தையை எடுத்து இடுப்பில் வைத்துக் கொண்டாள். "பப்பூட்டு வாங்கிண்டு வரத்தாண்டா ரெண்டு பேரும் போயிருக்கா!" அவள் விழிகள் நிறைவதைக் கண்டேன். முகத்தைத் திருப்பிக் கொண்டு விடுவிடென உள்ளே சென்றாள்.

பாருவின் முகம்கூட என் மனக் கண்ணில் நான் காணும் பசுவின் முகத்தில் திடீரெனப் பொருந்துகிறது. ஒருவேளை உலகத்தின் துயரத்திற்கெல்லாம் ஒரே

முகம்தானா ? பத்து வருடங்களுக்கு முன்னால் பாரு இப்படியா இருந்தாள்? துள்ளிவிளையாடும் கன்றாய் வந்தாள். அவள் அகமுடையான் டாக்டருக்குப் படிக்கிறான் என்ற பெருமையில் என்னென்ன ஆசை வைத்திருந்தாளோ! ஆனால் அவள் கண்டது என்ன ? குடும்ப வாழ்க்கையில் ஈடுகொடுத்து, குழந்தைகள் விளைந்து விளைந்து, வயிறு சரிந்து கூந்தல் கொட்டி, அழகு அழிந்து, கடுகடுத்து, துயரந்தாங்கும் பசுவாய் மாறிவிட்டாள். சில சமயங்களில் கஷ்டம் தாங்காமல் சிலும்பி சீறிப் பார்க்கிறாள், பசு மிரள்வதுபோல். அதனால் சுமையிறங்கிவிடுமா ? இன்னும் அதிகமாய்த்தான் அழுத்துகிறது.

ஆமாம் இந்த நிலைகளுக்கு விமோசனமேயில்லையா? அடித்தால் நோகிறதே என்று வலி பொறுக்காமல் அழுதால் இந்த உலகத்திற்கு அனியாயமாய்ப்படுகிறது. அதைவிடத் தப்பு, அது பண்பு குறைவு. எனக்கு என் சுமைபோல் வந்திருப்பவனுக்கு அவன் சுமை. வந்திருப்பவன் விவரித்துக் கொண்டிருக்கும் காட்சி என் முன் எழுகிறது. கன்றுத் தோல்கூட செத்தும் அவதியுறும் பொருளாய்த்தான் தெரிகிறது. நாயின் வெறியில்கூட நிறைவு பெறாத ஒரு சோகம்தான் தெரிகிறது. இவைகளில் எதன் சோகம் அதிகம்? நாயா, கன்றா, தோலா, மௌனமாய்க் கண்ணீர் வடிக்கும் பசுவா ?

இச் சோகங்களைத் தாண்டி, பாற் பீறல்கள், குவளையுள் எழும்பிக் கொண்டிருக்கும் நுரைமேல் மெத்து மெத்தென வீழ்கின்றன. இந்த சுகத்தின் தன்மை என்ன? அதையும் தாண்டி, இந்த சோகத்திற்கும் சுகத்திற்கும் காரணனாய் இரண்டையும் பால்காரன் கறந்து கொண்டிருக்கிறான். அவனுடைய சூட்சுமம்தான் என்ன ? சோகத்திலிருந்து சுகத்தைக் கறக்கிறானா ? சுகத்தினால் சோகத்தைப் பெருக்குகிறானா ? அல்லது இரண்டுமே அவனுக்கு அக்கறையில்லையோ ? பால்காரன்தான் உண்மையோ ?

என் யோசனைகள் முரட்டுத்தனமாய்க் கலைந்தன. என் தோள்களை யாரோ பலமாய்க் குலுக்கிக் கொண்

டிருந்தார்கள். நான் விழித்துக்கொண்டேன். வந்திருந்தவன் படுக்கையிலிருந்து தாவி எழுந்து என்மேல் பாய்ந்து என்னைக் கட்டிக்கொண்டிருந்தான். அவன் கறுப்பு விழிகள் வெள்ளை விழிகளில் சுழன்றன.

—"அப்போது டாக்டர், திடீரென்று அந்தக் கன்றுத் தோல் தாவிக் குதித்து எழுந்தது. இதை நான் என் கண்ணால் கண்டேன். அது பின்னங் கால்களால் விட்ட உதையில் நாய் ஊளையிட்டுக்கொண்டு கீழே உருண்டது. கன்றின் தொடையிலிருந்து ரத்தம் கொட்டிற்று.

"அரே! ரே!! ரே!!! ரே!!!!" பால்காரன் மூஞ்சியைப் பார்க்கணுமே! குவளையைக் கீழே வைத்துவிட்டுத் திரும்பினான். வாங்கின உதையில் அம்மாடி என்று அப்படியே அடிவயிற்றைப் பிடித்துக்கொண்டு குப்புற விழுந்தான். தோலின் வாயிலிருந்து வந்த குரல் கன்றின் குரலாயில்லை. அந்த அமானுஷ்யமான வீறலில் ரத்தம் சில்லிட்டது. உயிர் பிரியும் குரலும் உயிர் பெறும் குரலும் ஒன்றுதானா? கொம்புக் கால்கள் மேல் தத்தித் தத்தி இருமுறை தன்னைத்தானே சுற்றி வந்து, தோல் பொத்தெனக் கீழே விழுந்தது.

"பால் குவளை உருண்டது. தோலின் தொடையிலிருந்து ரத்தமாய்க் கொட்டிற்று. குவளையிலிருந்து கிளம்பிய பால் பெருக்கோடு கலந்தது. நான் கீழே விழுந்து விட்டேன். அப்புறம் எனக்கு நினைவில்லை."

"டாக்டர், டாக்டர், நான் கண்டது நிஜமா?"

அவன் அனல் மூச்சு என் முகத்தை எரித்தது. அவன் காந்தம் என்னுள்ளும் பாய்கையில் எனக்குத் தலை 'கிர்ர்ர்'ரிட்டது. வெள்ளம் என்னை அடித்துக்கொண்டு போய்விடும் போலிருந்தது. மண்டையை இருகைகளாலும் கெட்டியாகப் பிடித்துக் கொண்டேன்.

என் வாயிலிருந்து வெளிப்படும் வார்த்தைகள் எனக்கே புதியவையாயிருந்தன.

"இல்லை என்று எப்படிச் சொல்வது?"

# கிண்ணங்கள்

"இந்தாங்கோ அப்பா, உங்களுக்குப் பிடிக்கிற வஸ்து ஒண்ணு."

கையுள் திணித்த கிண்ணத்தை விரல்கள் தடவுகின்றன. வயல்வெளியில், முற்றிய நெற்கதிர்களின் மேல், மாலைக் காற்றின் விதிர்விதிர்ப்புப் போல் விரல் நுனிகள் எதையோ அடையாளம் கண்டுகொண்டு பரபரப்பில் நடுங்குகின்றன.

"இது இந்த வீட்டுப் பண்டம் போலிருக்கிறதே!"

"ஏது, அப்பாவுக்கு இதெல்லாம்கூடத் தெரிகிறதே! இது உங்களதேதான். என் சாந்திக் கல்யாணத்துக்கு அம்மா 'பாலிஷ்' போட்டு புதிசு பண்ணிக் கொடுத்தது! எனக்கே மறந்து போச்சு; எத்தனை நாளாளச்சு! ஊருக்குக் கிளம்பும் வேளைக்குப் பழம்பெட்டியைக் குடைந்தேன்; கிடைத்தது. வீட்டில் கொள்ளையா இறைஞ்சு கிடக்கும் சாமான்களில் இது யாருக்குப் பொருட்டு?"

விரல்கள் செல்லமாய்க் கிண்ணங்களைத் தடவுகின்றன. நிறைய நசுங்கல். கொடுத்தபடியே இருக்க முடியுமா? திரட்டுப் பாலின் மணம் 'கம்'மென்று எழுகின்றது. தேவலை, அமலிக்கு அவள் வீட்டு உப்பும் தண்ணீரும் ஊறி ஊறி, பேச்சும் அப்படியே படிந்து போயிற்று. இருக்க வேண்டியதுதானே!

வாசலில் ஜட்கா நின்று, பெட்டியும் சாமானும் இறங்குகின்றன.

கண் படுமோசமாப் போச்சு. இப்போதெல்லாம் கண்ணுக்கும் சேர்த்து, காதுக்கு 'டபிள் டியூட்டி.' அதுவும் போன வருடம் கண்ணுக்குச் சிகிச்சை செய்யப் போய், ஏதோ பிசகி, உள்ளதும் போச்சு நொள்ளைக் கண்ணா. கையைப் பிடித்துக் கொண்டுபோய் விடவேண்டாம். வாய்க்கும் கைக்கும் வழி தெரியும். ஆனால் அனேகமாய் அத்தோடு சரி.

விமலியின் குரல் 'கணீர்':

"சௌக்யமா அப்பா? நமஸ்காரம் பண்றேன். திக்கு சரிதானே? இந்தா அமலி, உனக்கும் ஒண்ணு. சபை வஞ்சனையில்லாமல்."

சுற்றிக் குழந்தைகள் ஆர்க்கின்றன. ஒன்று கழுத்தைக் கட்டுகிறது. ஒன்று மடியில் புரள்கிறது. இன்னொன்று முதுகில் ஏற முயல்கிறது. இரண்டு இடம் கிடைக்காமல் 'தாத்தா தாத்தா' என்று கும்மியடித்தபடிச் சுற்றிச் சுற்றி வருகின்றன.

கூடம் அதிர்கின்றது.

"என்ன அமலி, கல்யாணம் வந்திருக்கா?"

"என்னவோ அம்மா, எல்லாம் உன் புண்ணியம்!"

அக்காவும் தங்கையும் ஏன் இப்படி 'மேக்அப்'பில் சிலம்பம் ஆடுகிறார்கள்?

"விமலி, மாப்பிள்ளை வரவில்லையா? அப்புறம் வருவாரா?

"வரமாட்டார், உடம்பு சரியில்லே."

"என்ன உடம்பு?"

"அவர் விஷயம் உனக்குத் தெரியாதா அப்பா? விமலி இனிமேல் 'உங்களை' என்றால் உடம்பைப்

பிய்த்து பிடுங்கும்) என்றையப்படி நித்ய கல்யாணந் தான் !"

விமலியின் கணவன் படுத்த படுக்கையில்லை. ஆனால் சதா உடம்பைப் படுத்திற்று. அத்துடன் விமலிக்காக மனம் இரங்குகிறது. இருந்தும் என்ன செய்ய முடியும் ? அவரவர் வழி அவரவர் தலைவிதி. இதை யார் யாருக்கு விளக்க முடியும் ? பெண்ணைப் பெற்றவர்கள் எந்தக் கட்சியும் கொள்ள முடியாது.

அமலியின் அதிர்ஷ்டம் விமலியின் வாழ்க்கைக்கு நேர் எதிர்க்காட்டு.

ஆண்டவன் புண்ணியத்தில் அமலியின் கணவன் திடமாயிருந்தான். எல்லா விஷயத்திலுமே. அத்தோடு 'கெட்டி'யும் கூட. எங்கோ தூர இடத்தில் பிழைப்பைப் பிடித்துப் போட்டிருந்தாலும், நல்ல சம்பளம் ; கை நிறையக் கிம்பளம்.

"வேண்டாம்னா விட்டாத்தானே அப்பா ? தள்ளி உதறினாலும் தானே வரதை என்ன பண்ணலாம் ? புதைக்கிறதா, எரிக்கிறதா, நீங்களே சொல்லுங்கள் !"

(அட அமலி, நீ ரொம்பக் கற்றுக் கொண்டுவிட்டாய் ! உன் பேச்சின் பூச்சே ! உன் வாயில் வெண்ணெய் உருகாதோ ?)

அமலிக்கு நறுக்காய் ஒரே பிள்ளை. அவனுக்குப் பூணூல். அதற்குத்தான் கூட்டம் கூடியாகிறது. அமலி வீட்டாரின் பல சௌகரியங்களை முன்னிட்டு இங்கே நடக்கிறது ; நடக்கணும். விமலியின் கல்யாணத்திற்குப் பிறகு இப்போத்தான் இந்த வீட்டில் மேளம் கொட்டப் போகிறது.

அமலிக்கு எல்லாம் இருக்கிறது. அதையும் மீறிஆசை யிருக்கிறது. தன் பிள்ளையை அபிமான புத்ரனாய்

வரிக்க மாட்டேனா என்று ஜாடை மாடையாய்ப் பேச்சு விட்டுத் திரட்டிப் பால் காய்ச்சிக் கொடுத்து ('உங்களுக் கென்றே, தனியா திட்டமா, ஸ்பெஷலா, வெல்லம் தாழ்ந்து, பால் மணக்க !') நோட்டம் பார்க்கிறாள். கண் போனாலும் இதெல்லாம் வெளிச்சம் போட்டுத்தான் தெரிகிறது.

"என்னம்மா, தாத்தா மேலே வாசனை தூக்கறதே ?"

"தின்கற பண்டம்னா இதுகளுக்கு எப்படித்தான் மூக்கிலே வேர்க்கிறதோ ? ஏண்டி அமலி, இந்தக் கிண்ணம் எப்படி இப்போ இங்கே வந்தது ?"

"என் சொத்து."

"என்ன உன் சொத்து, நீ வாங்கினது தட்டுக் கெட்டுப் போனது ? இங்கிருந்து தட்டிக் கொண்டு போனதுதானே ! ஏன் கவலைப் படறே, இத்தோடு நீ சேர்த்து ஆள இதன் ஜோடியைக் கொண்டு வந்திருக் கேன் பார் ! என் வீதத்துக்கு அம்மா கொடுத்தது. இதைத்தான் உன் பிள்ளைக்கு ஓதியிடப் போகிறேன்."

அமலிக்கு முகம் கடுக்கிறது.

"இந்த மட்டும் நினைவாக இத்தனை நாள் காப் பாற்றி, சமயத்துக்கு கொண்டு வந்தாயாக்கும் !"

"சந்தேகமா ? என் குடும்பக் கஷ்டத்தில் மார்வாடிக் கடையையோ வெள்ளிக் கடையையோ பார்க்கப் போகாமல் இதுவரைக்கும் என்னிடம் இருந்ததே உன் அதிர்ஷ்டண்டீ !"

"அந்தக் கிண்ணமும் வேண்டாம் ; அத்தோடு நீ ஓதற அதிர்ஷ்டமும் என் பிள்ளைக்கு வேண்டாம் !"

விமலி மேலுதட்டைக் கீழுதட்டால் கடித்து, நாவில் துடிக்கும் பதிலை இழுத்து விழுங்குகிறாள். விமலி

விவேகி. வந்த இடத்தில், அதுவும் கலியாணத்தில் சிண்டைப் பிடித்துக்கொள்ள வேண்டாம்.

“இதோ பாரப்பா இதை, என்ன வலிக்கிறதாம் இவளுக்கு ?” அவள் விழிகள் தளும்புகின்றன. “இது நாளானால் வெள்ளியில்லையா, நசுங்கினால் வெள்ளி யில்லையா ? ஏதோ, ஏழைக்குத் தக்க எள்ளுருண்டை. இவளுக்குச் சரியா நான் மேருவாக முடியுமா ?—சரியாத் தான் பிடியேன், விரல் ஏன் இப்படி உதர்றது ? உனக்கு அதுக்குள்ளேயும் அவ்வளவு வயசாயிடுத்தா என்ன ?”

உடல் கொஞ்சம் பரபரப்பாய்த்தான் இருக்கிறது. இத்தனை வருடங்களுக்குப் பின் எந்த சேதியை வெளிப்படுத்த இக்கிண்ணங்கள் வேளைபோல், கூடியிருக் கின்றன ? சேதியெதுவோ, இன்னும் ஒன்று பாக்கி. மூன்றும் கூடினால்தான் வேளையும் முழுமை, வேளை யின் சேதியும் முழுமையாகுமோ ?

அமலி கொடுமைதான் பேசுகிறாள். ஆனால் உண்மையும்தான் பேசுகிறாள். அவளுக்குக் கொடுத்த கிண்ணத்தின் வேளை, அவளுக்கு அமுதகலசமாய்ப் பொங்கி வழிவானேன், விமலியின் கிண்ணம் பிரம்ம கபாலமாய்க் குறையாவே விளங்குவானேன் ? அதிருஷ் டம் என்பது ஆளைப் பொறுத்ததா ? வேளையைப் பொறுத்ததா ?

கமலி வருகிறாள்.

அவள் வருகையின் முன்னொளி செவிவழி நினை வில் பதிவாகிறது.

வருடக் கணக்கான பழக்கத்தடியில் அதன் அச்சு புதைந்து போனாலும் பதிவு தெரியாமல் இல்லை. எனக்குக் கண் குறைந்து போனதிலிருந்து அவள் உள்ளொளியை இன்னும் நிச்சயமாய் உணருகிறேன்.

வந்தவர்களுக்கு வரவேற்பாய்க் கமலி புன்னகை காட்டுகிறாள். அவள் பார்வை, கிண்ணங்களின் மேல் விழுந்ததும், மாலை வேளையின் வான வர்ணங்கள் போல் அவள் புன்னகையின் ஒளி மிளிர்வு மாறுகின்றது. கிண்ணங்களை எடுத்துக் கொண்டு உள்ளே செல்கிறாள். அவள் சென்ற பின் கூடம் மங்குகிறதோ ? குழந்தைகள் எப்பவோ வாசலுக்கு விளையாடப் போய் விட்டன. திண்ணையை அவை எங்கு கண்டிருக்கின்றன ? கூடத்தில் தேங்கிய மோனத்தைக் கலைக்க விமலி ஆரம்பித்தாள்.

"அப்பா, எனக்கு ஒண்ணு தோணறது. நாளடைவில் ஒரு நாள், நாங்கள் இங்கே மறுபடியும் வரும்போது, நீ அடுப்பங்கரையிலோ, மாடியறையிலோ ஒரு பாறாங் கல்லைக் காட்டி "இது கமலியாய் இருந்தது" என்று சொன்னால் நாங்கள் ஆச்சரியப்படமாட்டோம், ஏன் என்று கூடக் கேட்கமாட்டோம்."

நாங்கள் கிராமத்திற்கு வந்த பின் இங்கே எங்களுக்குப் பேச்சு இன்னும் அவசியமில்லை. ஆற்றங் கரையும் தென்னந்தோப்பும், களத்துமேடும், அரசமரத் தடியில் பாம்புப் புற்றும் எங்களை வானத்தின் மோனத்துடன் இழைத்துவிடுகின்றன. உண்மையில் விமலி, அமலி, நீங்கள் வருகையில் சந்தோஷமாய்த் தானிருக்கிறது. ஆனாலும் வந்தபின் உங்கள் ஓயாத பேச்சும் இரைச்சலும் எப்போது போகப் போகிறீர்கள் என்றுதான் இருக்கிறது. இதை உங்களிடம் எப்படிச் சொல்லி மீள்வது ?

★ ★ ★

வாசற்குறட்டில், கயிற்றுக் கட்டிலில் படுத்திருக்கிறேன். ஓசை எப்பவோ அடங்கிவிட்டது. கவிழ்ந்த கிண்ணம் போன்ற வான் தட்டில் நட்சத்திரங்கள் கதிர்

கதிராயும், உருவியும், இறைந்தும், உதிர்ந்தும் கிடக்கின்றன எந்த ஆத்திரத்தில் ஆண்டவன் வானத்தைச் சூறையிட்டிருக்கிறான் ? கடவுள் என்கிறோம், அவனுடைய கசந்த ஆசைகள் என்னென்னவோ ? இத்தனை நட்சத்திரங்களைக் கண்டுவிட்டதால் மனம் மகிழ்ச்சியடைந்து விடவில்லை.

திண்ணையில் குழந்தைகள் தூக்கத்தில் உருள்கின்றன. அவர்களுடன் அமலி, விமலி. இன்னும் நாலு பேர் படுத்தாலும் இடம் கொடுக்கும். கடல் போலத் திண்ணை. குஞ்சுத் திண்ணையில் கமலி—இல்லை, அவளிடத்தில் கமலியைக் காணோம். சற்று நேரம் காத்திருக்கிறேன். அப்பவும் காணோமே ! எழுந்து கோவில் கதவுபோலக் கனத்த வாசற்கதவை மெதுவாய்த் தள்ளி வழி நடையுள் வந்து எட்டிப் பார்க்கிறேன். மொக்கு மலர்ந்தாற்போல் மிருதுவான வெளிச்சத்தில் கூடம் குளிர்ந்திருக்கிறது.

அம்மாவின் படத்துக்கு எதிரே, பெரிய குத்து விளக்கில்—அதன் உயரம் என் இடுப்புக்கு மேல்—சுடர் ஸ்தம்பித்து நிற்கிறது. அதைத் தனக்குக் குறியாய்க் கொண்டது போல் கமலி அசைவற்று நிற்கிறாள்.

படத்தில் அம்மாவின் கண்களில் கருணை தெரியவில்லை. படத்தில் எந்தச் சமயமும் சிரித்த முகத்தில் சீற்றம் சிந்துகிறது.

படத்தடியில் மூன்று கிண்ணங்கள்.

நான் ஓசைப்படாமல் நழுவி மறுபடியும் கட்டிலில் வந்து உட்கார்ந்து கொள்கிறேன். வானத்தின் சீறல் ஏன் என்று இப்போது தெரிகிறது,

★

அமலியும், விமலியும், கமலி கல்லாக உறைந்திருப்பதைத்தான் கண்டிக்கிறார்கள். அத்தனைக்கத்தனை அவள் இருந்த கலகலப்பை அவர்கள் எப்படி அறிவார்கள்? அவர்கள் வருமுன்னரே அவள் பேச்சு அடங்கி விட்டது. வைராக்கியம் அற்ப விஷயத்திலிருந்துதான் பிறக்கின்றது. கமலியின் வைராக்கியத்திற்குக் காரணம் என் கிண்ணங்கள்தாம். சீதத்தில் பதிந்த பண்டம்போல், மேலி தன் வைராக்கியத்தின் கவசத்தில், வயதில் சிதையாமல் உருத்திகழ்கின்றாள்.

கமலி, அமலி, விமலி மூவரும் சேர்ந்து வெளியே சென்றால் தாயும் பெண்களும் என்று எவர் நினைப்பர்?

ஆனால் கமலி வாசற்படி தாண்டிப் பத்து வருடங்களாகின்றன,

கமலி தபஸ்வினி.

எனக்குச் சில சமயங்கள் தோன்றுவதுண்டு. அண்டாவைச் சொம்பால் நிரப்புவது போன்று, கமலி தன் தவத்தை, தான் அவ்வளவு கடுமையாய் காக்கும் தன் வீம்பை, நாளுக்கு நாள், வருடா வருடம் ஏதோ ஒரு முறையில், பெண்களுக்கு இரண்டைக் கொடுத்துவிட்டுத் தனக்கு மீத்திக் கொண்டிருக்கும் கிண்ணத்தால் அளந்து அளந்து, தனக்குப் பெருக்கிக் கொள்கிறாளோ ?

மறுபடியும் இக் கிண்ணங்கள் தாம் வருகின்றன. அம்மா, கமலி, நான், எங்கள் மூவரின் விதிப்பயனை, அவரவர்க்கு அவரவர் வீதமாய் அளந்துவிட்ட கிண்ணங்கள் ஒன்று: ஒன்றின் தலையில் சுழித்துவிட்டால் ஒன்பது. வாழ்க்கை எப்படித் தன் அர்த்தமிகையினாலேயே, அர்த்தமற்றும் இருக்கின்றது !

ஆமோதிப்பில் ஒரு நட்சத்திரம் உதிர்கின்றது.

ஊமை உகுத்த கண்ணீர்.

★

அம்மா, உன் கோபம் தணிவாயா ?

உள்ளே கமலி உன்னோடு வாதாடிக் கொண்டிருக் கிறாள்.

எனக்கும் வயதாகிவிட்டது. நீயே சொல்லியிருக் கிறாய். "இந்த வீட்டிலேயே ஆண்களுக்கு ஆயுசு கட்டை, 'முணுக்'கென்றால் மளுக்,"

என்னைச் சொல்லிவிட்டு நீ முறிந்துவிட்டாய்.

ஆனால் அதற்கு முதற் காரணம் நான்தான்•முதலில் என்னை மன்னி. பிறகு எங்களை மன்னி: நீ உயிரோடி ருக்கையிலேயே எங்களை மன்னிக்காமலே போய்விட்ட தற்காக உன்னையே மன்னித்துக் கொள்.

சீறாதே.

என் வேண்டுதலுக்கிரங்கி வானம் கலக்கம் கொள் கிறதோ ? நட்சத்திரங்கள் ஒரு முறை மங்கி மறுபடியும் வீங்குகின்றன. வானம் தன் நெற்றியில் மன்னிப்பில் இட்டுக் கொண்ட உதிரி விபூதிபோல், பிசுபிசுவென்று சிறியதொரு வெண்மேகம் திடீரென எங்கிருந்தோ தோன்றுகிறது.

★

கொட்டு மேளத்தின் கெட்டி முழக்கத்தினிடையே, "வலது காலை முன்னால் வைத்துப் படியை மிதி," என்று அம்மா சொல்லிக்கொடுத்து மருமகள் வீட்டுள் நுழைந்து மாமியாரை நமஸ்கரித்ததும், அம்மா ஆசீர்வாதம் பண்ணியது இன்றுபோல் கேட்கிறது.

"எனக்குப் பெண் இல்லாக் குறையைத் தீர்த்து வைக்க வந்தாயா குழந்தை !" என்று சொல்லி அம்மா கமலியைக் கட்டிக்கொண்டாள். அப்போது என் கன்னங்

கள் வெட்கமற்றுச் சில்லிட்டன. இன்னும் அந்த ஈரம் மனதில் நிற்கிறது. முன்னுமில்லை, பின்னுமில்லை; அந்த நிமிஷத்தின் தெறிப்பில்தான் அம்மா தன்னுள் இத்தனை நாள் எனக்குக் கூடத் தெரியாமல் அடக்கி வைத்திருந்த ஆசை தெரிந்தது.

வேளைப் பொருத்தமில்லாமல் சாந்தி முகூர்த்தம் இரண்டு மாதங்கள் தள்ளிப்போயிற்று. ஆனால் அம்மா வின் ஆசை, மருமகளை நிறுத்திக் கொண்டாள்.

கூச்சமும் களங்கமுமற்ற கமலியின் பேச்சின் வெகு ளிக்கு எல்லையே இல்லையோ என நான் வியப்புற்ற துண்டு.லஜ்ஜையும் பட்டதுண்டு. நாலு சகோதரர் நடுவில் ஒரே பெண், செல்லப் பெண்ணாய் வளர்ந்த பயன்.

முதலில் அவள்தான் பேசினாள். சே, இத்தனை வயதாகியும் இந்த விஷயத்தில் ஏன் பச்சைக் குழந்தையா யிருக்கிறோம்? யார் முதலில் பேசினால் என்ன? ஆனால் இதை ஒரு முக்கியமான தலை போகும் விஷயமாய், விலை மீறிய நகையாய் ஏன், மனப் பேழையில் தனியறை யில் முடிச்சுப் போட்டு வைத்துக் கொள்கிறோம்?

"எங்கிருந்தோ வந்தீர்கள்; என் கையைப் பிடித் தீர்கள், உங்களுக்கென்று ஆக்கிக்கொண்டு விட்டீர்கள்"—

நான் கூச்சமுற்றேன்.

"சினிமா சினிமா—"

அவள் கண்கள் நிறைந்தன. "உண்மையாய், சத்திய மாய், விட்டேன் என்று சொல்லுங்கள்—"

கையை விடுவித்துக் கொள்ள முயன்றேன். "உஷ்... அம்மா வந்துவிடப் போகிறாள்!"

"விட்டேன் என்று சொல்லுங்கோளேன்!"

"விட்டேன்" என்ற பின்தான் விட்டாள்.

அப்பட்டமான உண்மையோ உணர்ச்சியோ அதன் உக்கிரத்தில் வெளிப்படுகையில் அது வெளிப்படும் சொல்லின் உருக்குறைவால் பொய்யெனத்தான் படுமோ?

பிறகு இன்னொரு சமயம்.

"உங்களை எனக்கு முன்னாலேயே தெரியும்" என்றாள்.

அவளிடமிருந்து ஏதோ ஒரு மணம்—தாழம்பூ ஜடையல்ல, இளமையின் கமழ்ச்சி — மண்டையைக் கிறுகிறுத்தது.

"ஒரு நாள் நானும் அம்மாவும் கடற்கரைக்கு வந்திருந்தோம்."

"அதோ பார் அந்த நாலு கலர்ச் சொக்காய்களுக்கு நடுவில் ஒரு வெள்ளை ஜிப்பா, அந்த பிள்ளையாண்டான் ஜாதகத்தைத்தான் இன்று வாங்கி வந்திருக்கிறேன். கடவுள் யத்தனம் எப்படியோ?' என்று அம்மா பெருமூச்செறிந்தாள். அம்மாவின் கவலை அம்மாவுக்குத் தெரியும். பெண் மதமதவென வளர்ந்து விட்டாளே!

'அவருக்கே என்னைப் பண்ணி வைத்துவிடு அம்மா!' என்றேன். ஏன் அப்படிச் சொன்னேன்? எனக்குத் தெரியாது. அம்மாவுக்கிரங்கியா? உங்கள் முதுகுக்கு மயங்கியா? அப்பவும் உங்கள் முதுகைத்தான் கண்டேன் முகம் காணவில்லை. அல்ல பின்நேரப் போவதன் முன்வாக்கா?

"என்னைப் பெண் பார்க்க வந்த முதல் வரனும் கடைசி வரனும் நீங்களேதான். நாலுபேருக்கு நமஸ்கரித்து எழுந்து அவர்கள் வெறிக்க வெறிக்க அவர்கள் எதிரே நின்று அவர்கள் கண்பட்ட எச்சிலாய் நான் இல்லை."

அவள் மூச்சு என் முகத்தை எரித்தது.

"இப்போதெல்லாம் எனக்கு இப்படிக் கூடத்தோன்று கிறது." அவள் கண்கள் சஞ்சலித்தன. 'கோரினதே கிடைத்து விட்டது என்றாலும் கிடைத்த பின் அப்படிச் சுலபமாய்க் கிடைத்து விடலாமோ? அப்படியும் எனக்குத் திருப்தியில்லை. இன்னொரு விதமும் தோன்றுகிறது. அப்படித் தோன்றுவதைச் சரியாய் வெளிப்படுத்தத்தான் எனக்குத் தெரியவில்லையா, இல்லை அப்படித் தோன்று வதே சரியில்லையா? எப்படியென்று நீங்கள்தான் சொல்லவேண்டும் இப்போதெல்லாம் உங்களைக் கண்டாலே அழுகையாய் ஆத்திரமாய் வருகிறது. நீங்கள் ஏன் நீங்களாய் இருக்கிறீர்கள்? உங்களுக் கென்று தனி உருவாய் அதற்கென்று அதனுடைய தனித் தன்மை உடைய பழக்க வழக்கங்களுடன் நீங்கள் வளைய வருவதே, உங்களுக்கென்று நீங்கள் இருப்பதே என்னுடைய பிரிவினைதான்; என்னைத் துண்டம் போட்ட துடிப்புத் தான்; என்ன சொல்கிறீர்கள்?"

அவள் முகம் விட்டு விட்டுச் சிவக்கின்றது. திடீர் திடீரென வெளிப்படும் இந்த உக்ரம் காண்கையில் நெஞ்சில் ஒரு தினுசான பீதிதான் காண்கிறது. ஏதேதோ வினாத் தெரியாத புழுக்கள் போன்று சந்தேகங்கள் ஒன்றோடொன்று புழுங்குகின்றன.

☆

ஒரு நாள் ஆபீசிலிருந்து திரும்ப நேரமாகிவிட்டது.

அம்மா ராமர் கோவிலுக்குப் போய்விட்டாள். கதை கேட்க.

கமலி, தட்டும் மணையும் போட்டுக் காத்துக் கொண் டிருந்தாள்.

"உங்களுக்குப் பரிமாற இன்றுதான் எனக்குச் சான்ஸ் கிடைத்தது."

அவள் வெற்றியுணர்வு அவள் தோற்றத்திற்கே ஒரு முறுக்கேற்றியிருந்தது. காற்றில் மிதக்கும் விளக்கின் வெளிச்சத்தில் அழுந்தச் சீவிய கூந்தல் பளபளத்தது. வளையல்கள் கைகளில் குலுங்கிச் சுடர்மூச்சு விட்டன. அவளிடம், அவளே குங்கிலிய ஜ்வாலைபோல் ஒரு வெறி மிளிர்ந்தது அவளிஷ்டப்படியே ஸ்வீகரித்துக் கொண்டு என் சோபையையும் வலுவையும் அவள் ஒளியில் இழந்தேன், போல் தோன்றிற்று. இன்னதென்று புரியாமல், அவள் மேல் அல்ல, அந்த வேளையின் மேல் அது என்னைச் சதிசெய்து விட்டாற்போல் என்னில் ஊமையானதோர் கோபம் மூள்வது உணர்ந்தேன்.

"என் கிண்ணங்கள் எங்கே?"

"கிண்ணங்கள் எதற்கு? அதான் நான் இருக்கிறேனே!" என்றாள்.

"குழம்புக்கொரு கிண்ணம்."

ரஸத்துக்கொரு கிண்ணம்.

மோருக்கொரு கிண்ணம். அர்த்தமில்லாமல் முனகினேன்.

"ஏன், நான் பரிமாற மாட்டேனா?"

எனக்குச் சட்டெனப் பதில் எழவில்லை. அரை மனதில் தயங்கி நின்றேன்.

விட்டிற் பூச்சி ஒன்று என் முகத்தில் மோதி, தட்டில் வீழ்ந்து நெளிந்தது. சுவாமி விளக்கில் சுடர் பொரிந்தது. அவள், விரலோடு விரல் முறித்தபடி நின்றாள். எங்கள் இருவரிடையிலும் மோனம் விரிந்து அதன் கரைகள் அகன்றன, எதிர்க் கரைகளில் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டு நின்றோம்.

அவள் விழிகளில்—அவள் விழிகளே சற்று மேட்டு விழிகள்—மங்கிய தழல் பிழம்பிற்று. விடுவிடெனக் கிண்ணங்களை நிரப்பி என் தட்டைச் சுற்றி வைத்து விட்டுச் சரேலென அவ்விடம் விட்டகன்றாள்.

நான் சாப்பிடவில்லை. வாசலில் போய் உட்கார்ந்து கொண்டேன்.

குழம்புக்கொரு கிண்ணம்.

ரஸத்துக்கொரு கிண்ணம்.

மோருக்கொரு கிண்ணம்.

ஆர்மோனியப் பெட்டியின் பல்லை அமுக்கினாற் போல் கிண்ணங்களின் பல்லவி தன்னைத்தானே வாசிக்க ஆரம்பித்து விட்டது.

மறுநாள் முழுதும் அவள் தென்படவில்லை. அவள் அரவங்கள் கூடக் கேட்கவில்லை. வேலை அதிகம் என்று சாப்பிடாமலே ஆபீஸுக்குப் போய்விட்டேன். மணி மூன்றிருக்கும். எதிர் வீட்டுச் சீமாச்சு இறைக்க இறைக்க என் 'ஸீட்'டுக்கு ஓடி வந்தான்.

"மாமா மாமா! உங்களைப் பாட்டி கையோடு அழைச்சுண்டு வரச்சொன்னா."

வயிற்றில் புளியைக் கரைத்தது. "வீட்டில் எல்லோருக்கும் உடம்பு சரிதானேடா?"

"அதென்னமோ தெரியாது! உங்களை அவசரமா அழைச்சுண்டு வரச்சொன்னா."

சொன்னதைச் சொல்லுமாம் கிளிப்பிள்ளை.

நான் உள்ளே நுழைந்ததுமே வீட்டில் ஒளியின்மை தெரிந்துவிட்டது. உள்ளிருந்து அம்மா வந்தாள். பயத்தில் அவள் விழிகள் வட்டங்களாயிருந்தன.

"அவள் போயிட்டாடா !"

கால்கள் வெலவெலத்தன; சுவரைப் பிடித்துக்கொண் டேன்.

"உங்கள் ரெண்டு பேருக்கும் என்னடா சச்சரவு? ராத்திரியே ரெண்டு பேரும் சாப்பிடல்லியா? வடித்த சாதம் அப்படியே ஜலம் கொட்டிக்கிடக்கே!"

எனக்குச் சீற்றம் மூண்டெழுந்தது. "இதைச் சொல்லவா அம்மா இவ்வளவு அவசரமாய்க் கூப்பிட் டாய்? அவள் எங்கே?"

"இன்னிக்குக்கூட அவள் சாப்பிடவில்லை. ரெண்டு மூணு தடவை கேட்டுப் பார்த்தேன்; சரியான பதில் இல்லை, எனக்குத்தான் ஏகாதசியாப் போச்சு. ரேழியில் அரைக் கண் உறக்கமாயிருந்தேன். எதிரே திடீர்னு, கையில் ஏதோ இரண்டு துணி திணித்த பையோடு வந்து நின்னா."

"அம்மா, நான் போறேன்."

"எங்கேடி ?" தூக்கி வாரிப்போட்டு எழுந்து உட்கார்ந்தேன்.

"ஊருக்குப் போறேன். இந்த வீட்டில இனிமேல் எனக்கு வேலையில்லை."

"என்னடி பேத்தறே ?"

"இல்லை, சொன்னால் உங்களுக்குப் புரியாது" என்று சொல்லிக்கொண்டே என்னைத் திமிறிண்டு போயிட்டாள். அப்படி என்னடா உங்களுக்குள்ளே நடந் துடுத்து? நாம் ஏமாந்து போயிட்டோம்டா. கைக்கடங் காத குதிரையிடம் மாட்டிக்கொண்டோம். அப்படியே நீ கோபித்தாலும், கோபிக்க உனக்கு உரிமையில்லையா? அவளுக்கு இப்படித்தான் தோணணுமா?"

இதே மூச்சில் இன்னும் ஏதேதோ அம்மா அரற்றிக் கொண்டிருந்தது காதில் ஏறவில்லை. கைக் கெடியாரத்தைப் பார்த்தேன். ஸ்டேஷனுக்கு ஓடினேன்.

ஊருக்குத்தான் போகிறாளோ? அல்லது, வேறேதாவது பண்ணிக்கொண்டு விடுகிறாளோ?

விளக்கில் பச்சை விழுந்துவிட்டது. ப்ளாட்பாரத்தில் கூட்டம் குழுமிவிட்டது. கூட்டத்தில் ஒட்டாமல் தன் நிழலைக் கண்டு தானே மிரளும் விலங்கு போல் ஓர் உருவம், தன்னோடு தான் ஒண்டிக்கொண்டு சுவரோரமாய்......

விரைந்து சென்று மௌனமாய்க் கையைப் பிடித்தேன். கை தகித்தது.

உடல் பதறி முகம் என்பக்கம் திரும்பிற்று. குழிவாங்கிய விழிகளில், எரியும் கனல் தூய்மையில், புடைத்தெழுந்து வடியும் மூச்சில், அவளிடமிருந்து ஒளி வீசிற்று. ரிஷி கோபம் இப்படித்தான் இருக்குமோ? தன்னையே அழித்துக் கொள்ளுமளவுக்குத் தன்னையே மறந்ததாய்...

"கமலி, முடுக்கிக் கொள்ளாதே. கிண்ணங்களை மறந்து விடு" என்றேன்.

"எப்படி மறப்பது? உங்களை இப்போது புரிந்து கொண்டு விட்டேன். உங்களிடம் நான் ஏமாந்து போனேன்."

எனக்குச் 'சுருக்'கென்றது. "என்ன புரிந்துகொண்டாய்? என்ன ஏமாந்தாய்?"

"அவைகள் கிண்ணங்கள் இல்லை. உங்கள் எண்ணங்கள்—"

அப்பவே, நெஞ்சைத் துருவும் கிறீச்சில் ஊதிக் கொண்டு ரயில் ஸ்டேஷனுள் புகுந்தது.

மண்டையை, தலையினின்று தனி வில்லையாய் பெயர்த்துவிடும் போன்ற உள் எழுச்சியில் வலி நெற்றிப் பொட்டைத் துருவிற்று. தலையை இரு கைகளாலும் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டேன். எதிரே, ஸ்டேஷன், ஜனங்கள், எல்லா உருவங்களும் எழுதி அழித்துவிட்டாற் போல் மங்கி ஒன்றோடொன்று இழைந்து இருண்டன.

"கிண்ணங்கள் இல்லை, உங்கள் எண்ணங்கள்."

கிண்ணங்களின் பழக்கம் எப்போது துவங்கிற்று என் பதுகூட மறந்துவிட்டது. எந்நாளாவோ அவைகளை ஆள்கிறேன். பள்ளியிலிருந்து கல்லூரி வரை, பிறகு உத்தியோகத்திற்கும் வெகு நாட்களுக்குப் பின் ஓட்டலில் சாப்பிட்ட பழக்கமாயிருக்கலாம்.

வாழ்க்கை பாதிக்கு மேல் வீட்டை விட்டுத் தனித்தே யிருந்து, என் காரியத்தை நானே பார்த்துக்கொண்டு அதனால் ஏற்பட்ட என் தனிமை, என் ஒதுக்கம், என் பத்ரம்......

இப்படி என்னை விட்டுக் கொடுக்காமல் என்னுடன் என்னைக் கெட்டியாய் பிடித்துக் கொண்டிருக்கும் அவசி யம் இல்லாவிட்டாலும், சுபாவம் படிந்து போயிற்று,

வீட்டோடு ஒட்ட வழி முதலிலேயே நேரவில்லை.

"அப்பா மாரடைப்பில் போய்விட்டார்."

தந்தியைக் கையில் பிடித்துக் கொண்டு திக்பிரமை யுடன் நின்றது ஞாபகமிருக்கிறது. ஆனால், மருந்துக் கொரு கண்ணீர், தொண்டையில் ஒரு அடைப்புக்கூட எழவில்லை.

இத்தனைக்கும் என்னை ஆளாக்கியதே அப்பாதான். நான் வீட்டுக்கு ஒரே பிள்ளை. படிக்கும் நாளிலும், வேலைதேடும் நாட்களிலும், நான் கேட்டும் கேட்காமலும் 'ரோக் ரோக்' காய் அனுப்பி வைத்து, தன் கஷ்டம்

என்னவோ, அது என் காதுக்கெட்டாமல்—அது அப்பாவின் பத்ரம் போலும்.

தந்தை வழி மகன்.

அப்பாமேல் எனக்கு அன்பு இல்லையா? நன்றியில்லையா ? மதிப்பில்லையா?

ஆனால், கண்ணீர் இல்லை.

அன்றிரவு ரயிலேறிக் காலையில் ஊர் போய்ச் சேர்ந்தேன்.

வாசலில் வண்டிச் சத்தம் கேட்டு அம்மா உள்ளிருந்து ஓடி வருகிறாள். அவளைத் தாங்கிக்கொண்டு நாலுபேர், அம்மா என்னைக் கட்டிக்கொண்டு கதறுகிறாள், நான் என்னை விடுவித்துக் கொள்ள முயல்கிறேன். என்னில் எழும் வெறுப்பை, முகத்திலிருந்து மறைக்க நான் முயற்சி கூடச் செய்யவில்லை. அவள் மேல் இப்போது எனக்குத் துளிக்கூட இரக்கம் தோன்றவில்லை.

பிள்ளை மனம் கல்.

என் கண்களைக் கண்டதும் திகைத்து அம்மாவே பின்னடைகிறாள். பிறகுதான் பரிதாபம் கசியலாமா வேண்டாமா எனப் பார்க்கிறது.

உயிரையே கொடுத்து அப்பா—பிறகு, அல்ல—அதற்கு முன்னாலிருந்தே அம்மா—இப்போது கமலி, இவர்கள் அபரிமிதமாய்த் தங்கள் அன்பை என்மேல் கொட்டி, லஞ்சம் கொடுத்து என்னிடமிருந்து எதைப் பறிக்கப் பார்க்கிறார்கள்? என்னையேவா? அல்ல; அவர்கள் அன்பை என்னால்தான் புரிந்துகொள்ள முடியவில்லையா ? புரிந்துகொள்ளவே ஒன்றுமில்லையா ? என்னைத் தன்மயமாய் விழுங்கும் அன்புக்கு என்னால் விட்டுக்கொடுக்க முடியவில்லையா ?

குழம்புக்கொரு கிண்ணம்

ரஸத்துக்கொரு கிண்ணம்

மோருக்கொரு கிண்ணம்

நான் என் நினைவுகளிலிருந்து மீண்டபோது, நாங்கள் இருவர் மாத்திரம் ப்ளாட்பாரத்தில் தனித்திருந்தோம்.

"கமலி, நம்மிடையில் இனி கிண்ணங்கள் குறுக்கிட வேண்டாம்."

அவள் கை என் கையுள் உயிரற்றுக் கிடந்தது. கன்னங்களில் அருவிகள் பளபளத்தன. கிண்ணங்களை ஒதுக்கி விடலாம், ஆனால், எண்ணங்கள் ?

★ ★ ★

மணவறையில் முதலிரவு.

கமலி ஜன்னலோரமாய் நின்று கொண்டிருக்கிறாள்.

கூஜாவிலிருந்து பாலைக் கிண்ணத்தில் விளிம்புவரை ஊற்றுகிறேன். கீழே துளியும் சிந்தாதபடி, என் சமாதானத்தை இரு கைகளிலும் ஏந்தி, ஜாக்கிரதையாய் அடிமேல் அடிவைத்து அவளிடம் செல்கிறேன்.

என் அரவம் கேட்டு முகம் என் பக்கம் திரும்புகிறது என்னைக் கண்டதால் கண்களில் ஒரு வினாக்கூடத் தோன்றவில்லை.

கிண்ணத்தை அவளிடம் நீட்டுகிறேன்.

என்னிடமிருந்து கிண்ணத்தை வாங்கிப் பாலைக் கீழே ஊற்றுகிறாள். படக்கென்று ஆத்திரத்துடன் சாய்க்கவில்லை. தீர்மானத்துடன், நூலருவியாய் ஒரே நிதானத்தில் சிந்திக் கொண்டேயிருக்கிறாள்.

முகத்தில் எவ்விதமான மாறுதலுமில்லை. ரயிலடியிலிருந்து அழைத்து வந்த அன்றிலிருந்தே அப்படித் தான்.

கள்ளிச் சொட்டுப் போன்ற பால், அதன் தேக்கம் தரை மேல் சோம்பி அகல்வதைப் பார்த்துக்கொண்டு நிற்கிறேன்.

அன்றொரு நாள்—ஆனால், என்றுமே தான்—சிருஷ்டியின் பொருள்கள் அனைத்தும் ஆண்டவனின் அத்தனை எண்ணங்களாய், அவ்வெண்ணங்களின் ரகஸ்யங்களைத் தம்முள் அடக்கிக்கொண்டு, பார்க்குமிட மெல்லாம் இறைந்து கிடக்கின்றன. ஆனால், அவ்வெண்ணங்களை எண்ணுவதற்கு, அவைகளுள் பொதிந்த அவைகளின் பொருளைச் சிந்திக்கத் தோன்றுவதற்கு, வேளையின் கூடுதல், திருஷ்டியின் அதிருஷ்டம் வேண்டும்.

அன்றொருநாள், மழை பெய்து ஓய்ந்ததும் மல்லிகைப் புதரடியில் ஒரு நத்தை ஊர்வதை கண்டேன். வெகு மெதுவாய், ஆனால் வெகு காரியமாய், தூக்க முடியாமல் தன் ஓட்டை முதுகின் மேல் சுமந்து செல்கிறது. இதுபோல், நானும் என் பத்தரத்தை, என் பத்ரமே என் கோட்டையாய், என் கோட்டையே என் பாரமாய், என் மேல் சுமந்து கொண்டு எங்கு செல்கிறேன் ?

என் மாதிரியே ஒவ்வொருத்தரும் அவரவர் சுமையுடன்......

என்னிடம் எதைத் தேடி ஏமாந்ததற்காகக் கமலி, அன்று பாலின் சமிக்ஞையில் உணர்த்தியபடி, தன் வாழ்க்கையைத் தன் மௌனத்தின் பலிபீடத்தின்மேல் ஆஹுதியாய் ஏன் வடித்துக் கொண்டிருக்கிறாள் ?

அம்மாவின் மோனம், உடையாத கட்டிபோல் விண்விண் என வீடு முழுதும் விறுவிறுக்கின்றது. பகை செதுக்கிய முகத்தின் வார்ப்பு நாளுக்கு நாள் இறுகுகின்றது. அவளால், படிதாண்டிய மருமகளை மன்னிக்க முடியவில்லை. அன்பின் தராசு எவ்வளவு நம்பத் தகுதியற்றதாயிருக்கின்றது! சிலந்தியிழைப் பிசகில் அன்பு பகையாய்த் திரியக் காத்திருப்பதை நினைக்க சிரிப்புக் கூட வருகிறது.

இத்தனை முரண்களின் நடுவில் இயற்கை தன் கட்டாயத்தை எங்கள் உடல்மேல் முறித்துத் தன் வஞ்சத்தைத் தீர்த்துக் கொள்கிறது. மண்ணில் மலடு இல்லை என்பதை நிரூபிப்பதுபோலும் அமலி தோன்றுகிறாள். அவளுக்கு இரண்டு வருடங்களுக்குப்பின் விமலி.

பிரசவ அறையிலிருந்து குழந்தையை எடுத்துவந்து அம்மா என்னிடம் காண்பிக்கிறாள்.

"அம்மா, வீட்டில் பெண்ணில்லா உன் குறையைத் தீர்த்து வைக்க ஒண்ணுக்கு ரெண்டாச்சு, போ" என்கிறேன்.

"அதுக்கென்ன குறைச்சல்? ஆனால், குணத்துக்குத் தாயாரைக் கொள்ளாமல் இருக்கணும்."

இம்மாதிரித் தெறிப்பில்தான், வயிற்றுள் வருடக் கணக்காய்க் குமுறும் ஜ்வாலை வெளியே குபீரிடுகையில், துபட்ட நெஞ்சு கருகுகின்றது.

ஆனால், காரியங்கள் ஏதும் தடைப்படுவதில்லை. அவை நடைபெற்றுக் கொண்டுதானிருக்கின்றன. கடமைகள் தவறாது நிறைவேறிக்கொண்டுதானிருக்கின்றன. ஆனால், செயல்களை ஒன்றுடனொன்று இணைத்து அவைகளுக்கு அர்த்தத்தையும் அந்த அர்த்தத்திலிருந்து ஊக்கத்தையும் கொடுக்கும் பரிவுதான் இல்லை.

அவரவர் கிண்ணங்களில் அவரவர் எண்ணங்கள்.

எண்ணங்களில் மூழ்கி மூச்சுத் திணறி, எப்போலும் நெளிந்து கொண்டிருக்கிறோம்.

கண்ட பலன் இதுதானா ?

★

கமலி உள்ளிருந்து வெளிப்படுகிறாள். நேரே என்னிடம் வருகிறாள்.

"இப்போது அம்மா என்னிடம் சொன்னார். இவை களை உங்களிடம் சேர்த்து விடும்படி." கிண்ணங்களை என்னிடம் கொடுக்கிறாள்.

அந்தக் கணமே கிண்ணங்களிலிருந்து என் விடுதலையை உணர்கிறேன்.

கிண்ணங்களின் எண்ணங்களின் அழுத்தலினின்று என் மீட்சியை உணருகிறேன். அவைகளைத் தூர வீசி எறிகிறேன். ஒன்றன்பின் ஒன்றாய் அவை குறட்டுக் கல்லில் பட்டுத் தெறித்து விழும் ஒலி, இருளில் இனிக் கின்றது.

விலங்கின் தெறிப்பைப்போல்.

கமலியின் கன்னங்களை என் கைகளால் தொடு கிறேன். என் கன்னங்கள் திடீரெனச் சில்லிடுகின்றன.

கண்ணீரின் ஆசி இன்னதென்று இப்போதுதான் புரிகின்றது.

□